வரு.76 இல. 25 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

32 பக்கங்கள் 100/-




# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் වාරමඤ්ජරී




2024 ஜுன் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

June 30 Sunday, 2024

/ Thinakaran.lk / ThinakaranLK













# ஜூலை 02, 03ஆம் திகதிகளில் விசேட பாராளுமன்ற அமர்வு

## 03ஆம் திகதி ஆளும் தரப்பு MPக்கள், அமைச்சர்கள் பாராளுமன்றுக்கு சமுகமளிப்பது கட்டாயம்



வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்காக ஜூலை 02 மற்றும் 03 ஆம் திகதிகளில் விசேட பாராளுமன்ற அமர்வு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விசேட பாராளுமன்ற அமர்வை நாளை மறுதினம் 02ஆம் திகதியும் புதன்கிழமை 03ஆம் திகதியும் கூட்டுவதற்கு கடந்த வெள்ளிக்கிழமை கூடிய பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்ததாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

முழு நாட்டு மக்களினதும் கவனமும் இந்த விடயத்தில் குவிந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஜூலை 02ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை நிகழ்த்திய பின்னர் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள் தொடர்பிலான விவாதமும் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலும், பிரதமர் தினேஷ் குணவர்தனவின் பங்கேற்புடனும் கடந்த வெள்ளிக்கிழமை (28) கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக்குழு வெள்ளிக்கிழமை கூடியபோது, வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை அமுல்படுத்துவதற்கான முன்மொழிவுகள் 06

## 'ஜனாதிபதி சுற்றாடல் விருது 2024' 'சிலுமின'வுக்கு தங்க, வெள்ளி விருதுகள்






2024 ஆம் ஆண்டுக்கான 'ஜனாதிபதி சுற்றாடல் விருது' வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (28) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பை பாதுகாக்கும் நோக்கத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட விருது வழங்கும் விழா இம்முறை 10ஆவது முறையாக நடைபெற்றது. இவ்விருது விழாவில் ஊடகப் பிரிவில் எமது சகோதர வார பத்திரிகையான சிலுமின ஊடகவியலாளர் சுரேகா நில்மினி இளங்கோன் தங்க விருதையும், சிலுமின விவரண செய்தி ஆசிரியர் சுபாஷினி வெள்ளி விருதையும் பெற்றனர். நிகழ்வில் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்களான ஜானக வக்கும்புர, எஸ். வியாழேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இலத்திரனியல் வாகன கண்காட்சி கொழும்பில்



"EV MOTOR SHOW 2024" மின்சார வாகன கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் தற்போது நடைபெறுகிறது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவில் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று முன்தினம் (28) 06

## பொதுப் போக்குவரத்து சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்



இலங்கையின் பயணிகளுக்கும் பண்டங்களுக்குமான பொதுப் போக்குவரத்து சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2ஆம் பிரிவுக்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் பொதுப் போக்குவரத்து சேவைகள் நேற்று முதல் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு நேற்று (29) வெளியிடப்பட்டுள்ளது.

அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளையொன்றினால் வழங்கப்படும் சேவைகள் 06

## அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் 622,495 பயனாளிகளுக்கு நன்மை



கொடுப்பனவுக்காக ரூ. 1,160 கோடி விடுவிப்பு

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் 2024 ஜூன் மாதத்துக்கான இடைநிலை மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளின் கீழான கொடுப்பனவுகளை 6,22,495 06

## பஸ் கட்டணங்கள் குறைப்பு நாளை பிற்பகல் அறிவிப்பு



05 வீதம் குறையும் என்கிறார் கெமுனு

பஸ் கட்டணங்கள் நாளை முதலாம் திகதி முதல் கணிசமான அளவு குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 06

“உறுமய” காணி உறுதி வழங்குவதால்

## காணிகளின் விலை குறையும் சாத்தியம்

பூர்வீக நிலத்தில் ஒரு அங்குல நிலத்துக்கு கூட உரிமை இல்லாதிருந்த 24 இலட்சம் குடும்பங்களுக்கு தற்போது “உறுமய” என்ற காணி உறுதி வழங்கப்படுவதால், நாட்டில் காணிகளின் விலை குறையும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக சந்தை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான பெருமளவிலான காணிகளை 24 இலட்சம் பேருக்கு மாற்றுவதனூடாக இது நாட்டிலேயே மிகப் பெரிய தனியார்மயமாக்கல் 06

## எங்கள் கருத்து...

### பாராளுமன்றத்தை நோக்கியபடி ஒட்டுமொத்த தேசத்தின் பார்வை!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளைமறுதினம் 2 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் ஆற்றவிருக்கின்ற உரையைச் செவிமடுப்பதற்காக ஒட்டுமொத்த தேசமே காத்துக் கொண்டிருக்கின்றது எனலாம்.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் 02 ஆம், 03 ஆம் திகதிகளில் விசேட பாராளுமன்ற அமர்வு நடைபெறவிருக்கின்றது. அந்த முதல்நாள் அமர்விலேயே ஜனாதிபதி நாளைமறுதினம் விசேட உரையொன்றை நிகழ்த்தவிருக்கின்றார்.

பொருளாதாரத்தில் அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை குறுகிய காலத்துக்குள் மீளக்கட்டியெழுப்பியதன் மூலம், சர்வதேச அரங்கில் நம்பிக்கைக்குரிய நாடாக இலங்கையை மாற்றியமைத்தவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளைமறுதினம் ஆற்றவிருக்கின்ற உரையானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையப் போகின்றது.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளில் இலங்கைக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுக்கும் இடையில் இம்மாதம் 26 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட இறுதி உடன்படிக்கை மற்றும் 06

## கடலில் மிதந்த திரவத்தை அருந்தி உயிருக்கு போராடும் மீனவர்கள்

03 மீனவர் மரணம், மூவர் கவலைக்கிடம்; மீட்பு பணியில் கடற்படையினர் தீவிரம்



கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றிலிருந்த திரவத்தை மதுபானம் என்ற எண்ணத்தில் அருந்திய மூவர் உயிரிழந்துள்ளதாக கடற்படையின் ஊடகப் பணிப்பாளர் கப்டன் கயான் விக்கிரமசூரிய நேற்று தெரிவித்தார். மேலும் இந்த 06

## விடுதலை புலிகளுக்கு J.V.P யினரே ஆரம்பத்தில் ஆயுதங்கள் வழங்கினர்



அநுரகுமார MP பொறுப்பான தலைவராக பேச வேண்டும்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஜே.வி.பியினரே ஆரம்ப காலத்தில் ஆயுதங்களை வழங்கியதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் 06

தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கி

## தமிழ் இனம் யார் என்பதை காட்டும் சந்தர்ப்பம் இதுவே



நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயம் வரலாறு தந்திருக்கின்ற சந்தர்ப்பம் என்பதால் தமிழ் பொது வேட்பாளரை இறுகப் பற்றி இந்த மண்ணில் தமிழினம் 06

அரசியல் உரிமை பெற்றுத்தரும் பொறுப்பை

## சர்வதேச சமூகத்திடம் நாம் ஒப்படைக்க போவதில்லை



"எமது மலையக தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பெற்றுத் தரும் பொறுப்பை, சர்வதேச சமூகத்திடம் நாம் ஒப்படைக்க போவதில்லை" என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார். 06

## இன்றைய வாரமஞ்சரியுடன் அரச வர்த்தமானி வெளியீடு



இலங்கை கடற்படைக்கு ஆட்சேர்ப்பு, விவசாய மற்றும் கைத்தொழில்துறை அமைச்சின் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்துக்கு 2024/2025 ஆம் ஆண்டுக்கான மாணவர்களை இணைத்தல் உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய வர்த்தமானி இன்றைய தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையுடன் வெளியிடப்பட்டுள்ளது.



## ஆசியாவில் முதல் தடவையாக

# செயற்கை நுண்ணறிவு மூலம் அதானி நிறுவனம் இயக்கவுள்ள மன்னார் காற்றாலைகள்

மன்னார் மற்றும் பூநகரியில் உள்ள இரண்டு காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களில் சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ள அதானி நிறுவனம், முதன்முறையாக முன்மொழியப்பட்ட காற்றாலை மின் நிலையத்திற்காக, பறவைகளைத் திசைமாற்றும் விசையாழிகளை வடிவமைத்துள்ளது.

அதானி எரிசக்தி வணிகத் தொடர்புத் தலைவர் ரொபின் கோஷுக்குச் சொந்தமான 400 ஹெக்டேயர் நிலப்பரப்பில் முந்த்ரா துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ள அதானி காற்றாலை மின் விசையாழி மற்றும் உபகரண உற்பத்தி நிலையத்தை பார்வையிட்டபோது, மன்னார் காற்றாலை மின்சார வசதிக்காக செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் காற்றாலை க ளை வடிவமைத்துள்ளதாக அவர் தெரிவி த்தார். குறிப்பாக அப்பகுதிக்கு வரும் பறவைகளின் அசைவுகளைக் கண்டறிந்து எந்தப் பறவை விசையாழியை நோக்கிப் பறக்கிறதோ அது தானாக மூடப்படும்."



மேலதிகமாக, மூன்று காற்றாலை பிளேடுகளிலும் பெரிய சிவப்பு ஸ்டிக்கர்கள் உள்ளன, அவை பறவைகளை விரட்டும். பறவைகளின் புலப்பெயர்வுக் காலம் தொடங்கும் போது காற்றாலை மின் உற்பத்தி நிறுத்தப்படுவது வழக்கம். ஆனால் அதானி குழுமத்தால் இயக்கப்படவுள்ள 500 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான காற்றாலை மின் நிலையத்தின் காற்றாலைகள், பறவைகளின் அசைவுகைள கண்டுகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால் அவை இயங்கும் என்றும் கோஷ் கூறினார்.

அனைத்து காற்றாலை மின் நிலைய உபகரணங்களும் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவதால், அவை இலங்கை சூழலுடன் ஒத்துப்போகும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், 2030 ஆம் ஆண்டு வரை சுமார் 800 ஏக்கர் பரப்பளவில் தங்கள் பசுமை ஆற்றல் திறன்களை அதிகரிக்க சுமார் 100 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யப் போவதாக கௌதம் அதானி கூறினார்.

"இந்தியாவையும் சில பிராந்திய நாடுகளையும் புதிய தொழில்நுட்பத்துடன் காபனிறக்கும் செயற்பாடுகளை நோக்கி அழைத்துச் செல்வதற்கும், பசுமையான பூமியை உருவாக்குவதற்கும் நாங்கள் எங்கள் பங்கைச் செய்ய விரும்புகிறோம். 200 காற்றாலைகள் மூலம் 2000 வீடுகளுக்கு மின்சாரம் வழங்க முடியும் என்றும் அவர் கூறினார்.

*இந்தியாவிலிருந்து சிராஜீவ் சிறிமான*




# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்



## அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெருமையை அனுபவிக்கவும்...

### பட்டப் படிப்பு பயிலிளவல்கள் உத்தியோகத்தர்களை அனுமதித்தல் - 2024/2025

பட்டப் படிப்பு பயிலிளவல்கள் / உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் இரத்மலானை வளாகத்தில் நடைபெறும் கற்கை நெறிகள்**

| பட்டப்படிப்பு கற்கைநெறி | காலம் | ஆண்/பெண் |
|---|---|---|
| **பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைப் பீடம் (FDSS)** | | |
| உபாய கற்கை மற்றும் சர்வதேச உறவுகள் விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | ஆண்/பெண் |
| **மருத்துவ பீடம் (FOM)** | | |
| இளநிலை மருத்துவம் மற்றும் அறுவையியல் (MBBS) | 05 வருடங்கள் | ஆண்/பெண் |
| **பொறியியல் பீடம் (FOE)** | | |
| வான்வெளி பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | ஆண்/பெண் |
| உயிர்மருத்துவ பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | ஆண் |
| கட்டிட சேவைகள் பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | ஆண் |
| கட்டிட பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | ஆண்/பெண் |
| மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | ஆண்/பெண் |
| இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | ஆண்/பெண் |
| பொறிமுறை பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | ஆண்/பெண் |
| பொறிமுறை இலத்திரனியல் பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | ஆண்/பெண் |
| கடல்சார் பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | ஆண்/பெண் |
| கப்பல் கட்டுமானம் மற்றும் கடல்சார் பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி | 04 வருடங்கள் | ஆண் |
| **சட்ட பீடம் (FOL)** | | |
| சட்டமாணி | 04 வருடங்கள் | ஆண்/பெண் |
| **முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் பீடம் (FMSH)** | | |
| முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்ப விஞ்ஞான விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | ஆண்/பெண் |
| விநியோக முகாமைத்துவ விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | ஆண்/பெண் |
| சமூக விஞ்ஞான விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | ஆண்/பெண் |
| பிற மொழி பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தலில் கலைமாணி (TESOL) (with Cambridge CELTA) | 03 வருடங்கள் | ஆண் |
| **கணினி பீடம் (FOC)** | | |
| கணினி விஞ்ஞான விஞ்ஞானமாணி (கௌரவம்) (CSSL இன் முழுமையான அங்கீகாரம் பெற்றது) | 04 வருடங்கள் | ஆண்/பெண் |
| மென்பொருள் பொறியியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | ஆண் |
| கணினி பொறியியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | ஆண் |
| தரவு விஞ்ஞானம் மற்றும் வணிக பகுப்பாய்வு விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | ஆண் |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) (CSSL இன் முழுமையான அங்கீகாரம் பெற்றது) (தெற்கு வளாகம் - சூரியவெவ இல் நடாத்தப்படும் கற்கைநெறி) | 04 வருடங்கள் | ஆண் |
| தகவல் முறைமை விஞ்ஞானமாணி (கௌரவம்) (CSSL இன் முழுமையான அங்கீகாரம் பெற்றது) ([illegible] வளாகம் – கொழும்பு இல் நடாத்தப்படும் கற்கைநெறி) | 04 வருடங்கள் | ஆண் |
| **தொழிநுட்ப பீடம் (FOT)** | | |
| கட்டுமான தொழிநுட்ப பொறியியல் தொழிநுட்பமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | ஆண் |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப தொழிநுட்பமாணி ([illegible] வளாகம் – கொழும்பு இல் நடாத்தப்படும் கற்கைநெறி) | 04 வருடங்கள் | ஆண் |
| **குற்றவியல் நீதி பீடம் (FOCJ)** | | |
| குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | ஆண் |
| பொலிஸ் விஞ்ஞான விஞ்ஞானமாணி | 03 வருடங்கள் | ஆண் |

**சூரியவெவ தெற்கு வளாகத்தில் நடைபெறும் கற்கை நெறிகள்**

| பட்டப்படிப்பு கற்கைநெறி | காலம் | ஆண்/பெண் |
|---|---|---|
| **சூழலியல் மற்றும் இடம் சார் விஞ்ஞான பீடம் (FBESS)** | | |
| கட்டிடக்கலை இளமாணி (கௌரவம்) | 05 வருடங்கள் | ஆண் |
| அளவையியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) (IQSL இன் அங்கீகாரம் பெற்றது) | 04 வருடங்கள் | ஆண் |
| அளவையியல் விஞ்ஞான விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | ஆண் |
| தொழிற்துறை மற்றும் சேவைத் தர முகாமைத்துவ விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | ஆண் |
| புவிசார் தகவலியல் விஞ்ஞானமாணி (கௌரவம்) | 04 வருடங்கள் | ஆண்/பெண் |

**தேவையான தகைமைகள்**

- **விண்ணப்பதாரர்**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
ii. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்.
iii. க.பொ.த (உ/தர) பொது பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (குறைந்தபட்சம் 30 புள்ளிகள்).
iv. இலங்கை பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகைமையினைக் கொண்டிருத்தல்.
v. திருமணமாகாதவராயிருத்தல்.
vi. TESOL தவிர்ந்த ஏனைய கற்கைநெறிகளுக்கு க.பொ.த. (சா/தர) ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது கேம்பிரிஜ்/எடெக்சல்/அதற்குச் சமமான ஏதேனும் வெளிநாட்டுத் தகைமையினைக் கொண்டிருத்தல். TESOL கற்கைநெறிக்கு க.பொ.த. (சா/தர) ஆங்கில பாடத்தில் (B) அல்லது கேம்பிரிஜ்/எடெக்சல்/அதற்குச் சமமான ஏதேனும் வெளிநாட்டுத் தகைமையினைக் கொண்டிருத்தல்.

பூர்த்தி செய்யப்படவேண்டிய ஆகக் குறைந்த தகைமைகள் மற்றும் உடற்கட்டமைப்பு அளவுகோல்களை அறிந்துகொள்ள **www.kdu.ac.lk** எனும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

**விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை**

**Online விண்ணப்பம்**

- **https://kdu.ac.lk** எனும் இணையத்தளத்திற்குள் சென்று நிகழ்நிலை (online) மூலம் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- விண்ணப்பத்தாரிகள் தாம் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பட்டப்பாடநெறிக்கும் தலா ரூ.2000/- மீளச் செலுத்தப்படாத கட்டணமாக நிகழ்நிலையில் (online) மூலம் செலுத்த வேண்டும். உதாரணமாக :- இரண்டு பட்டப்பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரி ரூ. 4000/-செலுத்த வேண்டும்.

**முக்கியமானது**

- நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்கள் பற்றிய தீர்மானம் முற்றுமுழுதாக பல்கலைக்கழகத்திற்கு உரியது ஆகும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் கொத்தலாவல பல்கலைக்கழகம் அனுமதிக்கபடும் முன்னர் இலங்கை குடியரசுடன் ஒப்பந்தம் ஒன்றிலும் பிணை ஒன்றிலும் ஒப்பமிடல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலிளவல் உத்தியோகத்தர்கள் பட்டப்படிப்பு பாடங்களை முடிப்பதற்கு முன்னும் பின்னும் பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு காலத்திற்கு கட்டாய இராணுவப் படிப்புக்கு நியமிக்கப்படுவார்கள்.
- வெற்றிகரமாக பட்டப் பாடநெறியைப் பூர்த்தி செய்யும் பட்டதாரி கெடட் உத்தியோகத்தர்கள் தரை / கடல் / வான் படையின் நிரந்தர படையணியின் உத்தியோகத்தர் ஒருவராக கட்டாய சேவைக்காலம் ஒன்றைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**கொடுப்பனவுகள்**

மாணவர் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.80,000/- வரை சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக பின்வரும் வசதிகளும் இலவசமாக வழங்கப்படும்.

அ. உணவும் தங்குமிட வசதியும்
ஆ. சீருடை
இ. இணை சேவைகள்
ஈ. விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
உ. மருத்துவ வசதிகள்

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 19-07-2024**

The Association of Commonwealth Universities · ECFMG · World Directory of Medical Schools · Sri Lanka Medical Council · CSSL · ECSL

தொலைபேசி : 0112635039, 0112632028
011 2635268, 011 2638656
நீட்டிப்பு - 326/329
மின்னஞ்சல் : kdudayscholar@kdu.ac.lk

பதிவாளர்
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை, 10390, இலங்கை.

பொருளாதார மீட்சிபெற

# நிவாரண மனோநிலையிலிருந்து வெளியேறுதலே முக்கியமானது

## அவற்றின் மூலம் நாட்டை கட்டியெழுப்ப முடியாது

### கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறை பேராசிரியர் பிரியந்த துனுசிங்க



எதிர்கால நலன் சார்ந்த ஜனரஞ்சக அரசியல் வாக்குறுதிகளைச் செயல்படுத்த முடியாது. தேர்தலில் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வாக்குறுதிகள் வழங்கப்பட்டாலும், ஒட்டுமொத்த நாடு என்ற வகையில் தெளிவாகவும் யதார்த்தமாகவும் நாட்டைப் பற்றிச் சிந்தித்து நீண்டகாலத்தில் நாட்டுக்கு நன்மையளிக்கும், குறுகியகால வேதனையான தீர்மானங்களாக எடுக்க வேண்டும். வேதனைமிகுந்த முடிவுகளை எடுக்க அரசியல் அதிகாரம் தயங்கக் கூடாது.

@ எதிர்காலத்தில் நாட்டை முன்னேற்றுவதற்கான எதிர்பார்ப்பு இருக்குமாயின், நலன்புரி பொருளாதார மறுசீரமைப்புக்கள் இனிமேல் எமது நாட்டில் இருக்கக் கூடாது. உழைக்கும் தொழிலாளர்களின் வரிப்பணத்தில் கஷ்டப்படாத ஒரு தரப்பினரைப் பராமரிக்கும் முறையை எதிர்காலத்தில் நாம் நீக்க வேண்டும். நிவாரண மனோநிலையிலிருந்து நாம் வெளியேற வேண்டும்.

ஜனாதிபதி அண்மையில் நாட்டு மக்களுக்கு அறிவித்ததன் பிரகாரம், இருதரப்பு கடன் மறுசீரமைப்புக்காக சுமார் 10.08 பில்லியன் டொலர் கடன் ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. அதில் ஒரு ஒப்பந்தம் பாரிஸ் கிளப்பின் கடன் குழுவுடனும் மற்றைய ஒப்பந்தம் சீனாவுடனும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டுக்கு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக மேலதிகக் காலம் கிடைக்கும். அதேபோன்று, கடன் மறுசீரமைப்பு மூலம் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான சலுகைக் காலமும் கிடைக்கிறது. ஜனாதிபதியின் அறிவிப்பின்படி, கடன் மறுசீரமைப்பு மூலம், இலங்கையின் கடன் சுமை, அதாவது திருப்பிச் செலுத்துவதற்குத் தேவைப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9% வீதம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனை 2027 - 2032 காலப்பகுதியில் 9% இலிருந்து 4.5% ஆகக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அத்துடன், இந்தக் காலகட்டங்களில், அதாவது 2027 முதல் 2032 வரையிலான காலகட்டங்களில் தொடர்பாக மொத்த நிதித் தேவையை 13% எனும் குறைந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடன் நிலைத்தன்மை தொடர்பான இந்த இலக்குகளை அடைவதற்கு இந்த கடன் மறுசீரமைப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு இருதரப்பு கடனை மறுசீரமைப்பது மிகவும் முக்கியமானதோடு, இது நாம் பெற்றுக் கொண்ட வெற்றியாகக் குறிப்பிடப்பட முடியும். இதனைப் பல விடயங்களின் ஊடாக விபரிக்க முடியும். அதில் முதலாவது விடயம், கடனைத் திருப்பிச் செலுத்தாததன் மூலம், இலங்கையின் பெயர் சர்வதேச ரீதியில் கடுமையாக களங்கப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடனைத் திருப்பிச் செலுத்தாத நாடு என்பதே அந்த கடுமையான களங்கத்திற்கான காரணமாகும்.

ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் நாட்டினுள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டனர். கடனை மறுசீரமைப்பதன் மூலம், மீண்டும் நற்பெயரைக் கட்டியெழுப்புதல் மற்றும் இந்த நிலைமையின் முன்னேற்றம் ஆகியவற்றை நாம் எதிர்பார்க்கலாம்.

இரண்டாவது விடயம், குறிப்பாக கடன் மறுசீரமைப்புடன் தற்போது இருதரப்பு கடன் வழங்குனர்களின் உதவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டுத் திட்டங்கள் அனைத்தும் கடனைச் செலுத்தாத காரணத்தினால் இடைநிறுத்தப்பட்டன. அந்த நாடுகளின் சட்டங்களுக்கு அமைய ஏதேனும் வகையில் ஒரு நாடு கடனைத் திருப்பிச் செலுத்த தவறினால் அந்நேரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் இடைநடுவில் நிறுத்தப்படும். இதே நிலைதான் நமது நாட்டின் திட்டங்களுக்கு எமது நாட்டில் ஏற்பட்ட நிலையிலும் ஏற்பட்டது. மத்திய அதிவேக நெடுஞ்சாலை, விமான நிலையம் மற்றும் பல்வேறு திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன. இந்தக் கடன் மறுசீரமைப்பு முடிந்தவுடன், ஒப்பந்தங்களின்படி மிக விரைவில் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடனை மறுசீரமைக்கும் வரை அந்த நாடுகள் கூட இந்த அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கே எதிர்பார்த்தன. இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கும் போது அதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியில் சாதகமான தாக்கத்தையும் தொழில்வாய்ப்புக்களில் சாதகமான தாக்கத்தையும் எதிர்பார்க்கலாம். சிறந்த பொருளாதார நோக்கினை ஏற்படுத்துவதற்கு, நம்பகத்தன்மையை உருவாக்குவதற்கு, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கும், ஒட்டுமொத்த மக்களுக்கும், பொருளாதாரம் படிப்படியாக மீண்டு வருவது குறித்து நம்பிக்கை ஏற்படும். நாடு தேசிய அளவில் வங்குரோத்து நிலையடைந்து பல்வேறு அதிர்ச்சிகளை சந்திக்கும் வாய்ப்புகள் எதிர்காலத்தில் அதிகரிக்கலாம். உலக வரலாற்றை எடுத்துக் கொண்டால் குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதாரம் மீண்டு வரும் போது மீண்டும் ஒரு வெளி அதிர்ச்சி ஏற்படும்.

உதாரணமாக தற்போது காணப்படும் பறவைக் காய்ச்சல் போன்ற தொற்றுக்கள் பரவுமாயின் உலகம் முழுவதும் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைவதற்கான வாய்ப்புள்ளது. அந்நிய செலாவணி சரிவடைந்து, மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் செல்ல வேண்டியேற்படும். அவ்வாறான பொருளாதார நெருக்கடிக்குள் செல்லும் சந்தர்ப்பங்களில் எமக்கு உதவியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இல்லாவிட்டால் வேறு எந்த நாடுகளும் இல்லை. கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டதால் நாம் இனி ஏதேனும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நாடுகள் இருக்கின்றது. கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளாமை, தாமதப்படுத்தல் போன்ற காரணங்களால் பெரும் நிச்சயமற்ற தன்மையும் சவாலும் உள்ளது.

கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதன் ஊடாக ஆபத்து மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு உள்ள வாய்ப்பு குறைவாக இருக்கும். இருதரப்பு கடன் வழங்குபவர்களுடன் மறுசீரமைப்பு செய்வது கட்டாயமாகும்.

அதேபோன்று வெளிநாட்டு கடன் பத்திரம் வைத்திருப்பவர்களுடன் ஏற்கனவே செய்துள்ள ஒப்பந்தங்களை மிக விரைவில் முடித்துக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும். இந்த கடன் மறுசீரமைப்பை முழுமையாக நிறைவு செய்வது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு உதவும். இதன் மூலம் பொருளாதாரத்தை மீட்டெடுக்க தேவையான சாதகமான சூழ்நிலை உருவாகிறது என்பதே இதன் இறுதி முடிவாகும்.

2025ஆம் ஆண்டாகும் போது, பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 25% வீதமாக வளர வேண்டும், அத்துடன் இது 2030ம் ஆண்டில் 40% வீதமாக அதிகரிப்பதற்கு அடிப்படையில் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி அரசாங்கம் ஏற்கனவே திட்டங்களை தயாரித்துள்ளது. இது ஒரு ஆக்கபூர்வமான செயலாகும். வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சந்தை சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டத்திற்குள் தொடர்புடைய கட்டமைப்பில் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. அதற்கமைய Enterprise Sri lanka போன்ற நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு, வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றன. சர்வதேச வர்த்தகத்திற்கான நிறுவனத்தை நிறுவுவதற்கும் உற்பத்தித் திறன் பணியகத்தை ஊக்குவிப்பதற்கும் அரசாங்கம் அடையாளம் காணப்பட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு துறைகளை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கின்றது. இந்த அனைத்து நிறுவனங்களையும் ஆரம்பிப்பது மாத்திரமின்றி, அவற்றைச் செயற்படுத்துவதும் முக்கியமானதாகும். இல்லையென்றால் கடனைச் செலுத்த முடியாத நாடாக மாற வாய்ப்புள்ளது. எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் எந்தவொரு அரசாங்கமும் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். துரிதமாக ஏற்றுமதி வளர்ச்சியை மேற்கொள்ள வேண்டும். வெளிநாட்டு முதலீடு மற்றும் வர்த்தகத்தை ஊக்குவிப்பது போன்றவை கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும். அதற்கான அடித்தளத்தை இப்போதே உருவாக்க வேண்டும்.

இன்று, IMF உடன், நாம் நிதி ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம். அத்துடன் இப்போது கடன் மறுசீரமைப்பும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில், பல ஆழமான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டி வரும். இந்த மறுசீரமைப்புக்களை நாம் கண்டிப்பாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்டிற்குப் பாதகமான

(18ஆம் பக்கம் பார்க்க)

சுபத்ரா தேசப்பிரிய
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

## Burnout ஐ பற்றி புரிந்து கொள்வது: இராஞ்சலி உனம்புவே அபேரட்னவுடன் "Good Cents" உரையாடல்



இராஞ்சலி உனம்புவே அபேரட்ன மற்றும் சச்சினி குலரத்ன

Good Cents என்பது தகவல் பரிமாறப்படும் YouTube கலந்துரையாடல் நிகழ்ச்சியாக யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னெடுக்கின்றது. அனைத்து இலங்கையர்களின் முன்னேற்றத்துக்கான நலன் பேணலுடன் தொடர்புடைய பல்வேறு வழிமுறைகளை இனங்காணும் வகையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது. புதிய நிகழ்வாக, Edhati Consultancy இன் ஸ்தாபகர் இராஞ்சலி உனம்புவே அபேரட்னவுடன், burnout தொடர்பில் எழும் கரிசனைகள் மற்றும் மக்களின் நலனில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி கலந்துரையாடப்பட்டது. இராஞ்சலி முகாமைத்துவ உளவியல் நிபுணராகவும், பரிபூரண சுகாதார மற்றும் நலன் பேணல் நிபுணராகவும் திகழ்வதுடன், சுயாதீன ஆய்வாளர் மற்றும் ஆலோசகராகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கலந்துரையாடலின் பிரதான அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**Burnout என்பது தொடர்பில் சக காலத்தில் அதிகம் கவனம் செலுத்தப்படுகின்றது. அது என்ன மற்றும் எவ்வாறு ஏற்படுகின்றது என்பதை பற்றி விளக்கமளிக்க முடியுமா?**

நீண்ட கால அல்லது அளவுக்கதிகமான அழுத்தம் காரணமாக ஏற்படும் உடல் ஆற்றல் இழப்பு நிலையாக burnout அமைந்துள்ளது. நீண்ட நாள் பணிகளின் பின்னர் ஏற்படும் களைப்பு என்பது மாத்திரமல்லாமல், உங்களின் உணர்வு மற்றும் உடல்சார் வலு ஒதுக்கங்கள் ஆழமாக இழக்கும் நிலையாகும். பற்றரி ஒன்று தொடர்ச்சியாக திறன் இழந்து மீள ரீசார்ஜ் செய்து கொள்ள முடியாத நிலையை எண்ணிப் பாருங்கள். காலப்போக்கில் படிப்படியாக burnout ஏற்படுகின்றது. அளவுக்கதிகமான பணிச்சுமை மற்றும் அழுத்தத்துடன் ஆரம்பித்து, தினசரி வாழ்க்கையை பாதிக்கும் அழுத்தம் மற்றும் ஏக்க நிலைக்கு வழிகோலுகின்றது. நீங்கள் டிரசஜெரவ நிலையை அடைந்ததும், தினசரி பணிகளை முன்னெடுக்க முடியாத நிலையை உணரக்கூடியதாக இருப்பதுடன், முன்னர் தினசரி செயலாற்றியதை போன்று இயங்க முடியாத நிலையை கொண்டிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கும். நபர் ஒருவரின் தினசரி வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்துடனும் தொடர்புபட்டதாக அமைந்திருக்கும்.

**கவனம் செலுத்த வேண்டிய எச்சரிக்கை சமிக்ஞைகள் ஏதும் உண்டா?**

கவனம் செலுத்த வேண்டிய பல்வேறு சமிக்ஞைகள் உள்ளன. உங்களின் பணி மீது எழும் எதிர்மறைத் தன்மை அல்லது வெறுப்புணர்வு ஒன்றாகும். நீங்கள் விரும்பிச் செய்த பணிகளிலிருந்து கூட நீங்கள் விடுபட்டதாக உணர்வீர்கள். மற்றுமொரு அடையாளமாக, ஊக்கம் அல்லது உற்பத்தித்திறனில் ஏற்படும் வீழ்ச்சியாகும். உங்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை தற்போது உங்களுக்கு கவர்ச்சிகரமானதாக அமைந்திருக்காது. பணியின் தரமும் பாதிப்பை எதிர்கொள்ளும். சுய-தனிமைப்படுத்தல் என்பதும் பாரிய அடையாளமாக அமைந்திருப்பதுடன், burnout ஐ எதிர்நோக்கியிருப்போர், சமூக ஈடுபாட்டை பேணுவதற்கான வலு இன்மையை உணர்வார்கள்.

**உடல் ரீதியான ஏதேனும் அறிகுறிகள் காணப்படுமா?**

உறக்க முறையில் மாற்றங்கள் ஏற்படுவது பொதுவானதாக அமைந்திருக்கும். உறங்குவதில் சிக்கல் அல்லது தொடர்ந்து உறங்குதல் அல்லது அளவுக்கதிகமாக உறங்குதல் போன்றன அடங்கும். பசி ஏற்படுவதிலும் மாற்றத்தை உணர்வீர்கள். அழுத்தம் காரணமாக குறைந்தளவு உண்பது அல்லது ஆரோக்கியமற்ற சௌகரியமான உணவுகளை உண்ணுதல் போன்றன அடங்கும். தலைவலி, வயிற்று வலி மற்றும் வலுவிழந்து காணப்படும் பொது உணர்வு போன்றன பொதுவான உடல் ரீதியான அறிகுறிகளாகும். அதன் பிரகாரம், நபர் ஒருவர் இயங்குவதில் burnout தாக்கம் செலுத்தும். உயர் மட்ட burnout என்பது, நம்பிக்கை இழப்பு மற்றும் உணர்வு ரீதியான சோர்வு போன்றவற்றுடன் தொடர்புடையதாக அமைந்திருக்கும். இதன் காரணமாக தொடர்ச்சியான சோம்பல், அளவுக்கதிகமான மறதி மற்றும் குழப்ப நிலைகளையும் வெளிப்படுத்தப்படும்.

**நபர் ஒருவர் burnout க்கு இலக்காகும் தன்மை மாறுபடுமா?**

ஆம். நபர் ஒருவர் burnout க்கு இலக்காகும் தன்மை சுகாதாரத்தின் மூன்று உள்ளக நிலைகளுக்கமைய வேறுபடும். இதன் போது, நாம் சுகாதாரத்தை Bio-Psycho-Social மாதிரியினூடாக கவனம் செலுத்துகின்றோம். நபர் ஒருவரின் உயிரியல் (biology) – மூளைக் கட்டமைப்பு மற்றும் செயற்பாடு, மரபுக் கட்டமைப்பு, நரம்பு இரசாயனவியல், ஹோர்மோன்கள், நரம்புக்கடத்திகள் போன்றன நபர் ஒருவரின் உயிரியலுடன் தொடர்புபட்டிருப்பதுடன், உடல் ரீதியான சுகாதாரம் எனவும் அறியப்படுகின்றது. சூழலின் வெளியக காரணிகளால் தாக்கம் செலுத்தப்படுகின்றது. உள்ளகமட்டத்தில், இந்தக் காரணிகள் நபர் ஒருவரின் உளவியல் சுகாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஏனெனில், மூளை, கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் மற்றும் ஹோர்மோன் போன்றன உணர்வுபூர்வமான நலனில் தாக்கத்தை கொண்டிருக்கும். மேலும், நபர் ஒருவரின் உணர்வுநிலையில், நம்பிக்கைகள், நடத்தைகள், neuroticism நிலைகள் மற்றும் அழுத்தத்துக்கு பதிலியக்கம் போன்றன நபர் ஒருவர் எவ்வாறு இயங்குகின்றார் என்பதையும், தமது நலனில் ஆபத்தை ஏற்படுத்துவதாக அல்லது ஏற்படுத்தக்கூடியதாக கருதுகின்றனர். எமது ஆளுமைகள் மற்றும் எமது மரபணுக்கள் போன்றன நாம் எவ்வாறு அழுத்தத்தை கையாள்கின்றோம் என்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. நபர் ஒருவரின் அறியாற்றல் என்பது தமது நலனில் எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில், ஒவ்வொரு நபரினதும் நலனில் ஆபத்துக்கள் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில் கொண்டிருக்கும் அறியாற்றல் மற்றும் அதனை எவ்வாறு கையாள்வது என்பதைப் பொறுத்து தங்கியிருக்கும். burnout இன் நிலைகளில் தாக்கம் செலுத்துவதில் தாங்கிக் கொள்ளும் தன்மை என்பது முக்கியமான அங்கமாகும். சகல ஊழியர்கள் அல்லது நிர்வாகம் அல்லது மேலதிகாரிகளிடமிருந்து உணர்வுபூர்வமான ஆதரவை எவரேனும் கொண்டிருந்தால், burnout ஏற்படக்கூடிய வாய்ப்புகள் குறைவானதாக அமைந்திருக்கும் என்பதுடன், அழுத்தம் மற்றும் burnout இடையே வித்தியாசத்தை தீர்மானிக்கும் காரணியாகவும் அமைந்திருக்கும். எவ்வாறாயினும், எந்த வகையான ஆதரவையும் பெறாத நபருக்கு, மோசமான உணவுப் பழக்கம் அல்லது மாற்றுப் பொருட்களுக்கு அடிமைப்படல் அல்லது குறுகிய கால எதிர்மறை செயற்பாடுகளான புகைபிடித்தல், அல்லது போதைப்பொருள் பாவனை போன்றவற்றுக்கு ஆளாகி, அவர்களின் burnout நிலையை நீடித்து, ஒட்டுமொத்த சுகாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துவிடும்.

**நபர் ஒருவர் தாம் டிரசஜெரவ ஆவதாக உணர்ந்தால், அவரால் என்ன செய்ய முடியும்?**

Burnout ஐ குணப்படுத்த முடியும் என்பது நற்செய்தியாகும். முதல் படி அறிகுறிகள் மற்றும் சமிக்ஞைகளை உணர்வதாகும். நீங்கள் burnout ஆவதை உணர்ந்தவுடன், உங்கள் அழுத்தத்தை கட்டுப்படுத்தும் படிமுறைகளை மேற்கொள்ள ஆரம்பிப்பதுடன், உங்கள் நலனை மீள நிறுவுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

அடிக்கடி உடற்பயிற்சியில் ஈடுபடுவது என்பது அழுத்தத்தை குறைப்பதற்கு பலமான காரணியாகும். இது பெருமளவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. உடல் ரீதியான செயற்பாடுகள் என்ட்ரோபின்களை வெளியிட உதவுகின்றன. அதனூடாக, உங்கள் மனநிலை மற்றும் உடல் வலுநிலைகள் மேம்படுகின்றன. உடற்பயிற்சியின் பின்னர் வெளியிடப்படும் BDNF வளர்ச்சி ஹோர்மோன்களினூடாக, நீண்ட கால அழுத்தம் மற்றும் burnout காரணமாக சேதமடைந்திருக்கும் கலன்களின் சேதங்களை பழுதுபார்க்க உதவுவதுடன், புதிய கலன்கள் உருவாக்கத்துக்கும் உதவுகின்றன. மனநிலை அடிப்படையிலான அறிவுத்திறன் சார்ந்த நடத்தை சிகிச்சை என்பது மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கும். குறிப்பாக, அழுத்தத்துக்கு காரணமான விடயங்களை கண்டறிந்து, அவற்றை சீர்ப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்திருக்கும். உளவியல் ரீதியான மதிப்பாய்வுகளும், ஏதேனும் பாரதூரமான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு மிகவும் பெறுமதி வாய்ந்தனவாக அமைந்துள்ளன.

**சிகிச்சையாளர்கள் என்பதைப் பற்றி பேசும் போது, எந்த வகையான சிகிச்சை உதவியானதாக அமையும்?**

அறிவுத்திறன் சார்ந்த நடத்தை சிகிச்சை அல்லது CBT என்பது burnout க்கு பயனுள்ள வழிமுறையாக அமைந்துள்ளது. CBT இனால் உங்களுக்கு, அதிகளவு அழுத்தத்தை ஏற்படுத்தும் எதிர்மறையான சிந்தனைகளை இனங்காண முடிவதுடன், அர்த்தமுள்ள வகையில் எதிர்மறையான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உதவுவதாக அமைந்திருக்கும்.

**இதுவரையில், தனிநபர்கள் கவனம் செலுத்தக்கூடிய தந்திரோபாயங்கள் பற்றி நீங்கள் பேசியுள்ளீர்கள், தொழில்வழங்குநர்களுக்கு எப்படி? அவர்களால் என்ன செய்ய முடியும்?**

ஆரோக்கியமான பணியிடச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பொறுப்பு தொழில் வழங்குநர்களுககு காணப்படுகின்றது. மிகவும் முக்கியமான காரணி யாதெனில், ஆதரவான மற்றும் திறந்த கலாசாரத்தை கொண்டிருப்பதாகும். தமது முகாமையாளர்களுடன் கலந்துரையாடி, தமது சிக்கல்களை பகிர்ந்து கொள்ள எதிர்பார்க்கும் ஊழியர்களுக்கு breaking point நிலையை எய்தும் வாய்ப்பு குறைவானதாக அமைந்திருக்கும். ஆரோக்கியமான பணி-வாழ்க்கை சமநிலையை ஏற்படுத்துவதும் முக்கியமானதாகும். பணியாற்றும் நேரம் தொடர்பில், தெளிவான எதிர்பார்ப்புகளை ஏற்படுத்துவதை இது கொண்டிருப்பதுடன், பணி நேரத்துக்கு அப்பாலான தொடர்பாடல் மற்றும் விடுமுறை காலப்பகுதியை பயன்படுத்துவதை ஊக்குவித்தல் போன்றன இதில் தாக்கம் செலுத்தும்.

அழுத்த முகாமைத்துவத்துக்கு தொழில் வழங்குநர்களால் வளங்களை பெற்றுக் கொடுக்கலாம். இதில் Employee Assistance Programs (EAPs) அணுகுவதற்கான வாய்ப்பு, பிரத்தியேகமான, இரகசியத்தன்மையான மற்றும் தீர்மானிக்கப்படாத ஆலோசனை சேவைகள் அடங்கியிருக்கும். உளவியல் ரீதியில் பாதுகாப்பான பணிச் சூழலை ஏற்படுத்த இது மிகவும் முக்கியமானதாகும். ஏற்கனவே காணப்படும் பிரச்சனைகள் தொடர்பில் கவலை கொள்ளாமல் மற்றும் ஏனையவர்களுக்கு அறியாமல் உதவிகளை பெற்றுக் கொள்வது உகந்தது. ஊழியர் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம், ஊழியர்களுக்கு தம்மை பாதுகாத்துக் கொள்ள உதவுவதாக அமைந்துள்ளது. அதனூடாக, ஏனையவர்கள் அறிந்து கொள்வார்கள் என்பது பற்றி கவலை கொள்ள வேண்டியதில்லை. உணர்வுசார் நலன் தொடர்பான உதவியை பெற்றுக் கொள்வதில் கலாசார ரீதியில் கறை காணப்படும் நிலையில், அவர்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வது முக்கியமானதாகும்.

**இறுதியாக ஏதேனும் சிந்தனைகள்?**

GOOD CENTS by Union Assurance

இலங்கையர்கள் மத்தியில் நிதிசார் நலனை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்

முதலில், டிரசஜெரவ என்பது உண்மையில் பெரும் பிரச்சனை என்பதை கவனத்தில் கொள்ளவும் – ஆனால் நீங்கள் மட்டும் இதில் தனித்தவர் இல்லை என்பதையும் சிந்திக்கவும். தமது தொழில் வாழ்வில் பலர் இதனை அனுபவித்துள்ளனர். தேவையாயின் நிபுணத்துவ உதவியை நாட பின்நிற்க வேண்டாம். சிகிச்சை வழங்குநர் உங்களுக்கு பெறுமதி வாய்ந்த சாதனங்களை வழங்கி, அழுத்த நிலைகளை பேணவும் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பவும் உதவுவார்.

உங்களின் நலனுக்கு முன்னுரிமையளிப்பது மிகவும் முக்கியமானதாகும். அதாவது, பணியில் எல்லைகளை நிர்ணயிப்பதாகும். போதியளவு உறக்கத்தை பெறுவதை உறுதி செய்வது, ஆரோக்கியமான உணவுகளை உண்பது மற்றும் நீங்கள் மகிழ்ச்சியுறும் செயற்பாடுகளுக்காக நேரத்தை ஒதுக்குவது போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். தவிர்த்தல் என்பது குணப்படுத்துவதை விட சிறந்தது என்பதை நினைவில் கொள்ளவும். சரியான ஆதரவு மற்றும் உதவியினூடாக டிரசஜெரவ இலிருந்து விடுபடலாம்.

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

## டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி எயார்டெல்லங்காவை கையகப்படுத்துதல் பூர்த்தியடைந்ததுடன் ஒன்றிணைப்பு செயன்முறை ஆரம்பம்



பங்கு விற்பனை பரிவர்த்தனையின் பூர்த்தி (புகைப்படத்தில் இடமிருந்துவலமாக)விரந்தி ஆட்டிகல்ல குழும நிறுவனச்செயலாளர் டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி ட்ரீனே'பெர்னாண்டோ குழும பொதுசட்டஆலோசகர் துணைத்தலைவர் - சட்டம் மற்றும் ஒழுங்குமுறை டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மைனைப் (பதில்) குழும பிரதம நிதியியல்அதிகாரி டயலொக் ஆசிஆட்டாபிஎல்சி சுபுன்விரசிங்க பணிப்பாளர்/ குழுமபிரதமநிறைவேற்றுஅதிகாரி, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆ''சந்திரா பிரதம நிறைவேற்று அதிகாரி நிர்வாகப்பணிப்பாளர், பார்த்தி எயார்டெல்லங்கா (பிரைவேட்) லிமிடெட் ரஸ்ஜெய்ன், உதவித்துணைத்தலைவர், இணைப்புகள் மற்றும் கையகப்படுத்தல்கள் மற்றும் வணிகஅபிவிருத்தி, பார்த்திஎயார் டெல்லங்கா (பிரைவேட்) லிமிடெட் பங்கஜ்கார்க்இ பணிப்பாளர்/ பிரதமநிதியியல்அதிகாரி, பார்த்திஎயார்டெல்லங்கா (பிரைவேட்) லிமிடெட் மூனேஷ்டேன்ட், குழுமபிரதம வர்த்தக அதிகாரி, டயலொக் ஆசிஆட்டாபிஎல்சி

தேவையான அனைத்து ஒழுங்குமுறை மற்றும் பங்குதாரர்களின்ஒப்புதல்களை தொடர்ந்து டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி (Dialog)ஆசிஆட்டாகுழுமம் பெர் ஹாட் (Axiata) மற்றும் பார்த்திஎயார்டெல்லிமிட்ட் (BhartiAirtel) ஆகியன இணைந்து பங்குவிற்பனை பரிவர்த்தனை வெற்றிகரமாக பூர்த்தியானது. இந்த பங்குபரிமாற்றத்தின் மூலம் டயலொக் நிறுவனம் பார்த்தி எயார் டெல்லங்கா (பிரைவேட்) லிமிட்டடின் (Airtel Lanka) வெளியிடப்பட்ட 100சதவீத பங்குகளை கையகப்படுத்துகிறது. இந்த பங்குபரிமாற்றத்தின் பின்னர் டயலொக்கின் 73.75சதவீத பங்குகளை ஆசி ஆட்டாவும் 10.355சதவீத பங்குகளை பார்த்தி எயார் டெல் நிறுவனமும் மிகுதி 15.895சதவீத பங்குகளை பொதுமக்களும் உரிமை கொண்டாடுவர். கம்பனி சட்டத்தின் பொருத்தமான பிரிவுகளுக்கு அமைய எயார் டெல்லங்காவை தன்னுடன் ஒன்றிணைக்க டயலொக் முன்மொழிந்துள்ளது. இதன்படி ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பாக டயலொக் திகழும்.

இந்த இணைப்பு 2023 மேமாதத்தில முதன்முதலில் அறிவிக்கப்பட்டது. இலங்கையின் தொலைத்தொடர்புதுறையில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும். இரண்டு முன்னணி நிறுவனங்களின் பலத்தையும் நிபுணத்துவத்தையும் ஒருங்கிணைத்து இந்நாட்டின் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு உலகத்தர டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கி இந்நாட்டின் டிஜிட்டல் சூழலமைப்புக்கும் பொருளாதாரத்திற்கும் பங்களிக்கவுள்ளன.

இணைப்பின் பின்னர் டயலொக் மற்றும் எயார்டெல்லங்கா ஆகியன வழமை போலவே வாடிக்கையாளர்களுக்கு தமது சேவைகளைதொடர்ந்து அளிக்கும் அதேவேளை அபரி மிதமான மதிப்பும் மற்றும் அதிசிறந்த இணைப்பு தீர்வுகளையும் அளிக்கும் நோக்குடன் இருவலையமைப்புகளும் இணைந்து பணிகளை தொடங்கவுள்ளன.

இந்தமைல்கல்டயலொக்மற்றும்எயார்டெல் லங்காஇடையிலான

இணைப்பின்பூர்த்தியைக்குறிக்கின்றது. எயார்டெல் குழுவினரையும் அவர் தம் 3 மில்லியன் சந்தாதாரர்களையும் டயலொக் குடும்பமாகிய நாம்உளமாற வரவேற்கின்றோம். இத்தருணத்தில் இப்பரிவர்த்தனையை இனிதே நிறைவேற்றதம் ஒப்பில்லா ஆதரவை நல்கிய இலங்கை அரசாங்கம் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRC) முதலீட்டுச்சபை (BOI) கொழும்புப்பங்குப்பரிவர்த்தனை (CSE) இலங்கை மத்திய வங்கி (CBSL) ஆசிஆட்டா மற்றும் பார்த்திஎயார்டெல் மற்றும் இதர பங்குதாரர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்" என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன்வீரசிங்க அவர்கள் தெரிவித்தார்.

இம்மாறுதல் மிக்க பயணத்தை நாம் ஆரம்பிக்கும் இவ்வேளையில் நமது கவனம் இப்போது டயலொக் மற்றும் எயார்டெல் இரு நிறுவனங்களின் 'கூட்டு பலத்தைப் பயன்படுத்தி இலங்கையின் தொலைத் தொடர்புதுறையில் முன்னேற்றங்களை நிகழ்த்துவதன் மீது குவிந்திருக்கின்றது. இந்த ஒரு இணைப்பு பாரிய வளர்ச்சியை அடைய ஏதுவாக நம்மை நிலைநிறுத்துகிறது மிகச்சிறந்த வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் 'புதுமைக்காக மட்டுமின்றி நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்காற்றுவதற்கும் உதவுகிறது.

## அரசாங்கம் கையொப்பமிட்ட

# வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை தேசத்துரோகிகளால் மாத்திரமே எதிர்க்க முடியும்

### போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்தன

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக, கடனளிக்கும் நாடுகள் மற்றும் தொடர்புடைய நிதி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதன் அடிப்படையின் கீழ் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதிகள் வழங்கப்பட்டன. அதேபோன்று, எதிர்வரும் காலப் பகுதி தொடர்பில் இலங்கையின் பொருளாதாரப் பயணப் பாதையும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் பயணித்து இலங்கை ஜப்பான், சீனா, இந்தியாவுடன் ஒப்பந்தங்களை எட்டுவதற்கு இலங்கை நடவடிக்கை மேற்கொண்டது.

கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் அதிக காலத்தில் தொடர்ச்சியாக பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களே இலங்கையின் இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களாகும். இறுதியில், தொடர் செலவினங்கள் எனும் அன்றாடத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் கூட எங்களால் நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய முடியாமல் போனது.

நாட்டின் வருமானத்தில் அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்தி அஸ்வெசும போன்ற நலன்புரிக் கொடுப்பனவுகள் மற்றும் அரச கடன்களுக்கான வட்டி ஆகியவற்றை செலுத்தும் போது, அரசாங்கத்தினால் வேறு எந்த செலவுகளையும் செய்வதற்கான வாய்ப்பு இல்லை. எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் சரி, யார் ஜனாதிபதியாக இருந்தாலும் சரி, இந்த உண்மையான பொருளாதார நிலையை நாடு என்ற வகையில் நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பல தசாப்தங்களாக அரச வரவுசெலவுத் திட்டத்தின் நடப்புக் கணக்கில் தாங்க முடியாத பற்றாக் குறையைப் பேணிச் சென்றதும், சர்வதேச கொடுப்பனவு இருப்பு நடப்புக் கணக்கில் பற்றாக்குறையைப் பேணிச் சென்றதன் காரணமாகவுமே இலங்கையால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல் போனது என்பது சர்வதேச நிறுவனங்கள், நிதி நிபுணர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். எனவேதான், இந்த பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது என்பது தெளிவாகியது.

இதற்கு முன்னரும் 2001ஆம் ஆண்டில் நாட்டுப் பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டது. அதன் போது பொருளாதார வளர்ச்சி 1.4 எனும் எதிர்மறைவீதம் வரை குறைவடைந்தது. அப்போது பிரதி நிதியமைச்சராகவும், கிராமப்புறப் பொருளாதார அமைச்சரவை அமைச்சுப் பதவியை வகித்து இதற்குத் தேவையான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன. அந்த பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்பதற்காக அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2003ஆம் ஆண்டு 3ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ பொறுப்புகள் சட்டத்தை சபையில் சமர்ப்பித்தார். அந்தச் சட்டத்தின் 3 முக்கிய அம்சங்கள் சட்டமாகின. அதனைத் தொடர்ந்து ஓராண்டுக்குள் நாட்டின் பொருளாதாரம் நேர்மறையாக மாறியது.

அந்தச் சட்டத்திற்கு அமைய, 2006 முதல் 2013ம் ஆண்டாகும் போது வரை, கடன் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 65% க்கும் குறைவாக இருக்க வேண்டும் என இணங்கிக் கொள்ளப்பட்டது. அவ்வாறே, 2006ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% ஆகப் பராமரித்து, அதனைத் தொடர்ந்து அரசாங்கங்கள் அதைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோன்று, அரச வெளிநாட்டு

> எந்தக் கட்சியைச் சேர்ந்த யார் ஆட்சியில் இருந்தாலும் நிதி ஒழுக்கச் சட்டங்களுக்கு இணங்கிச் செயற்பட வேண்டும் என்பதோடு, சர்வதேச பொது தேசிய இணக்கப்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படாவிட்டால் எமக்கு கடன் உதவி கிடைக்காமல் நாடு மீண்டும் அராஜக நிலைக்குள் செல்லும்.

கடன்கள் அல்லது பிற கடன்களுக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5% வரை மட்டுமே அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

உலக உதவி மாநாட்டைக் கூட்டி இலங்கையை மீளக் கட்டியெழுப்ப 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கான சர்வதேச ஒத்துழைப்பு இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தது. எனினும் நாட்டின் துரதிர்ஷ்டவசமாக அந்த அரசாங்கம் 2004 இல் மீண்டும் ஆட்சியை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. பின்னர் வந்த அரசாங்கம் அந்தச் சட்டத்தை மாற்றியதால் நாடு 2022ஆம் ஆண்டாகும் போது பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்தது.

உலக வங்கி போன்ற நிறுவனங்களில் கடன் வாங்கி, அந்தப் பணம் போதாதபோது இறையாண்மைப் பத்திரங்களை விற்று, அதிக வட்டிக்குக் கடன் வாங்கி, அந்தப் பணமும் போதாதபோது பணத்தை அச்சடித்தலை மேற்கொண்டதனாலேயே எமது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய கடன் தவணைகளுடன் அவர்களால் வழங்கப்பட்ட பயணப்பாதைக்கு அமைய நாம் பயணிக்க வேண்டும். செயற்பட வேண்டும். அதேபோன்று, கடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வதற்காக ஜனாதிபதி இந்தியாவுக்குச் சென்று இது தொடர்பில் இந்தியப் பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார். அதேபோன்று அவர் ஜப்பான் மற்றும் சீனாவுக்கும் சென்று அவ்வாறே பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். பாரிஸ் உதவிக் குழுவுடனும் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

அதன் பிரதிபலனாகவே கடன் வழங்குனர்களுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அதன் மூலம் 2027ஆம் ஆண்டு வரைக்கும் நாம் கடனை செலுத்தாமல் இருக்க முடியும் என்றாலும், நாம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் மற்றும் அடைய வேண்டிய இலக்குகள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், 2025ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மொத்த வெளிநாட்டு கையிருப்பு 8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்க வேண்டும். அத்துடன், 2026இல், அந்தத் தொகை 10 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்க வேண்டும். 2027ஆம் ஆண்டிற்குள், அந்த தொகை 14 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை பராமரிக்கப்பட வேண்டும்.

அவ்வாறில்லாமல் அரசாங்கம் மாறியது என்பதற்காக எமக்குத் தேவையானவாறு இந்த ஒப்பந்த இணக்கப்பாடுகளை மாற்ற முடியாது. கடைசியாக எமக்கு கடன் வழங்கியுள்ள சர்வதேச நாணய நிதியம் தற்போது கடன் வழங்கியிருப்பது நாம் பயணிக்க வேண்டிய விதிமுறைகளை வழங்கியேயாகும்.

2027ஆம் ஆண்டிலும் கூட, எம்மால் சந்தையிலிருந்து இறையாண்மை பத்திரங்கள் மூலம் 1.5 பில்லியன் டொலர்களை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். மீண்டும் பணத்தை அச்சிடவும் முடியாது.

அதேபோன்று பிரதான மூன்று நிபந்தனைகள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில்,

1. 2032ஆம் ஆண்டுக்குள் செலுத்தப்படாதுள்ள மொத்த கடன் தொகை மொத்த தேசிய உற்பத்தியின் 95% வீதமாகக் குறையடைய வேண்டும்.

2. அந்த நேரத்தில், நாட்டின் மொத்த நிதித் தேவைகள் மொத்த தேசிய உற்பத்தியில் 13% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

3. கடன் தவணை மற்றும் வட்டி செலுத்துதல் (கடன் சேவை) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

எந்தவொரு புதிய அரசாங்கமும் இந்த நிபந்தனைகளை மீற முடியாது. நாம் ஜப்பானுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களை புறக்கணிக்க முடியுமா? சீனாவுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தைத் தூக்கி எறிய முடியுமா? இந்தியாவுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களை புறக்கணிக்க முடியுமா? பெரும் சிரமத்துடன் பாரிஸ் கிளப்புடன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களைப் பொருட்படுத்தாமல் எம்மால் செயற்பட முடியுமா?

அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்பட்டுள்ள அந்த வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள், அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

> சர்வதேச நாணய நிதியம் நாம் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைச் சுட்டிக் காட்டியே தற்போது கடனை வழங்கியுள்ளது.

எதிர்க்கட்சியில் உள்ள அனேக அரசியல் தலைவர்களுக்கு இது குறித்து சரியான அறிவு இல்லை என்றே தெரிகிறது.

எனவே, இந்த உடன்படிக்கைகளைப் பாராளுமன்றத்தின் சட்டங்களாக ஆக்குமாறு அமைச்சரவை முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் அந்த ஒப்பந்தங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதை எதிர்க்கும் எவரும் இலங்கையை ஆட்சி செய்யத் தகுதியற்றவர்கள். நாட்டை இழந்தால், நாட்டுக்கு துரோகம் செய்ததற்கான குற்றத்திற்கு அவர்களே பொறுப்பாவார்கள்.

அதனடிப்படையில்,

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவிற்கும் (OCC) இடையில் 2024 ஜூன் 26ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட இறுதி ஒப்பந்தம் மற்றும்,

2. 2024 ஜூன் 26ஆம் திகதியன்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி (EXIM வங்கி) ஆகியவற்றுக்கு இடையே ஏற்பட்ட இறுதிக் கடன் ஒப்பந்தத்தில் திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் ஒத்துழைப்பை வழங்குவார்கள்.

இதற்கு ஆதரவளிக்காத மக்கள் பிரதிநிதிகள் நாட்டுக்கு எதிராகச் செயற்படும் தேசத் துரோகிகள் என மக்களால் பெயரிடப்படுவார்கள். எதிர்வரும் வாரத்தில் இந்த இணக்கப்பாட்டு உடன்படிக்கை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட உள்ளதோடு, இதன்போது மக்கள் சார்பு, நாட்டை நேசிக்கும் மக்கள் பிரதிநிதிகள் யார் என்பதை மக்கள் கண்டு கொள்ள முடியும்.

ஒரு நாடாக நாம் அத்தகைய சர்வதேச இணக்கப்பாடுகளுக்கு இணங்க வேண்டும். இல்லையேல் எம்மால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. எமது நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை விட இரண்டு மடங்கிற்கும் அதிக தொகையை எமது அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக செலவிடுகிறோம். அவற்றில், எரிபொருள், எரிவாயு, மருந்து வகைகள், இயந்திரங்கள், உணவு மற்றும் பானங்கள், குறிப்பாக பருப்பு போன்ற அத்தியவசிய பொருட்களை நாம் கண்டிப்பாக இறக்குமதி செய்ய வேண்டும்.

அதற்காக கடன் பத்திரங்கள் திறக்கப்பட வேண்டும். எங்களுக்கு அங்கீகாரம் கிடைக்காவிட்டால் எமது கடன் பத்திரங்களுக்காக எந்த வரவேற்பும் கிடைக்காது. அப்போது எம்மால் இறக்குமதிகளை மேற்கொள்ள முடியாது.

தற்போது சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கு அமைவாக கடன் செலுத்தலை ஆரம்பித்ததன் பின்னர் முதல் 5 6 வருடங்களுக்குள் செலுத்தப் போவது இதுவரை செலுத்த முடியாது போன கடன் தொகையின் 37 வீதத்தை மாத்திரமேயாகும். ஆறு வருடத்திலிருந்து இன்னும் 20 வருடங்கள் வரை செலுத்த வேண்டியிருப்பது கடன்களில் 51 வீதத்தை மாத்திரமாகும். மிகுதி கடன் தொகையான12 வீதத்தை 20 வருடங்களின் பின்னரே செலுத்த வேண்டும்.

> 2001ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்பதற்காக அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவப் பொறுப்புக்கூறல் சட்ட மூலத்தைச் சபையில் சமர்ப்பித்தார்.

இதனடிப்படையில் 2048ஆம் ஆண்டு வரைக்கும் யார் இந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும், யார் ஆட்சியிலிருந்தாலும் இந்த இணக்கப்பாடுகளில் ஒரு அங்குலத்தையும் மாற்ற முடியாது.

அவ்வாறு மாற்றினால் எம்மால் நாடு என்ற வகையில் முன்னேறிச் செல்ல முடியாது.

தற்போது 70 வீதமான பணவீக்கம் தனி இலக்கத்தை அடைந்துள்ளது.



முதலாவது வரவு செலவுத் திட்ட உரையின் போது தெரிவித்த விடயத்தில் கவனத்தைச் செலுத்த முடியும். அந்த விடயம் 1989 மார்ச் 22ஆம் திகதி ஹன்சார்ட் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"....கடந்த 11 வருடங்களிலும் இந்த வருடத்திலும் நீங்கள் இந்தச் சபையில் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது பற்றாக்குறை வரவு செலவுக் கொள்கையையே கடைப்பிடித்துள்ளீர்கள். 1977இல் எமது நாட்டின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 3.022 மில்லியனாக இருந்தது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை 43,995 மில்லியன்களாகும். 1977 – 88 காலகட்டத்தில், அரச வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை மாத்திரம் 1.356 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த வரவு செலவுத் திட்டங்களில் ஏற்பட்டுள்ள பாரிய பற்றாக்குறையை ஈடுகட்ட சிரமப்படும்போது, இந்த நாட்டுக்குள் வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பற்றா க்குறையை ஈடுகட்டுவதற்கான பணம் கிடைக்காதபோது, வெளிநாடுகளில் இருந்து அதிகளவில் கடன் வாங்கும் மரபையே நாங்கள் பின்பற்றி வருகிறோம்'' இதனடிப்படையில் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன. முதலாவது விடயம், எந்தக் கட்சியைச் சேர்ந்த யார் ஆட்சியில் இருந்தாலும், நிதி ஒழுங்கு விதிகளுக்கு இணங்கிச் செயற்பட வேண்டும்.

குறிப்பாக சர்வதேச இணக்கப்பாடுகளிலிருந்து எம்மால் தவிர்ந்து கொள்ள முடியாது. இரண்டாவது அந்த சர்வதேச பொது தேசிய இணக்கப்பாடுகளைப் புறக்கணித்துச் செயற்பட்டால் எமக்கு கடன் உதவி கிடைக்காமல் நாடு மீண்டும் அராஜக நிலைக்குள்ளாகும்.

தாரக விக்ரமசேகர
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# ஹஜ் முகவர்களுக்கு கௌரவம்; நௌபருக்கும் சிறப்பு விருது

( அஜ்வாத் பாஸி)

இலங்கையிலிருந்து ஹஜ் கடமையை நிறைவேற்ற இம்முறை (2024) அழைத்துச் சென்று ஹாஜிகளுக்கு சிறந்த சேவைகளை வழங்கிய ஹஜ் முகவர்களை கௌரவிக்கும் நிகழ்வொன்று புனித மதீனா நகரிலுள்ள தாருல் ஈமான் நட்சத்திர ஹோட்டலில் அண்மையில் (24) சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மக்கா மற்றும் மதீனா புனிதஸ்தலங்களின் ஆலோசகர்களில் ஒருவரான அஷ்ஷெய்க் அப்துல் வாஹித் அல் கத்தாபி கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் தனது ஹஜ் குறூப்பினூடாக அழைத்துச் சென்ற ஹாஜிகளுக்கு சிறந்த திருப்தியான சேவையை வழங்கிய 'நௌபர் ஏசியன் ஹஜ் டிரவல்ஸ் ' உரிமையாளர் சீனன்கோட்டையைச் சேர்ந்த நௌபர் பிரதம அதிதியினால் சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.





இதேவேளை, மேற்படி குறூப்பில் ஹஜ் கடமையை நிறைவேற்றிய இலங்கை, கத்தார், லண்டன், கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஹாஜிகள் ஒன்றிணைந்து தமக்கு ஹஜ் கடமையை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு இரவு பகல் பாராது பல சிரமங்களை எதிர்கொண்டு, அழைத்து வந்த ஹாஜிகளுக்கு சிறப்பான சேவையை வழங்கிய ஹாஜி நௌபர், மதீனா அப்துல் அஸீஸ் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து ஹாஜிகளின் முன்னிலையில் ஞாபக சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதனை ஹாஜிகள் சார்பாக மௌலவி பஸ்லான் அஷ்ரபி, நௌபர் ஹாஜியாருக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.






# குறுகிய காலத்துக்குள் மீட்சிபெற்ற நாடென்று உலகமே இலங்கையை திரும்பிப் பார்க்கின்றது

## உலக நாடுகள் எம்மைப் பாராட்டுகின்றன –நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பேட்டி

**குறுகிய காலத்தில் பொருளாதார மீட்சிக்குச் சென்ற நாடு என்று இலங்கையை உலக நாடுகள் பாராட்டுகின்றன. தனியொருவராக ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சியும், நாட்டு மக்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சகிப்புத் தன்மையுமே இந்த வெற்றிக்குக் காரணம் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது தவணைக்கான அனுமதி கிடைத்துள்ளமை மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார முன்னேற்றம் குறித்து இராஜாங்க அமைச்சர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மூன்றாவது கடன் தணைக்கான அனுமதி கிடைத்துள்ளது. இந்தப் பயணம் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: இந்தப் பயணம் மிகவும் கடினமாக அமைந்தது. நாங்கள் 16 தடவை சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றுள்ளோம். இதன் போது எமக்குக் கிடைத்த அனுபவம் நல்லதல்ல. இம்முறை முதலாவது, இரண்டாவது தவணைகளை ஏற்ற போது அனைத்தையும் மாற்றி அரசியல் முடிவுகளுக்கு சென்றோம். வாக்குகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இந்த ஒப்பந்தங்கள் மீறப்பட்டன.

இரண்டாவதாக, நாம் கடனைத் தற்காலிகமாகத் திருப்பிச் செலுத்தாமல், வங்குரோத்து நிலையை அடைந்துள்ளோம் எனக் கூறி சர்வதேச நாணய நிதியத்திடம் மீண்டும் சென்றோம். இது புதிய அனுபவமாகவும் இருந்தது. மேலும், நாங்கள் ஒரு பாரம் பரிய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவர்கள் எப்பொழுதும் எதிரெதிர் சித்தாந்தங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கினர். இம்முறை பணியாளர் மட்டத்திலான ஒப்பந்தம், பணிப்பாளர்கள் மட்டத்திலான ஒப்பந்தம் ஆகியவற்றில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த நீண்ட காலம் பிடித்தது. இந்தப் பயணம் மிகவும் கடினமாக இருந்தது.

**கே: பொருளாதார ரீதியில் வீழ்ச்சியைச் சந்தித்த ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை குறுகிய காலத்திற்குள் மீட்சி பெற்றிருப்பதாகப் பாராட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதைப்பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: மூன்றாவது தவணையில், எங்கள் ஒப்பந்தங்கள் அனைத்தும் பிரபலமான ஒப்பந்தங்கள் அல்ல. மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். வருமானத்தை அதிகரிக்கப் புதிய வரிகள் விதிக்கப்பட்டன. அரசாங்க சொத்துகளை மறுசீரமைப்பது, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு போன்ற விடயங்களில் எதிர்க்கட்சிகள் தேவையற்ற நாடகங்களை மக்கள் முன்னிலையில் அரங்கேற்றின. இது பாரியதொரு பூதாகரமான விடயமாகத் தோற்றுவிக்கப்பட்டது. இருந்தாலும் அரசாங்கம் இதனைத் துணிச்சலுடன் எதிர்கொண்டது.

நம் நாட்டின் பொருளாதாரம் பற்றிய தகவல்களை வழங்கும் ஆராய்ச்சி நிறுவனங்கள் கூட அவநம்பிக்கையுடன் இருந்தன. எனினும், அரசாங்கத்தினால் கடினமான உடன்பாடுகளை எட்ட முடிந்தது. இது நாட்டுக்குக் கிடைத்த மாபெரும் பொருளாதார வெற்றியாகும். எமக்கு மிக உயர்வான புகழைக் கொடுத்துள்ளனர். குறுகிய காலத்திற்குள் மீட்சிபெற்ற நாடு என்று இப்போது உலகமே நம்மைத் திரும்பிப் பார்க்கின்றது. குறிப்பாக, இதற்குத் தலைமை தாங்கிய நாட்டின் தலைவருக்கு மரியாதை, மறுபுறம் மக்களுக்கும் மரியாதை இருக்க வேண்டும். எவ்வளவோ விடயங்களைச் சொல்லி மக்களை உருவேற்றி விடுவதற்கு முயன்றாலும், மக்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்து இன்னல்களைச் சகித்துக் கொண்டு நாட்டுக்காக உழைத்தார்கள். ஜனாதிபதி தனிநபராக இந்தப் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

**கே: இந்தப் பாதையில் நாம் தொடர்ந்தும் பயணித்து திருப்திகரமான பொருளாதார வளர்ச்சியைக் காண்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும்?**

பதில்: நிலைமை இன்னமும் முழுமையாகச் சீரடையவில்லையென்றே கூற வேண்டும். ஆனால், அன்று இருந்ததை விட இன்று பொருளாதாரம் ஓரளவுக்கு சீரடைந்துள்ளது. நாம் உலகத்தை ஒப்பீட்டளவில் பார்க்க வேண்டும். இன்று கடைக்குச் சென்றால், வாங்க வேண்டிய பொருட்கள் அதிகம். அரச ஊழியரின் சம்பளம் 10,000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அன்று சமுர்த்தியில் 4,500 பெற்றுக் கொண்டவர் இன்று 15,000 ரூபாவை பெறுகிறார். அன்று விவசாயிகள் யூரியாவை 50,000 ரூபாவுக்கு வாங்கினார்கள். இன்று அந்த நிலைமை மாறி 10,000 ரூபாவுக்கு அதனை வாங்கக் கூடியதாகவுள்ளது. இவற்றின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது, நாம் சரியானதொரு இடத்தை நோக்கிச் செல்கின்றோம் என்பது தெளிவாகின்றது. 2023 ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் ஓரளவுக்கு உறுதியான நிலைக்குச் சென்றுள்ளது.

**கே: நீங்கள் குறிப்பிடப்படுவது போன்று பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு பணவீக்கம் குறைந்தாலும், மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட வண்ணமே இருக்கின்றனர். இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: மிக ஆழமான பொருளாதாரப் படுகுழியில் நாடு விழுந்தது. இதனால் நாங்கள் எல்லா பக்கங்களிலிருந்தும் நெருக்கடிகளுக்கு உள்ளானோம். இந்த நெருக்கடியிலிருந்து யாரும் வெளியேற முடியாது என்ற நிலை ஏற்பட்டபோதும், இந்நிலைமையை சீர்செய்ய அரசாங்கம் முடிவு செய்தது. இதனால் வங்கி வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டன. ஆனால் ஒரேயடியாகக் குறைக்க முடியாது என்று வணிக வங்கிகள் கூறுகின்றன. காரணம், திரட்டப்பட்ட வட்டியை வைப்புத் தொகைக்கு செலுத்த வேண்டும். அது உண்மையும் கூட. எனவே, சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்கள் மூலதனத் தேவைகளை 8 வீதம் அளவில் பூர்த்தி செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கியில் கடன் பெற அனுமதிக்கும் திட்டம் உள்ளது. இவற்றை படிப்படியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

- **எவ்வளவோ விடயங்களைச் சொல்லி மக்களை உசுப்பேற்றி விடுவதற்கு முயன்றாலும், மக்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்து இன்னல்களைச் சகித்துக் கொண்டுள்ளனர். ஜனாதிபதி தனிநபராக பாரிய மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.**
- **எதிரணியின் விசித்திரக் கதைகளை மக்கள் நன்கு அறிவார்கள். இந்த மந்திரத்தை எப்படி செய்வது என்று அவர்கள் மக்களுக்கு காண்பிக்க வேண்டும்**

**கே: போதியளவு வெளிநாட்டுக் கையிருப்பு இல்லாததால், வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வது அடுத்த வருடம்வரை தாமதமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றதே?**

பதில்: அடுத்த ஆண்டு அல்ல, இந்த ஆண்டு இதனைக் கொண்டுவர முடியும் என நம்புகின்றோம். எங்கள் பயணப்பாதையை சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கினோம். உலகமே சந்தை திறக்கும் வரை காத்திருக்கிறது. கதவுகளை மூடிக் கொண்டு செல்ல முடியாது. ஏறக்குறைய 2000 பொருட்களின் இறக்குமதியை நிறுத்தியதன் மூலம் எங்களின் கடுமையான அந்நியச் செலாவணி பற்றாக்குறைக்கு விடை கண்டோம். பல்வேறு நபர்களுடன் கலந்தாலோசித்து, நாட்டின் தேவைக்கேற்ப பல்வேறு நேரங்களில் அவை திறக்கப்பட்டன. இப்போது எங்களிடம் வாகனங்கள் மட்டுமே உள்ளன. தேவைக்கு ஏற்ப அதையும் திறந்து வைத்தோம். தேவைக்கு ஏற்ப அம்புலன்ஸ்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையின் தேவைக்கேற்ப 1000 வாகனங்கள் கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டது, வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. நாட்டில் பொருத்தப்பட்ட வாகனங்கள் உள்ளன.

இப்போது நாட்டின் தேவைக்கேற்ப கதவுகளைத் திறக்க முயற்சிக்கிறோம். எங்கள் வீதி வரைபடத்தின்படி, இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து இறக்குமதித் தடைகளைக் குறைக்க முடியும் என நம்புகின்றோம். இரண்டாவது சரக்கு போக்குவரத்து மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்ற பொதுமக்களின் போக்குவரத்து தேவைகள் குறித்துக் கவனம் செலுத்தப்படும். இதனையடுத்து இலத்திரனியல் வாகனங்கள் பற்றி ஆராய நிதியமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளது. விரைவில் அவர்களின் அறிக்கை கிடைக்கும். இதனால், பொதுப்போக்குவரத்து தொடர்பான வாகனங்களை இறக்குமதி செய்வதை மூன்றாம் காலாண்டில் தொடங்க முடியும். ஆனால் வழக்கம் போல் வாகனங்களை வெவ்வேறு பாகங்களாகக் கொண்டு வர அனுமதி இல்லை. நாட்டின் தேவைக்கேற்ப நாட்டின் ஆற்றல் நுகர்வில் கவனம் செலுத்தப்படும்.

**கே: இரண்டாவது மின்கட்டண குறைப்பு அடுத்த மாதம் அமுலாகும். மின்சாரக் கட்டணம் பெருமளவு குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுவது உண்மையா?**

பதில்: மின்சார உற்பத்திச் செலவுக்கு ஏற்ப குறிப்பிட்ட அளவு இலாபத்தை வைத்துக் கொண்டு மீதியை மக்களுக்குக் கொடுப்பது வழக்கம். விலைச் சூத்திரம் அதன்படி செயல்படுகிறது. கடந்த காலத்தில் நீர்மின்சாரம் நன்றாக உற்பத்தி செய்யப்பட்டது. மின்சாரக் கட்டணத்தில் நன்மையை மக்களுக்கு வழங்குவதற்கு மின்சார அமைச்சு தயாராகி வருகிறது. உறுதியான மாற்றத்தை ஏற்படுத்துவதாகவும் அமைச்சர் கூறியிருந்தார். பல்வேறு வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்ட நாட்டில், தேசத்தின் சாதனைகள் இவை. எதிர்காலத்தில் சூரியசக்தியின் ஆற்றல் நமக்கு உள்ளது. நீர்மின் உற்பத்தியின் இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டோம். இப்போது சூரியசக்தி மற்றும் காற்றின் சக்தி ஆகியவற்றுக்கான இடம் கிடைத்துள்ளது. புதுப்பிக்கத்தக்க சக்திக்கு 70 வீதம் வழங்குவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**கே: நாடு வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், தேர்தலை இலக்காகக் கொண்டு இப்படி சலுகைகள் வழங்கப்படுவதாக எதிரணிகள் கூறுகின்றனவே. இது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: எதிர்க்கட்சிகள் எல்லாம் கூச்சல் போடுகின்றன. தேர்தல் ஆண்டு என்பதால் இந்த வேலையை செய்ய முடியாது. சம்பளம் கூட கொடுக்க முடியாத நாட்டில் 10,000 ரூபாயை கூட அரச தலைவர் உயர்த்தினார். எதிரணியைப் பொறுத்தவரை, இதையெல்லாம் நாம் நிறுத்த வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும். பொறுப்பிலிருந்து தவறிய ஒரு எதிர்க்கட்சியை நாங்கள் சமாளிக்க வேண்டியிருந்தது.

**கேள்வி: சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை எதிர்க்கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது அல்லவா?**

பதில்: நிபந்தனைகள் மாற்றப்பட்டால், அவற்றை எவ்வாறு சந்திப்பது என்பதைக் குறிப்பிட வேண்டும். நமது செலவுக்கு ஏற்ற வருமானத்தை நாம் கண்டுபிடிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. இந்த வரிகளைக் குறைப்போம் என்று யாராவது சொன்னால், அது இல்லாமல் எப்படி வருமானம் ஈட்ட முடியும் என்பதைக் காட்ட வேண்டும். கடன் வாங்குவதற்கும் எல்லை உண்டு. எனவே இதெல்லாம் முட்டாள்தனம். இந்த விசித்திரக் கதைகளை மக்கள் நன்கு அறிவார்கள். இந்த மந்திரத்தை எப்படி செய்வது என்று எதிரணி மக்களுக்கு காட்ட வேண்டும்.

---



# இந்திய நாடாளுமன்ற செங்கோலுக்கு எதிராக கிளம்பியுள்ள எதிர்ப்பு!

**இந்திய நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் செங்கோலை அகற்றிவிட்டு, அங்கு அரசியலமைப்பு சட்டப் புத்தகத்தை வைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வருகிறது.**

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான முன்னைய ஆட்சியில் புதிய நாடாளுமன்ற கட்டடம் கட்டப்பட்டு, அதன் திறப்புவிழாவில் ஆதீனங்களுடன் சென்று சபாநாயகர் இருக்கைக்கு அருகில் செங்கோலை நிறுவினார் பிரதமர் நரேந்திர மோடி.

அப்போதே செங்கோல் குறித்து பல்வேறு தரப்பிலிருந்து விமர்சனங்கள் எழுந்தன. செங்கோல் என்பது மன்னராட்சியின் அடையாளம் என்று விமர்சித்த எதிர்க்கட்சிகள், ‘மன்னராட்சி முடிந்து, ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சியிலிருந்து நாடு சுதந்திரமடைந்து, அதன் பிறகு அரசியல் சாசனப்படி ஜனநாயக ஆட்சி அமைந்து விட்டது. இப்போது எதற்கு மன்னராட்சியின் செங்கோல்?’ என்று குரலெழுப்பின.

உடனே, ‘இந்திய கலாசாரத்தையும், தமிழ்க் கலாசாரத்தையும் எதிர்க்கட்சிகள் அவமதிக்கின்றன’ என்று பா.ஜ.கவினர் குற்றம்சாட்டினர். இப்போது, 18 ஆவது மக்களவை தெரிவு செய்யப்பட்டு மூன்றாவது முறையாக நரேந்திர மோடி தலைமையிலான அரசு அமைந்து, நாடாளுமன்ற முதல் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் மன்னராட்சியின் அடையாளமான செங்கோல் அகற்றப்பட்டு, அந்த இடத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டப் புத்தகம் வைக்கப்பட வேண்டும் என்று சமாஜ்வாடி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். கே.சௌத்ரி கோரிக்கை விடுத்திருக்கிறார். இது தொடர்பாக சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு கடிதமும் அவர் எழுதினார்.

மேலும், “அரசியலமைப்புச் சட்டம் என்பது ஜனநாயகத்தின் சின்னம். பா.ஜ.கவோ, மன்னராட்சியின் சின்னமான செங்கோலை நாடாளுமன்றத்தில் நிறுவியிருக்கிறது. மன்னராட்சி முடிந்து, ஆங்கிலேயர் ஆட்சி வந்து, அதன் பிறகு நாடு சுதந்திரமடைந்து விட்டது. இப்போது ஏன் மன்னராட்சியின் அடையாளமான செங்கோலை நாடாளுமன்றத்தில் நிறுவியிருக்கிறார்கள்?



நாடாளுமன்றத்தில் இருக்கும் செங்கோலை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் அரசியலமைப்புச் சட்டப் புத்தகத்தை வைக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும்” என்று ஆர். கே.சௌத்ரி வலியுறுத்திக் கூறினார்.

அவரைத் தொடர்ந்து, சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், ராஷ்டிரிய ஜனதா தளத்தின் எம்.பியான மிசா பாரதி உட்பட பலரும் நாடாளுமன்றத்திலிருந்து செங்கோல் அகற்றப்பட வேண்டும் என்ற குரலை ஒலிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

“செங்கோலை அருங்காட்சியகத்தில் வைக்க வேண்டும். அங்கு வரும் மக்கள் அதைப் பார்வையிடுவார்கள்” என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

செங்கோல் அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையைக் கண்டித்து பா.ஜ.க தலைவர்களும், அதன் கூட்டணிக் கட்சியினரும் பேசி வருகிறார்கள். பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை, ‘நாடாளுமன்றத்திலிருந்து செங்கோல் அகற்றப்பட வேண்டுமென்று சமாஜ்வாடி எம்.பி பேசியிருப்பது, ‘இந்தியா’ கூட்டணியின் நிலைப்பாடா என்று தி.மு.க விளக்க வேண்டும்” என்றார்.

த.மா.கா தலைவர் ஜி.கே.வாசன், ‘செங்கோல் என்பது நேர்மைக்கும், வெளிப்படைத்தன்மைக்கும், நடுநிலைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது’ என்று கூறியிருக்கிறார்.

இந்த நிலையில், ‘செங்கோல் மன்னராட்சியின் அடையாளம். ஜனநாயக நாட்டில் அதற்கு இடம் அளிக்க வேண்டியது இல்லை. நாடாளுமன்றத்தில் செங்கோலை அப்புறப்படுத்த வேண்டும் என்பது நியாயமான கோரிக்கை’ என்று தி.மு.கவின் முன்னாள் எம்.பி டி.கே.எஸ்.இளங்கோவன் கூறியிருக்கிறார்.

**மன்னராட்சியின் அடையாளமென்று எதிரணி விமர்சனம்; தமிழர் கலாசாரத்தை, பண்பாட்டை எதிரணி அழிக்க நினைப்பதாக பா.ஜ.க கண்டனம்!**



எனினும் செங்கோலை நாடாளுமன்றத்திலிருந்து அகற்ற வேண்டும் என்ற சமாஜ்வாடி கட்சி எம்.பியின் கோரிக்கையை மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா நிராகரித்து விட்டார்.

புதிய நாடாளுமன்றத்தில் கட்டுமானங்கள் பல்வேறு மாநிலங்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கும் நிலையில், அவற்றில் ஒன்றாகவே தமிழகத்தின் செங்கோல் நிறுவப்படுகிறது என்று அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆதீனங்கள் தெரிவித்தனர்.

மேலும், ‘நீதி, நேர்மை, சமத்துவம் ஆகியவற்றை உணர்த்துவதாகவும் செங்கோல் இருக்கிறது. நடுநிலைக்கான அர்ப்பணிப்போடு ஆட்சி விளங்க வேண்டும் என்பதன் குறியீடாகவே செங்கோல் நாடாளுமன்றத்தில் நிறுவப்படுகிறது’ என்றெல்லாம் அப்போது விளக்கம் தரப்பட்டது.

ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியில், நாட்டை வழிநடத்துகின்ற அரசியல் சட்டம்தான் இருக்க வேண்டுமே ஒழிய செங்கோல் அல்ல என்ற நிலைப்பாட்டில் எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன.

இதேவேளை தமிழர்களின் அடையாளத்தை எதிரணியினர் எதிர்ப்பதாக பா.ஜ.கவினர் பிரசாரம் செய்து வருகின்றனர். செங்கோலை எதிர்ப்பதானது, தமிழ் இனத்தையே அவமதிப்பதாகும் என்றும் அவர்கள் கூறி வருகின்றனர்.

தமிழர் கலாசாரத்தை, பண்பாட்டை அழிக்க நினைக்கிறார்கள் என பா.ஜ.கவினர் கொந்தளித்து வருகின்றனர்.

வழக்கமாக தமிழர் கலாசாரத்தை, பண்பாட்டை பா.ஜ.க அழிக்கிறது என மற்றைய கட்சிகள் கொந்தளித்ததுபோக, இந்த விவகாரத்தில் அதற்கு நேரெதிராக தற்போது நடந்து கொண்டிருக்கிறது.

**எஸ்.சாரங்கன்...**

### உக்ரைனுக்கு எதிராக போரிடும்

# இலங்கையர்களுள் பல பேர் ரஷ்ய பிரஜைகளாக மாற்றம்

## அமைச்சர் அலி சப்ரி



உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா சார்பில் போரிடும் இலங்கையை சேர்ந்த கூலிப்படையினரில் பலர் ரஷ்ய பிரஜைகளாக மாறியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர்கள் ரஷ்ய பிரஜாவுரிமையை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் கள முனைகளில் சிக்குண்டவர்களை மீட்டுத் தருமாறு கோரும் 446 முறைப்பாடுகள் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு கிடைத்துள்ளதாகவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இன்னுமொரு நாட்டின் பிரஜாவுரிமையை நீங்கள் பெற்றுக் கொண்டால் இலங்கையின் பிரஜாவுரிமையை நீங்கள் இழந்து விடுவீர்கள். நீங்கள் இலங்கை பிரஜை இல்லை என்பதால் உங்களின் சார்பில் பேசுவதற்கு எங்களுக்கு உரிமையில்லையென்றும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

### விமானப்படை தளத்தில்

# உலகின் மிகப்பெரிய AN–124 சரக்கு விமானம்



உலகின் மிகப் பெரிய சரக்கு விமானங்களில் ஒன்றான அன்டனோவ் 124 (ANTONOV124) நேற்று முன்தினம் (28) கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரையிறங்கியது.

மத்திய ஆபிரிக்க குடியரசில் சமாதானப்பணிகளில் ஈடுபட்டுள்ள இலங்கையின் படையினருக்கு எம்.ஐ. 17 ஹெலிகொப்டர் (MI17 Helicopter) ஒன்றை கொண்டு செல்வதற்காகவே இந்த விமானம் இலங்கைக்கு வந்தது. 2014 ஆம் ஆண்டு முதல் மத்திய ஆபிரிக்க குடியரசில் அமைதி காக்கும் பணிகளில், இலங்கையின் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த விமானத்தில் இது போன்ற 03 ஹெலிகொப்டர்களை ஏற்றிச் செல்லக்கூடிய வசதிகள் உள்ளன.

அன்டனோவ் 124 விமானம் ஹெலிகொப்டரை ஏற்றிக்கொண்டு நேற்று 29 அதிகாலை 05.30 மணிக்கு கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்திலிருந்து மத்திய ஆபிரிக்கா நோக்கி புறப்பட்டுச் சென்றது.

# இணையமூடாக நிதி மோசடி; 30 சீன பிரஜைகள் கைது

இணையம் ஊடாக நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் 30 சீன பிரஜைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மாஅதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். இதேவேளை, இணையத்தில் நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (28) வரை 137 இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து பல மடிக்கணினிகள் மற்றும் கையடக்க தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டதாக பிரதி பொலிஸ் மாஅதிபருமான நிஹால் தல்துவ மேலும் தெரிவித்துள்ளார்.

## விடுதலை புலிகளுக்கு...

இவ்வாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது" "பிள்ளையான் மக்களை அச்சுறுத்துவதாக அநுரகுமார திசாநாயக்க தெரிவித்திருந்தார். அநுரகுமார திசாநாயக்க தரப்பினரே எங்களுக்கு முதல் முறையாக ஆயுதங்களை வழங்கினர். அதன் பின்னர் மக்களை சுடுவதற்கு எங்களிடம் ஆயுதம் கேட்டனர். ஆனால் நாங்கள் அதனைக் கொடுக்கவில்லை.

பிள்ளையான் மக்களை அச்சுறுத்துவதாக இருந்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான வாக்குகளைப் பெற்றது யார்? எனவே ஜனநாயகத்தை பற்றி பேசுவதாக இருந்தால் அநுரகுமார திசாநாயக்க யோசித்து பொறுப்பான தலைவராகப் பேச வேண்டும். இந்த நாட்டை அழிக்க நினைக்கின்ற தலைவர் எங்கள் மண்ணில் வந்து பேசியதையிட்டு கவலையடைகின்றேன்.

அவர்கள்தான் ஒரு பிரபல்யமான ஆயுத குழு. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு ஆயுதம் தந்தவர்களும் அவர்கள்தான். பின்னர் அதனைக் கைமாறியதும் அவர்கள்தான். எனவே அந்த ஆயுதங்களை தேடி எடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு அநுரகுமார திசாநாயக்கவுக்கு தெரிவிக்கின்றேன்" இவ்வாறு சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார். இதேவேளை மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அநுரகுமார திசாநாயக்க "மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் சுதந்திரமாகத் தமது கருத்துகளைத் தெரிவிக்க முடியாத வகையில் பிள்ளையான் போன்றோரினால் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகத் தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

## இலத்திரனியல் வாகன...

ஆரம்பமானது. உள்நாட்டு,வெளிநாட்டு மின்சார வாகனங்களின் தயாரிப்பு மற்றும் உதிரிப் பாகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தொழிலதிபர்கள், தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ள புதிய வடிவமைப்பாளர்கள் தங்களது தயாரிப்புகளை இங்கு காட்சிப்படுத்தியுள்ளனர். கண்காட்சிக்காக கார்கள், மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட பொருட்களை வழங்கியவர்கள் பாராட்டப்பட்டனர். இதன்போது நினைவுப் பரிசுகளும் அமைச்சரினால் வழங்கப்பட்டன. கண்காட்சி இன்றுடன் நிறைவடைகிறது.

## அஸ்வெசும நலன்புரி...

பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பு செய்வதற்காக நலன்புரி நம்பிக்கைச் சபை (11.6 பில்.) 1,160 கோடி ரூபாவை (27) விடுவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்டத்தில் பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 5,000 ரூபா என்ற அடிப்படையில் 2023 ஜூலை மாதத்தில் இருந்து 31.03.2024ஆம் திகதி வரையிலும், இடைநிலைப் பாதிப்புக்களை எதிர்கொண்டிருக்கும் குழுவின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 2,500 ரூபா என்ற அடிப்படையில் 2023 ஜூலை மாதம் முதல் 31.12.2023 ஆம் திகதி வரையிலும் கொடுப்பனவுகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மற்றும் இடைநிலை பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான விசேட கொடுப்பனவு வழங்குவதற்கான காலத்தை இவ்வருடத்தின் டிசம்பர் மாதம் வரையில் நீடிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார். அதன் கீழ் பாதிக்கப்பட்ட மற்றும் இடைநிலை பாதிப்புக்களை எதிர்கொண்டவர்களுக்கான கொடுப்பனவுகளை 2024 ஜூலை முதல் 2024 டிசம்பர் வரையில் 5,000 ரூபா விசேட கொடுப்பனவை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் மிக வறுமை மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழானவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவும் தொடர்ச்சியாக வழங்கப்படுமென நலன்புரி நன்மைகள் சபையின் தலைவரும் ஆணையாளருமான ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

## எங்கள் கருத்து...

# பாராளுமன்றத்தை நோக்கியபடி ஒட்டுமொத்த தேசத்தின் பார்வை!

இலங்கைக்கும் சீனாவின் EXIM வங்கிக்குமிடையே இம்மாதம் 26 அன்று மேற்கொள்ளப்பட்ட இறுதி கடன் ஒப்பந்தத்தில் திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தம் ஆகியவை தொடர்பான தீர்மானம் நாளைமறுதினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

இவ்விசேட பாராளுமன்ற அமர்வை 2ஆம், 3ஆம் திகதிகளில் நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை நிகழ்த்திய பின்னர், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள் தொடர்பிலான விவாதம் ஆரம்பமாகவிருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பான வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அதுபற்றி பாராளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதுடன், வாக்கெடுப்பும் நடத்தப்படுவது ஜனநாயகத்தின் வெளிப்பாடாகுமென்பதில் ஐயமில்லை.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைக் கவனத்தில் கொள்ளாமல் எதிரணியினர் செயற்பட்டு வருவதனால், ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவ்விரு தினங்களிலும் பாராளுமன்றத்துக்கு வருகை தந்து அரசுக்கு ஆதரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இரு தினங்களிலும் விவாதம் நடைபெற்ற பின்னர், 03ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவும் கைச்சாத்திட்ட இறுதி உடன்படிக்கை, இலங்கை அரசாங்கமும் மற்றும் சீன ஏற்றுமதிஇறக்குமதி வங்கியும் (EXIM Bank) கைச்சாத்திட்ட இறுதி உடன்படிக்கை ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனுமதியை நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு வழங்குவதற்காகவே இந்தத் தீர்மானம் நாளைமறுதினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

வீழ்ச்சியுற்றிருந்த இலங்கைப் பொருளாதாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தற்போது முன்னேற்ற நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாடு எத்தகைய அவலநிலைமையில் இருந்தது என்பதை இவ்வேளையில் மக்கள் நினைவுபடுத்திப் பார்ப்பது முக்கியமாகும்.

ஒட்டுமொத்த தேசமே அன்று மூடப்பட்டவாறு கிடந்தது. எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாக வாகனங்கள் சகிதம் மக்கள் இரவுபகலாக நீண்ட கியூ வரிசையில் காத்துக் கிடந்தார்கள். சமையல் எரிவாயு கிடைக்கவில்லை. எரிபொருள் இல்லாததால் வாகனங்கள் இன்றி வீதிகள் வெறிச்சோடிப் போய்க் கிடந்தன. எரிபொருள் கப்பல் எப்போது வருமென்று மக்கள் ஏங்கியிருந்தனர். தொழில் அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை. டொலருக்காக எமது தாயகம் கையேந்த வேண்டியிருந்தது. ஏராளமான நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டதால், ஆயிரக்கணக்கானோர் தொழில் இழந்தனர்.

பணம் சம்பாதிப்பதற்கு வழியில்லாமல் போனதால் குடும்பங்கள் பட்டினியால் வாடின. 'திவாலானது இலங்கை' என்று சர்வதேசமே உறுதிப்படுத்தியது. பொருளாதாரம் மீள முடியாதவாறு பாதாளத்தில் வீழ்ந்ததால் ஆட்சியாளர்களே பதவி விலக வேண்டியேற்பட்டது.

'கடலில் மூழ்கிக் கொண்டிருந்த கப்பல்' போன்றிருந்த இலங்கைத் தேசத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு அவ்வேளையில் எந்தவொரு அரசியல் தலைவருமே முன்வராத நிலையில், துணிச்சலுடனும் நம்பிக்கையுடனும் நாட்டைப் பொறுப்பேற்று பொருளாதார மீட்சியை ஏற்படுத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தேவையென்று அன்று கூறியவர்கள் இன்று 'ஐ.எம்.எப் வேண்டாம்' என்று கூச்சலிடுகின்றனர். ஐ.எம்.எப் உதவி இன்றேல் உலகில் மீண்டெழ முடியாத தேசமாக இலங்கை சென்றிருக்குமென்பதை சிந்திக்கத் தெரிந்தோர் மட்டுமே அறிவர்.

கடந்த வாரம் புதன்கிழமை பிற்பகல் வரை, 'பாரிஸ் கிளப்' 52 பில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்கியுள்ளது. சீனாவின் எக்சிம் வங்கி இலங்கைக்கு 48 பில்லியன் டொலர் கடன் வழங்குவதற்கான காலப்பகுதியை அறிவித்திருக்கின்றது. நாட்டை மீட்பதற்கான இந்த உதவிகளெல்லாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆற்றல், ஆளுமை, அரசியல் அனுபவம் ஆகியவற்றுக்குக் கிடைத்த பலன்கள் ஆகும்.

## ஜூலை 02, 03ஆம்...

குறித்து இரண்டு நாள் விவாதம் நடத்துமாறு எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்ததாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அதற்கமையவாக விவாதம் நடத்தவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பான வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அமைச்சர்களுக்கு பாராளுமன்றத்தில் ஆய்வு செய்ய வாய்ப்பு வழங்கப்படுமெனவும், தேவைப்பட்டால் எதிர்வரும் 03 ஆம் திகதி வாக்கெடுப்பை நடத்த முடியுமெனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார்.

எனவே எதிர்வரும் 03 ஆம் திகதி ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவரும் கட்டாயம் பாராளுமன்றத்துக்கு சமுகமளிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜூலை 02 ஆம் திகதி அதாவது நாளை மறுதினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுக்கும் (Official Creditor Committee) 2024 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட இறுதி உடன்படிக்கையும் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சீனாவின் ஏற்றுமதிக்கும் மற்றும் இறக்குமதி வங்கி (EXIM வங்கி)க்குமிடையே கடந்த ஜூன் 26 அன்று மேற்கொள்ளப்பட்ட இறுதி கடன் ஒப்பந்தத்தில் திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தமும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன தெரிவிக்கையில், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானத்தை ஜூலை 02 மற்றும் 03 ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜூலை 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவிருப்பதுடன், மாலை 5.00 மணிவரை விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி அன்றையதினம் விசேட உரையொன்றை நிகழ்த்தவிருப்பதாகவும் பிரதிச் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

ஜூலை 03ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இரண்டாவது நாளாகவும் விவாதத்தை நடத்த இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு தீர்மானம் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இலங்கை அரசாங்கமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவும் (OCC) கடந்த 2024.06.26ஆம் திகதி கைச்சாத்திட்ட இறுதி உடன்படிக்கை, இலங்கை அரசாங்கம் மற்றும் சீன ஏற்றுமதிஇறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவற்றுக்கிடையில் 2024.06.26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இறுதி உடன்படிக்கை ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனுமதியை, நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு வழங்குவதற்காக இந்தத் தீர்மானம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## காணிகளின் விலை...

வேலைத் திட்டமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம், காணிகளை இழந்திருந்த மக்களில் பெரும் பகுதியினர் காணிக்கான உரிமையை பெறுவதன் ஊடாக காணியின் தேவை குறைவதால், தனியாக காணி சொந்தமாக இருக்க வேண்டும் என்ற ஆசை குறைந்துள்ளதால், நிச்சயம் காணியின் விலை குறையுமென சந்தை நிலை ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

நாட்டிலேயே அதிகளவான காணிகளைக் கொண்ட புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணி விவசாய நடவடிக்கைகள், கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் மக்களுக்கு கையளிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், முந்தைய வரவு, செலவுத்திட்ட ஆவணத்தில் ஸ்டேஷன் பிளாசா என்ற கருத்தாக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில், காணியை மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையை ஜூலை மாதம் 15 ஆம் திகதி நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் மகாவலி மற்றும் ஏனைய அமைச்சுகளுக்குச் சொந்தமான காணிகளை குறிப்பிட்ட திட்டங்களுக்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்க மதிப்பீட்டாளர்களின் மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில் காணிகளை குத்தகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் எந்தவொரு இடைத்தரகர் அல்லது அரசியலும் இன்றி பயனுள்ள திட்டங்களுக்காக காணியை வைத்திருப்போர் அது தொடர்பில் அமைச்சகங்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதன் மூலம் குத்தகை அடிப்படையின் அரசாங்க நிலத்தைப் பெற முடியும். இந்நிலைமையின் அடிப்படையில் தற்போது தனியார் காணி வியாபாரம் தொடர்பில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்ற போதிலும் காணி விலை கேட்கின்றார்களே தவிர காணிகளை கொள்வனவு செய்ய மக்கள் முன்வருவதில்லை என சந்தை ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

## பஸ் கட்டணங்கள்...

கட்டண குறைப்பு சதவீதம் நாளை 01ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் ஷஷி வெல்கம தெரிவித்தார். பஸ் சங்கங்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டதாகவும், கட்டணத்தை குறைப்பதற்கு பஸ் சங்கங்கள் இணக்கம் தெரிவித்ததாகவும் ஷஷி வெல்கம தெரிவித்தார்.

தேசிய பஸ் கட்டணக் கொள்கையின் பிரகாரம் எதிர்வரும் முதலாம் திகதி கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்த ஷஷி வெல்கம, அதற்கமையவே கட்டணக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படுமெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை பஸ் கட்டணம் 05 வீதத்தால் குறைக்கப்படும் எனவும், அதன் படி குறைந்தபட்ச பஸ் கட்டணம் 30 ரூபாயிலிருந்து 28 ரூபாவாக குறைக்கப்படுமெனவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்னவும் தெரிவித்துள்ளார். நாளை பிற்பகல் 01.00 மணியளவில் தகவல் திணைக்களத்தில் நடபெறவுள்ள விசேட ஊடக சந்திப்பொன்றின்போது,தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ஷஷி வெல்கம, ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் நயோமி ஜயவர்தன, ஆணைக்குழுவின் பணிப்பாளர் ( திட்டமிடல்) கே.ஏ.சி.கருணாரட்ண ஆகியோர் கட்டணத் திருத்தம் மற்றும் குறைப்பு பற்றியதான அறிவித்தலை விடுக்கவுள்ளனர்.

## தமிழ் இனம் யார் என்பதை...

யார் என்பதை காட்டும் சந்தர்ப்பம் இதுவே என தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டு ஒரு தலைமைத்துவத்துக்கு கீழ் செயற்பட்டு அன்று உலகத்துக்கு ஒரு செய்தி கூறப்பட்டது. சில நாடுகள் அந்த செய்தியை ஜனநாயகத்தை பயன்படுத்த தவறியதாகவும் குற்றம் சுமத்துகின்றன.

யுத்தம் முடிந்தவுடன் பொன்சேகாவுக்கு ஆதரவு அளித்து அவர் தோல்வி அடைந்தார். அதற்கு பிறகு எங்களுக்காக அவர் எதனையும் இதுவரை பேசவில்லை

மைத்திரி, மஹிந்த தேர்தலில் போட்டியிட்டபோது இரண்டும் எதிரி, அதில் யாருக்கு ஆதரவளிப்பதென தீர்மானித்து மைத்திரிக்கு ஆதரவளித்தோம். அதிலும் தோற்றுப் போனோம். அடுத்து சஜித்துக்கு ஆதரவு அளித்தோம் அங்கும் இராஜதந்திரம் தோல்வியடைந்தது. நாட்டில் அரகலய போராட்டத்தைத் தொடர்ந்து டலஸ், ரணில் போட்டியிட்டபோது டலஸுக்கு ஆதரவு வழங்கினோம். அங்கும் தோல்வியடைந்தோம். மக்களிடத்தில் அபிவிருத்தி தேவையுள்ளது. மேடையில் அதைப் பற்றி நாங்கள் கதைக்கவில்லை. உரிமைக்காகவே மக்கள் என்றும் வாக்களிக்கின்றனர். எங்கள் சுகபோகத்துக்காக அல்ல.

15 வருட வரலாற்றில் அநுர, சஜித், ரணில் பேசிய வரலாறு இல்லை. ஆனால் இப்பொழுது பேசுகிறார்கள். அவர்களுக்கு தேவை ஏற்பட்டுள்ளது. தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் நாங்கள் ஏன் பொது வேட்பாளரை இறக்கக்கூடாது.

13ஆவதை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஜெய்சங்கருடன் பேசினோம். இந்திய வெளிவிவகார அமைச்சருடன் சந்தித்த சஜித் 13 ஆவதை தருவதாக சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

அப்பொழுது தமிழில் பொலிஸ் அதிகாரமும் இருக்கின்றதா ? என கேட்டார். சஜித் இங்கே இப்படி சொல்ல மரிக்கார் கொழும்பில் இவ்வாறு சொல்லவில்லை என்கிறார்.

தமிழ் நாட்டில் பொலிஸ், நிதி அதிகாரங்கள் இருக்கிறது. எமக்கில்லை. வடக்கு மாகாண சபை முறைமை தான் 13. இதில் மாகாணத்தில் தமிழ் பேசும் அதிகாரிகள் இல்லை.

பொது வேட்பாளரை களமிறக்கும் போது வேட்பாளர்கள் இறங்கி வருவார்கள். 13ஆவதை விட மேலதிகமாக ஒன்றை தருகின்றோம் என்று சொன்னால் அதைப்பற்றி யோசிப்போம். ஏற்கனவே உள்ள 13 ஆவதை தருவோம் என்று சொல்கிறார்கள்.

34 வருடமாக பொலிஸ் அதிகாரம் இல்லை, காணி அதிகாரம் இல்லை, மத்திய அரசாங்கம் காணிகளை பிடிக்கிறது.

சிவாஜிலிங்கம் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியபோது அவரை ஒருவரும் கணக்கில் எடுக்கவில்லை.

எனவே, வரலாறு தந்திருக்கிற சந்தர்ப்பத்தை தவறாது இறுக்கமாக பிடித்து இந்த மண்ணில் நாம் யார் என்பதை காட்டலாம்

ரணிலுக்கு மஹிந்த ஆதரவு, சஜித் இறங்கி போனால் அநுரவை நம்ப தயாரில்லை எமக்குரிய கருவி தமிழ் பொதுவேட்பாளர்.

தேர்தல் விஞ்ஞானபத்தில் எமக்கான தீர்வை வெளியிட்டால் சிங்கள மக்களிடத்தில் செல்வாக்கு இல்லை என்றால் இந்திய, அமெரிக்க, பிரித்தானியா தூதுவருக்கு முன்பாக மறைமுகமாக தீர்வை எழுதித் தாருங்கள் எனவும் சிறிதரன் தெரிவித்தார்.

## சர்வதேச சமூகத்திடம்...

"எமக்கான அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியான உரிமைகளை பெறுவது, அரசியல் அமைப்பு திருத்தங்களை மேற்கொள்வது, அவற்றுக்காக பேரம் பேசுவது ஆகியவற்றை தேர்தல்களில் எமது மக்கள் வழங்கும் மக்கள் ஆணையினால் கிடைக்கும் எமது அரசியல் பலத்தை பயன்படுத்தி, தமிழ் முற்போக்கு கூட்டணி உள்நாட்டில் அரசியல் பேரங்களையும் ஜனநாயக போராட்டங்களையும் முன்னெடுத்து பெற்றுக் கொள்ளும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"நாம் பெறுகின்ற இந்த அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியாக உரிமைகளையும், அவற்றை பெற நாம் முன்னெடுக்கும் பயணத்தையும், மென்மேலும் செழுமைப்படுத்த அவசியமான அபிவிருத்தி, வளர்ச்சி திட்டங்கள், தொழில்நுட்பம், தகவல் மற்றும் உலகாளாவிய அனுபவப்பகிர்வு ஆகிய உதவிகளையே அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்திடம் நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமது இந்த நிலைப்பாடு, எமக்கு மட்டும் சாதகமானது அல்ல, இந்தியா, அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்துக்கும் "தொல்லை இல்லாமல்" சாதகமானது என நான் மிக தெளிவாக நேற்று அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிடம் தெரிவித்தேன்.

அதையே நேற்று முன்தினம் இலங்கைக்கான ஐ.நா. வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரே இடமும் கூறினேன்" என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளார்.

## பொதுப் போக்குவரத்து...

வழமையான பொதுமக்கள் வாழ்வை கொண்டு நடத்துவதற்கு இன்றியாமையாதென மற்றும் சொல்லப்பட்ட சேவைக்கு இடையூறாக கூடுமென்பதை அல்லது தடையாக கூடுமென்பதை கருத்திற்கொண்டு பொதுப் போக்குவரத்து சேவை, பொது போக்குவரத்துப் பணிகளுக்காக அத்தியாவசிய சேவையாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## கடலில் மிதந்த திரவத்தை...

திரவத்தை அருந்திய மூவர் கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கையில் கடற்படையினர் இறங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை உயிரிழந்த மூவரும் ஆழ்கடல் வள்ள மீனவர்களென கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களம் தெரிவிக்கின்றது.

மீன்பிடி படகிலிருந்த 06 மீனவர்களும் இந்த திரவத்தை அருந்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மீன்பிடி படகு தங்காலை மீன்பிடி துறைமுகத்திலிருந்து சென்றுள்ளதுடன், தற்போது படகு தங்காலை கடலிலிருந்து சுமார் 365 கடல் மைல் தொலைவில் இருப்பதாகவும் வெறொரு படகின் உதவியுடன் கரைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை செய்து வருவதாகவும் கடற்படையின் தொலைத்தொடர்புகளூடாக கடலிலுள்ள மீனவர்களுடன் தொடர்பு கொண்டு உயிர் காப்புக்கான முதலுதவி ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இந்த படகு நிலை கொண்டுள்ள இடத்துக்கு அண்மித்து சர்வதேச கப்பல்கள் பயணிக்கின்றனவா? என்றும் கடற்படையினர் ஆராய்ந்து வருவதாகவும் அவ்வாறு அந்தக் கப்பல்களூடாக மீனவர்களுக்கு அவசர சிகிச்சை வழங்கவும் முயற்சி செய்து வருவதாகவும் கப்டன் கயான் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் கடற்படையின் விஜயபாகு என்ற அதிவேக கப்பல் அவசர மருத்துவ உதவிக்காக விசேட மருத்துவ குழுவுடன் அனுப்பி வைப்பதற்காக ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கடன் மறுசீரமைப்புக்கான இருதரப்பு கடன் வழங்குனர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வந்தமை தொடர்பில் நிபுணர்களின் கருத்துகள்.



**வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதில் இலங்கை பெற்றுள்ள வெற்றி நாட்டை நேசிக்கும் அனைவருக்கும் கிடைத்த நல்ல செய்தி என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார். கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் வங்குரோத்து முத்திரை குத்தப்பட்ட நாடு, இரண்டு வருடத்தினுள் இந்தளவு முன்னேற்றம் அடைந்திருப்பது மிகப்பெரிய வெற்றியாகும் என அவர் குறிப்பிட்டார். அண்மைக்கால வரலாற்றில் குறுகிய காலத்தில் உலகில் எந்தவொரு நாடும் இவ்வாறான சிறப்பான வெற்றியைப் பெற்றதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதன் ஊடாக நாட்டிற்குத் தீர்வோடு நிவாரணமும் கிடைக்கும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் நிபுணர்கள் தினகரனுக்கு தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகின்றோம்.**

### IMF வேலைத்திட்டத்தின் மீதான நம்பிக்கை உறுதிப்படுத்தப்படுகின்றது



தற்போது 38 பில்லியன் அமெரிக்க டொலர்கள் உள்ளன. பேச்சுவார்த்தைகளின் பின்னர் 10 பில்லியன் டொலர்கள்தான் மறுசீரமைப்புத் திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாரிஸ் கிளப், இந்தியாவுக்கிடையில்தான் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. பணம் தொடர்பில் பார்க்கும் போது, பாரிஸ் கிளப் கிட்டத்தட்ட நான்கு பில்லியன் தருகின்றது. இது ஒப்பீட்டளவில் சிறிய தொகையாக இருந்தாலும், இதுவரை கட்டியெழுப்பிய நிதி ஒழுக்கம் மற்றும் IMF திட்டத்துடன் இணைந்து நாங்கள் உருவாக்கிய நம்பிக்கை இதனூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது முக்கியமானது என்று நாங்கள் நம்புகிறோம். IMF வேலைத்திட்டத்துடன் நாம் முன்னேறிச் செல்லும்போது, கடன் வழங்குபவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் நீண்ட காலம் நீடித்து நம்பிக்கையை உருவாக்கியுள்ளன. இதனூடாக எதிர்காலத்தில் அபிவிருத்தி அல்லது பணத்தை ஈட்டக் கூடிய, வருமானத்தை ஈட்டக்கூடிய செயற்பாடுகளை மேற்கொண்டு இந்தக் கடனைச் செலுத்தும் வாய்ப்பு உள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தக் கடனும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது அர்த்தமல்ல.

இதனூடாக, படிப்படியான அபிவிருத்தி அல்லது நிதி ஒழுக்கம் பேணப்பட்டு இலங்கையின் பொருளாதாரம் படிப்படியாக முன்னேறி வரும் சாதனையாகவே இதை நான் பார்க்கிறேன். இதனுடன், தடைப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது. பல்வேறு நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீண்டும் புதுப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.

**ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர்
ஸிரந்த ஹீன்கெந்த**

### சிறந்ததொரு நாடாக இலங்கை விரைவில் பரிணமிக்கும்



கடனை ஒத்திவைப்பதற்கு சில வழிமுறைகள் உள்ளன. ஆனால், 2028இல் அந்தக் கடனைச் செலுத்த வேண்டும் என்பதால், இதில் அதிகளவு பெருமை அடையக்கூடாது. அதற்கு அப்பால் சென்று நாட்டில் முதலீடுகளை மேற்கொண்டு சொந்தக் காலில் நிற்கக் கூடிய பேச்சுவார்த் தைகள், விவாதங்கள் மற்றும் உரையாடல்கள் நாட்டில் இடம்பெற வேண்டும். ஒரு நாடு என்ற வகையில் IMF உடனான எங்கள் உறவு 1950இல் முதலாவது கடனைப் பெற்றுக் கொண்டதிலிருந்து தொடங்குகிறது. இப்போது பேசுவது 17ஆவது கடன் தொடர்பிலாகும். இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இருக்கும் உறவு மற்றும் கடனைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் நான் தனிப்பட்ட முறையில் நம்பும் விடயம் என்னவென்றால், எமது நாட்டில் பெரும் விவாதங்கள் நடைபெற வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, நம் நாட்டில், IMFஇன் கடன்கள் தொடர்பில் மட்டுமே பேசப்படுகின்றது. நாம் கடன்களிலிருந்து விடுபட்டு ஒரு நாடாக எவ்வாறு முன்னேறிச் செல்வது என்பது பற்றிய உரையாடலுக்கு நாங்கள் இன்னும் செல்லவில்லை. அதைப் பற்றிய பேச்சுக்கள் இடம்பெறுவதில்லை. 18ஆவது தடவையாக நாம் IMFலிருந்து கடன் பெறாமல் இருப்பது எப்படி? 19ஆவது தடவையாக மீண்டும் கடன் பெறாமல் இருப்பது எப்படி? என்பதைப் பற்றியே நாம் பேச வேண்டும். எமது நாட்டில் கொவிட் மற்றும் ஊழல் மோசடிகளால், நாடு பொருளாதாரத்தில் பூஜ்ஜியத்திற்குச் சென்றதாலேயே, இந்த நேரத்தில் நாங்கள் IMFஇலிருந்து கடனைப் பெற நேரிட்டது.

கடன் பெறாமல் இருப்பது சுகமானது என பௌத்தத்தில் கூறப்பட்டுள்ளது. கடன் பெறுவது தொடர்பில், அது வறுமையின் தீய விளைவு என்றும் கூறப்படுகிறது. இது மனிதர்களுக்கும் பொருந்தும். வறுமையின் கொடிய சுழலில் நுழையப் போகிறோமா அல்லது கடன் மனப்பான்மையிலிருந்து விடுபட்டு, சிறிது காலத்தைச் செலவிட்டு கடனிலிருந்து வெளியேறி 2050ஆம் ஆண்டாகும் போது நாட்டு மக்கள் எவ்விடத்தில் இருக்க வேண்டும்? நாட்டு மக்களுக்குச் சிறு சிறு நிவாரணங்களை வழங்குவதை விட தொழில்முயற்சியை வலுப்படுத்தும் நடைமுறை இந்நாட்டில் ஏற்படவேண்டும். இந்நாட்டின் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழகங்கள் என அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான நடைமுறைகளை, சர்வதேச நாணய நிதியத்தின் கடனில் சிக்குவதைத் தவிர்க்கும் முறைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

**இலங்கை திறந்த பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பேராசிரியர்
நளின் அபேசேகர**

### எமது நிதிச் செயற்பாடுகளுக்கான சர்வதேச அங்கீகாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது



தற்போது கிடைத்துள்ள தகவல்களுக்கு அமைய, இருதரப்பு கடன் வழங்குனர்களாக இந்தியா, ஜப்பான் மற்றும் ஏனைய முக்கிய கடன் வழங்குநர்கள் கடனைச் செலுத்துவதற்கு எங்களுக்கு கால அவகாசம் அளித்துள்ளனர். அதேநேரத்தில், கால எல்லையையும் நீடித்துள்ளனர். சீனாவுடனும் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, அதேபோன்ற சலுகைகளைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக இது நல்லதொரு செய்தியாகும். இதனைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் சென்று வர்த்தகக் கடன் தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கான வாய்ப்பு கிடைக்குமானால் அது சாதகமாகச் சிந்திக்க வேண்டிய விடயமாகும். அதேபோன்று மிகவும் கடினமான செயற்பாடாக ஆகியிருப்பது சந்தை கடனாகும். சந்தைக் கடன் தொடர்பில் இன்னமும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. சந்தையிலிருந்து பெறப்பட்ட கடன்கள் தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வந்ததன் பின்னர் இன்னும் முன்னேறிச் செல்ல முடியும். மற்றையது பலதரப்பு கடன்களாகும். அவை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பலதரப்பு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களாகும். அவை பிரச்சினைக்குரியவை அல்ல. கடினமானவை சந்தைக் கடன்களாகும். அந்தக் கடனில் எவ்வளவு தள்ளுபடி செய்வது? வட்டி விகிதத்தைச் செலுத்த அவகாசம் வழங்குவார்களா? செலுத்தி முடிக்க வேண்டிய கால அளவு என்ன? போன்ற விடயங்கள் தொடர்பில் மற்றொரு தீர்மானத்திற்கு வரவேண்டும்.

அந்த மறுசீரமைப்புகளை மேற்கொண்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட பிறகுதான் அபிவிருத்தியடைந்த நாடுகள் மீண்டும் கடன் வழங்கத் தொடங்கும். இரண்டு தரப்புக்கள் என்பது இரு நாடுகளுக்கும் இடையிலான கடன் கொடுக்கல் வாங்கலாகும். ஒரு நாடாக, இது ஒரு நேர்மறையான அம்சம் என்பதோடு, எமது நிதிச் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச அங்கீகாரத்தை உறுதிப்படுத்துவதுமாகும். நிதிச் செயற்பாடு தொடர்பில் ஸ்திரத்தன்மை ஏற்படும். இருதரப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்வதை எளிதாக்குவதற்கு, சந்தை தொடர்பான கடன் ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டிருக்க வேண்டும்.

**பேராசிரியர் விஜிதபுரே விமலரதன தேரர்,
கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறை**

### கடனை மீளச் செலுத்துவதற்குத் தேவையான பொருளாதாரத் திட்டங்கள் அவசியம்



கடனைச் செலுத்தாமல் 2028ஆம் ஆண்டு வரைக்கும் எம்மால் மௌனமாக இருக்க முடியும். இந்தக் காலத்திற்குள் வட்டி மொத்த தொகையுடன் சேர்க்கப்படும். அதன் பிறகு வட்டிக்கும் வட்டி சேர்க்கப்படும். வருட இறுதியில் செலுத்த வேண்டிய வட்டி கடன் தொகையுடன் சேர்க்கப்படும். அந்தத் தொகை சேர்ந்து பாரிய வட்டித் தொகை உருவாகும். சலுகைக் காலம் எனச் சொல்லப்படுவது 2043ஆம் ஆண்டு வரைக்கும் செலுத்த முடியும் என்பதாலாகும். 5 ஆண்டுகளில் செலுத்துவோம் என்றே நாம் கடன் பெற்றோம்.

அந்தக் காலத்தை 2043 வரை செலுத்தலாம். அதாவது 15 வருடங்கள் வரை செலுத்த முடியும். இந்த 15 ஆண்டுகளுக்குள் அனைத்து கடன்களையும் வட்டியுடன் செலுத்தலாம். நாம் 2022ஆம் ஆண்டில் கடனைச் செலுத்த முடியாது என்று குறிப்பிடுகிறோம்.

அன்று முதல் அதாவது 2022 முதல் 2028 வரை அதற்கான வட்டியைச் செலுத்த வேண்டும். மொத்தத் தொகையுடன் வட்டியையும் சேர்த்துச் செலுத்த வேண்டும். அதை மாதம் அல்லது வருடத்திற்கு கணக்கிட்டுச் செலுத்த வேண்டும். 15 ஆண்டுகளில் செலுத்தி முடிக்க வேண்டும். இந்தக் காலத்தினுள் டொலர்களை வேறு விடயங்களுக்குப் பயன்படுத்தாமல் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும்.

எமது டொலர்களை நாம் எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் செலவிட வேண்டும். இந்த காலத்தில், நாம் நாட்டை விவசாய மற்றும் தொழில்துறை ரீதியாக அபிவிருத்தி செய்ய வேண்டும். அப்படியானால்தான் எமக்கு 2028 முதல் கடனை செலுத்த வாய்ப்பு ஏற்படும். வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மூலம் அதிகப் பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளை மேம்படுத்த முடியும்.

விவசாயத்தை மேம்படுத்துவதன் மூலம், இறக்குமதிக்காகச் செலவிடப்படும் தொகை குறையும். அதேபோன்று சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதன் மூலம், டொலர்களை சம்பாதிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும். பயிற்சி பெற்ற பணியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம், இலங்கைக்கு பெருமளவிலான அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன், கடற்றொழில் தொடர்பான தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.

பழங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். அதேபோன்று டயர்கள் மற்றும் இறப்பர் போன்றவற்றையும் ஏற்றுமதி செய்ய முடியும்.

**களனி பல்கலைக்கழக பொருளியல் துறையின் பேராசிரியர்
நவரத்ன பண்டா**

### இது நாட்டிற்கு நல்ல செய்தி! ஆனால் எதிர்க்கட்சிகளுக்கு மோசமான செய்தி



கடன் சலுகைக் காலம் கிடைப்பது, கடன் சலுகைக் காலத்திற்காக 2028ம் ஆண்டு வரை கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் முக்கியமாகக் கூற வேண்டியது என்னவெனில், நாம் வங்கி ஒன்றிலிருந்து கடன் பெற்று கடனைச் செலுத்த முடியாமல் போகும் போது வங்கி சில சலுzகைகளை வழங்கும். எம்மால் கடனைச் செலுத்த முடியாது என அறிவிக்கும் போது அந்நாடுகள் எப்படியாவது கடனைச் செலுத்துமாறு எம்மை வற்புறுத்தினால் ஏற்படும் நிலையிலிருந்து மீள முடியாமல் போகும். இப்போது எங்களுக்கு நான்கு ஆண்டு சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது. இப்போது எமக்கு கடன் இல்லாதது போலத் தோன்றினாலும், உண்மையில் கடனை நாம் செலுத்த வேண்டும்.

வங்குரோத்து நிலையிலிருந்து நாம் முழுமையாக மீள வேண்டும். 2028ஆம் ஆண்டு வரை நாம் கடனைச் செலுத்த வேண்டியதில்லை என்பது வங்குரோத்து நிலையிலிருந்து, கடன்களிலிருந்து வெளியேறிவிட்டோம் என்று அர்த்தமல்ல. எனினும் நாம் 2028 வரை கடனைச் செலுத்தாமல் இருக்க முடியும். 2028 வரையான காலத்திற்குள் நாம் அந்நிய செலாவணியை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அந்நியச் செலாவணியைப் பயன்படுத்தி அபிவிருத்திப் பணிகளைப் போன்று இழந்த வேலைவாய்ப்புகள், இழந்த அரச செலவுகள் போன்றவற்றைப் பாதுகாக்க எமக்கு சந்தர்ப்பம் உள்ளது. இதன் ஊடாகப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த இந்த நான்கு ஆண்டுகள் நமக்கு பயனுள்ளதாக இருக்கும். நான்கு ஆண்டுகள் வரைக்கும் கடனைச் செலுத்த ஆரம்பிக்க வேண்டியதில்லை. அந்தப் பணத்தை பொருளாதார வளர்ச்சி தொடர்பான திட்டங்களில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு எமக்குள்ளது. 2028 முதல் 2043 வரையிலான 15 ஆண்டுகளில் நாம் மீள்செலுத்தும் தொகையை மிகக் குறைவாக வைத்துக்கொண்டு நாம் கடனைச் செலுத்தலாம். பதினைந்து வருடங்கள் செலுத்த வாய்ப்பு கிடைத்ததில் அதிக சலுகைகள் உள்ளன.

ஒரே நேரத்தில் பெரிய தொகையை செலுத்துவது கடினம் என்பதால், இந்த கடனை பதினைந்து ஆண்டுகளில் செலுத்துமாறு கூறியுள்ளனர். இது இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்த பெரும் நிவாரணமாகும்.

நாம் மிக மெதுவாகவே அந்நிய செலாவணியை சம்பாதிக்கிறோம். அதுதான் யதார்த்தம். அதேபோன்று எமது ஏற்றுமதி வருமானம் மிக மெதுவாக முன்னேறி வருகிறது. புதிதாக அந்நிய செலாவணியை ஈட்டுவது மிகவும் வரையறையானது. சுற்றுலாத் துறையை நாம் மேம்படுத்த வேண்டும்.

ஆண்டுக்கு மிகக் குறைந்த அளவிலான அந்நிய செலாவணி மட்டுமே நம்மிடம் உள்ளது. திருப்பிச் செலுத்த நேர்ந்தால் அதனை எமது பொருளாதாரத்தால் தாங்கிக் கொள்ள முடியாது. இங்கு பதினைந்து வருடங்கள் என்பது குறைந்த தவணைகளில் கொஞ்சம் கொஞ்சமாக செலுத்தலாம். இதற்கிடையில், நமது இருப்புத் தொகையினை அதிகரித்துக் கொள்ள வேண்டும். கையிருப்பு அதிகரிக்கும் போது, ரூபாய் வலுப்பெறுதல் போன்ற பல பொருளாதார நன்மைகளுக்கு வழிவகுக்கிறது.

**பேராதனை பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பேராசிரியர்
மில்டன் ராஜரத்ன**

**சுபத்ரா தேசப்பிரிய
தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

## வேலை வாய்ப்பு

விற்பனை பிரதிநிதி
(Sales Representative) - Jaffna Territory

Rainco Private Limited

**தேவையான தகைமைகள் :**

- உயர்தர கல்வி தகைமையில் தேர்ச்சிப் பெற்றிருத்தல்.
- விற்பனை சார்ந்த முன்கூட்டிய அனுபவம் கொண்டிருத்தல்.
- வாடிக்கையாளர்களிடம் தொடர்பாடும் ஆற்றலுடைமை.
- எந்த இடத்திற்கும் பயணிக்ககூடியவராக இருத்தல்.
- தமிழ் மொழியில் பேசக்கூடியவராக இருத்தல்.

**சுயவிபரக்கோவை மற்றும் தொழில் சார்ந்த ஆவணங்கள்,**

தொலைபேசி எண் : (+ 94) 76 674 0341
மின்னஞ்சல் : careers@rainco.lk
முகவரி : இல. 415, காலி வீதி, கொழும்பு - 04

**எங்கள் குழுவுடன் சேர ஓர் அரிய வாய்ப்பு**

யாழ்ப்பாண வலயமார்க்கத்தை வசிப்பிடமாக கொண்டிருத்தல் வேண்டும்.

Rainco

## தேசிய ஆராய்ச்சி பேரவை

கல்வி அமைச்சு

**ஆராய்ச்சியாளர்களுக்கான ஊக்குவித்தல் மானியங்கள் – 2024**

2024 ஜூன் 2 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்களுக்கான ஊக்குவித்தல் மானியங்கள் - 2024 இன் சமர்ப்பித்தலுக்கான முடிவுறுத்தும் திகதியானது 2024 ஜூன் 24 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூலை 24 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவலுக்காக http://www.nrc.gov.lk என்ற தேஆபே இன் இணையதளத்தை special notices இன் கீழ் பார்வையிடவும்.

தொலைபேசி : 011-2675176
தொலைநகல் : 011-2675136
மின்னஞ்சல் : apply@nrc.gov.lk

தலைவர்,
தேசிய ஆராய்ச்சி பேரவை



# மாணவரின் எதிர்காலத்தை முற்றாக மறந்த நிலையில் ஆசிரிய தொழிற்சங்கங்கள்!

**பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற கடுமையான முயற்சிகள் வெற்றிப்பாதையை நோக்கி முன்னேறிவரும் தருணத்தில், மறுபுறத்தில் அம்முயற்சிகளைச் சீர்குலைக்கும் வகையில் தொழிற்சங்கப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

இப்போராட்டங்களில் குறிப்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் போராட்டம் அதிகம் பேசுபொருளாகியுள்ளது. சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் இணைந்து சுகவீன லீவுப் போராட்டத்தை முன்னெடுத்திருந்ததுடன், கொழும்பில் கண்டனப் பேரணியொன்றையும் நடத்தியிருந்தன.

இதனால் நாடு முழுவதிலும் பாடசாலைகளின் செயற்பாடுகள் இரண்டு நாட்களாக முடங்கியிருந்தன. அது மாத்திரமன்றி, கொழும்பு புறக்கோட்டையில் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் போராட்டத்தைக் கலைப்பதற்குக் கண்ணீர்புகைக்குண்டுகள் மற்றும் நீர்தாரைப் பிரயோகங்களை மேற்கொள்ளும் நிலைக்குப் பொலிஸார் தள்ளப்பட்டனர்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் அவ்வப்போது தொழிற்சங்கப் போராட்டங்களில் குதிப்பது கடந்த சில வருடங்களாக வழமையான காட்சியாக மாறிவிட்டது. இவர்களின் இந்தப் போராட்டங்களால் நாட்டினுடைய எதிர்காலம் அதாவது எதிர்கால சந்ததியே பாதிக்கப்படுகின்றது என்பது தொழிற்சங்கங்களால் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையிலேயே ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

எந்தக் காரணத்தை முன்வைத்தும் ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்திற்குச் செல்வது நியாயமல்ல என்பதே பெற்றோரின் கருத்தாகும். இலவசக் கல்விக்காக அரசாங்கம் பெருந்தொகை நிதியைச் செலவிட்டு வருகையில், ஆசிரியர்கள் அதனை உணர்ந்து கொண்டு மாணவர்களின் நலனுக்காக தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்பதே நாட்டு மக்களின் கருத்தாகும்.

முன்னைய காலத்தில் ஆசிரியர்கள் தமது தொழிலை மிகவும் நேசித்தவர்களாகவும், மாணவர்களுக்கு கல்வியறிவு ஊட்டுவதை தமது முதற்கடமையாகவும் ஏற்று சேவையாற்றி வந்தனர். இதற்காகப் பல்வேறு அர்ப்பணிப்புக்களையும் செய்துவந்தனர். நாட்டில் சிறந்த குடிமக்களை உருவாக்குவதில் அவர்கள் தங்களது நேரத்தைச் செலவு செய்தார்களே அன்றி, வேறு காரணங்களைக் கூறி வீதியில் இறங்கிப் போராட்டங்களை மேற்கொள்ளவில்லை. அவர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட சம்பளம் குறித்து திருப்தி கண்டவர்களாகவும் இருந்தார்கள்.

அன்றைய காலத்தில் கௌரவமாக மதிக்கப்பட்ட ஆசிரியத் தொழிலை தற்பொழுது மக்கள் வேடிக்கையாகவே நோக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மாணவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய ஆசிரியர்கள், தமது உரிமைகளுக்காகப் போராடுவதற்கான முழுமையான சுதந்திரத்தைக்



## போராட்டங்களின் பின்னணியில் அரசுக்கு எதிரான அரசியல் சக்திகள்!

## கற்பித்தலில் முற்றாகவே ஈடுபாடு கொண்டிருக்காத தொழிற்சங்கத் தலைவர்கள், போராட்டங்களை முன்னெ–டுப்பதிலேயே எந்நேரமும் அக்கறை!

கொண்டிருக்கின்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், அவர்களின் போராட்ட முறைகளைப் பார்க்கும்போது, அது மாணவர்களுக்கு நல்லதொரு செய்தியை வழங்குவதாக இல்லை. இந்த வாரம் ஆசிரியர்கள் சுகவீன லீவுப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த போது, மாணவர்கள் பலர் பாடசாலைகளுக்குச் சென்று வீடு திரும்பியதையும், போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் பொலிஸாருடன் முரண்பட்டு, நீர்த்தாரைப் பிரயோகத்துக்கு உள்ளாவதையும், ஒரு சில ஆசிரியர்கள் பொலிஸாரை நோக்கி கற்களை வீசுவது போன்ற வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடும் காட்சிகளையும் தொலைக்காட்சிகள் மூலம் காணக்கூடியதாகவிருந்தது.

அவர்களின் இந்தச் செயற்பாடு ஆசிரியத் தொழிலுக்கு முற்று முழுவதும் மாறுபட்டதாகவே அமைந்திருந்தது. முன்னர் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியமைக்காகவே இரண்டாவது நாளும் ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்ததாக ஆசிரியர் தொழிற்சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கூறியிருந்தார்.

போராட்டங்களை முன்னெடுப்பதற்கு இவர்கள் முன்வைக்கும் காரணங்கள் எந்தளவுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது என்பதையும் பார்க்க வேண்டியுள்ளது.

ஜனநாயக நாட்டில் போராட்டங்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உரிமை அனைவருக்கும் உள்ளது. எனினும், அதனை முன்னெடுப்பது தொடர்பான தார்மீகப் பொறுப்புக் குறித்து ஆசிரியர்கள் உணர்ந்துகொள்ள வேண்டியதொரு தேவை இங்கு காணப்படுகின்றது.

குறிப்பாக கொவிட் தொற்று மற்றும் அதன் பின்னரான பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் பாடசாலைகள் சரியாக இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டது மாத்திரமன்றி, மாணவர்களுக்கான பாடநெறிகளையும் பூர்த்திசெய்ய முடியாது பாடசாலை தவணைக்கான காலங்கள் பின்போடப்பட்டன.

இதன் காரணமாக பொதுப்பரீட்சைகள் மற்றும் பல்கலைக்கழக நுழைவு எனப் பல்வேறு விடயங்களில் இழுபறிநிலை நீடித்துவந்தது. இத்தகைய சூழ்நிலையில், ஆசிரியர்கள் தொடர்ந்தும் தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபடுவது ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மென்மேலும் சிக்கல்களுக்குள்ளேயே தள்ளும் என்பது உண்மை.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆசிரியர்கள் நீண்ட நாட்களாக முன்னெடுத்த வேலைநிறுத்தப் போராட்டத்தினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக அவர்கள் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுப்பது மாணவர்களை மாத்திரமன்றி, நாட்டிலுள்ள பொதுமக்களையும் அதிருப்தியடைய வைத்துள்ளது.

இதேவேளை இது போன்ற தொடர்ச்சியான செயற்பாட்டுக்கு அனுமதிக்கப் போவதில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் மல்வத்தபீடத்திற்குச் சென்றிருந்த அவர், இவ்விடயத்தை பௌத்த மதத் தலைவர்களிடம் தெளிவாகக் கூறியிருந்தார்.

ஆசிரியர்கள் தொடர்ந்தும் இவ்வாறு நடந்து கொள்வார்களாயின் மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக ஆசிரியர் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக அவர் குறிப்பிட்டிருந்தார். அத்தியாவசிய சேவையாக அறிவித்து, தேவை ஏற்படின் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கல்வியை முன்கொண்டுசெல்வதற்குதான்தயங்கப்போவதில்லையென்றும் அவர் கூறியிருந்தார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு படிப்படியாக மீண்டுவரும் சந்தர்ப்பத்தில் அரசியல் பின்புலத்தை நோக்காகக் கொண்டு இவ்வாறான வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுப்பது ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்கும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டியதாகும்.

ஆசிரியர்களின் இப்போராட்டத்தில் அரசுக்கு எதிரான அரசியல் சக்திகள் பின்னணியில் இருந்ததாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது. தேர்தல் நெருங்கிவருகின்ற இச்சமயத்தில் அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே அச்சக்திகள் போராட்டத்தை தூண்டியுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களாக நாட்டு மக்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தாலும், அர்ப்பணிப்புடனும், மிகவும் பொறுமையுடனும் நிலைமைகளைக் கையாண்டு வருகின்றனர். ஆசிரியர்கள் போன்று ஒவ்வொரு தடவையும் மக்கள் வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கினால், ஏற்கனவே பின்னடைவைச் சந்தித்திருக்கும் நாடு மென்மேலும் பாதாளத்துக்குள் தள்ளப்பட்டு விடுமென்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

மறுபக்கத்தில், தொழிற்சங்கப் போராட்டங்களைத் தூண்டும் தொழிற்சங்கத் தலைவர்களின் பின்னணி குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள், பல வருடங்களாகப் பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுக்கு கற்பிக்கவேயில்லை.

தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுப்பதே அவர்களின் முழுநேரத் தொழிலாக உள்ளது. அரசாங்கம் வழங்கும் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு வீதியில் நின்று போராடுவதும், மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிப்படையச் செய்வதுமே அவர்களின் முழுநேரத் தொழிலாக உள்ளது. இவ்வாறானவர்களின் செயற்பாடுகளால் நாட்டின் எதிர்கால சந்ததி பாதிக்கப்பட இடமளிக்க முடியாது என்பதே ஜனாதிபதியின் உறுதியான நிலைப்பாடாகும்.

**பி.ஹர்ஷன்...**

# காஸாவில் கடும் பட்டினியினால் மரணத்தின் விளிம்பில் மக்கள்!



**காஸா மீது இஸ்ரேல் முன்னெடுத்துவரும் முழுஅளவிலான யுத்தம் எட்டு மாதங்களுக்கும் மேலாக நீடிக்கிறது. கடந்த வருடம் ஒக்டோ–பர் 07 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் மேற்கொண்ட திடீர் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பதற்காகவும் ஹமாஸ் பிடித்து சென்றுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பதற்காகவும் எனக் கூறி ஆகாயம், கடல் மற்றும் தரை மார்க்கமாக இப்போரை முன்னெடுக்கிறது இஸ்ரேல்.**

இந்த யுத்தத்தினால் 365 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட காஸாவிலுள்ள 23 இலட்சம் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். இற்றை வரையும் 37 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்களாவர். அதேநேரம் 86 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த யுத்தத்தினால் காயமடைந்துள்ளனர்.

இப்போரினால் காஸாவே சாம்பல் மேடாகக் காட்சியளிக்கிறது. மக்களின் இடப்பெயர்வு அன்றாட நிகழ்வாகியுள்ளது. அவர்கள் அடிப்படை வசதிகளற்ற கூடாரங்களிலும் முகாம்களிலும் தங்கியுள்ளனர்.

போரை ஆரம்பித்த பின்னர் காஸாவுக்குள் உணவுப் பொருட்கள், மருந்துகள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகள் செல்வதற்கு கடும் கட்டுப்பாடுகளை இஸ்ரேல் விதித்துள்ளது. மனிதாபிமான உதவிகள் செல்லக்கூடிய ரபா, அபு சலம் உள்ளிட்ட காஸாவுக்கான எல்லா நுழைவாயில்களும் மூடப்பட்டும், இறுக்கமான கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியுமுள்ளன.

அதனால் உணவு, தண்ணீர் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகள், மருந்துப் பொருட்கள் அனைத்துக்குமே காஸாவில் பற்றாக்குறை நிலவுகின்றது. பசியும் பட்டினியும் தலைவிரித்தாடுகின்றன. அங்கு போஷாக்கின்மை பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இவ்வாறான சூழலில் ஐ.நா. சபையின் பசியைக் கண்காணிக்கும் கட்டமைப்பின் (United Nation's hunger monitoring system) ஒருங்கிணைந்த உணவு பாதுகாப்பு விபரிப்பு திட்டம் (Integrated Food Security Phase Classification IPC) இவ்வாரமுற்பகுதியில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கை உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளது.

அதனால் ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா மற்றும் உலக நாடுகள் காஸாவுக்கு மனிதாபிமான உதவிகளை போதியளவில் அனுப்பி வைக்க துரித நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியுள்ளன. தவறும் பட்சத்தில் காஸாவில் பசியாலும் பட்டினியாலும் மக்கள் உயிரிழப்பதை தவிர்க்க முடியாது என்று சுட்டிக்காட்டியுள்ள மனிதாபிமான சர்வதேச தொண்டர் நிறுவனங்கள், தீவிர போஷாக்கின்மைக்கு உள்ளாகியுள்ள சிறுவர்கள் ஏற்கனவே உயிரிழக்கத் தொடங்கியுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளன.

இப்போர் ஆரம்பிக்கப்பட முன்னர் நாளொன்றுக்கு 500 - 600 ட்ரக் மனிதாபிமான உதவிகள் காஸாவுக்குள் சென்றுள்ளன. ஆனால் தற்போதைய பட்டினி நிலையைப் போக்குவதற்கு தினமும் 1000 - 1500 ட்ரக் மனிதாபிமான உதவிகள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய தேவை நிலவுகிறது என மதிப்பிடப்பட்டிருக்கிறது.


காஸா மீது தொடராக யுத்தத்தை முன்னெடுக்கும் இஸ்ரேல் யுத்தத்தை ஆரம்பித்த இரண்டு நாட்களில் உணவு, மின்சாரம், தண்ணீர், மருந்து உள்ளிட்ட மனிதாபிமான உதவிகள் காஸாவுக்கு செல்வதை இடைநிறுத்தியது. காஸா மக்கள் எகிப்துக்குள் வருவதைத் தவிர்க்கும் வகையில் ரபா எல்லையும் மூடப்பட்டது.

ஆனாலும் ஐ.நா. மற்றும் உலக நாடுகளின் கோரிக்கைகள் மற்றும் அழுத்தங்களின் பின்புலத்தில் அத்தியாவசியப் பொருட்களை காஸாவின் கான்யூனுஸ் பகுதியில் விநியோகிக்க இஸ்ரேல் அனுமதித்தது. இருப்பினும் அத்தியாவசிய மனிதாபிமான உதவிகள் காஸாவுக்கு செல்வதற்கு இறுக்கமான கட்டுப்பாடுகளை இஸ்ரேல் நடைமுறைப்படுத்தியது.

அதனால் ஐ.நாவின் மனிதாபிமான தொண்டர் நிறுவனங்கள் கடந்த வருடம் நவம்பராகும் போதே காஸாவில், பட்டினியும் போஷாக்கின்மையும் தீவிரமடையக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டன. இந்த சூழலில் ஐ.நா. பொதுச்சபை மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தி ஒக்டோபர் 27 ஆம் திகதியும் டிசம்பர் 13 ஆம் திகதியும் பிரேரணைகளை நிறைவேற்றியது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலும் இவ்வாறான பிரேரணை நிறைவேற்றப்பட்டது. ஆன போதிலும் அவை முழு அளவில் நடைமுறைக்கு வரவில்லை.

## ஐ.நா.வின் பசியைக் கண்காணிக்கும் கட்டமைப்பு வெளியிட்டுள்ள அதிர்ச்சி அறிக்கை!





## மனிதாபிமான உதவிகளை போதியளவில் அனுப்பிவைக்குமாறு அமெரிக்கா வலியுறுத்தல்!

அதனால் காஸா மக்களின் அவலநிலையைக் கருத்தில் கொண்ட ஜோர்தான், நவம்பரின் தொடக்கம் முதல் வடக்கு காஸா பகுதியில் ஆகாய மார்க்கமாக அத்தியாவசியப் பொருட்களை போடத் தொடங்கியது. அந்நடவடிக்கையில் அமெரிக்கா, எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் பின்னர் இணைந்து கொண்டன.

ஆனால் இவ்வாறு போடப்பட்ட உணவுப் பொதிகள் சில சிலிவியன்கள் மீது விழுந்து அவர்கள் உயிரிழந்துள்ளனர். ஒரிருவர் கடலில் வீழ்ந்த பொதிகளை எடுக்கச் சென்று கடலில் மூழ்கியும் இறந்துள்ளனர்.

ஆனால் இப்போர் ஆரம்பமானது முதல் காஸாவுக்கு போதியளவு மனிதாபிமான உதவிகளை அனுப்பிவைக்குமாறும், சிவிலியன்கள் யுத்தத்தினால் பாதிக்கப்படுவதைக் குறைக்குமாறும் இஸ்ரேலுக்கு ஆதரவு, ஒத்துழைப்பு அளித்துவரும் அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

ஆனால் அமெரிக்காவினதோ, ஐ.நாவினதோ, சர்வதேச தொண்டு நிறுவனங்களினதோ கோரிக்கைகளை இஸ்ரேல் பெரிதாக கருத்தில் கொண்டதாக இல்லை. அதனால் காஸாவுக்கு மனிதாபிமான உதவிகளை கடல் மார்க்கமாக அனுப்பி வைக்கவென அமெரிக்கா மத்திய தரைக்கடலில் தற்காலிக நீர்த்தடுப்பணையை பாரிய செலவில் அமைத்தது. ஆனால் அந்த நீர்த்தடுப்பணை இரு வாரங்களில் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டது.

இவை இவ்வாறிருக்க, காஸாவுக்குள் அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்து சென்ற ஐ.நா. வாகனங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. குறிப்பாக கடந்த பெப்ரவரி 5 ஆம் திகதி காஸாவுக்கு மனிதாபிமான உதவிகளை எடுத்துச்சென்ற ஐ.நா. ட்ரக் வண்டியும் தாக்கப்பட்டது. மனிதாபிமான உதவிப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக காஸா நகரில் காத்திருந்தவர்கள் மீது பெப்ரவரி 29 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் 118 பேர் கொல்லப்பட்டனர். 750 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

அதனால் யுத்தத்திற்கு மத்தியில் மனிதாபிமான உதவிகளை காஸாவுக்குள் கொண்டு செல்வது பெரும் சவாலாகியுள்ளது.

அங்கு குழந்தை உணவு மற்றும் போஷாக்கான உணவு உள்ளிட்ட அனைத்து உணவு வகைகளுக்கும் மருந்துப் பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. மக்கள் பசியைப் போக்க இலைகளை உணவாகக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் போஷாக்கின்மைக்கு உள்ளான குழந்தைகள் சிகிச்சை பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சிகிச்சை பலனின்றி உயிரிழக்கவும் தொடங்கியுள்ளனர்.

அந்த வகையில் இற்றை வரையும் 34 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிழந்துள்ளதோடு எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் கடும் போஷாக்கின்மைக்கு உள்ளாகியுள்ளதாக ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

அதனால் காஸா மக்களுக்கு அனைத்து மனிதாபிமான உதவிகளும் எவ்வித தடங்கல்களும் இன்றி கிடைக்கப்பெற தடைகளை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு காஸா மக்களும் உலக மக்களும் இஸ்ரேலைக் கோரி வருகின்றனர்.

காஸா மக்கள் மனிதாபிமான உதவிகளிலேயே முழுமையாகத் தங்கியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நெருக்கடி முகாமைத்துவ ஆணையாளர் குறிப்பிட்டிருக்கிறார்.



(09ஆம் பக்கம் பார்க்க)

**மர்லின் மரிக்கார்...**

# குணவர்ஷிகாவின் பரதநாட்டிய அரங்கேற்றம்




நாட்டிய கலா மந்திரின் இயக்குநர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியும் திருமதி புஷ்பகௌரி ஜெகநாதனின் புதல்வியுமான குணவர்ஷிகாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஜூலை மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



நிகழ்வில் பிரதம விருந்தினராக உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.துரைராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக சைவ மங்கையர் வித்தியாலயம் அதிபர் அருந்ததி இராஜவிஜயன், கல்வி வெளியீட்டுத் துறை முன்னாள் ஆணையாளர் நாயகம் சுப்பிரமணியம் பிள்ளை முரளிதரன், நர்த்தனா நடனப் பள்ளியின் இயக்குநர் 'கலைமாமணி' 'பாரதகலாநிதி' சிவானந்தி ஹரிதர்ஷன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்

அணிசேர் கலைஞர்களாக: பாட்டு லாவண்யா ஜெயமோகன், மிருதங்கம் – எம்.லோகேந்திரன், புல்லாங்குழல் செல்வன் சிவஞானசுந்தரம் ஜூட், தாள தரங்கம் – செல்வன் நக்கீரன் கேதாரநாத் வயலின் சுந்தரமூர்த்தி கோபிதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் கல்வியியலாளர் எம்.எச்.எம். ஹஸன்



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில், எதிர்வரும் 2ஆம் திகதி (02.07.2024) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியின் நேர்காணலில் முஸ்லிம் சேவைக்கு பங்களிப்புச் செய்தோர் வரிசையில், எம்.எச்.எம். ஹஸன் அதிதியாக பங்கேற்கிறார். ஸ்ரீலங்கா ஜமாத்தே இஸ்லாமி உதவிச் செயலாளரான இவர், பேராதனைப் பல்கலைக்கழக கலைத்துறை, கல்வி முதுமாணி பட்டங்கள் பெற்றவராவார். முஸ்லிம் சேவையோடு நீண்டகாலம் தொடர்புபட்டிருந்த ஹஸன் அவர்கள், எழுத்தாளரும், இலக்கியவாதியுமாவார். சிங்கள மொழி நாவல்கள் பலவற்றை தமிழ் மொழியில் மொழிபெயர்த்துள்ளார். முஸ்லிம் சேவையில் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரை வாராந்தம் சுமார் எட்டு வருடங்களாக 'மாணவர் மன்றம்' நிகழ்ச்சியை நடத்தியதோடு, இன்னும் பல நிகழ்ச்சிகளுக்கும் பங்களிப்பு வழங்கியுள்ளார். நிகழ்ச்சியை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்து வழங்க முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா றினூஷியா தயாரித்தளிக்கிறார்.


## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

### முதலீட்டுக்கான வாய்ப்பு

பென்தொட்டவில் உள்ள தேசிய சுற்றுலா விடுதியில் சுலங்கா பங்களாவை குத்தகைக்கு விடுவதற்கு முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP)



- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) பென்தொட்டவில் உள்ள அதன் தேசிய சுற்றுலா விடுதியில் சுலங்கா பங்களாவை SLTDA இற்கு ஏற்க முடியுமான உயர் தரத்தில் மேம்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக நீண்ட கால குத்தகைக்கான விண்ணப்பங்களுடன் கருத்துநிலை முன்மொழிவுகளுக்கு இத்தால் அழைப்பு விடுக்கப்படுகிறது.
- ஆர்வம் கொண்ட முதலீட்டாளர்கள் கட்டிடம்/ நிலத்தோற்ற திட்டங்கள் மற்றும் நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு விபரங்களுடன் சேர்த்து அபிவிருத்தியின் கருத்துநிலை முன்மொழிவை சமர்ப்பித்தல் வேண்டும்.
- சுலங்கா பங்களாவை 30 ஆண்டு கால குத்தகை ஒன்றுக்காக கருத்தில் கொள்ளப்படும். எவ்வாறாயினும் ஆரம்பக் குத்தகைக் காலம் 15 ஆண்டுகளாக இருக்கும் என்பதோடு திருப்திகரமான செயற்பாடுகள் மற்றும் முதல் 15 ஆண்டுகளில் ஆதனத்தை பராமரித்தலில் உள்ள திருப்தி அடிப்படையில் அடுத்து 15 ஆண்டுகளுக்கு அது நீடிக்கப்படும்.
- ஒட்டுமொத்த ஆதனத்திற்கான குறைந்தபட்ச மாதாந்த குத்தகை வாடகை ரூபா 600,000.00 (வரிகள் தவிர்த்து) ஆக அமையும் என்பதோடு அதிக மாதாந்த குத்தகை வாடகை பெறுமதி ஒன்றை வழங்குவதற்கு ஆர்வமுடைய தரப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்படுவதோடு அது தேர்வு நடைமுறையின்போது அனுகூலமானதாக கருத்தில் கொள்ளப்படும். அரச நடைமுறைகளின்படி ஆரம்ப குத்தகை வாடகை பெறுமதி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றப்படும்.
- இறுதித் தேர்வு நடைமுறையில், முன்மொழியப்பட்ட கருத்துநிலை அபிவிருத்தித் திட்டத்தின் ஆக்கத் திறன் மற்றும் முதலீட்டுப் பெறுமதி, முதலீட்டாளரின் நிதி மற்றும் சந்தைப்படுத்தல் திறன், முன்மொழியப்பட்ட மாதாந்த குத்தகை வாடகை பெறுமதி மற்றும் பயண மற்றும் சுற்றுலா துறையில் ஏதேனும் முந்தைய அனுபவங்கள் உரிய பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.
- விண்ணப்பப் படிவம் மற்றும் அபிவிருத்தி வழிகாட்டல்களை https://www.sltda.gov.lk/en/tender என்ற எமது இணையதள இணைப்பின் ஊடாக அணுக முடியும்.
- இரு பிரதிகளிலான விண்ணப்பத்துடன் கருத்துநிலை முன்மொழிவை 2024 ஜூலை 30 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, இல. 80, காலி வீதி, கொழும்பு 03 என்று முகவரியிட்டு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறை ஒன்றில் இட்டு அதே முகவரியில் 4ஆவது மாடியில் உள்ள பெறுகைப் பிரிவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பென்தொட்ட NHR இல் சுலங்கா பங்களாவுக்கான முன்மொழிவு' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் இறுதித் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் உடன் திறக்கப்படும்.
- சுற்றுலா அமைச்சு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அல்லது சுற்றுலா அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் வேறு எந்த ஒரு நிறுவனத்தின் பணியாளர் ஒருவருடன் நெருக்கமான குடும்ப உறவைப் பெற்ற பணியாளர் அல்லது நிறுவனம் மற்றும்/ அல்லது தனிநபர் ஒருவர் விண்ணப்பிக்க/ வழங்குவதற்கு தகுதி பெற மாட்டார்.
- பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாக அமைவதோடு எந்த ஒரு காரணமும் கூறாது எந்த ஒரு முன்மொழிவு அல்லது விண்ணப்பத்தையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை அதற்கு உள்ளது. விண்ணப்பங்கள் மற்றும் முன்மொழிவுகளை தயாரித்தல் அல்லது விநியோகிப்பதுடன் தொடர்புபட்டு விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படும் எந்த ஒரு செலவு அல்லது இழப்புக்கும் SLTDA பொறுப்பாகாது.
- மேலும் தெளிவை பெறுவதற்கு 011-2426800 (நீடிப்பு: 305) என்ற தொலைபேசி அல்லது anushas@srilanka.travel அல்லது sltdaproc@srilanka.travel என்ற மின்னஞ்சல் ஊடாக SLTDA/ உதவிப் பணிப்பாளரை (பெறுகை) தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 80, காலி வீதி, கொழும்பு 03.**


# கலைஞர் கலைக்கமலின் "கீத்ராத் 61"



தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் "கீத்ராத் 61" எதிர்வரும் ஜூலை மாதம் 07 ஆம் திகதி மாலை 7 மணிக்கு கொழும்பு 7 ஜே.ஆர். ஜெயவர்த்தன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரபல இசைக் கலைஞர்கள் பஸால் ஜின்னாஹ், அயாஸ் சவாஹிர், ஹாரிஸ் மாஸ்டர், சுப்பர் டியூனர்ஸ் பௌமி, அஸார் கௌஸ் இசையில் கலைக்கமலுடன் சிறப்புப் பாடகராக சிங்கப்பூரின் பிரபல கலைஞர், சுங்கத் திணைக்கள அதிகாரி ஹாஜி ஃபரிஹூல்லாஹ்வும் பிரபல பாடகி மொறின் ஜெனற்றும் இணைந்து பாடவுள்ளனர்.

தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் பிரபல தொழிலதிபர், சமூகசேவையாளர் இப்திகார் அஹ்மத் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இந் நிகழ்வின் பிரதான அனுசரணையாளரான *RANAR MIGRATION CENTER* தலைவர் முஹம்மத் நஸீர் நிகழ்வுக்கு முன்னிலையில் வகிப்பார்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை முன்னாள் கட்டுப்பாட்டாளர் கலாபூஷணம் அஹ்மத் முனவ்வர், பிரபல தொழிலதிபர் இலக்கிய ஆர்வலர் செல்லமுத்து ரவீந்திரன், இறை ஞானக் கவிமணி ரமீஸ், பிரபல சமூகசேவகி ஸீனியா ஆகியோர் விஷேட அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ அதிதிகளாக கௌசலாதேவி கோவிந்தப்பிள்ளை, றோயல் கல்லூரி ஆசிரியை ஷெரினே முஸ்தபா ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். பிரபல வானொலி அறிவிப்பாளர் கவிதாயினி கலையழகி வரதராணி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவார்.

## காஸாவில்... (08ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையில் மே 27 முதல் ஜுன் 4 வரை காஸாவில் பசியைக் கண்காணிப்பதற்கான ஐ.நா. கட்டமைப்பு நடாத்திய ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு நிலை வகைப்பாட்டு பகுப்பாய்வின் சமீபத்திய கண்டுபிடிப்புகள், உணவு பாதுகாப்பு நிலை குறித்த விஷேட அறிக்கையை ஐ.நா. வெளியிட்டிருக்கிறது. அவ்வறிக்கையில் காஸாவில் 04 இலட்சத்து 95 ஆயிரம் பேர், அதாவது 22 சதவீத்தினர் கடும் பட்டினிக்கு உள்ளாகியுள்ளதாகவும் எதிர்வரும் செப்டெம்பராகும்போது 2.15 மில்லியன் பேர் அல்லது 96 சதவீதத்தினர் கடும் உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகம்கொடுப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு மக்கள் இடம்பெயர்ந்துள்ள பகுதிகளில் போதிய நீர் வசதியின்மை, மட்டுப்படுத்தப்பட்ட சுகாதார சேவை என்பன தொற்றுநோய்கள் தலைதூக்கக்கூடிய அபாயத்தை அதிகரித்துள்ளன. போஷாக்கு குறைபாடு, சுகாதார நிலைமைகளிலும் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட வழிவகுக்கும் அச்சுறுத்தல் நிலவுகிறது. காஸாவிலுள்ள குடும்பங்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் வீட்டில் சாப்பிடுவதற்கு உணவு இல்லை என்றும், 20 சதவீதத்திற்கும் அதிகமானோர் இரவும் பகலும் சாப்பிடாமல் இருக்கின்றனர் என்றும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான சூழலில், ஐ.நா. வுக்கான அமெரிக்க தூதுவர் தோமஸ் கிறீன் பீல்ட், பாதுகாப்பு கவுன்சிலில் உரையாற்றும் போது ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையின்படி காஸாவில் மனிதாபிமான தேவைகளால் பேரழிவு ஏற்படும் அபாயம் உள்ளது. அதனால் காஸாவுக்கான மனிதாபிமான உதவிகள் அதிகரிக்கப்பட வேண்டும். அந்த உதவிகள் எல்லா மக்களையும் சென்றடைய வேண்டும். ஏனெனில் காஸா மக்களில் பெரும்பாலானவர்கள் பசியின் பேரழிவு நிலைமையை எதிர்கொண்டிருப்பதை இவ்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது' என்றுள்ளார்.

இதேவேளை 'ஒக்ஸ்பாம்' என்ற தொண்டர் நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில், 'அனைத்துத் தரப்பினரும் நிரந்தரப் போர்நிறுத்தத்திற்கு உடன்படுவதற்கான அழுத்தத்தை உலகத் தலைவர்கள் அதிகரிக்க வேண்டும்' என்று தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் சுயாதீனப் புலனாய்வாளர்கள், காஸாவில் பசியும் பட்டினியும் ஒரு போர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அதனால் காஸாவுக்குள் இடையூறுகள், தடங்கல்கள் இன்றி மனிதாபிமான உதவிகளை அவசர அவசரமாக அனுப்பி வைக்குமாறு வலியுறுத்தப்படுகின்றது. இருந்தும் ஐ.நாவின் இவ்வறிக்கை வெளிவந்த பின்னரும் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. யுத்தநிறுத்தத்திற்கான சமிக்ஞைகளும் வெளிப்படவில்லை. மக்கள் முகம்கொடுக்கும் அவலங்கள் உள்ளத்தை வாட்டுகின்றன.






# ஆசியாவின் சொர்க்கபுரி!
# சீதாவக்க

இலங்கைக்கு அதிக வெளிநாட்டு வருமானத்தைப் பெற்றுத் தரும் இரண்டு முக்கிய வருமான வழிகளாக இருப்பது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறையாகும். இதில் நாம் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டியது சுற்றுலாத் துறையிலாகும். எனவே, சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் புதிய சுற்றுலா தளங்களை உருவாக்குவது அல்லது இலைமறை காயாகவுள்ள சுற்றுலா தலங்களை அறிமுகப்படுத்துவது அவசியமாகும். ஒருமுறை எமது நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணி, மீண்டும் நம் நாட்டிற்கு வருவது, அல்லது அவர் இந்நாட்டைப் பற்றி தமது நாட்டில் இருப்போரிடம் கூறுவது சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தால் மட்டுமே சாத்தியமாகும்.

எனவே, புதிய சுற்றுலா தளங்களை நாம் உருவாக்க வேண்டும். தற்போது சிங்கப்பூரின் செயற்கை மேகங்கள் மற்றும் செயற்கை மழையைப் பொழிவிக்கும் Cloud Forest நோக்கிப் படையெடுக்கும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மிகஅதிகமானதாகும். முன்னர் செந்தூசாவை மட்டுமே மையமாக வைத்து சுற்றுலா பயணிகளை கவர்ந்த சிங்கப்பூரில் தற்போது புதிதாக உருவாக்கப்பட்ட சுற்றுலா தளங்கள் நோக்கி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் படையெடுத்துச் செல்கின்றனர்.

எமது நாட்டிலும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த பல இடங்கள் உள்ளன. அவற்றுள் அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற தொல்பொருள் இடங்களும் உனவடுன, ஹிக்கடுவ போன்ற கடற்கரைகளும் உள்ளன. எனினும், எம்மால் புதிதாக உருவாக்கப்பட்ட நிலையான சுற்றுலா தளங்கள் இல்லாததால், ஒருமுறை அல்லது இரண்டு முறை வருகை தந்த சுற்றுலாப் பயணி மீண்டும் வருவதற்கு ஆசைப் படுவதில்லை.



எனவே நாம் செய்ய வேண்டியது புதிய சுற்றுலா வலயங்கள் மற்றும் நிலையான சுற்றுலா தளங்களை அமைப்பதாகும். இது தொடர்பில் தற்போது மேல் மாகாணத்தில் புதிய சுற்றுலா வலயங்களை உருவாக்கவும், குறிப்பாக நிலையான சுற்றுலா தளங்களை உருவாக்கவும், குறிப்பாக மறைந்துள்ள சுற்றுலா தலங்களை இனங்கண்டு உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகள் மேல் மாகாண சுற்றுலாச் சபையின் தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

புதிய சுற்றுலா தளமொன்றை மையமாக கொண்ட இடமாக முழு உலகினதும் கவனத்தை ஈர்த்துள்ள சீதாவக்க நகரை சுற்றுலாப் பிரதேசமாக மாற்றுவதே இதன் நோக்கமாகும் என்று மேல் மாகாண சுற்றுலாச் சபையின் தலைவர் சுகத் ஹேவாபத்திரன தினகரனுக்குத் தெரிவித்தார்.

"தற்போது மேல் மாகாணத்தின் சுற்றுலாத் தளங்கள் மற்றும் அறியப்படாத இடங்களை உலகிற்கே கொண்டு செல்லும் Western Province of SriLanka என்ற வேலைத் திட்டம் ஜப்பான், இந்தியா, இத்தாலி, பிரேசில், சீனா போன்ற நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாடுகளின் விசேட அனுசரணையும் இதற்கு கிடைத்துள்ளன.

எம்மால் இதுவரை சுற்றுலாத் துறையினை அபிவிருத்தி செய்வதற்காக தொல்பொருள் இடங்கள், சிகிரியா போன்ற உலக மரபுகள், கண்டி தலதா மாளிகை போன்ற பௌத்த மையங்கள், பெரஹரா போன்ற கலாசார அம்சங்கள் பயன்படுத்தப்பட்டன. எனினும் நாம் நவீன உலகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும்.

அதற்காக, புதிய, நிலையான சுற்றுலா தளங்களில் நாம் கவனம் செலுத்தவேண்டும். இன்றுவரை, சிகிரியா மட்டுமே நிலையான சுற்றுலாத் தலமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பாக புதிய சுற்றுலா வலயங்கள் அல்லது சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் உருவாக்கப்பட வேண்டும். எனவே மேல்மாகாணத்தில் சுற்றுலாத்துறையை உருவாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, புதிதாக அறியப்படாத இடங்களை அறிமுகப்படுத்துவதுடன், தற்போதுள்ள சுற்றுலாத் தளங்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்காகத்தான் நாம் Western province of sriLanka என்ற வேலைத் திட்டத்தின் கீழ் 'சொர்க்கத்தின் சொர்க்கம்' என்ற பெயரில் சீதாவக்க சுற்றுலாத் தலத்தைப் புதிதாக அறிமுகப்படுத்தியிருக்கின்றோம்.

1991ஆம் ஆண்டு இந்தியா பெரும் பொருளாதார சரிவை சந்தித்ததாகவும், இன்று சுற்றுலாத்துறையை பயன்படுத்தி உலகின் 4ஆவது பெரிய பொருளாதாரத்தை இந்தியா பெற்றுள்ளதாகவும் தலைவர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக தமிழ்நாடு, அசாம், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள், ஒவ்வொரு மாநிலத்திலும் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு உழைத்துள்ளன என்றும், நாமும் அவ்வழியில் சென்று மாகாண மட்டத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

குறிப்பாக புதிதாக அமைக்கப்பட்ட கொழும்பு சுற்றுலா வலயங்கள் இங்கு பாராட்டப்பட வேண்டியவை. அவிசாவளையை மையமாகக் கொண்ட சீதாவக்கவை அண்மித்த மலைகள், நீர் நிலைகள் உள்ளிட்ட நீர்வீழ்ச்சிகளையும் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக லபுகம மற்றும் கலட்டுவாவ ஆகிய நீர் ஆதாரங்கள் உணர்திறன் வாய்ந்த ஈரநிலப் பிரதேசத்தில் உள்ளன. அம்பத்தளை மற்றும் ஏனைய பகுதிகளுக்கு களனி ஆற்றில் இருந்து நீர் விநியோகிக்கப்படுவதோடு, லபுகம மற்றும் கலட்டுவாவ போன்றன மழைநீர் ஆதாரங்களைக் கொண்ட உணர்திறன் கொண்ட ஈரநிலங்களாக இருப்பதால் இந்த உணர்திறன் வாய்ந்த சுற்றுச் சூழல் வலயங்களின் ஊடாக சுற்றுலாவை மேம்படுத்துவது மிகவும் எளிதாகியிருக்கின்றது.

காலைவேளையில் லபுகம, கலட்டுவாவ போன்ற பிரதேசங்களிலும் ஹப்புத்தளை மற்றும் பண்டாரவளை போன்ற பிரதேசங்களிலும் ரம்மியமான காலநிலை நிலவுகின்றது.

மாலை வேளையும் அவ்வாறானதே. அதன் மூலம் முழுமையான பயனைப் பெற்று இந்நாட்டின் சுற்றுலாத் துறையின் நிலையான சுற்றுலாத் தலமாக சீதாவக்கவையும் அதனடிப்படையில் அறிமுகப்படுத்த முடியும்.

"பல்வேறு வகையான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகின்றனர். சிலர் வழிபாட்டுத் தலங்களைப் பார்வையிடுவதற்கும், சிலர் குதூகலமாக நேரத்தைக் கழிப்பதற்கும், சிலர் அழகை ரசிப்பதற்கும், இன்னும் சிலர் பலவருட பழைமை வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவதற்கும், இன்னும் சிலர் சுற்றுலா ஆர்வலர்களாக இயற்கை தொடர்பில் ஆய்வு செய்வதற்கும் வருகை தருகின்றனர். இவ்வனைத்துத் தரப்பினருக்கும் நாம் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இங்கே, உணர்திறன் வாய்ந்த ஈரநிலங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தளங்களை அறிமுகப்படுத்தும்போது, அதன் பாதுகாப்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அதுதான் எமக்கிருக்கும் முதலாவது சவாலாகும்.

தற்போது அந்தந்தப் பகுதி மக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், மதத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், பல்வேறு அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என அனைத்து தரப்பினருடனும் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் எம்மால் இதனைச் செய்ய முடியாது. அதேபோன்று, அந்த இடங்களைப் பாதுகாப்பதற்கும் மக்களின் ஆலோசனை அவசியமாகும்.

குறிப்பாக கொழும்பு பல்கலைக்கழகம் இதனுடன் இணைந்து அனைத்து தொழில் நுட்ப வேலைகளையும் செய்து வருகிறது.

நீர்கொழும்பு தடாகத்தின் அழகையும் அதன் சுற்றுப்புறத்தையும் காண தற்போது டீசலில் இயங்கும் படகுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(19 ஆம் பக்கம் பார்க்க)

தாரக விக்ரமசேகர
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கொழும்பு வீதிகளில் சிறந்த அனுபவமுள்ள சாரதிகள் தேவை. வயது 35 40 'A' வகுப்பு நேரடியாக அல்லது விண்ணப்பிக்கவும். அருகில் உள்ள பிரதேசங்களில் விரும்பத்தக்கது. இல. 96. மூன்றாம் குறுக்குத்தெரு. கொழும்பு 11. 042527

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

ஐந்து நபர்களை கொண்ட வைத்தியா ஒருவரது வீட்டிற்கு, சிங்களம் அல்லது தமிழ் மொழி தெரிந்த வயது 40 55 இடைப்பட்ட சமையல் வேலைக்கு ஒருவர் தேவை. சம்பளம் 35, 000/ = பிலியந்தலை. தொ.பே இல 0767678441. 042940

கம்பஹா பெண் வைத்தியரின் வீட்டில் தங்கி 1 1/2 வருட மற்றும் 3 1/2 வருட பிள்ளைகள் இருவரை கவனித்துக்கொள்ள உதவி செய்யக்கூடிய 45 வயதிற்கு குறைந்த பெண் தேவை. 071 8477298. 043173

கொழும்பு மத்தியின் வீடொன்றில் தங்கியிருந்து வேலை செய்யும் உதவியாள் தேவை. பூனைகள் மற்றும் நாய்களிடம் அன்பாக விருத்தல் வேண்டும். தொலைபேசி 0762061334 நீற்றா. 040639

வீட்டில் மற்றும் தோட்டத்தில் தங்கி வேலை செய்வதற்கு 45 வயதிற்கு குறைந்த ஆணுக்கு கார் ஓட்டுவதற்கு முடியுமான தம்பதி தேவை. பலவித உணவு வகைகள் சமைக்கக் கூடிய பெண் ஒருவராக இருத்தல் வேண்டும். சிங்களம் பேசக்கூடிய தமிழ் தம்பதி எனின் மிகவும் பொருத்தமானது. சம்பளம் பேசித் தீர்க்கலாம். 0788954021. 042686

adz.lk it's what you want
The Trusted Market place for Buying & Selling
Contact Us:-
- 011 2 429 369
- 077 7 270 067
- 077 7 270 845
- adzsuo@lakehouse.lk

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கம்பனிப் பணிப்பாளரின் கொழும்பில் அமைந்துள்ள பங்களாவிற்கு, கோக்கி/ சமையலாளருக்கான வெற்றிடம் உண்டு . கீழைத்தேய, மேலைத்தேய மற்றும் இலங்கை உணவுகளை தயாரிக்கக் கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும். தங்குமிட வசதியுண்டு. இவ் அறிவித்தல் பிரசுரமான தினத்தில் இருந்து 10 நாட்களுக்குள் சகல சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். நிறைவேற்றுச் செயலாளர், இல.60/7 1/1, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு 07. அழையுங்கள் 0773635569 042967

### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

கொழும்பு வியாபாரஸ்தலத்திற்கு விற்பனை மற்றும் ஆண்/ பெண் உதவியாளர்கள் தேவை. தொ.பே. 076 8247996. 042722

### 325 தொழில்துறை பொது

கொழும்பில் நிலையமொன்றிற்கு தங்கி வேலை வெய்வதற்கு கூரைகள் மற்றும் மேசன் கையுதவியாட்கள் தேவை. தொ.பே. 076 8247996. 042720

கொழும்பு வியாபாரஸ்தலம் கணனி அறிவுள்ள 18 25 வயதுடைய பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் சிறுவர்கள் தேவை. தொ.பே. 076 8247996. 042721

வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு பொதியிடல் பிரிவில் வேலை செய்யக்கூடிய (Packing Section) பயிற்சி பெற்ற/ பயிற்சி பெறாத ஆண், பெண் ஊழியர்கள் (Workers) தேவை. இலவச தங்குமிட வசதி மற்றும் சகாய விலையில் மூன்று வேளை உணவு பெற்றுக்கொள்ளும் வசதி, மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 0766200300. 043021

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு 45ற்கும் 55ற்கும் இடைப்பட்ட பாதுகாவலர்கள் (Watchers) தேவை. சம்பளம் ஒரு நாளைக்கு 1500/ நேரில் வரவும். குறைந்த விலையில் உணவு மற்றும் இலவச தங்குமிட வசதி. தொ.பே. இல. 076 6200300 இல. 18, வெளிஅமுன, ஹேகித்த, வத்தளை. 043018

கொழும்பில் உள்ள சலூன் கடைக்கு முடிவெட்ட தெரிந்த ஆண் ஒருவர் தேவை. மேலதிக விவரங்களுக்கு தொ.இ. 07 7 2976364. 042363

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

களுபோவில பிரிதி பிம்மாராம வீதி 9.7 பேர்ச் 3 அறைகள், குளியலறைகள், 3 சமையலறை, மண்டபம், டைல் தனி வீடு. 475/ இலட்சம் காசாக 250 இலட்சம் செலுத்தி பதிவு செய்தல் மிகுதி 6 மாத காலத்திற்குள. 077 1854292, 077 0534628. 042759

நாராஹேன் பிட்ட, எல்விட்டிகல மாவத்த 30 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட இருமாடிக் கட்டிடம் விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.07.14 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 300 மில்லியன். 0 7 72361243 042995

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

யக்கல கிரிந்திவெல வீதி இருமாடி வீடு விற்பனைக்கு. இரண்டாம் மாடி 75% வேலை பூர்த்தி 20 பேர்ச், 6 அறைகள், 02 குளியலறைகள், யக்கலைக்கு 05 விநாடிகள். கம்பஹா லைசியம் சர்வதேசப் பாடசாலைக்கு 15 நிமிடங்கள். 077 1021300, 077 5470351. 040085

### 618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

ஹொரண 71.96 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.07.14 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 13 மில்லியன்.0772361243 042989

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

வென்னப்புவ 71.5 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணை 2024.07.14 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 31.8 மில்லியன்.0772361243 042974

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி, திகன வீதி 12.1 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட அரைவாசி முடிக்கப்பட்ட இருமாடி வீடு விற்பனைக்கு. விலை விசாரணை 2024.07.14 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 9.8 மில்லியன். 0 7 72361243 042975

### 629 வீடு சொத்து இரத்தினபுரி மாவட்டம் விற்பனைக்கு

எம்பிலிப்பிட்டிய 300 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.07.14 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை ரூபா. 26.2 மில்லியன்.0772361243 042977

பலாங்கொடை புத்த ஜயந்தி மாவத்த 25 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.07.14 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை ரூபா 2.5 மில்லியன்.0772361243 042978

பலாங்கொடை புத்த ஜயந்தி மாவத்த 10.6 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.07.14 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை ரூபா 1.1 மில்லியன்.0772361243 042982

### 631 வீடு சொத்து மாத்தறை மாவட்டம் விற்பனைக்கு

மாத்தறை, தங்கல்ல வீதி 12 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணித் துண்டுகள் 03 விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.07.14 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு ஒரு துண்டு ரூபா 4.2 மில்லியன்.0772361243 042984

### 632 வீடு சொத்து ஹம்பாந்தோட்ட மாவட்டம் விற்பனைக்கு

திஸ்ஸமஹாராம, கதிர்காமம் வீதி 17 1 பேர்ச், நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024 .07.14 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 34.2 மில்லியன்.0772361243 042983

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

பார்க் லேன் நாவல வீதி ராஜகிரிய 1ம் மாடி கிட்டத்தட்ட 2200 ச. அடி தளபாடமற்ற/ அனெக்ஸ் 3 படுக்கையறைகளுடன் ( 1 இணைந்த குளியலறை) நவீன பென்றி, வேலையாள் குளியலறை, களஞ்சிய அறை பெரிய ஓய்வறை மற்றும் உணவறை பிரதேசம். முன் மற்றும் பின் பக்க பெல்கனி மற்றும் ரோலர் கேட் பிரத்தியேக நீர், மின்சார, மீட்டர்கள். நீண்டகால குத்தகைக்கு மாதாந்தம் 150, 000/ ரூபா 1 மில். மீளளிக்கப்படும் வைப்பு சிறிய குடும்பத்திற்கு தரகர் வேண்டாம். அழையுங்கள் 0777 306207. 042556

# தினகரன் வாரமஞ்சரி BUDGET aDZ

It suits your budget

Hot Line - 011 2 429 369 I 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## HOUSE FOR SALE

OFF KINSY ROAD

2 unit house on 14 perches available for sale bordering to Colombo 7.

It comprises of a 4 bedrooms, 3 bathrooms house with a garden and 2 bedroom, 2 bathrooms separate houses with separate pantries and car parking

Contact: 0773952588 / 0773057305

## PELAWATTA OFF LAKE RD 4TH LANE




Prime Residential Property

FOR IMMEDIATE SALE

59 MILLION

0777482539
0777489369


## අමානෝ වැහිපිලි සහ සෙවිලි




වැහිපිලි සහ සෙවිලි

0777 394 679 | 070 663 33 88

## HORANA LAND FOR INVESTMENT PURPOSES



Horana Walpita Road 662 perches. Ideal for blocking out, commercial purposes, factory, warehouse, holiday cottages, retirement home etc. Clear title for bank loans. Flood free high elevation land in a green environment. Water supply and electricity supply (with 33,000 volt power lines) available. 5km from Horana city centre.

Price negotiable after inspection
+94 71 0 792 192

## KIDS, BOYS & MENS SUIT Tailoring EXPERT



For Uniforms & Custom Tailoring
SPECIALIZED IN WEDDING SUITS
Wide range of Imported Suitings & Shirtings available
Navavi Fashion Clothing & Tailoring Store
Hot Line : 072 7000023

Navavi

## Sun Lanka SANY



SY220c-9HD 077 766 0366

## MATARA

Commercial space for Lease



Matara, near town, Yatiyana Road three storey building 5000 Square Feet each for lease as an entire building or as parts. Cargills food city located in one floor. Ample parking available.

Call :- 071 8 022 799

## HOUSE FOR SALE

OFF KINSY ROAD

2 unit house on 14 perches available for sale bordering to Colombo 7.

It comprises of a 4 bedrooms, 3 bathrooms house with a garden and 2 bedroom, 2 bathrooms separate houses with separate pantries and car parking

Contact: 0773952588 / 0773057305

## COMMERCIAL PROPERTY FOR SALE ON GALLE ROAD

### MOUNT LAVINIA

Double storey Commercial building with basement for sale in prime Galle road Mount Lavinia.


This property can be used for showroom or any office purpose

URGENT SALE

0772 499 786

## LAND FOR SALE NEAR THE HIGHLEVEL ROAD

(WIJERAMA - CAMPUS ROAD)



A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA NUGEGODA) EGODAWATTA ROAD, 2ND LANE AND BETWEEN WEERA MAWATHA, FACING PADDY FIELD 7.8 PERCH BARE LAND FOR SALE.

2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to highlevel road and Sri Jayawardenapura Campus Close proximity to all convenience, Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well

Contact Details
0718 712 795, 0774 745 333

## MODERN BRICK FACTORY FOR SALE

Situated in an Industrial Zone

20,000 Bricks per day

Over 10,000 Sq. ft of Buildings

Modern Machines

Currently in Operation

Foreign Investment Project

Enquiries :
+061470693042

## Investment opportunity for Boutique Hotel in Bolgoda, Sri Lanka



We are pleased to present a unique investment opportunity. Boutique hotel located in the picturesque region of Bolgoda, Sri Lanka.

Now available for rent, offers a chance to capitalize on the growing tourism sector in Sri Lanka.

The property boasts stunning lake views, luxurious accommodations, and a range of high-end amenities, making it an attractive destination for both local and international visitors.

Will consider reputed companies only

Please contact 0777355329



## வியாபாரத்திற்கான சிறந்த தருணம்

### வென்னப்புவவில்

கொஸ்கஸ் சந்தியில்

மெக் சி சிக்கன் மற்றும் தம்ரோவிற்கு முகப்பாக வியாபாரத்திற்கு பொருத்தமான 12 பேர்ச் தனியான வியாபாரத்திற்கான கட்டிடத்துடனான காணி விற்பனைக்கு.

120 மில்லியன் ரூபா

தொடர்புகளுக்கு - 0775 825 908

## LUXURY APARTMENT FOR RENT

LOCATION : CLEARPOINT RESIDENCIES, RAJAGIRIYA.



Rent : LKR 600,000/- month NEGOTIABLE

3 bedrooms, 3bathrooms, ABOVE PENT HOUSE LEVEL, 2427 sq.ft., above the 35th floor, Domestic quarters, 2 parking slots, Overlooks Colombo and Diyawanna, Fully furnished with swimming pool and Gym, No pets allowed, maintenance fee negotiable

LUXURY APARTMENT FOR HIGH-END LIVING, CONTACT US!

0723 252 084/ 0705 000 077

## Advertise Here

வாரமஞ்சரி BUDGET aDZ

5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

## CAST IRON GAS BURNERS




HOTLINE: 0771092502

ABSONS EXIM (PVT) LTD | 185B, OBEYSEKARAPURA ROAD, RAJAGIRIYA TEL: 011 4322651

---

# வாரமஞ்சரி BUDGET aDZ போட்டோ குறும் விளம்பரம்



Toyota Allion G 2009 first owner, beige interior, alloys, push start, mint condition Rs 9250000 0777840141 kus-1



Toyota Vitz 2017/2018 Edition 2 wp CBC full option, automatic transmission, push start Rs 8475000 0777840141 kus-2



Nissan Xtrail 2015 hybrid petrol, fully loaded, 4wd, first owner, sunroof, power boot etc Rs 11700,000 0777840141 kus-3




Chrysler P T Cruiser 2007 Brand New imported through dimo, 2400cc Petrol, automatic transmission, beige interior, electric seats, 18" alloy wheels, climate control Dual zone AC, premium audio system, 6 airbags, TCS, etc carefully used immaculate condition 32A Mirihana Road Nugegoda 0779232207 kus-4



Daihatsu rocky wp FZ ex embassy vehicle, 1994 registered, 2800cc intercooler turbo diesel, manual, 4wd, full option, android multi media,new tires, mint condition 0777840141 kus-5

வாரமஞ்சரி போட்டோ குறும் விளம்பரம்



Amal - 077 7 270 443
Kumara - 077 7 270 683

வாரமஞ்சரி
## சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

adzsuo@gmail.com

DON'T TXT & DRIVE

வாரமஞ்சரி BUDGET aDZ

## Looking for Your Life Partner..,



Gather with,
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

Pay online and save your precious time

BANK OF CEYLON Acc. No. 000000377 Corporate Branch

E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 I 011 2 429 383 I 011 2 429 342/ 343

# நாடு மீண்டெழுந்து வருகையில் சீர்குலைக்கும் செயல்களில் எதிரணி!




**இலங்கைக்கும், சர்வதே நாணய நிதியத்துக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுவரும் நீடித்த நிதியுதவித் திட்டத்தின் இரண்டாவது மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு மூன்றாவது தவணைக்கான அனுமதி கடந்த வாரம் வழங்கப்பட்டது.**

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச கடன் வழங்குனர்களுடன் கடன் மறுசீரமைப்புக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருப்பது பற்றி அறிவித்திருந்தார். இந்த இரண்டு விடயங்களும் இலங்கையின் பொருளாதார மீட்சிப் பயணத்தில் குறிப்பிடத்தக்க வெற்றிகளாக அமைந்துள்ளன.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீதியோரங்களில் இரவு பகலாகக் காணப்பட்ட மக்களின் நீண்ட வரிசைகள் இல்லாமல் செய்யப்பட்டு, நாடு பொருளாதாரத்தின் மீட்சியை நோக்கி சரியான பாதையில் பயணிப்பதை இந்த வெற்றிகள் பறைசாற்றியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் கடன் மறுசீரமைப்புக்கு இலங்கை கட்டாயம் செல்ல வேண்டும் என்ற நிபந்தனை காணப்பட்டது. இது தொடர்பில் அரசாங்கம் கொள்கையளவிலான இணக்கப்பாட்டை எட்டியிருந்தபோதும், கடன் வழங்குனர்களுடன் ஒப்பந்தம் செய்வதில் காலதாமதம் இருந்தபோதும், பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கப்பாட்டை எட்ட முடிந்தது.

இந்த அடிப்படையில் 'பரிஸ் கிளப்' என அறியப்படும் உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழுவுடனும், மற்றுமொரு கடன் வழங்குனருமான சீனாவின் எக்ஸிம் வங்கியுடனும் மறுசீரமைப்புக்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ள முடிந்துள்ளது. இந்த அடிப்படையில் இலங்கை தொடர்பில் சர்வதேச ரீதியில் காணப்பட்ட

முக்கியமான கட்டத்தை வெற்றிகரமாக முடித்துள்ளதால், வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி முன்னெடுத்த அனைத்துத் திட்டங்களையும் மீண்டும் தொடங்க அந்தந்த நாடுகளுக்கு சட்டபூர்வ வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தி, இலகு ரயில் பாதை, அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட பல திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. இது மாத்திரமன்றி, புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பங்கள் பலவும் ஏற்பட்டுள்ளன.

கடன்மறுசீரமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள இணக்கப்பாடு குறித்து நாட்டுக்கு அறிவித்து விசேட உரை நிகழ்த்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடனை செலுத்த முடியாமல் வங்குரோத்தான நாடென்று முத்திரை குத்தப்பட்ட ஒரு நாடு இரண்டு வருடங்களில் இந்தளவு முன்னேற்றத்தைப் பெற முடிந்திருப்பது வெற்றி எனவும், அண்மைய வரலாற்றில் பொருளாதார படுகுழியில் விழுந்த உலகின் எந்த நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வாறான நிலையை அடைந்ததில்லை எனவும் குறிப்பிட்டார்.

'நாடு எதிர்நோக்கும் சவால்களை உண்மையாகப் புரிந்து கொண்டு அவற்றுக்கு நடைமுறைத் தீர்வுகளை வழங்கி, முடிவுகளைக் காட்டிய தன்னுடன் சேர்ந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வீர்களா? இல்லையேல் இன்னும் பிரச்சினையை புரிந்து கொள்ளாத மற்றும் அதிகாரத்திற்காக இருட்டில் தடவிக் கொண்டிருக்கும் குழுக்களுடன் இணைவதா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

தவறான பாதையில் செல்வதால் ஏற்படும் ஆபத்துகளை அனைவரும் அறிந்து வைத்துள்ளதால், அது தொடர்பில் தீர்மானத்தை எடுப்பதற்கு மக்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் உள்ளது. மக்கள் எடுக்கும் தீர்மானம் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்காது, அது நாடு மற்றும் எதிர்கால குழந்தைகளின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும்' என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வங்குரோத்து அடைந்து நாட்டின் பொருளாதாரம் படுகுழியில் வீழ்ந்திருந்த போது நாட்டை மீட்பதற்கு தனது கட்சிக்குப் பாராளுமன்ற அதிகாரம் இருக்கவில்லை எனவும், தன்னால் நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகளோ தான் நியமித்த அமைச்சரவையோ இருக்கவில்லை என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அவை எதுவும் இன்றி உலகையே ஆச்சரியப்படுத்தும் விதத்தில் இரண்டு வருடங்களில் நிலையான நாட்டைக் கட்டியெழுப்ப தன்னால் முடிந்ததாகவும் குறிப்பிட்டார்.



## எதிர்கால ஆபத்து குறித்து எச்சரிக்கும் ஜனாதிபதி

வருடங்களுக்கு முன்னர் நாட்டில் காணப்பட்ட நீண்ட வரிசைகள் என்ற நிலைமைகள் முற்றாக நீங்கி, மக்கள் ஓரளவுக்கு நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கான சூழல் உருவாகியுள்ளது. இவை அனைத்துக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலும், அவருடைய தொலைநோக்கு சிந்தனையுமே என்றால் அது மிகையாகாது.

### ஒத்துழைப்பு வழங்காத எதிர்க்கட்சிகள்:

நாட்டை சரியான பாதையில் வழிநடத்திச் செல்வதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் குறிப்பாக எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் அரசியல் பேதங்களை மறந்து ஒன்றிணைய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு வருடங்களில் பல தடவைகள் அழைப்பு விடுத்துள்ளார். இருந்தபோதும் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும், தேவையற்ற விமர்சனங்களை முன்வைத்து மக்களைக் குழப்பாமலாவது இருக்கலாம்.

எனினும், எதிர்க்கட்சிகள் இலங்கை அரசியலின் வழமையான சம்பிரதாயங்களுக்கு அமைய எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்பு என்ற ஆயுதத்தையே தொடர்ந்தும் கையில் ஏந்தி

நோக்கமாகக் கொண்டுள்ளன. எதிர்காலத்தில் ஆட்சிக்கு வர ஆசைப்படுவோர் இப்போதே ஜனாதிபதியையும் தெரிவு செய்து விட்டனர். அவர்களில் சிலர், ஆட்சிக்கு வந்த பின்னர் அமைச்சர்களை நியமிப்பது தொடர்பில் ஆழமாக ஆலோசனை நடத்துகிறார்கள்" என்று தெரிவித்தார்.

'தேவையற்ற பொய்களை மக்கள் மத்தியில் விதைக்கின்றனர். நாட்டுக்கு எவ்வாறான வெற்றி கிட்டினாலும், ஏன் அவர்கள் இன்னும் இதனை வன்மமாகப் பார்க்கிறார்கள்? நாட்டிற்குக் கிடைக்கும் நற்செய்தியை எதிர்மறையாக பார்ப்பது ஏன்? எல்லாவற்றிலும் அரசியல் ஆதாயம் பெற ஏன் முயற்சிக்கிறார்கள்? அதிகாரத்தைப் பெறுவதற்காக ஏன் நாட்டுக்குத் துரோகம் செய்கின்றனர்? இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசியல் செய்வது ஏன்? அதற்கு இதுதான் காரணம். ஜனாதிபதி பதவிக்காக கடுமையாகப் போராடுகிறார்கள். நாம் நாட்டுக்காக போராடுகிறோம். அவர்களோ தங்களுக்குக் கிடைக்கும் பதவிகள், பட்டங்கள் பற்றிக் கனவு காண்கிறார்கள். ஆனால் நாம் நாட்டின் வளர்ச்சி பற்றி கனவு காண்கிறோம்' என ஜனாதிபதி நாட்டுக்கு ஆற்றிய விசேட உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது நாட்டை பொருளாதாரச் சிக்கலில் இருந்து மீட்க வேண்டும் என்பதில் யார் உறுதியாக இருக்கின்றனர் என்பது தெளிவாகப் புரிகின்றது. இரண்டு வருடங்களில் நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் இந்நாட்டுக்கு மிகவும் முக்கியமானது என்பதை அண்மைய கால செயற்பா



சிங்கவின் மூலோபாயப் பார்வை முக்கியமானது. பொருளாதார சீர்திருத்தங்களுக்கான அவரது நடைமுறை அணுகுமுறை மற்றும் நிதி ஒழுங்குமுறைக்கான அர்ப்பணிப்பு ஆகியவை சர்வதேச நாணய நிதியம் மற்றும் முக்கிய கடன் வழங்குநர்கள் உட்பட சர்வதேச பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளன.

நீண்ட கால கட்டமைப்பு சீர்திருத்தங்களுடன் உடனடி பொருளாதார தேவைகளை சமநிலைப்படுத்தும் அவரது திறன் இதுவரை எட்டப்பட்ட முன்னேற்றத்தில் முக்கிய காரணியாக உள்ளது.

முக்கிய சர்வதேச பங்காளிகளுடன் வலுவான உறவுகளை வளர்ப்பதிலும், இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதிலும் ஜனாதிபதியின் முழுமையான ஒத்துழைப்பு சிறப்பானது. இராஜதந்திர ரீதியில் விடயங்களை அணுகும் விதம் ஆக்கபூர்வமான உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான சூழலை நாட்டுக்கு உருவாக்கிக் கொடுத்துள்ளது.

பார்வையை மாற்ற முடிந்திருப்பதுடன், அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

### அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள்:

இந்த ஒப்பந்தங்களின் மூலம், வெளிநாடுகளில் உள்ள அனைத்து இருதரப்பு கடன் தவணைகளையும் 2028 ஆம் ஆண்டுவரை ஒத்திவைக்க முடியும். அதன் பின்னர் சலுகை நிபந்தனைகள் அடிப்படையில் அனைத்துக் கடன்களையும் செலுத்த 2043 வரை நீண்டகால அவகாசம் இலங்கைக்குக் கிடைத்துள்ளது.

2022 ஆம் ஆண்டில்,மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.2வீதத்தினை, வெளிநாட்டுக் கடனை செலுத்துவதற்கு செலவிட வேண்டியிருந்தது. எனினும், கடன்மறுசீரமைப்புக்கான ஒப்பந்தத்தின் மூலம் 2027ஆம் ஆண்டு முதல் 2032ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிவரையில் கடன்களைச் செலுத்துவதற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 வீதத்தினை மாத்திரமே ஒதுக்குவதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைத்துள்ளது.

2022 இல் அரசாங்கத்தின் வருடாந்த நிதித் தேவை, மொத்த தேசிய உற்பத்தியில் 34.6 சதவீதமாகும். இந்த இணக்கப்பாடுகள் காரணமாக 2027-2032 வரையான காலப்பகுதியில் அந்த நிதித் தேவை 13 சதவீதத்தை விடக் குறைவாக அமையவுள்ளது.

தொடர்ந்து 6 காலாண்டுகளாக சுருங்கிச் சென்ற இலங்கையின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து வளர்ச்சியடையத் தொடங்கியிருந்தது. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் மீண்டு வர வழியின்றி, வற்றிப் போயிருந்த எமது வெளிநாட்டு கையிருப்பு, தற்போது 5,500 மில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு உயர்ந்திருப்பதுடன், வங்கி வட்டிவீதங்கள் குறைந்துள்ளன. 2022 செப்டம்பரில் 70 சதவீதமாக இருந்த பணவீக்கம் தற்போது 9 சதவீதமாகக் குறைந்துள்ளது. முதன்மைக் கணக்கு இருப்பை உபரியாக மாற்றக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது.

கடன் மறுசீரமைப்புப் பணியின்

### ஜனாதிபதியின் தலைமைத்துவம்:

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்த நாட்டின் நிலைமையையும், தற்போதைய நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அடைந்திருக்கும் வெற்றி குறித்து எவரும் சந்தேகம் கொள்ள முடியாது. வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என அறிவிக்கப்பட்ட நாட்டைப் பொறுப்பேற்பதற்கு எவரும் முன்வராத நிலையில், தனியொரு ஆளாக இந்தச் சவாலை ஏற்றுக் கொள்ள முன்வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அனுபவம், முதிர்ச்சி, தொலைநோக்குப் பார்வை போன்றவையே இந்த வெற்றிக்குக் காரணமாக அமைந்துள்ளன.

இலங்கையின் பொருளாதார மீட்சித் திட்டத்தை வடிவமைப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரம



## கடன் மறுசீரமைப்புப் பணியின் முக்கியமான கட்டத்தை வெற்றிகரமாக முடித்துள்ளதால், வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க தற்போது வாய்ப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கில் இலங்கை பல முக்கியமான கொள்கைச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. வருமான வசூலிப்பை மேம்படுத்துதல், பொதுச்செலவினங்களை முறைப்படுத்துதல் மற்றும் வணிகச் சூழலை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் இதில் அடங்குகின்றன. அவரது நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் மீதான கவனம் இலங்கையின் பொருளாதார கொள்கைகளின் நம்பகத்தன்மையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் ஜனாதிபதியின் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் நாடு பொருளாதா மீட்சியை நோக்கி முன்னேறத் தொடங்கியுள்ளது. இரண்டு யுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணங்கிச் செல்லும்போது தேவையற்ற அச்சத்தையும், விமர்சனங்களையும் முன்வைத்த எதிர்க்கட்சி, மக்களை குழப்பத்துக்கு உள்ளாக்கியது. இருந்தபோதும் அந்தத் தடை தாண்டப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர், தாம் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மறுசீரமைப்போம், மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையிலான ஒப்பந்தத்தைச் செய்வோம் எனக் கூறத் தொடங்கினர்.

சர்வதேச கடன் வழங்குனர்களுடன் கடன் மறுசீரமைப்புக்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிகளை எடுத்தபோது, அதனை முடியாத காரியம் என்பது போல எதிர்க்கட்சிகள் விமர்சித்தன. எனினும், அந்தத் தடையையும் அரசாங்கம் தற்பொழுது தாண்டியுள்ளது.

எதிர்க்கட்சிகளின் செயற்பாடு குறித்து தனது உரையில் குறிப்பிட்டிருந்த ஜனாதிபதி, "எங்களை விமர்சிக்கும் சில குழுக்கள் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதை மட்டுமே

டுகள் வலியுறுத்தியுள்ளன.

தற்பொழுதிருக்கும் தெரிவுகளில் நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்துக்கு அவருடைய தலைமைத்துவமே சிறந்ததாக இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

'அவர்கள் அமைச்சுக்களைப் பகிர்ந்துகொள்ள திட்டமிடுகிறார்கள். நாம் நாட்டை கட்டியெழுப்ப திட்டங்களை வகுக்கிறோம். அதிகாரத்தைக் கோரி இலங்கையைச் சுற்றி வருகிறார்கள். பாடசாலைகளுக்குச் சென்றும் அதிகாரத்தை கேட்கிறார்கள். உலகம் முழுவதும் பறந்து நாட்டின் அதிகாரத்தைக் கேட்கிறார்கள். அதிகாரத்துக்காக அல்லும் பகலும் ஓடித் திரிகின்றனர்.

ஆனால் நாம் நாட்டுக்காக இரவு பகல் பாராமல் உழைக்கிறோம். நாடு முழுதுமாகச் சென்று மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம். பொருளாதாரத்தை வலுப்படுத்தும் திட்டங்களை ஆரம்பிக்கிறோம். நான் உலகம் முழுவதும் சென்று நமது நாட்டின் வளர்ச்சிக்காக சர்வதேச ஆதரவைப் பெற்று வருகிறேன்' என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டிருந்தார்.

## கியூ வரிசை யுகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், நாட்டை மீண்டும் இருண்ட யுகத்துக்குள் தள்ளி– விடுவதற்கு எதிர்த்தரப்பினர் முயற்சி!





# ஜனாதிபதி தேர்தலில் ரணிலின் பயணம்

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் பொருளாதார நெருக்கடி மோசமடைந்தபோது மக்கள் எதிர்கொண்ட அழுத்தங்களையும் சிரமங்களையும் சிலர் மறந்துவிட்டதாகத் தெரிகிறது. சிலர் தங்கள் வலிமையான எதிரியைத் தோற்கடித்து, பொய்யையும், வெறுப்பையும், துவேஷத்தையும் பரப்பி வெற்றி பெற நினைக்கிறார்கள். எனவே இக்காலத்தில் சமூக ஊடகங்களில் அரசியல் தொடர்பான பல செய்திகள், அறிக்கைகள், பதிவுகள் உண்மை நிலையை சிதைக்கும் நோக்கில் வெளியிடப்பட்டு, அதன் மூலம் நாட்டின் அரசியல் சித்தாந்தங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள் போலும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஊடகங்கள் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பதை புரியவைக்கும் நிகழ்வாக “ஆரஞ்சிய சுபை” (நற் செய்தி) எனும் தலைப்பிலான சுவரொட்டி வெளியிடப்பட்டதை குறிப்பிடலாம்.

பிரபலமான "யார் இவர் என்ன செய்கிறார்" என்ற சுவரொட்டியை விட இந்த சுவரொட்டி மக்களை கவர்ந்ததாக சில ஊடகவியலாளர்கள் தெரிவித்திருந்தனர். இவர் யார் என்ன செய்கிறார் என்பது சுவரொட்டியாக மட்டும் வெளியிடப்பட்டது. ஆனால் "ஆரஞ்சிய சுபை" ஒரு சுவரொட்டியாக மட்டுமல்ல, அதேபோல் சமூக ஊடக வலைப்பின்னல்களில் பல முறை மீண்டும் மீண்டும் செய்யப்பட்ட இடுகையாகவும் மாறியுள்ளது. இன்று, அந்த சுவரொட்டி பலரிடையே அதிகம் பயன்படுத்தப்படும் ஒன்றாக மாறிவிட்டது. "ஆரஞ்சிய சுபை" என்பது இப்போது சமூக வலைதளங்களில் புதிதாக எதையும் குறிப்பிடும் போது அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இப்போது இது சில விளம்பரங்கள் மற்றும் தயாரிப்புகளில் பயன்படுத்தப்படுகிறது. நாட்டின் கடன் மறுசீரமைப்பு எவ்வாறு வெற்றிகரமாக முடிக்கப்பட்டது என்பதை நாட்டுக்கு அறிவிக்க மிகவும் ஆக்கபூர்வமான வழி பயன்படுத்தப்பட்டது.

இதன் மூலம் உடனடியாக முழு நாட்டின் கவனத்தையும் ஈர்க்க முடிந்தது. பொருளாதார நெருக்கடியின் போது அவர்கள் சந்தித்த கடுமையான அனுபவங்களை சிலர் மறந்துவிட்டார்கள் என்று சமீபத்தில் சுட்டிக் காட்டப்பட்டது, ஆனால் அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு, அந்த நினைவுகளை எளிதில் மறக்க முடியாது. நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவருவதை அறிந்த பொதுமக்கள் பட்டாசு வெடித்து நற்செய்தியை வரவேற்றனர். அன்றைய தினம் நாட்டின் எல்லாத் திசைகளிலிருந்தும் ஏற்பட்ட ஒளி மகிழ்ச்சியான மக்களின் அடையாளமாக இருந்தது என்று நான் நினைக்கிறேன். அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூன் 26ஆம் திகதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையானது நாட்டின் எதிர்காலம் தொடர்பில் மக்கள் நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.

கனவுகளை நிறைவேற்ற முடியாத நாட்டில் இருப்பதாக நினைக்கும் மக்களுக்கும், எதிர்காலத்தை தன்னம்பிக்கையுடன் சமாளிக்க முடியாது என்று நினைக்கும் மக்களுக்கும் அப் பேச்சு வித்தியாசமான சூழலை ஏற்படுத்தியதாக தெரிகிறது. நாட்டின் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நாடு வெற்றிக்கொள்ளக்கூடிய சூழல் தற்போது உருவாகியுள்ளதாகவும் அந்த உரையில் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். நாட்டின் கடன் மறுசீரமைப்பு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக அறிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க. இந்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக பொதுமக்களுக்கு அறிவித்தார். நாட்டை கட்டியெழுப்பிய விதம் குறித்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அவர், “அதிகாரம் கேட்டு இலங்கை முழுவதும் அலைகிறார்கள். பாடசாலைகளுக்குச் சென்று அதிகாரத்தைக் கேட்கிறார்கள். உலகம் முழுவதும் பயணம் செய்து அதிகாரத்தைக் கேட்கிறார்கள். அதிகாரத்திற்காக இரவு பகலாக பாடுபடுகிறார்கள்.

நான் நாட்டுக்காக இரவு பகலாக உழைக்கிறேன். இலங்கை முழுவதும் சென்று மக்களின் தேவைகளை நிறைவேற்றுகிறேன். பொருளாதாரத்தை வலுப்படுத்தும் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

நான் உலகம் முழுவதும் சென்று நமது நாட்டின் வளர்ச்சிக்காக சர்வதேச ஆதரவைப் பெற உழைக்கிறேன்”.அப்போது அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்து, அதை முடிவு செய்யும் பொறுப்பை பொதுமக்களிடம் ஒப்படைத்தார். "என்னுடன் இணைந்து பிரச்சினையை ஆரம்பத்திலிருந்தே புரிந்து கொண்டு அதற்கான நடைமுறைத் தீர்வுகளை அளித்து முடிவுகளை காட்டி நாட்டை முன்னேற்றுவீர்களா?" அல்லது இன்னும் பிரச்சினையை புரிந்து கொள்ளாத இருட்டில் துழாவிக் கொண்டிருப்போருடன் இணையப் போகிறீர்களா? ஜனாதிபதி வேட்பாளர் தாம் என அறிவித்து, அதிகாரம் கோரி இலங்கை முழுவதும் அலையும்போது, நாட்டைக் காப்பாற்ற தான் பாடுபட்டதாக அறிவித்த ஜனாதிபதி, தனக்கும் அவர்களுக்கும் இடையில் தெரிவுக்கு இடம் இருப்பதாக அறிவித்தார்.

அந்த அறிவிப்பு வரை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது பற்றி அறிவிக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அறிவிக்கவோ, அதற்கான பிரசாரத்தை தொடங்கவோ அவர் தயாராக இல்லை. மரதனில், முதலில், வேகமாக ஓடுவதால் எந்தப் பலனும் இல்லை. மற்ற வேட்பாளர்கள் முன்னோக்கி குதித்து தங்கள் ஆற்றலை சோர்வடையச் செய்யும் போது பந்தயத்தின் முடிவில் அதிகபட்ச ஆற்றலைச் செலுத்துவது அவரது உத்தியாகத் தெரிகிறது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்கும் வரை பெற்ற அனுபவத்தில் இருந்து முதிர்ச்சியடைந்துள்ள அவருக்கு வெற்றி, தோல்வி அனுபவம் உண்டு. அவர் தனது ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை ஒரு சுவரொட்டியுடன் ஆரம்பித்தது போல் தெரிகிறது, அது நாடு முழுவதும் பரவி வருகிறது.

அந்த சுவரொட்டியை வெளியிட்டு, நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றிய உரையின் பின்னர், அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று இப்போது யாரும் கூறமாட்டார்கள். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என சிலர் கூறிவந்த அனைத்துக் கூற்றுகளும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. மற்ற அனைத்துக் கட்சிகளின் பிரசாரங்களையும் நொடிப்பொழுதில் ஒரே சுவரொட்டியால் அடக்கி, அந்தப் பிரசாரங்கள் அனைத்தும் தனது சொந்தப் பிரசாரத்திற்கேற்ப வடிவமைக்கப்படும் நிலையை உருவாக்கி இருக்கிறார். ரணில் விக்கிரமசிங்க ஜூன் 26ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றி ஒரு பெரிய ஏமாற்று வேலை செய்யப் போவதாக ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் பெரும் குரல் எழுப்பினர். கடன் மறுசீரமைப்பு குறித்து தாங்கள் கூறப் போவது மக்களை ஏமாற்றும் நோக்கில் அமைந்த பொய்ப் பிரச்சாரம் என்று அந்தக் கட்சிகள் அறிவித்தன. இருந்தபோதிலும், ஜனாதிபதியின் அறிக்கைக்கு முன்னும் பின்னும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாடுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைத் தலைவர் ஆகியோரின் அறிக்கைகள் உண்மையான நிலைமையை உறுதிப்படுத்தின. இலங்கையின் வெற்றிக்கு அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வாழ்த்து தெரிவித்திருந்தார்.

இந்தியா ஒரு விரிவான வாழ்த்து அனுப்பியதுடன், பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு ஆதரவளித்ததைப் போலவே இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாகவும் தெரிவித்ததுடன், கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடித்ததற்கு பாராட்டு தெரிவித்தது.

இதேவேளை, ஜப்பானும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதுடன், இலங்கையில் கடன் மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்த முடிந்ததன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வெற்றிகரமான பயணத்தை ஆரம்பித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைத் தலைவர் பீட்டர் ப்ரூவர் அறிக்கையொன்றை வெளியிட்டார்.

வெற்றிகரமான வகையில் இது போன்ற வலுவான அறிக்கைகளால், எதிர்க்கட்சிகள் கூறும் ஏமாற்று வேலை இதுவல்ல என்பது தெளிவாகியது.

ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுவதாகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதால், ஜனாதிபதி போட்டியில் ரணிலும் பயணிப்பதால் ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிப்பதே மிக முக்கியமான விடயமாக நான் பார்க்கிறேன். ஒன்று ரணிலின் பிரகடனத்தின் பின்னர் ஏனைய இரண்டு கட்சிகளும் பெரும் பீதியுடன் பெரும் குழப்பத்துடன் செயற்பட்ட விதம். ரணில் விக்கிரமசிங்கவின் சுவரொட்டி மற்றும் தேசத்திற்கு உரையாற்றியமைக்கு எதிராக ஏனைய விடயங்கள் அனைத்தையும் மறந்து பெரும் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டதை பொதுமக்கள் அவதானிக்க முடிந்ததாக நான் கருதுகின்றேன்.

மற்றொன்று, நாட்டின் அரசியல் ஒரு நொடிப்பொழுதில் முற்றாக தலைகீழாக மாறியதையும், அரசியல் போக்கில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

பெரும்பாலும் இது சமூக ஊடகங்களில் பிரதிபலிக்கிறது. மிகுந்த ஆர்வத்துடன் நடத்தப்பட்ட முன்னாள் பிரதான வேட்பாளர்கள் இருவரின் பிரசாரங்களும் பெரும் பின்னடைவையும் சரிவையும் சந்தித்ததாகவே தோன்றுகிறது.

மேலும், மேடைகளில் அல்லது பிற சந்தர்ப்பங்களில் செய்யப்பட்ட அறிக்கைகளிலிருந்த உயிரோட்டம் தற்போது இல்லாதிருப்பதையும் தற்போது காணக்கூடியதாக உள்ளது.



சுனந்த மத்துமபண்டார.
களனி பல்கலைக்கழக பொருளியல்பீட முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# பொலிவியாவின் இராணுவப் புரட்சி!

## உட்கட்சி மோதலா? மேற்கு ஊடகங்களின் போரா?



சர்வதேச அரசியலில் ஜனநாயகம் பற்றிய உரையாடல்கள் முதன்மை பெறும் அளவிற்கு இராணுவ சதிப் புரட்சி, எதேச்சதிகார ஆட்சி, சிறுகுழு ஆதிக்கம் எனும் ஜனநாயக முரண் ஆட்சிமுறைகளும் சர்வதேச செய்திகளை தொடர்ச்சியாக நிரப்பிக் கொண்டே வருகின்றன. நாளடைவில் அது சாதாரணமாகிவிடும் நிலைமைகளும் காணப்படுகின்றன. கொவிட்19 காலத்தில் மியான்மார் மற்றும் ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் இராணுவப்புரட்சி இடம்பெற்றிருந்தது. இன்றுவரை தொடர்கின்றது. எனினும் அவை சாதாரண அரசியல் சூழலாகவே காணப்படுகின்றது. சமகாலத்தில் பொலிவியாவில் ஏற்பட்டிருந்த இராணுவ சதிப்புரட்சியும் முறியடிப்பும் ஜனநாயகத்தின் வெற்றியாக அவதானிக்கப்படுகின்றது. மறுதளத்தில் பொலிவியாவின் இராணுவப்புரட்சி, ஆட்சியாளரின் சதி முயற்சி என்ற குற்றச்சாட்டை முன்னாள் இராணுவ தளபதி முன்வைத்துள்ளமை, ஜனநாயகம் சார்ந்த உரையாடலை கேள்விக்குட்படுத்துகிறது. பொலிவியாவின் கடந்த கால அரசியல் காலாசாரமும் மரபும் ஜனநாயகத்திலிருந்து நீண்ட இடைவெளியையே பேணுகின்றது. சோசலிச புரட்சி மற்றும் இராணுவ சதிப்புரட்சிகளுக்குள்ளேயே பொலிவியாவின் நீண்டகால அரசியல் மரபு கட்டமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை சமகாலத்தில் முதன்மை பெறும் இராணுவ சதிப்புரட்சியின் அரசியலை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

பொலிவியா நீண்ட அரசியல் புரட்சி மரபுகளை பேணுகின்றது. வரலாற்றில் மகத்தான புரட்சியாளராக கருதப்படும் சேகுவேராவின் மரணமும் பொலிவிய புரட்சியின் ஒரு பகுதியாகவே அமைகின்றது. 1950களில் இருந்து பல அரசியல் புரட்சி முயற்சிகளைக் கண்டுள்ளது. அமெரிக்க கல்வியாளர்களான ஜொனாதன் பவல் மற்றும் கிளேட்டன் தைன் ஆகியோரின் தரவுப் பகுப்பாய்வின்படி, பொலிவியா 1950 முதல் 23 ஆட்சிக் கவிழ்ப்புகளை எதிர்கொண்டுள்ளது. அவற்றில் 12 தோல்வியடைந்தன. பொலிவிய வரலாற்றாசிரியரும் பத்திரிகையாளருமான ராபர்ட் ப்ரோக்மேன் “எப்படி கணக்கிடப்படுகிறது என்பதைப் பொறுத்து, அசாதாரண எண்ணிக்கையிலான ஆட்சிக்கவிழ்ப்புகள் உள்ளன. அது ஜனாதிபதிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இருந்தால், நீங்கள் உண்மையில் அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் சிலர் அரை மணி நேரம் மட்டுமே நீடித்தனர்" எனக்குறிப்பிட்டுள்ளார். இந்த வரிசையில் 2019ஆம் ஆண்டு மொரேல்ஸின் கட்டாய இராஜினாமாவை சோசலிசத்துக்கான இடதுசாரி இயக்கம் சதியாகவே விளக்கியிருந்தது. மீள ஐந்தாண்டு இடைவெளிகளில் ஜூன்26, 2024அன்று இராணுவ சதிப்புரட்சி முயற்சி இடம்பெற்றுள்ளது.

பொலிவியாவின் முன்னாள் ஜனாதிபதி மாளிகை பலாசியோ கியூமாடோ, இராணுவத் தலைவர் ஜுவான் ஜோஸ் சூனிகா தலைமையிலான கிளர்ச்சி வீரர்களின் குழுவால் ஜூன்26 வன்முறையில் தாக்கப்பட்டது. பலாசியோ கியூமாடோ மாளிகை எரிந்த அரண்மனை என்று அழைக்கப்படுகிறது. இந்த புனைப்பெயர் 1875ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பிலிருந்து வந்தது. ஒரு கும்பல் அருகிலுள்ள கதீட்ரலில் இருந்து தீப்பந்தங்களை எறிந்து, அரசாங்கத்தின் இருக்கையை முடக்க தீயை ஏற்படுத்தியது. லா பாஸில் பிளாசா முரில்லோவில் உள்ள தற்போதைய கட்டிடம் மீண்டும் கட்டப்பட்டது. ஆனால் அதன் பின்னர், அதன் வரலாற்றைக் குறிக்கும் பல வன்முறை அணிதிரட்டல்கள், எழுச்சிகள் மற்றும் ஆட்சிக் கவிழ்ப்புகளை அது கண்டுள்ளது. இந்த வரிசையில் தற்போதைய வன்முறை கிளர்ச்சி புதியதொரு பதிவாகியுள்ளது. எனினும் இராணுவ சதிப்புரட்சிக்கான முயற்சி மக்கள் அணிதிரட்டலால் தடுக்கப்பட்டுள்ளது. ஈவோ மொரால்ஸ் நிர்வாகத்தின் போது, அரசாங்கத்தின் இருக்கையாகக் கட்டப்பட்ட பலாசியோ கியூமாடோவிற்கு அடுத்துள்ள நவீன கட்டடமாகிய காசா கிராண்டே டெல் பியூப்லோவில், பொலிவிய ஜனாதிபதி லூயிஸ் ஆர்ஸ், சதி முயற்சிக்கு எதிராக பொலிவிய மக்களை அணி திரளுமாறு அழைப்பு விடுத்தார். தொடர்ச்சியாக புதிய இராணுவத் தலைமையை நியமித்தார். மக்களின் அணிதிரட்டலால், கிளர்ச்சி வீரர்கள் பின்வாங்கினர். இராணுவ சதி முயற்சி நீண்ட நாட்கள் நீடிக்காவிடினும், பொலிவியாவின் அரசியல் ஸ்திரமின்மையின் நீண்ட வரலாற்றில் இது மற்றொரு அத்தியாயமாக அமையப்பெற்றுள்ளது.



இராணுவ சதிப்புரட்சி முறியடிப்பை பொலிவிய ஜனாதிபதி லூயிஸ் ஆர்ஸ் ஜனநாயக வெற்றியாக அறிவித்துள்ளார். லத்தீன் அமெரிக்க நாட்டில் இராணுவத்தின் மீது கட்டுப்பாட்டை உறுதிப்படுத்திய பிறகு, “பொலிவிய மக்களுக்கு மிக்க நன்றி. வாழ்க ஜனநாயகம்” எனத் தெரிவித்திருந்தார். அதேவேளை இராணுவ சதிப் புரட்சியை மேற்கொண்ட இராணுவ தளபதி ஜுவான் ஜோஸ் சூனிகா பொலிவிய ஜனாதிபதியின் கட்டளையிலேயே சதிப்புரட்சியை அரங்கேற்றியதாக ஆதாரமற்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றார். 2025ஆம் ஆண்டு பொலிவியா ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள உள்ளது. இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் வலுவிழந்துள்ள ஆதரவை மீட்பதற்காகவே லூயிஸ் ஆர்ஸ் இராணுவ சதிப்புரட்சிக்கான தூண்டுதலை மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டியுள்ளார். எனினும் ஆர்ஸ், தனது சொந்த அரசாங்கத்திற்கு எதிராக சதி முயற்சியை திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்தார். கூற்றுக்களை பொய் என்று முத்திரை குத்தியுள்ளார்.

பொலிவிய வரலாறுதோறும் ஆட்சி மாற்றங்கள் ஸ்திரமற்ற அரசியல் சூழலுக்குள்ளேயே தொடர்வதை மரபாக பேணுகின்றது. 1950களிலிருந்து ஆட்சி கவிழ்ப்புகள், கிளர்ச்சிகள், புரட்சிகள் பொலிவியாவில் சாதாரணமாகியுள்ளது. உலக வரலாற்றிலேயே சோஷலிச புரட்சிகளுக்கு பின்னர், அமெரிக்காவின் தலையீட்டுகளுடன் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள் பலவும் சர்வதிகார அல்லது இராணுவ சகதிக்குள் பயணிக்கும் ஆட்சியாகவே உருமாற்றம் பெற்றுள்ளது. நிலையானதொரு ஆட்சி மாற்றத்தை உருவாக்க முடியவில்லை. இது அமெரிக்காவின் தாராள கொள்கையுடன் பொருந்தக்கூடியதாக இல்லாத போதிலும், சோசலிசத்தை முற்றாக அழிக்க வேண்டும் என்ற முனைப்பில் சர்வாதிகார, இராணுவ ஆட்சிகளை அமெரிக்கா வரவேற்றுள்ளது. இது தாராண்மைவாத போலிகளின் வெளிப்பாடாகும். இத்தகைய அரசியல் கலாசாரத்தையே பெருமளவு இலத்தீன் அமெரிக்க நாடுகள் பகிர்கின்றன.

பொலிவியாவில் 2020ஆம் ஆண்டு இறுதியாக ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் அரசியல் கொந்தளிப்புக்கள் மற்றும் ஸ்திரத்தன்மையற்ற சூழலின் தொடர்ச்சியாகவே அமைந்திருந்தது. 60 வயதான தற்போதைய பொலிவிய ஜனாதிபதி லூயிஸ் ஆர்ஸ் நவம்பர் 2020இல் பொலிவியாவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2019ஆம் ஆண்டு சர்ச்சைக்குரிய தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, 2006 முதல் நீண்டகால இடதுசாரி ஜனாதிபதியாக இருந்த ஈவோ மோரல்ஸ் இராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார். அதன் பிறகு கிட்டத்தட்ட ஒரு வருட அரசியல் கொந்தளிப்புக்குப் பிறகே ஆர்ஸ் ஜனாதிபதி பதவியை பெற முடிந்தது. அப்போதைய எதிர்க்கட்சி செனட்டர் ஜீனைன் அனெஸ் தன்னை இடைக்கால ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார். பின்னர் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் ஜனாதிபதி பந்தயத்தில் இருந்து அனெஸ் வெளியேறினார். 2022ஆம் ஆண்டு தன்னை ஆட்சிக்கு கொண்டு வந்த சதியை நடத்தியதற்காக 10 ஆண்டுகள் அனெஸ் சிறையில் அடைக்கப்பட்டார்.

லூயிஸ் ஆரஸ் முதலில் ஒரு பொருளாதார நிபுணராக 2005இல் மொரேலஸின் முதல் ஜனாதிபதி முயற்சிக்கான பொருளாதாரத் திட்டத்தை வடிவமைத்தார். 2006இல், மொரேல்ஸ் அரசாங்கத்தின் பொருளாதார அமைச்சராகவும் ஆர்ஸ் செயற்பட்டிருந்தார். எனினும் சமீபத்திய ஆண்டுகளில், ஆர்ஸ் மற்றும் மோரல்ஸ் பதற்றங்கள் உருவாகின. அவர்கள் ஒவ்வொருவரும் சோசலிசத்துக்கான இடதுசாரி இயக்கத்தினை இரு பிரிவாக வழிநடத்துகிறார்கள். 2020 தேர்தல் மற்றும் அதன் பின்னர் ஆர்ஸின் ஆலோசகராக செயற்பட்டிருந்த மொரேல்ஸ், 2025ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிக்கு தற்போதைய ஜனாதிபதி ஆர்ஸை சவால் செய்வேன் என்று கூறியுள்ளார். இது சோசலிசத்துக்கான இடதுசாரி இயக்கத்திற்குள் இரு பிரிவு மேலாதிக்கத்தை வலுப்படுத்தியுள்ளது. ஆனால் அரசியலமைப்பு நீதிமன்றம் மொரேல்ஸ் நான்காவது முறை போட்டியிடுவதைத் தடுக்கிறது.

ஆர்ஸின் 2020 ஜனாதிபதித் தேர்தல், பொலிவியா ஸ்திரத்தன்மைக்கு திரும்புவதைக் குறித்தது. இருப்பினும், பொலிவியா அதன் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார மற்றும் நிதி நெருக்கடியை சமகாலத்தில் எதிர்கொண்டது. பொருளாதார மந்தநிலை, கொடுப்பனவு நெருக்கடி, உயர் பணவீக்கம் மற்றும் அதிக வேலையின்மை விகிதங்கள் ஆகியவற்றுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி இரண்டு தசாப்தங்களில் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது. பொலிவியன் மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயம், குறிப்பாக அமெரிக்க டொலர்கள், நிதி நிலைத்தன்மை மற்றும் சந்தை முன்கணிப்பு ஆகியவற்றிற்காக பொலிவிய நடுத்தர வர்க்கத்தின் பெரும்பகுதியை நம்பியிருக்கிறது. பொலிவியாவின் மின்சார உற்பத்தியில் சமீபத்திய ஊழல்கள், தொலைதூரப் பகுதிகளில் இயற்கை எரிவாயு மற்றும் மின்சாரத்தின் நீண்டகால பற்றாக்குறை உட்பட, கொந்தளிப்பை உண்டுபண்ணியிருந்தது.

இந்நிலையில், பொலிவியாவின் பொருளாதார நெருக்கடிக்குள் சமகாலத்தில் வல்லாதிக்க போட்டியில் ஈடுபடும் அமெரிக்காவும் சீனாவும் தமது நலன்களை தேட முயற்சிக்கின்றன. லா பாஸில் உள்ள சோஷலிஸ்ட் தலைமையிலான அரசாங்கத்துடனான அதன் மோசமான உறவுகளைக் கருத்தில் கொண்டு, அமெரிக்கா பொலிவியாவை முதன்மைப்படுத்திய நிலையில், பொலிவியாவின் உதவிக்கு வரவும், பிராந்தியத்தில் தனது செல்வாக்கை அதிகரிக்கவும் சீனா விரைவாக அணிதிரட்டுகிறது. கொவிட்19 தொற்றுநோய் உட்பட சமீப காலங்களில் பொலிவியாவிற்கு பிற நெருக்கடிகளை சமாளிக்க சீனா உதவி செய்துள்ளது. அங்கு பீஜிங்கின் மக்களுக்கு மில்லியன் கணக்கான தடுப்பூசிகளைப் பரிசளித்தது. சீனாவின் நிதியுதவி மற்றும் மூலோபாய முதலீடுகள் பொலிவியாவை அதன் மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் அதேவேளையில், தென் அமெரிக்க நாட்டின் பொருளாதார சார்புநிலையை அமெரிக்காவிடம் இருந்து மாற்றும் என்பதால், கூட்டாண்மை மூலம் சீனா அதிக லாபம் ஈட்டுகிறது. சீனா செலாங் மன்றத்தின் 10ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் நிலையில், பீஜிங்கிற்கும் லா பாஸுக்கும் இடையிலான பேச்சுக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை மற்றும் அடிக்கடி நடந்துள்ளன.

ஏப்ரல் பிற்பகுதியில், பொலிவியாவின் வெளியுறவு அமைச்சர் செலிண்டா சோசா லுண்டா சீனாவிற்கு விஜயம் செய்து அவர்களின் வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டாண்மையை வளர்ப்பது குறித்து ஆலோசித்தார். சீனா சார்பு பொலிவியாவின் உறவு வளர்ச்சி, அமெரிக்காவுக்கு பிராந்திய நெருக்கடி சார்ந்ததாகும். இந்த பின்னணியில் பொலிவியாவின் ஸ்திரமின்மை அமெரிக்காவின் தேவைப்பாடாக அமையக்கூடியதென்று கடந்த கால அமெரிக்க வெளியுறவுக்கொள்கைகளை முதன்மைப்படுத்தும் சர்வதேச அரசியல் அவதானிகளிடையே உரையாடல் காணப்படுகின்றது.

எனவே, பொலிவியாவின் இராணுவ சதிப் புரட்சியின் முயற்சிகளுக்கு பின்னால் பல்வேறு குழப்பகரமான செய்திகள் காணப்படுகின்றன. அரசியல் ஸ்திரத்தன்மைசார் குழப்பங்கள் இலத்தின் அமெரிக்காவின் அல்லது பொலிவியாவின் அரசியல் கலாசாரமெனவும் கடந்து செல்ல முடியாது.

பொலிவியாவின் விம்பம் அமெரிக்க ஊடகங்களால் கட்டமைக்கப்படுவதாக இலத்தின் அமெரிக்க நிபுணர்கள் சிலர் குற்றஞ்சாட்டியுள்ளனர். பத்திரிகையாளர் ரபேல் கூறுகையில் "ஆர்கோண்டோ, 2019 நெருக்கடியின் போது அல்லது ஜூன் 26அன்று கூட இராணுவம் ஒரு நிமிடம் கூட ஆட்சி செய்யவில்லை. பொது ஒழுங்கு பராமரிக்கப்பட்டதில் இருந்து ஒரு சதி கூட இடம்பெறவில்லை "எனவாதிடுகிறார். ஆளும் சோஷலிசத்திற்கான இயக்கத்தின் உள் மோதலின் ஒரு பகுதியாக பிளாசா முரில்லோவில் ஜூனிகா தலைமையிலான கிளர்ச்சியை பத்திரிகையாளர்கள் ரபேல் ஆர்கோண்டோ மற்றும் ப்ரோக்மேன் பார்க்கிறார்கள். ஐதரோகார்பன்கள் மற்றும் டொலர் பற்றாக்குறையால் கடுமையான பொருளாதார நெருக்கடியில் முன்னாள் ஜனாதிபதி மொரேல்ஸுக்கும் அவரது வாரிசான லூயிஸ் ஆர்ஸுக்கும் இடையில் ஏற்பட்ட பிளவின் வெளிப்பாடாக அதனைச் சுட்டுகின்றார்கள். இதில் பொலிவியாவின் ஸ்திரமின்மைசார் விம்பத்தை கட்டியெழுப்ப மேற்கு ஊடகங்கள் வலிந்து நிற்கின்றன என்ற குற்றச்சாட்டும் ஆழமாக பொதிந்துள்ளது.




# மௌனம்

உணர்வுகளின் அன்னை அது !

அதனிடம் பொறாமை
இருப்பதில்லை !
பொறுமை இருக்கும் !

சாதிக்க முயல்பவரின்
சமாதான மாத்திரைகூட
அதுதான் !

"ஒரு வகையில்
இயலா எண்ணங்களின் இம்சை "
எனவும் மாறிவிடுகிறது ..

யாது செய்வது ..
சமாதானம்,சாத்வீகம்
போன்றவைதானே

உலகைச் செப்பனிடும்
தூண்டிகள் !

போதிக்கப் பிறந்தோர்தானே
அதனையும் சாதிக்க முடியும் !

கை கோர்த்துக்கொள்ளலாமா
சமாதானத்தின் வலு
பெரியதென்று !

ஏ காலமே ..!
இனிக் கற்பித்துணர்த்து
மனிதர்க்கு,

"சமாதானம் காண்பதிலே
சக வாழ்வு
பெறு" என்று ..

காவியக் கவியரசு
எம்.எஸ்.அப்துல் ஹை

# யதார்த்தம்



ராஜாங்கம் செய்யும்
உலகில்
அராஜகம் செய்யும் மனிதர்கள்
ஏழைகளின் வரிப்பணத்தை
சூறையாடும்
ஏளனம் நிறைந்த தலைமைகள்

நாட்டில் இருப்பதற்கு இடமில்லை
நாளாந்தம் வாழ்வதற்கு
வசதியில்லை
உண்ண ஒருவேளை உணவில்லை
உயிர் வாழ
ஏழைகளுக்கு முடியவில்லை

மின்கட்டணமோ உயர்வு
நாளும் மிதித்துப் போடுது காலம்
ஆறுமாதம் அடைமழை பெய்யுது
அணைக்கட்டில் நீரும் வழியுது.
கட்டணம் குறைய வில்லை
ஏனோ கண்டிக்க எவருமில்லை
மனசுக்குள்ளேதவிக்கிறோம்நாமோ

வடகொரிய _ ரஷ்ய சந்திப்பு
விதியின் விளையாட்டோ தவிப்பு
பொதுமக்கள் உயிரே காவு
பொறுப்பில்லா
தலைமைகளின் வேவு

உலகின் போரும் ஓயவில்லை
உள்நாட்டு பிரச்சினையும்
தீரவில்லை
ரஷ்யா உக்ரைனுக்கு குண்டுமழை
இரகசியமாய் வீசுவது கொடுமை

இஸ்ரேலால் காசாவுக்கு
கண்ணீர்
இதற்கெப்போ முடிவு சொல்வீர்
உதாரணம் சொன்னேன் நானும்
யதார்த்தம் புரிந்தால் போதும்.

கம்பளையூர் .ஏ.சிவகுமார்
மினுவங்கொடை



# மழை

இலைகள் இல்லை அங்கு
கலைகலோடு வானில்
கிளைகள் பிரித்திருக்கிறது
வானவில்!

எத்தனையோ இடிகள்
ஏவப்பட்டிருந்தும்
சற்றும் கூட
கிழியவே இல்லை
வானம்!

மழை வேண்டி
மண்டியிட்டு
வேண்டுகோள் விடுதிருக்கிறது பூமி!

துளி பெருந்துளிகளாக
பெருக்கெடுத்து
பெயரெடுத்திருக்கிறது மழையாக!

சிந்தும்
சந்த விரல்களால்
மண்ணைத் தோண்டி
மகிழ்கிறதே
மழை!


அசுத்தமாக இருந்திருக்கிறது பூமி
கழுவி காயப்போட்டிருக்கிறது
மழை!

அவசரம் அதிகம்
வீட்டருகில் வந்தல்லவா
குளம் கட்டியிருக்கிறது
மழை!

பிரசவம்
வானதிற்குத்தான்
வியர்த்து
வெள்ளமாக அல்லவா
வடிந்திருக்கிறது பூமி!

கட்டவிழ்க்கப்பட்ட கட்டளைதான்
இருந்தும்
கைதுசெய்ய முடியாதிருக்கிறது
மழை!

கவிநேசன் நவாஸ்




# தனியார் மருத்துவமனைகள்

மழைக்கு முளைக்
கும் காளான்களாய்
மாநகர் முழுக்க தனியார்
மருத்துவ மனைகள்
பிழைக்க வைக்கப்
போராடும் குடும்பத்தினரின்
உழைப்பை உறிஞ்சும்
மாபியாக்கள்

முழங்காலில் வலி என்றாலும்
மூக்கில் சளி என்றாலும்
மூளை வரை சோதனைகள்
ஆளைக் குழப்பும் வேதனைகள்

ஐந்து நட்சத்திர அறை வாடகை
ஐம்புலன்களுக்கும் ஆலாத்தி
சோதனை இயந்திரங்களைப் பாதுகாக்க
சோதிக்கப்படுகிறார்கள் நோயாளிகள்

நோயாளியை பரிசோதிக்க முன்
ஆளை எடை போடுகிறார்கள்
தாளைக் கறக்கும் சீமைப் பசு என்றால்
தலை முதல் கால்வரை கரிசனை

சிசேரியன் என்ற வார்த்தையை
சிரமமான நேரங்களிலேயே
பாவித்தார்கள் இப்போ
சிரமமின்றி எடுப்பதற்காக
சர்வ சாதாரணமாக்கி விட்டார்கள்

இல்லாத பெயரெல்லாம் சொல்லி
பொல்லாத நோயென்று பயம்காட்டி
கல்லாத மாந்தரை மட்டுமல்ல
கற்றோரையும் ஏய்க்கிறார்கள்

மூக்கைச் சிந்தினாலும்
மூச்சடைக்க வைக்கும் பரிசோதனை
நாக்கை நீட்டச் சொல்லியே
சாக்கை நிரப்பிக் கொள்கிறார்கள்

களிம்பு தடவ குணமாகும் காயத்துக்கும்
கட்டிலைக் காட்டி காசு பிடுங்கினால்
விளிம்பு நிலை மாந்தரெல்லாம்
எங்கே போய் முட்டிக் கொள்வதாம்

திண்டாடும் குடும்பங்களைத்தான்
தினந்தோரும் செய்திகளில் சந்திக்கி
றோம்
புண்பட்ட நெஞ்சங்கள் கடவுள்

அருளால்
கண்பட்டு கரை சேர வேண்டும்

ஆடிக் கறப்பதா அல்லது
பாடிக் கறப்பதா என்று
நாடி பிடித்துப் பார்த்து
நாசூக்காய் காய் நகர்த்துவார்கள்

நிலை குலைய வைக்கும்
நிர்க்கதியான குடும்ப நிலவரம்
பிழைக்க வைக்க போராடும் குடும்பத்தின் மீது
மலைக்க வைக்கும் கட்டணங்கள்

தீராத நோயென்று முத்திரை குத்தி
திருவோடு ஏந்தி தெருவோடு அலைய விடுவர்
பாராமுகமாய் பரிவுக்கும் விலைபேசும்
பொல்லாத கூடாரம் தனியார்
மருத்துவ மனைகள்

உடல் நோயை குணமாக்கப் போனால்
உள நோயை பரிசளிக்கும் மருந்தகங்கள்
உணர்வுகளைக் கண்டும் காணாது நடிக்கும்
உணர்ச்சிகள் மரத்த மாபியாக்கள்

புனிதப் பணியில் பயணிப்போர்
மனிதம் பேண வேண்டாமா
வணிக நோக்கே முதலென்றால்
பிணிகள் களைவது சாத்தியமா சமூக
பிணிகள் களைவது எவ்வாறு

கம்மல்துறை இக்பால்

# ஊர்கள் மேய்ந்த வெள்ளப் பசு!

அக்கணம் எங்கள் வெம்மைக்கு
பூச்செண்டு போலிருந்தது....
பின்னரது ஒரு போர்வைக்குள்
இதமாய் தள்ளியது
பின்னந்தியின்
தூவானச் சிலிர்ப்பு
குளிர்வாசியாக்கி
இரவோடு இரவாக
முன் பந்தியில் கையேந்த
வைக்கும் கைங்கரியம்
கேள்வி கணக்கு இல்லாமலேயே
கேலிக் கணக்கானது.

அணிந்திருந்ததை தவிர
ஆடைகள், ஆவணங்கள் எங்கள்
ஆயுளுக்கும் போதுமான

சில்லறைச் சேமிப்புகள் அனைத்தும் நனைத்து
துளிதுளியாக துவட்டப்பட்டு
கை,கால் முளைக்க
கால்வாயில் கரையேறின....

குலம், கோத்திரம் கேட்டு
ஊர்ந்து ஊர்ந்து ஊருக்குள்
குதித்து பாய்ந்தது பேராறு
அக்கணமே
மழையடித்த பெருநகரம்
கிலி பிடித்த பெரும் நரகமானது
பாத்திரம் இல்லாததால்
பசி கண்களில் இறங்கி
களி நடனமாடியது.....,

பலதுளிகள் சில.. கணங்களில்

குதித்தல் கொப்பளித்தல்,
கொந்தளித்தலென
கூடுமாறி, மேடுதாவி
கால்வாய்களில் சுழித்து
நகர்கிறது நீர்ப் பாம்பு
பின்னரது வேறொரு கூட்டிற்கு
தாவுகிறது
கண்களை சமுத்திரத்துடன்
சமப்படுத்தியபடி
ஊரை மேய்ந்து விட்டு
கடலை அடையும்
வெள்ளப் பசுவாக!

ரோஷான் ஏ.ஜிப்ரி
வாங்காமம், இறக்காமம்

# நேற்றைய மழை!

செய்திடும் உதவிகள்
உயரத்தில் வைக்கும்.
புண்ணியம் சேர்க்க
விளம்பரம் எதற்கு.

அணைந்து கிடக்கும்
தெரு விளக்கு.
பத்திரமாய் வைத்திருக்கிறது
பலரின் இரகசியங்களை.

பசியோடு உறங்கும்
ஏழைச் சிறுவன்.
காணும் கனவெல்லாம்
பிரியாணி வாசம்.

அனுபவப் பாடங்களை
சேமித்துக் கொள்கிறோம்.
எத்தனை பக்கமோ
வாழ்க்கைப் புத்தகம்.

பள்ளி விடுமுறை
பாட்டிக்கு பரவசம்.
தேடி வந்திடும்
பேரக் குழந்தைகள்.

கறுப்பு வெள்ளைதான்
பழைய புகைப்படம்.
வண்ண மயமாய்
இளமை நினைவுகள்.

வெடித்துக் கிடக்கும்
நிலத்தின் கோலம்.
மனதை வாட்டும்
வறட்சியின் கோரம்

ஒவ்வொரு கிளையாய்
அசைத்து விடுகிறேன்.
என்னில் விழுகிறது
நேற்றைய மழை.

நீண்டு கிடக்கும்
வாழ்க்கைப் பாதை.
குறுக்கும் நெடுக்குமாய்
வறுமைக் கோடுகள்.

மரத்தை வெட்டினால்
அழியும் தலைமுறை.
பலமுறை சொல்லியும்
தொடரும் வன்முறை.

அய்ஷத்அப்ஸத்
பாலமுனை



# ஒரு துடுப்பு போதும்

ஒருவரது சந்தோசத்திற்காக
கொஞ்சம் சகித்துக் கொண்டால் என்ன

ஒருவரது பிரியத்திற்காக
கொஞ்சம் பணிந்து போனால்
என்ன

ஒருவரது மனத்திருப்திக்காக
ஒரு தடவை மன்னிப்புக் கேட்டு விட்டால் என்ன

ஒருவரது அமைதிக்காக
கொஞ்சம் விட்டுக் கொடுத்துவிட்டால் என்ன

ஒருவரது நன்மைக்காக
கொஞ்சம் நகைத்து விட்டால் என்ன

ஒருவரது நலனுக்காக
கொஞ்சம் நலன்விசாரித்து விட்டால் என்ன

ஒருவரது முகமலர்ச்சிக்காக
ஒரு நகைச்சுவை சொல்லிவிட்டால் என்ன

ஒருவரது அன்புக்காக
ஒரு அன்பளிப்பை வழங்கினால் என்ன

ஒருவரது ஆறுதலுக்காக
கொஞ்சம் அரவணைத்துக் கொண்டால் என்ன

ஒருவரது வெற்றிக்காக
கொஞ்சம் வாழ்த்தி விட்டால் என்ன

ஒருவரது உயர்வுக்காக
கொஞ்சம் உற்சாகப்படுத்தி விட்டால் என்ன

ஒன்றும் உனக்கு பெரிதாய் குறைந்து
விடப்போவதில்லை ஆனால் ஒன்று

மகா பெரும் சமுத்திரத்தை கடந்து விட
அந்தச் சிறு துடுப்பு மட்டும் போதும்

ஷஹாமா ஸனீர்
சீனன்கோட்டை



# எது முதலில்

தொழுதியா என்று
கேட்டால்
தொடர்ந்து
வேலை நேரமில்லை
உழ்ஹிய்யா
மாடு தேடி
ஓடுகிறேன்
என்றுரைப்பார்

உம்மாக்கு சுகமில்லை
உடனிருந்து பாரென்றால்
உம்றாக்கு மக்கா போய்
ஓதுகிறேன் துஆ என்பார்

கடன் கொஞ்சம் தாங்க என்று
கஷ்டப்படும் ஏழை கேட்டால்
உடன் ஒரு ஹதீஸ் கூறி
உகந்ததல்ல கடன் என்பார்

பள்ளிச் சுவர்களுக்கு
பத்துத் தரம் பெய்ண்ட் அடிப்பார்
உள் வீட்டில் ராத்தா பிள்ளை
உண்ண இன்றி பசியில் இருக்கும்

காரின் டேஷ் போட்டில்
கலிமா ஸ்டிக்கர் ஒட்டிருக்கு
RC புக் வட்டிக்கு
அடைமானம் வெச்சிருக்கு.

மாஷா அல்லாஹ் போட்டிருக்கு
மக்கா கிரா அத் போட்டிருக்கு
வீச வேண்டிய பழைக் கறியை
வெட்டி கொத்துக்குள் போட்டிருக்கு.
ஹலால் லொகோ இருக்காண்ணு
கட்டாயம் பார்த்தெடுப்பார்
நிலம் சொத்து பிடிப்பதென்றால்
முழம் கணக்கில் அபகரிப்பார்.

வாப்பா வா விளையாட
வாஞ்சையோடு
பிள்ளை கேட்டால்
கூப்பாடு போடாதே
கொமண்ட்ஸ் எழுதும்
போது என்பார்
இப்படி
அரைகுறையாய்
எக்குத்
தப்பாய் புரிந்து கொண்டு
எப்படி ஓடி ஆடினாலும்
இல்லை எந்த நன்மைகளும்

எது முதலில் செய்ய வேண்டும்
எதை அடுத்து செய்ய வேண்டும்
அது விளங்கா வாழ்க்கையாலே
ஆன பலன் ஒன்றுமில்லை.

கலாநிதி சித்தி பரீதா
புத்தளம் வீதி, சிலாபம்



# என்னருகே நீயிருந்தால்

என்னருகே நீயிருந்தால்
எதிர்காலம் வளமாகும்
என்னவளே உன்னாலே
என்னிதயம் நலமாகும்

கவிதை எழுதியே
கதைகளும்
புனைந்திடுவேன்
தையலே உன்னில்
காதலில் இணைந்திடுவேன்

தென்றலாய் மாறியே
தாலாட்டும் பாடிடுவேன்
மன்றம் கொண்டே
உன்னை நாடிடுவேன்

நிலவாய்க் காய்ந்தே
உன்னில் குளிர்ந்திடுவேன்
மலராய் மலர்ந்தே
வாசத்தில் மிளிர்ந்திடுவேன்

இன்பமே வாழ்வென
களிப்பில் திளைத்திடுவேன்
துன்பமே வேண்டாமென
துரத்தியே நிலைத்திடுவேன்

உன்னை எந்தன்
உயிரில் தைத்திடுவேன்
கண்ணே அணைத்திடு
கண்ணுக்குள்
வைத்திடுவேன்..!

ஏரூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்

பொருளாதாரத்தை மீட்க

# இலங்கை அரசு மேற்கொண்ட பாராட்டுக்குரிய முயற்சிகள்

## சர்வதேச நாணய நிதியம், நட்பு நாடுகளிலிருந்தும் வாழ்த்துகள்




கடந்த 26ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் வெற்றியடைந்துள்ள நிலையில், இலங்கையின் பிரதான உத்தியோக பூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் இறுதி இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளமை நாட்டை நேசிக்கும் அனைவருக்கும் ஒரு நல்ல செய்தியாகும் எனத் தெரிவித்தார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் (IMF) கடந்த 27ஆம் திகதி விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு, "சுமார் 10 பில்லியன் டொலர் இருதரப்புக் கடனை மறுசீரமைக்க சீனா மற்றும் ஏனைய கடன் வழங்கும் நாடுகளுடன் இலங்கை செய்துகொண்ட ஒப்பந்தங்கள் மூலம் கடன் நிலைத்தன்மையை வழமைக்கு கொண்டுவருவதற்காக ஒரு படி முன்னேறியுள்ளது எனத் தெரிவித்துள்ளார். இலங்கையில் நிலவும் கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சீனா மற்றும் ஏனைய கடன் வழங்கும் நாடுகளுடன் இரு தரப்பு கடன் மறுசீரமைப்பு ஒப்பந்

### இலங்கையின் பொருளாதார மீட்சியில் சாதகமான முன்னேற்றம்

*அமெரிக்கா தூதுவர் ஜூலி சங்*



தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

அந்நிய செலாவணி கையிருப்பு வரலாறு காணாதளவு வீழ்ச்சியடைந்து வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போனதன் பின்னர் 2022 செப்டம்பரில் ஆரம்பிக்கப்பட்ட மறுசீரமைப்பு செயல்முறையின் முடிவை அடைவதற்கு இது உதவியாக அமைந்தது. இதன்போது முதற்தடவையாக பாரிஸில் வசிக்கும் இலங்கை அதிகாரிகள் ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இணைந்து 5.8 பில்லியன் டொலர்களை கடனாக வழங்கிய உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களின் குழுவுடன் (OCC) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

மறுசீரமைப்பின் ஒப்பீட்டை உறுதிப்படுத்துவதற்காக அவர்களுடன் பகிர்ந்து கொள்ள 4.2 பில்லியன் டொலர்களை மறுசீரமைப்பு செய்வதற்காக, சீனாவின் எக்சிம் வங்கியுடன் கையொப்பமிடப்பட்ட தனியான ஒப்பந்தம் தொடர்பில் விபரங்களுக்கான குழு காத்திருக்கிறது என OCC அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

"எதிர்காலத்தில் வெளிநாட்டு தனியார் கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தங்களை எட்டுவதில் விரைவான முன்னேற்றத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம்," என்று IMF இன் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

2022 ஏப்ரல் மாதத்தில் இலங்கை கடன்களைச் செலுத்த முடியாது என உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அந்த அறிக்கையால் உலக நாடுகள் எங்களுடன் வர்த்தகம் செய்வதை நிறுத்திவிட்டன. கடன்களைச் செலுத்த முடியாத அளவுக்கு வங்குரோத்தடைந்த ஒரு நாட்டுடன் நிதி உறவை ஏற்படுத்த எந்த நாடும் முன்வராது. கடன்களையும் வழங்காது. குறைந்தபட்சம் கடன் பத்திரங்கள் கூட ஏற்கப்படவில்லை.

இந்தப் பின்னணியில் வெளிநாட்டுக் கடன் உதவியில் எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. அந்த நாடுகள் தங்கள் திட்ட அலுவலகங்களை மூடிவிட்டு அந்தந்த நாடுகளுக்குத் திரும்பிச் சென்றன. அபிவிருத்திப் பணிகள் முற்றிலும் முடங்கிப் போயின. எனினும் இப்போது கடன் மறுசீரமைப்புப் பணியில் மிக முக்கியமான கட்டத்தை நாம் வெற்றி பெற்றுள்ளதால், வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி செய்யப்பட்ட அனைத்து திட்டங்களையும் மீள ஆரம்பிப்பதற்கான சட்டப்பூர்வ சந்தர்ப்பம் ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்பட்டுள்ளது. கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தி, இலகு ரயில் பாதைகள், அதிவேக நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். அது மட்டுமன்றி பல புதிய அபிவிருத்தித் திட்டங்களையும் எம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

### கடன் பெறுவதற்கான வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளது.

*IMF இன் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர்*



இருதரப்பு கடன் வழங்குநர்கள் எங்களுடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்திருப்பதால் எமது நாட்டின் மீதான சர்வதேச நம்பிக்கை அதிகளவில் உறுதிப்படுத்தப்படுகிறது. இதுவொரு வகையான சர்வதேச சான்றிதழாகும். எமது கடன் பத்திரங்களைக் கூட ஏற்றுக்கொள்ளாதிருந்த சர்வதேசம் இப்போது எமக்கு நம்பிக்கைச் சான்றிதழை வழங்கும் நிலைக்கு வந்துள்ளது.

இன்று நாம் ஏற்படுத்திக் கொண்ட இந்த இரண்டு ஒப்பந்தங்களையும் நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். ஜூலை 2ஆம் திகதி நடைபெறும் சிறப்பு பாராளுமன்றக் கூட்டத்தில் எமது பிரதமர் அந்த ஒப்பந்தங்களை பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிப்பார். இந்த ஒப்பந்தங்களை அங்கீகரிக்குமாறு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாட்டை நேசிக்கும் அனைத்து குழுக்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்" என ஜனாதிபதி கூறினார்.

கடன் மறுசீரமைப்புச் செய்தல்,

### இலங்கை பொருளாதார ரீதியில் முன்னேறிச் செல்வதற்கு கிடைத்த சிறந்த சந்தர்ப்பம் ஆகும்.

*ஜப்பான் பதில் தூதுவர் கட்சுகி கொட்பாரோ*



2022இல் பொருளாதார நெருக்கடியின் உச்சத்தில் இருந்த போது 9.2 வீதத்திலிருந்து 2027–2032க்கு இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 வீதம் வரை

வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்தலை பாதிக்கும் குறைவாகக் குறைப்பது வங்குரோத்து நிலையிலிருந்த மீண்டு கொண்டிருந்த எமது நாட்டிற்கு பெரிய நிவாரணமாகும்.

பொருளாதார ஆய்வாளர்களின் கூற்றுப்படி, நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் IMF நிர்ணயித்த நிதி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சில கட்டுப்பாடுகளை விதிப்பதற்குத் தேவையான சட்டங்களை உருவாக்குதல், சொத்து வரி விதித்தல் மற்றும் நஷ்டத்தில் இயங்கும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு அரசு வங்கிகள் கடன் வழங்குவதை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட சீர்திருத்த பாதையில் நாம் தொடர்ந்து பயணிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தின் நடுப்பகுதிக்கு முன்னர் நடைபெறவுள்ள தேர்தல்கள் காரணமாக ஆட்சி மாற்றம் ஏற்படும் பட்சத்தில், இந்த இருதரப்பு இணக்கப்பாடுகளை மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டியேற்படுவதும் நிச்சயமாகும்.

எவ்வாறாயினும், புதிய நிலையின் கீழ், "இலங்கைக்கு இருதரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து, முக்கியமாக இடைநிறுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதி திட்டங்களுக்கு வழங்கப்படாதிருந்த கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது புதிய கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு இப்போது வாய்ப்பு கிடைத்துள்ளது" என பொண்டியர் ரிசேர்ஜ் ஆராய்ச்சி நிறுவன தலைவர் திலிண பண்டுவாவல குறிப்பிட்டுள்ளார்.

"எனினும் அவர்கள் இவற்றை நடைமுறைப்படுத்தும் போது அது அடுத்த வருடமாகக்கூட இருக்கலாம், காரணம் தேர்தலும் இந்தச் செயற்பாட்டைத் தாமதப்படுத்தும் என்பதனாலாகும்"

### இது இலங்கைக்கு முக்கியமான சலுகைக் கடன் ஒப்பந்தம் ஆகும்.

*இலங்கைக்கான சீனாவின் தூதுவர் எச். இ. சீ. ஷென்ஹொங்*



இவ்வாறு, இருதரப்பு கடன் வழங்குநர்களின் உத்தியோகபூர்வ குழுவுடன் 5.8 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் மறுசீரமைப்பிற்கான இறுதி இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளமை மற்றும் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வது தொடர்பில் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் உடன்பாட்டை எட்டியதற்கு இலங்கையினால் முடிந்திருப்பதையிட்டு பல வெளிநாட்டுத் தூதுவர்கள் இலங்கைக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் சலுகைக் கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் எச். ஈ. சீ. ஷென்ஹோங்க், இது இலங்கைக்கு முக்கியமான சலுகைக் கடன் ஒப்பந்தம் என்றும், இது இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் என்றும் தனது டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள குறிப்பில் தெரிவித்துள்ளார்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

எம். எஸ். முஸப்பிர்




# ஹிருணிகா சிறை சென்றதன் பின்னணி?

"அதிகாரத்தில் இருக்கும் போது சட்ட விரோதமாக நடந்துகொண்டமை தொடர்பில் சட்டம் எவ்வாறு செயல்படும் என்பது குறித்து பொது மக்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பாக இது அமைந்துள்ளது. தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரை கடத்திச் செல்வதற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா எரஞ்சலி பிரேமச்சந்திர உடந்தையாக இருந்தார் என்பது இந்த வழக்கில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களின் மூலம் உறுதியாகியுள்ளது.

இதன் விளைவாக, சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட அனைத்து 18 குற்றச்சாட்டுகளிலும் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளியாக அறிவிக்கிறேன்" கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா இந்தத் தீர்ப்பை வழங்கியது, தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கறுப்பு டிஃபென்டர் வண்டியில் கடத்திச் சென்று அநியாயமாக அடைத்து வைத்திருந்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மீதான வழக்குத் தீர்ப்பை கடந்த 28ஆம் திகதி காலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அறிவித்த போதாகும்.

தெமட்டகொட ஆடைகள் விற்பனை நிலையத்தில் பணியாற்றிய அமில பிரியங்கர அமரசிங்கவை 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி அல்லது அதற்கு அண்மைய தினங்களில் கடத்திச் சென்று கைகளால் தாக்கி, காயப்படுத்தியமை, அதற்கு உடந்தையாக இருந்தமை உள்ளிட்ட 24 குற்றச்சாட்டுக்களில் 18 குற்றச்சாட்டுகளும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த பதினெட்டு குற்றச்சாட்டுக்களிலும் பிரதிவாதியை குற்றவாளி என அறிவித்த மேல்நீதிமன்ற நீதிபதி, 03 வருடங்களில் அனுபவிக்கும் வகையில் கடூழியத்துடன் கூடிய 32 வருட சிறைத்தண்டனையை விதித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான 18 குற்றச்சாட்டுகளுக்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் 360,000 ரூபாய் அபராதம் விதித்த உயர்நீதிமன்ற நீதிபதி, அபராதத்தொகையைச் செலுத்தாவிட்டால் ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் 06 மாத இலகு சிறைத் தண்டனையும் விதித்தார்.

இந்த வழக்கு தொடர்பாக 31 பக்கங்கள் கொண்ட நீண்ட தீர்ப்பை வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக முறைப்பாட்டுத் தரப்பினர் வலுவான ஆதாரங்களை முன்வைத்துள்ளனர் என்றும், நீதிமன்றம் தனிநபர்களின் தராதரங்களை அன்றி, அளிக்கும் சாட்சியங்களின் அடிப்படையில் மட்டுமே தீர்ப்பளிக்கும் என்றும், மேல் நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

ஹிருணிகாவின் தாயார் சுமனா பிரேமச்சந்திர மற்றும் அவரது கணவர் ஹிரான் யடோவிட்ட ஆகியோரும் தீர்ப்பை கேட்பதற்காக நீதிமன்ற மண்டபத்தில் பிரசன்னமாகியிருந்ததுடன், தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின்னர் அவர்கள் அதிர்ச்சியடைந்து மண்டபத்தை விட்டு வெளியேறியதைக் காணக்கூடியதாக இருந்தது. ஹிருணிகா பிரேமச்சந்திர நீண்ட நேரம் குனிந்தவாறு நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததோடு, பின்னர் அவரும் அழ ஆரம்பித்தார்.

வழக்கின் தீர்ப்பை நீதிமன்றத்தில் அறிவிக்கும் போது, ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்காக அதுவரைக்கும் வழக்கில் ஆ ஜ ராகியிருந்த சட்டத்தரணி அஷான் பெர்னாண்டோ நீதிமன்றத்தில் ஆஜராகாததுடன், அவர் சுகவீனமுற்றிருந்தமையும் தெரியவந்தது.

வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பி ரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பில் இதற்கு முன்னர் நீதிமன்றி ல் குற்றத்தை ஒப்புக்கொண்ட கு ற்றம் சாட்டப்பட்டவரின் ஆதரவாளர்கள் 8 பேருக்கு இடைநிறுத் த ப்பட்ட சிறைத்தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மத்தேகொட நீதிமன்றத்தில் வாதிடும் போது, தனது கட்சிக்காரருக்கு 03, 04 மற்றும் 05 வயதுடைய மூன்று பிள்ளைகள் இருப்பதாகவும், அவர் சிறையில் அடைக்கப்பட்டால், அந்த மூன்று குழந்தைகள் கஷ்டப்படுவார்கள் எனவும் தெரிவித்தார். எனவே, குற்றவாளிகளுக்கு இலகு சிறைத்தண்டனையை வழங்குமாறு நீதிமன்றத்தை கோருவதாக ஜனாதிபதியின் சட்டத்தரணி நீதிமன்றில் விடயங்களை முன்வைத்தார்.

"கனம் நீதிபதி அவர்களே!, குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு சமூக ஆர்வலர். சமூகத்தில் அநீதி ஏற்படும் போது இவர் அதற்கெதிராக முன் வருபவர். குற்றம் சுமத்தப்பட்டவருக்கு மூன்று சிறிய குழந்தைகள் உள்ளனர். இவர் சிறையில் அடைக்கப்பட்டால், அந்தக் குழந்தைகள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். இந்த தண்டனைக்கு எதிராக தனது கட்சிக்காரரும் மேன்முறையீடு செய்ய உள்ளதாக சட்டத்தரணி நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தார்.

இதன்போது மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்பை அறிவித்ததோடு, குற்றம் சுமத்தப்பட்டவர் இளைஞன் ஒருவரை கடத்திச் செல்வதற்கு சதி செய்தமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்த குற்றங்களுக்காக அவரைக் குற்றவாளி ஆக்குவதாகத் தெரிவித்தார்.

அரசு தரப்பு விசாரணையின்போது, ஹிருணிகாவின் சாட்சியத்தின் உண்மைத்தன்மை குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் கேள்வி எழுப்பினார். இச்சம்பவம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கூறுவது போல் அப்பாவித்தனமான செயல் அல்ல என்று சுட்டிக்காட்டிய முறைப்பாட்டுத் தரப்பின் சட்டத்தரணி, அவர் அந்நேரம் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்ததால், சட்டத்தை கையில் எடுத்துள்ளார் என்பதையே இந்தச் சம்பவம் காட்டுகிறது என்றார்.

"அரசியல்வாதிகளுக்கு சட்டம் என்பது சில்லறை விடயம். நீதிமன்றத்திற்கும், பொலிஸாருக்கும் தனித்தனி பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அரசியல்வாதிகள் நீதியைக் கையில் எடுத்தால் எவ்வாறான நிலை ஏற்படும் என அரசாங்கத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார அன்றைய தினம் தெரிவித்திருந்தார்.

ஒருவரைக் கடத்திச் சென்றுஅநியாயமாகத் தடுத்து வைத்திருந்ததாகச் சொல்லப்படுவது தொடர்பில் 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் உறவுமுறையான ஒருவர் உள்ளிட்ட 6 தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் முதன்முதலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தெமட்டகொட பிரதேசத்தில் அமைந்துள்ள தனது கடையில் பணிபுரிந்த அமில பிரியங்க அமரசிங்க என்பவர் கடந்த 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி பிற்பகல் 2.30 அளவில் வெள்ளை நிற அரைக்கை டீ சேர்ட் மற்றும் கறுப்பு நிற கால் சட்டை அணிந்த 6 நபர்களால் தாக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்டதாக இல. 654, பேஸ்லைன் வீதி, தெமட்டகொட என்ற முகவரியில் வசிக்கும் கலீல் மொஹமட் ஃபிரிநாத் என்பவர் செய்த முறைப்பாட்டிற்கமைய, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று 10 வயது சிறுமியுடன் வந்த ஆறு பேர் அமில என்பவர் அணிந்திருந்த சட்டையை இழுத்து தாக்கிவிட்டு அவரைத் தூக்கிக் கொண்டு பேஸ்லைன் திசையை நோக்கிச் சென்று தெமட்டகொடை மேம்பாலத்திற்கருகில் நிறுத்தப்பட்டிருந்த 621859 என்ற கறுப்பு நிற டிபெண்டர் வண்டியில் போட்டுக் கொண்டு தெமட்டகொடை நோக்கி தப்பிச் சென்றதாக முறைப்பாட்டாளர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். தனது பணியாளரைக் கடத்திச் செல்வதற்காக வந்தவர்களிடம் "யார் நீங்கள்?" என்று கேட்டபோது, "நாங்கள் எஸ். டி. எஃப் ." என அதற்கு அவர்கள் பதில் அளித்ததாகவும், அப்போது அவர்களிடம் தான் பொலிஸ் அடையாள அட்டையைக் கேட்டதாகவும், ஆனால் அவர்கள் அதனைத் தராமல் அமிலவை கடத்திச் சென்றதாகவும் முறைப்பாட்டாளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.



இதனடிப்படையில், இச்சம்பவம் தொடர்பில் இலக்கம் 126, சி 1, ராமஹர வீதி, ஹேவாகம, கடுவெல என்ற முகவரியில் வசிக்கும் பெலவத்த விதானகே கெலும் நிரஞ்ச, இலக்கம் 43, பெரகும்பா மாவத்தை, கொலன்னாவை என்ற முகவரியைச் சேர்ந்த மலிந்த ஜயதிலக்க, இலக்கம் 87/1, கம்மான வீதி, பாதுக்கை என்ற முகவரியைச் சேர்ந்த ரூபசிங்க ஆராச்சிகே கசுன் சம்பத், இல. 97/25/2, சமகி மாவத்தை, மாகம்மன, ஹோமாகமவை வசிப்பிடமாகக் கொண்ட இந்திக ருவன் புஷ்பகுமார டி சொய்சா, இல. 47, ஜய மாவத்தை கித்தம்பஹுவ, வெல்லம்பிட்டி என்ற முகவரியில் வசிக்கும் மைக்கல் அன்டனி ஜோன்சன், இல.424/4. சியம்பலாம்பே வடக்கு என்ற முகவரியில் வசிக்கும் பசிந்து சஞ்சீவ அபேசிறிவர்தன, பொரளையைச் சேர்ந்த நியாஸ் மொஹமட் றிஸ்வான் மற்றும் ஜெகநாதன் எண்டனி ஆகிய 8 சந்தேகநபர்கள் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சுமார் ஒன்பது வருடங்களாக கொழும்பு மேல் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், கடந்த 28ஆம் திகதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டது. அதனடிப்படையில் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணியளவில் ஹிருணிகா பிரேமச்சந்திரவை ஏற்றிய சிறைச்சாலை வேன் வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவை நோக்கி விரைந்தது.

நிமந்தி ரணசிங்க
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# சமூக ஊடகங்களின் நிலைப்பாடு நாளை மறுதினம் மாறும்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். ஒரு வாரத்திற்கு முன்பே அவர் நாட்டு மக்களுக்கு உரையாற்ற தயாராக இருந்தார்.

பாரிஸ் கிளப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜப்பான் உட்பட பல நாடுகள் போன்று, சீனாவும் இந்தியாவும் இருதரப்பு கடனை மறுசீரமைப்பதில் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தின. இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் அமைச்சரவைக்கு அறிவித்திருந்தார்.

அதற்கிணங்க, கடன் மறுசீரமைப்புச் செய்தியை ஜனாதிபதி எவ்வாறு நாட்டுக்கு பெற்று கொடுக்க வேண்டும் எனத் திட்டமிடத் தொடங்கினர். அமைச்சரவையின் கீழ் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய ஊடக உபகுழுவிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டது. பாரிஸ் கிளப் மற்றும் சீன கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதன் பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்ற ஜனாதிபதி ரணில் தீர்மானித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு பிரசாரத்தை ஆரம்பிக்க ஊடக உபகுழு திட்டமிட்டது. ஊடக நடவடிக்கை குறித்து அவர்கள் கலந்துரையாடிக்கொண்டிருந்த வேளையில், கடந்த வார இறுதியில் ஜனாதிபதி ரணில் மட்டக்களப்புக்கு சென்றார்.

முதலில் மட்டக்களப்பு சியோன் தேவாலயத்திற்குச் சென்ற ரணில், அதன் புனரமைப்புப் பணிகள் குறித்து கேட்டறிந்தார். ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குப் பிறகு, அதன் புனரமைப்புப் பணிகளுக்கு பணம் ஒதுக்கப்பட்டது, ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் தேவாலயத்தின் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை ஜனாதிபதி அவதானித்தார்.

சியோன் தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகளை ஜனாதிபதி அலுவலகப் பணத்தில் இருந்து இராணுவத்தினரின் பங்களிப்புடன் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி செயலக பிரதானி சாகல ரத்நாயக்கவுக்கு ஆலோசனை வழங்கினார்.

உறுமய காணி உறுதிப்பத்திரங்களை வழங்கிவைத்த பின்னர் ஜனாதிபதி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் இல்லத்திற்கு சென்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் தேர்தலில் போட்டியிட்ட வியாழேந்திரன் தற்போது தனிக்கட்சி ஒன்றை ஆரம்பித்திருப்பதால், அதன் உறுப்பினர்களும் வீட்டிற்கு வந்தனர். தேநீர் விருந்தின் பின்னர் இடம்பெற்ற சிநேகபூர்வ உரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் திறமையான டியூஷன் ஆசிரியர் என்பது தெரியவந்துள்ளது.

அதன் பின்னர் அவர் பிள்ளையான் எனப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அலுவலகத்திற்குச் சென்றார். அச்சந்தர்ப்பத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கவும் அவர் முடிவு செய்தார். மறுநாள் ஜனாதிபதி காத்தான்குடி முஸ்லிம் பள்ளிவாயிலுக்கு செல்லும் போது வீதியின் இருமருங்கிலும் திரண்டிருந்த மக்கள் முன்னிலையில் வாகனத்தை நிறுத்திவிட்டு வாகனத்தை விட்டு இறங்கி அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபடவும் மறக்கவில்லை.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவும் கலந்துகொண்டுள்ளார். கொழும்பு வருவதற்காக ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு விமான நிலையத்தை சென்றடைந்த ஜனாதிபதி, மற்றுமொரு முக்கிய பிரமுகர் ஒருவரை சந்தித்துள்ளார்.

அவர் அரசை தொடர்ந்து விமர்சித்து வரும் சாணக்கியன் ராசமாணிக்கம் தான். இருவரும் பிரதேச பிரச்சினைகள் மற்றும் அரசியல் பற்றி பேசி, சாதகமான நிலைப்பாட்டில் இருந்தனர்.

திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் வாரப் பணிகளை ஆரம்பிக்க அலுவலகத்திற்குச் சென்றார். அன்று வெளியாகியிருந்த சுவரொட்டி பற்றி அங்கிருந்த பலரிடமிருந்து தெரிந்து கொண்டார். 'ஆரஞ்சியா சுபய்' (ஓர் நற்செய்தி) என சுவரொட்டி வெளியாகியிருக்கிறது. இவ்வாறு ஜனாதிபதியை சந்தித்தவர்கள் தெரிவித்தனர்.

“ஆமாம் மனுஷவின் வேலைதான். அவரது ஆட்கள்தான் சுவரொட்டியை உருவாக்கினர். இதுபற்றி எனக்கும் கூறப்பட்டது” என்றார். அதுதான் ஜனாதிபதியின் பதில்.

இதனை அமைச்சர் மனுஷ ஊடக குழுவிடம் முன்னோடிப் பிரச்சாரத்திற்கான சுவரொட்டியாக வழங்கினார். இது அனைவருக்கும் பிடித்திருந்ததால், முதலில் நாடு முழுவதும் ஒட்ட முடிவு செய்யப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு, ஒரு சுவரொட்டிக்கு கிடைத்த சிறந்த விளம்பரம் என்னவென்றால், எதிர்க்கட்சி குழுக்கள் சமூக ஊடகங்களில் தங்கள் திருத்தங்களுடன் அதனைப் பரப்பியதாகும்.

ஜனாதிபதி ரணில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை குறித்து எதிர்க்கட்சிகளும் கலவரமடைந்தன. ஜனாதிபதியின் உரை குறித்தும் சுவரொட்டி குறித்தும் பல்வேறு கருத்துக்களை ஊடகங்கள் முன் தெரிவிக்க ஆரம்பித்தனர்.

“நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீளும் என்ற செய்தியை தேசத்திற்கு நீங்கள் வழங்கப் போவதாக ஹர்ஷ உள்ளிட்ட ஐ.ம. சக்தியினர் கூறுகிறார்கள். அதனைக் கடன் தரப்படுத்தும் குழுக்களே கூறமுடியும் என அவர்கள் கூறுகின்றனர்” என அக்குரஸ்ஸ அமைப்பாளர் தினுக் கொழும்பகே ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

"நான் இன்னும் பேசவில்லை. இப்படிப் பேசுவேன் என்று கூடச் சொல்லவில்லை. நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதை அவர்கள் விரும்பவில்லையா? என அதற்கு ஜனாதிபதி வித்தியாசமான பதிலை அளித்தார்.

பாரிஸ் கிளப் மற்றும் சீனாவின் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் தொடர்பான தகவல்களை ஜனாதிபதி ரணில் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார். நாட்டு மக்களுக்கு உரையாற்றுவது குறித்த தகவல்களும் அங்கு தெரியவந்தன.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதி ரணில் தனது நண்பர்களுடன் 26ஆம் திகதி ஆற்றவுள்ள உரை குறித்து கலந்துரையாடியதுடன், அறிவிப்பை வெளியிட சரியான நேரம் எது என குழுவிடம் கேட்டறிந்தார்.

“பாரிஸ் ஒப்பந்தம் இலங்கை நேரப்படி பிற்பகல் இரண்டு மணிக்கு கைச்சாத்திடப்படும்.

அங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்த்து, இற்றைப்படுத்தலைப் பெற்று, இந்த உரையை இரவு 8:00 மணிக்கு அனைத்து ஊடகங்களுக்கும் நேரடியாக அனுப்பினால் நல்லது." செய்திப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன தனது கருத்தை முன்வைத்தார்.

அதனை அங்கீகரித்த ஜனாதிபதி ரணில், 26ஆம் திகதி இரவு 8.00 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளதாகவும், அதனைத் தெரிவித்து ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு கடிதம் அனுப்புமாறு தினித் சிந்தக்கவை அறிவுறுத்தினார். இதன்படி எதிர்வரும் 26ஆம் திகதி இரவு 8 மணிக்கு ஜனாதிபதிக்கான நேரத்தை ஒதுக்குமாறு அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்களிடமும் கோரிக்கை விடுத்திருந்தார்.

சட்டமா அதிபரின் பதவிக் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பதற்கான ஜனாதிபதி ரணிலின் பரிந்துரை செவ்வாய்க்கிழமை மீண்டும் அரசியலமைப்புப் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அத்துடன், எதிர்வரும் ஜூலை மாதம் 02ஆம் திகதி பாராளுமன்றத்தின் விசேட அமர்வுக்கு அழைப்பதாக பிரதமருக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிற்கு பணிப்புரை விடுத்தார்.

பாரிஸ் கிளப்புடன் கைச்சாத்திடப்பட்ட கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் மற்றும் சீன கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் ஆகியவை அன்றைய தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அதிகாலையில் தனது கடமைகளை முடித்துக்கொண்ட ஜனாதிபதி ரணில், உறுமய காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அம்பாறைக்கு சென்றுள்ளார். ஜனாதிபதி நாட்டுக்கு நற்செய்தி வழங்கியதைக் கொண்டாட கட்சி உறுப்பினர்கள் சந்தர்ப்பம் கேட்டதாக பொதுச் செயலாளர் ரங்கே பண்டார ஜனாதிபதியிடம் தெரிவித்தார். அதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறிய ஜனாதிபதி, நற்செய்திக்கான பொதுமக்களின் பதிலைத் தடுக்க முடியாது என்று கூறினார்.

பாரிஸ் கிளப்புக்கும் சீன அணிக்கும் இடையிலான சந்திப்பு புதன்கிழமை பிற்பகல் திட்டமிடப்பட்டது. இதற்கிடையில், ஜனாதிபதி மாலையில் நாட்டு மக்களுக்கு உரையாற்றவும் தயாராக இருந்தார். கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில் முன்னணியில் இருந்த ஜனாதிபதி செயலக பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரை அழைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்ற ஜனாதிபதி ரணில் தயாரானார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, பிரான்சின் அனைத்து தகவல்களையும் ஜனாதிபதிக்கு அறிவித்தார். சீனத் தூதரகம் மூலம் சீனத் தகவல்கள் கிடைத்தன. அந்தத் தகவல்களைத் திரட்டி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில், நாட்டுக்கு நற்செய்தியை வெளிப்படுத்தினார்.

கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையின் நற்செய்தியுடன் ஜனாதிபதி ரணில் வியாழக்கிழமை காலை மல்வத்து அஸ்கிரி மகாநாயக்கர்களை சந்திக்கச் சென்றார். நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் பல சமூக பிரச்சினைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. தலதா மாளிகையில் வழிபாடு செய்த பின்னர் ஜனாதிபதி ரணில் தலதா மாளிகைக்கு வருகை தந்த யாத்திரிகர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர் பலாங்கொடைக்கு வந்து அமரபுர நிக்காயவை சேர்ந்த மகாநாயக்க தேரரை சந்தித்து நாட்டின் பொருளாதார நிலைமையை விளக்கினார். மாலையில் கோட்டே பிரிவின் மகாநாயக்கரையும் நேரில் சென்று சந்தித்து விடயத்தை விளக்கமளிக்க ஜனாதிபதி மறக்கவில்லை.

வெள்ளிக்கிழமை காலை சுற்றாடல் ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்விலும், மாலையில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எழுதிய நூல் வெளியீட்டு நிகழ்விலும் கலந்துகொண்டார்.

அதன் பின்னர், கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திலும் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

சர்வதேசக் கடன் மறுசீரமைப்பைப் பயன்படுத்தி அரசாங்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலக்கு வைத்து பிரசார வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தார், நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளது என்ற கருத்தை மக்கள் மயப்படுத்தும் வகையில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தே அவர் அவ்வாறு கூறினார். இதற்காக அரசாங்கம் பாரிய செலவைச் செய்து ஆலோசனைச் சேவையைக் கூடப் பெற்றுக் கொள்வதாக அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டிருந்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இது தொடர்பில் அவதானம் செலுத்தியதுடன், அரசாங்கத்தின் செயற்பாடுகளை நாட்டுக்கு விரைவில் வெளிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி ரணில் விக்கிரமசிங்க இதற்கு முன்னர் வங்குரோத்து நிலையிலிருந்து நாடு மீண்டுவிட்டது எனத் தெரிவித்த அறிக்கை மற்றும் அண்மையில் மீண்டும் அதனையே கூறிய முறையினை தெளிவுபடுத்தி மீண்டும் ஒரு முறை அவ்வாறான பயனுள்ள கதைக்கு ஆயத்தமாகின்றார் என்றே கூறவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

"சில வாரங்களுக்கு முன்பும், இது தொடர்பில் நாம் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் இதை வெளிப்படுத்தினோம். எனினும் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

எனவே இந்த கதையை மீண்டும் ஒருமுறை முன்னிலைப்படுத்துவது நல்லது" என்றார் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி.

அதற்கமைய எஸ். எம். மரிக்கார் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து, “இதற்கு முன்னர் வங்குரோத்து நிலையிலிருந்து நாடு மீண்டு விட்டது என ஜனாதிபதி தெரிவித்த கருத்திற்குப் பின்னர் இடம்பெற்றது வரிச் சுமை அதிகரித்ததாகும். ETF, EPF உறுப்பினர்களின் வட்டி வீதங்களும் குறைவடைந்துள்ளன” எனத் தெரிவித்தார்.

இதனிடையே, சுவரொட்டி பிரசாரத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க அரசாங்கம் ஆயத்தமாவதாகவும், “நல்ல செய்தி” (சுப ஆராஞ்சியக்) என முதல் சுவரொட்டி வெளியிடப்பட்டுள்ளது என்றும், ஆளும் கட்சியின் பலமான நிலையில் உள்ள ஒருவர், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் தொலைபேசியில் தெரிவித்துள்ளார்.

“நாம் இதை உடனடியாக நாட்டுக்கு சொல்ல வேண்டும். நல்ல செய்தி என்று கூறி, நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டது போன்ற மாயையை பரப்பவே தயாராகிறார்கள்” என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான் கூறினார்.

“நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமானால், நாட்டுக்குச் சாதகமான வகையில் இருதரப்பு, பலதரப்பு மற்றும் சர்வதேச இறையாண்மைப் பத்திரக் கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும். சர்வதேச தர நிர்ணய முகவர் நிலையங்கள் இலங்கையின் தரவரிசையை உயர்த்த வேண்டும். அப்படி இல்லாமல் நாம் வெளியிடும் அறிக்கைகளால் அது நடக்காது” என இதன்போது கருத்து தெரிவித்தார் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம்

“ஜனாதிபதியின் அறிக்கையின் பின்னர், பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம், பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன ஆகியோர் கட்சியின் பொருளாதார குழு நடத்தும் ஊடகவியலாளர் சந்திப்பை புதன்கிழமை அன்றி வியாழக்கிழமை நடத்தி அது குறித்து விளக்கமளிப்பது பொருத்தமானது” என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான் தெரிவித்தார்.

அதனடிப்படையில் வியாழக்கிழமை ஜனாதிபதியின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாசிம், ஹர்ஷ டி சில்வா ஆகியோர் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடாத்துவதற்குத் தீர்மானித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன வெளிநாடு சென்றிருப்பதால் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தேவை என ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பத்திலிருந்தே சுட்டிக்காட்டி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார். கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் இதுவரை எவ்வித விளக்கமும் வெளியிடப்படவில்லை. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் போது இலக்காகக் கொண்டது, ETF/EPF அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதிய உரிமைகள். இவை வெற்றிகளா? நாம் இவற்றிற்கு எதிரானவர்கள்.

சர்வதேச கடன் பத்திரம் வைத்திருப்பவர்களால் முன்மொழியப்பட்ட யோசனைகளும் நாட்டிற்கு உகந்ததல்ல.

நாட்டின் பொருளாதாரம் கத்தி முனையில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது. நாட்டில் 70 லட்சம் வறிய மக்கள் உள்ளனர். இது தொடர்பில் ஜனாதிபதி தனது உரையில் எதனையும் குறிப்பிடவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் ராஜகருணா “ஜனாதிபதியின் முழு உரையிலும் “நான் நான், நான் நான்” என்றுதான் கூறினார்.

கோட்டாபயவைப் போலவே நான்தான் நன்றாகச் செய்தவன் (மம தமா ஹொந்த டம கலே) என்பதைப் போன்ற கதையாகும். எனக் கூறினார்.

## இலங்கை இராணுவம்

### விலைமனுக்கோரல்

1. 75வது இராணுவ தினத்துடன் இணைந்து இராணுவத் தலைமையகத்தின் இல 06 மற்றும் 07 ஆம் இலக்க கட்டிடத்தின் உட்புற சுவர்களுக்கு வர்ணம் பூசுதல். மேற்படி கட்டிடங்கள் இல. 06 மற்றும் 07 இன் முதலாம் நிலை I மற்றும் இரண்டாம் நிலையின் II கீழ் மேற்படி கட்டிடங்களின் வெளிப்புற சுவர்களுக்கு வர்ணம் பூசும் பணிக்காக வர்ண பூச்சு கொள்வனவு, பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தின் பாதுகாப்பிற்காக புதிய பாதுகாப்பு வேலியொன்றினை அமைப்பதற்காக, இராணுவ முகாம் அலுவலர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் கூரையினை கட்டுவதற்காக பொறியியல் பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் லெட்லண்ட் பிரதேச இராணுவ நலன்புரி கட்டிடத்திற்கான ஒப்பந்த சேவைகளுக்கான பொறியியல் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இராணுவத் தலைமையகத்தின் கட்டிடம் இலக்கம். 06 மற்றும் 07 இல் நிறுவப்பட்டுள்ள 19 மின்தூக்கிகள் வருடாந்த பராமரிப்பு சேவைக்கான ஒப்பந்த சேவைகளை மேற்கொள்வதற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மனுக்களுக்கு ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோழும்பில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தின் இராணுவ டெண்டர் சபை (கொள்முதல்) குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழங்கலுக்கான கொள்முதல் ஆவணங்கள் பொறியியல் சேவைகள் பணிப்பாளர் சபை, (இராணுவ தலைமையகத்தின் வாகனங்களை நிறுத்தும் பகுதியில் அமைந்துள்ள கட்டிடத்தில்) **2024.07.01** ஆம் திகதி முதல் **2024.07.22** ஆம் திகதி வரை வார நாட்களில் **0900** மணி முதல் **1600** மணி வரை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் மேலும் மேற்கூறிய அனைத்து மனுக்களும் 2024.07.23 ஆம் திகதி 1100 **மணிக்கு** இராணுவத் தலைமையக வாகன நிறுத்துமிடம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பு என்ற முகவரியில் திறக்கப்படும். டெண்டர் ஆவணங்களைப் பெறுவதற்கு, நிறுவனத்தின் பதிவு மற்றும் VAT வரிசெலுத்தும் பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

3. குறித்த பொறியியல் பொருட்கள் வகைப்பாடுகள் உட்பட அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ள **www.promise.lk** என்ற இணைய முகவரியை பார்வையிடவும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

அ. பொறியியல் சேவை பணிப்பாளர் சபை கொள்முதல் பிரிவு - தொலைபேசி இலக்கம் - 011 2339317

ஆ. உபகரணம் மாஸ்டர் பொது கிளையின் கொள்முதல் பிரிவு - தொலைபேசி இலக்கம் - 011 2431301

**இராணுவத் தளபதி,**
**இலங்கை இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர,**
**கொழும்பு.**

## இலங்கை இராணுவம்

### விலைமனுக்கோரல்

| பரிவர்த்தனைகளின் நடைமுறை மற்றும் உயர் பெறுமதி ஒன்றுக்கு நிறுவனத்தின் வணிகங்கள் பல சிக்கலான, ஒன்றுக் கொன்று சார்ந்துள்ள தகவல் தொழில்நுட்ப (IT) முறைமைகளை பயன்படுத்துகின்றன. IT முறைமைகளுக்கான அணுகுதல் மற்றும் மாற்றங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் நிறுவனத்தின் நிதித் தகவலின் பதிவு மற்றும் நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கு தீர்க்க மானது என்பதோடு அது நிதி நிலை மற்றும் செயல்திறனின் உண்மை யான மற்றும் நியாயமான பார்வையை வழங்கு கிறது.<br>தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் மற்றும் கட்டுப்பாடுகள், அவை நிதிப் பரிவர்த்தனைகளின் பதிவு மற்றும் அறிக்கை யிடலைப் பாதிக்கும், ஒரு முக்கிய கணக்காய்வு விடயமாகும், ஏனெனில் நிறுவனத்தின் IT கட்டுப் பாடுகளின் பயனுள்ள செயல்பாட்டைப் பொறுத்து எங்கள் கணக் காய்வு அணுகுமுறை கணிசமாக வேறுபடலாம். | குறிப்பிடத்தக்க பரிவர்த்தனைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் பொதுப் பேரேட்டில் நிலுவைகளை பதிவு செய்வதில் முக்கிய IT பயன்பாடுகளை (முறைமைகள்) பயன்படுத்துவதற்கான தொழில்நுட்ப கட்டுப்பாட்டு சூழலை சோதிப்பதற்கு கணக்காய்வு நடைமுறைகளை மேற்கொள்வதற்கு எமது IT நிபுணர்களுடன் நாம் பணியாற்றினோம். தொழில்நுட்பம் - இயக்கப்பட்ட வணிக செயல்முறைகளை இணைக்கும் இந்த முறைமைகளுக்குள் உட்பொதிக்கப்பட்ட தானியங்கு கட்டுப்பாடுகளையும் நாங்கள் சோதித்தோம்.<br>**எமது கணக்காய்வு நடைமுறைகளில் மேலும் உள்ளடங்குவன:**<br>● கணினி அணுகல் மற்றும் கணினி மாற்ற முகாமைத்துவம், கணினி ஒருமைப்பாடு, நிரல் மேம்பாடு மற்றும் கணினி செயல்பாடுகளை கண்காணித்தல் உள்ளிட்ட நிதிக் கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் அமைப்புகளுடன் தொடர்புடைய தகவல் தொழில்நுட்பத்தின் முக்கிய உட் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, செயல்படுத்தல் மற்றும் இயக்க செயல்திறனை மதிப்பீடு செய்தல்.<br>● நிறுவனத்தின் IT அமைப்பு தொடர்பில் நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பில் ஆராய்வதோடு தேவைப்படும்போது ஈடு செய்யும் கட்டுப்பாடுகள் உட்பட நிரல்கள் மற்றும் தரவு மற்றும் IT செயற்பாடுகளுக்கு நிரல் மேம்பாடு மற்றும் மாற்றங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள்.<br>● சில தானியங்கு கட்டுப்பாடுகளின் இயக்க செயல்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் முறைமை கணக்கீடுகள் மூலம் IT பயன்பாட்டுக் கட்டுப்பாடுகளின் செயல்பாட்டு செயல்திறனை மதிப்பிடுவதன் மூலமாக IT செயல்முறை கட்டுப்பாடுகளுக்கு தொடர்புபட்ட குறிப்பிடத்தக்க கணக்குகளின் வடிவம், செயற்படுத்தல் மற்றும் செயல்திறனை மதிப்பீடு செய்வதோடு, அது நிறுவனத்தின் இணக்க நடவடிக்கைகள் மற்றும் தரவு பரிமாற்றம் மற்றும் தரவு இடம்பெயர்வின் நிலைத்தன்மையை மதிப்பிடுதலுடன் தொடர்புபட்டதாகும்.<br>● முக்கிய செயற்பாட்டு முறைமைகளின் கிடைக்கும் தன்மை மற்றும் நிலைத்தன்மையை மதிப்பிடுதல், வர்த்தக வகைகள் மற்றும் பரிவர்த்தனைகளின் அளவுகளின் விரைவான வளர்ச்சி மற்றும் வணிக தொடர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை செலுத்தும் IT திட்டங்களை கருத்தில்கொள்ளல்.<br>● மாதிரி அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட தானியங்கு கணக்கீடுகளை மீண்டும் செயல்படுத்தி, கணினி மற்றும் பொது பேரோடு மூலம் எங்கள் முடிவுகளை ஒப்பிட்டுப் பார்த்தோம்.<br>● மாதிரி அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட பதிவுகளைச் சரிபார்த்து, அணுகல் உரிமைகளை வழங்குதல் மற்றும் அகற்றுதல் தொடர்பான அறிக்கைகளை ஆய்வு செய்வதன் மூலம் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அணுகல் உரிமைகளைச் சோதித்தல்.<br>● குறிப்பிட்ட முறைமைகளுக்கு பயனர்களுக்கு இடையே பணிகளின் பிரிவினையை நடைமுறைப்படுத்துவதற்கு சோதனை தடுப்பு கட்டுப்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. |

**ஏனைய தகவல்**

ஏனைய தகவலுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும். ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல் ஏனைய தகவலில் உள்ளடங்குகின்றபோதும் நிதி அறிக்கைகள் மற்றும் எமது கணக்காய்வின் அறிக்கை அதில் உள்ளடங்காது. இந்த கணக்காய்வாளரின் அறிக்கை திகதிக்குப் பின்னர் ஆண்டு அறிக்கை எமக்கு கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிதி அறிக்கை பற்றிய எமது கருத்து ஏனைய தகவலில் உள்ளடங்காது என்பதோடு அதில் நாம் எந்த விதமான உறுதியான முடிவையும் வெளிப்படுத்தவில்லை.

நிதி அறிக்கைகளில் எமது கணக்காய்வு தொடர்பில், எமது பொறுப்பானது, ஏனைய தகவலை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது, மற்ற தகவல்கள் நிதிநிலை அறிக்கைகளுடன் முரணாக உள்ளதா, அல்லது கணக்காய்வில் பெறப்பட்ட எமது அறிவு அல்லது வேறுவிதமாக தவறானதாகத் தோன்றுகிறதா என்பதை கவனிப்பதாகும்.

ஆண்டு அறிக்கையை வாசிக்கும்போது, அதில் ஒரு பொருள் தவறாக உள்ளது என்று நாம் முடிவு செய்தால், அதற்கு பொறுப்பான நிர்வாகத்துடன் தொடர்புபட்டவர்களுக்கு அந்த விடயத்தை நாம் தெரிவிக்க வேண்டும்.

நிதி அறிக்கைகளுக்கான நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்கள் மற்றும் முகாமைத்துவ பொறுப்புகள்

நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாவதோடு அது கணக்கியல் தராதரங்களுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான பார்வை ஒன்றைத் தரும். அவ்வாறு மோசடி அல்லது பிழையின் காரணமாக, பொருள் தவறாகக் கூறப்படாத நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதை இயலுமாக்குவதற்கு நிர்வாகம் தீர்மானிப்பது போன்ற உள்ளக கட்டுப்பாடு அவசியம். நிதி அறிக்கைகளை தயாரிப்பதில், நிர்வாகமானது நிறுவனத்தை கலைக்கவோ அல்லது செயல்பாடுகளை நிறுத்தவோ உத்தேசித்திருந்தாலோ அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு எந்த யதார்த்தமான மாற்றுக் கருத்தும் இல்லாமலோ இருக்கும்பட்சத்தில், கணக்கியலின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவை (Going concern) பயன்படுத்தல் மற்றும் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவுக்கு தொடர்புடைய விடயங்களுக்கு பொருந்துவதாக தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கு நிறுவனத்தின் திறனை மதிப்பிடுவதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருக்கும். நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் நிறுவனத்தின் நிதி அறிக்கை செயல்முறையை மேற்பார்வையிடுவதற்கு பொறுப்பாவர்.

**நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்காக கணக்காய்வாளரின் பொறுப்புகள்**

மோசடி அல்லது பிழை காரணமாக, நிதி அறிக்கைகள் ஒட்டுமொத்தமாக தவறான அறிக்கையிலிருந்து விடுபட்டதா என்பதைப் பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எங்கள் கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுத்துவதும் எங்கள் நோக்கங்களாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஓர் உயர் நிலை உத்தரவாதம் என்றாலும், SLAuSs இற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஒன்று உத்தரவாதம் கொண்டதல்ல. அது இருக்கும்போது பொருள் தவறு ஒன்று எப்போதும் கண்டறியப்படும். பொருள் தவறு மோசடி அல்லது தவறினால் எழுப்பப்பட முடியும் என்பதோடு தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இந்த நிதி அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளில் அவை செல்வாக்கு செலுத்தும் என்று நியாயமாக நம்பப்பட்டால், அவை பொருளாகக் கருதப்படும்.

SLAuSs இற்கு அமைய கணக்காய்வு ஒன்றின் பகுதியாக, நாம் தொழில்முறை தீர்ப்பைப் பயன்படுத்துகிறோம் மற்றும் தொழில்முறை ஐயப்பாட்டை பேணுகிறோம். நாம்: மோசடி அல்லது பிழை காரணமாக, நிதி அறிக்கைகளின் தவறான அறிக்கையின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்தல், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துதல் மற்றும் எங்கள் கருத்துக்கு ஓர் அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெறுதல். கூட்டு, மோசடி, வேண்டுமென்றே புறக்கணிப்புகள், தவறான விளக்கங்கள் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை மீறுதலுடன் தொடர்புட்டதாக மோசடி இடம்பெறலாம் என்பதால் மோசடியின் விளைவாக ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாத ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் ஒன்றை விட அதிகமாகும்.

- சூழ்நிலைகளில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்க, கணக்காய்வு தொடர்பான உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெற வேண்டும் என்றபோதும், அது நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காகவல்ல.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளை மதிப்பீடு செய்தல்.
- கணக்கியலின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவின் முகாமைத்துவ முறையான பயன்பாடு மற்றும் பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில், நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது பற்றி முடிவு செய்தல். ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நாம் முடிவுக்கு வந்தால், நிதி அறிக்கைகளில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களுக்கு எங்கள் கணக்காய்வாளரின் அறிக்கையில் நாம் கவனம் செலுத்த வேண்டும் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லை என்றால், எமது கருத்தை மாற்ற வேண்டும். எமது முடிவுகள் எமது கணக்காய்வாளரின் அறிக்கையின் தரவுகளின் திகதி வரை பெறப்பட்ட கணக்காய்வு ஆதரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். எவ்வாறாயினும், தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவை ஒன்றாக தொடர்வதை நிறுத்துவதற்கு எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாகலாம்.
- நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த முன்னளிக்கை, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம், வெளிப்படுத்தல்கள் உட்பட, மற்றும் நிதி அறிக்கைகள் நியாயமான முன்னளிக்கையை அடையும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.
- நிதி அறிக்கைகளின் கருத்து ஒன்றை வெளிப்படுத்துவதற்கு நிறுவனத்திற்குள் அமைப்புகள் அல்லது வர்த்தக செயற்பாடுகளின் நிதித் தகவல் தொடர்பில் போதுமான முறையான கணக்காய்வு ஆதாரங்களை பெறுதல்.

எமது கணக்காய்வு காலத்தில் நாம் அடையாளம் காணும் உள்ளக கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் குறிப்பிடத்தக்குறைபாடுகள் உட்பட, கணக்காய்வின் திட்டமிடப்பட்ட நோக்கம் மற்றும் நேரம் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள், மற்ற விடயங்கள் தொடர்பில் பொறுப்பாக நிர்வாகத்துடன் நாம் தொடர்புகொள்கிறோம்.

சுயாதீனம் தொடர்பிலான ஒழுக்கக் கோவைக்கு அமைய தேவையான ஒழுக்கத்துடன் நாம் இணங்கினோம் என்ற அறிக்கை ஒன்றையும் நாம் பொறுப்பான நிர்வாகத்துக்கு வழங்குவதோடு, அனைத்து உறவுகள் மற்றும் எமது சுயாதீனம் மற்றும் பொருந்தக்கூடிய இடங்களில் தொடர்புடைய பாதுகாப்புகளை தாங்கியதாக எதிர்பார்க்கும் நியாயமான ஏனைய விடயங்கள் குறித்து அவர்களுடன் தொடர்புகொள்ளல். பொறுப்பான நிர்வாகத்துடன் தொடர்புகொண்ட விடயங்களில் இருந்து, தற்போதைய காலத்தின் நிதி அறிக்கைகளின் கணக்காய்வில் மிக முக்கியமான விடயங்களை நாம் தீர்மானிக்கிறோம். எனவே அவை முக்கிய கணக்காய்வு விடயங்களாக உள்ளன. அந்த விடயம் பற்றி பொது வெளியில் வெளிப்படுத்துவதை சட்டம் அல்லது ஒழுங்குமுறை தடுக்கும் வரை எமது கணக்காய்வாளரின் அறிக்கையில் இந்த விடயங்களை நாம் விபரிப்போம் அல்லது மிகவும் அரிதான சூழல்களின்போது, எமது அறிக்கையில் விடயம் ஒன்றை தெரிவிக்கக் கூடாது என்று நாம் தீர்மானிப்போம். ஏனென்றால் அவ்வாறு செய்வதால் ஏற்படும் பாதகமான விளைவுகள், அத்தகைய தகவல்தொடர்புகளின் பொது நலன்களை விட அதிகமாக இருக்கும் என்று நியாயமாக எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 163 (02) ஆம் பிரிவின் தேவைக்கேற்ப, கணக்காய்வுக்கு தேவையான தகவல் மற்றும் விளக்கங்களை நாம் பெற்றுள்ளோம் என்பதோடு நிறுவனத்தால் முறையான கணக்குப் பதிவுகள் வைக்கப்பட்டுள்ளது என்பது எமது ஆராய்வில் இருந்து தெரிகிறது.

கணக்காய்வாளரின் இந்த சுயாதீன அறிக்கையில் கையொப்பம் இடுவதற்கு பொறுப்பான அலுவல் பங்குதாரரின் CA Sri Lanka உறுப்பினர் இலக்கம் 3707.

**பட்டய கணக்காளர்கள்**
**கொழும்பு, இலங்கை**
**2024 மே 24**

**இலாப நட்ட கூற்று**

| | 2024 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது ரூபா '000 | வட்டி வருமானம் % ஆக | 2023 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது ரூபா '000 | வட்டி வருமானம் % ஆக | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 7,572,616 | 100% | 7,142,823 | 100% | 6% |
| கழி: வட்டிச் செலவினம் | 4,792,620 | 63% | 4,528,451 | 63% | (6%) |
| தேறிய வட்டி வருமானம் | **2,779,996** | **37%** | **2,614,372** | **37%** | **6%** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 378,111 | 5% | 339,799 | 5% | 11% |
| வர்த்தக வருமானம் | 1,374 | 0% | 596 | 0% | 131% |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 161,269 | 2% | 69,682 | 1% | 131% |
| மொத்த செயற்பாட்டு வருமானம் | **3,320,750** | **44%** | **3,024,449** | **42%** | **10%** |
| கழி: கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான மதிப்பு குறைப்பு கட்டணங்களுக்கான கொடுப்பனவு | (126,973) | -2% | (43,504) | -1% | (192%) |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | **3,447,723** | **46%** | **3,067,953** | **43%** | **12%** |
| கழி: செலவினங்கள் | | | | | |
| ஆளணியினர் செலவினம் | 988,665 | 13% | 876,035 | 12% | (13%) |
| தேய்மானமும் படிப்படியான தீர்வும் | 276,194 | 4% | 245,119 | 3% | (13%) |
| ஏனைய நிர்வாக மற்றும் விற்பனைச் செலவுகள் | 1,210,610 | 16% | 951,513 | 13% | (27%) |
| நிதிச்சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பவரின் முன்னரான செயற்பாட்டு இலாபம் | **972,254** | **13%** | **995,286** | **14%** | **(2%)** |
| கழி: நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி **(VAT)** | 280,808 | 4% | 289,293 | 4% | 3% |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி | 39,048 | 1% | 27,420 | 0% | 100% |
| வரிக்கு முன்னரான இலாபம் | **652,398** | **9%** | **678,573** | **10%** | **(4%)** |
| கழி: வருமான வரிச் செலவினம் | 248,163 | 3% | 269,529 | 4% | 8% |
| பருவத்திற்கான இலாபம் | **404,235** | 5% | **409,044** | **6%** | **(1%)** |
| பருவத்திற்கான வருமானம் | 2.00 | | 2.02 | | |

**ஏனைய விரிவான வருமானக் கூற்று**

| | 2024 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது ரூபா '000 | வட்டி வருமானம் % ஆக | 2023 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த வருட காலத்திற்கானது ரூபா '000 | வட்டி வருமானம் % ஆக | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| காலப்பகுதிக்கான இலாபம் | **404,235** | **5%** | **409,044** | **6%** | **(1%)** |
| ஏனைய விரிவான வருமானம் | | | | | |
| இளைப்பாற்று நலன்புரி கடப்பாடுகள் மீதான உண்மையான இலாபம்/(நட்டம்) | (5,127) | 0% | 5,932 | 0% | (186%) |
| ஒத்திவைக்கப்பட்ட நலன்புரி கடப்பாடுகள் மீது ஒத்திவைக்கப்பட்ட வரி மீதான உண்மையான இலாபம்/(நட்டம்) | 1,538 | 0% | (1,780) | 0% | (186%) |
| FVICI இன் மீள்அளவீடு மூலமாக எழும் வருமானம் | 65 | 0% | 2,079 | 0% | (97%) |
| காலப்பகுதிக்கான ஏனைய மொத்த விரிவான செலவினங்கள் | **(3,524)** | **0%** | **6,231** | **0%** | (157%) |
| காலப்பகுதிக்கான ஏனைய மொத்த விரிவான வருமானம் | **400,711** | **5%** | **415,275** | **6%** | **(4%)** |

**நிதி நிலைமை பற்றிய கூற்று**

| | 2024 மார்ச் 31ஆம் திகதியன்று உள்ளவாறு ரூபா '000 | மொத்தச் சொத்து % ஆக | 2023 மார்ச் 31ஆம் திகதியன்று உள்ளவாறு ரூபா '000 | மொத்தச் சொத்து % ஆக |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 3,825,976 | 10.46% | 2,535,435 | 7.94% |
| வங்கிகளிலுள்ள இருப்புகள் | 254,023 | 0.69% | 1,413,997 | 4.43% |
| இலாபம் அல்லது நட்டத்தின் (FVTPL) மூலம் நியாயமான மதிப்பில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 463,761 | 1.27% | - | 0.00% |
| நிலைமாறக்கூடிய கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - நிதி குத்தகை பெறுகைகள் | 10,935,835 | 29.88% | 8,887,364 | 27.82% |
| நிலைமாறக்கூடிய கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 16,774,012 | 45.84% | 15,309,935 | 47.92% |
| ஏனைய விரிவான வருமானத்தின் ஊடாக நியாய விலையில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் வருமானம் / நிதியியல் கருவிகள் - விற்பனைக்குரியவை | 2,185 | 0.01% | 2,120 | 0.01% |
| நிலைமாறக்கூடிய கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - கடன்கள் மற்றும் ஏனைய நிதியியல் கருவிகள் / நிதியியல் முதலிடுகள் முதிர்வு வரைவிலான | 2,478,591 | 6.77% | 2,013,992 | 6.30% |
| ஏனைய கடனாளிகள் மற்றும் முன்கூட்டிய கொடுப்பனவுகள் | 342,725 | 0.94% | 293,905 | 0.92% |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 93,093 | 0.25% | 113,392 | 0.35% |
| கட்புலனாகாத சொத்துக்கள் | 87,825 | 0.24% | 80,387 | 0.25% |
| ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 638,235 | 1.74% | 623,902 | 1.95% |
| பயன்பாட்டு உரிமை கொண்ட சொத்துக்கள் / குத்தகை சொத்துக்கள் | 698,183 | 1.91% | 674,409 | 2.11% |
| **மொத்த சொத்துக்கள்** | **36,594,444** | **100%** | **31,948,838** | **100%** |
| **பங்குடைமையும் பொறுப்புக்களும்** | | | | |
| **பொறுப்புகள்** | | | | |
| ஏனைய நிதிப் பொறுப்புகள் - வாடிக்கையாளருக்குரியவை | 22,179,511 | 60.61% | 19,195,604 | 60.08% |
| நிலைமாறக்கூடிய நிதிப் பொறுப்புகள் - வட்டியுடனான கடன்கள் மற்றும் கடன்பாடுகள் | 6,870,504 | 18.77% | 6,067,366 | 18.99% |
| குத்தகை பொறுப்புகள் | 839,484 | 2.29% | 757,645 | 2.37% |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 591,831 | 1.62% | 473,935 | 1.48% |
| செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி (VAT) | 7,722 | 0.02% | 1,586 | 0.00% |
| உறவுக் கம்பனிகளுக்கு செலுத்தவேண்டியவை | 105,046 | 0.29% | 115,795 | 0.36% |
| வங்கி மேலதிகப் பற்று | 531,809 | 1.45% | 4,247 | 0.01% |
| நடைமுறை வரி பொறுப்புகள் | 92,241 | 0.25% | 228,893 | 0.72% |
| ஓய்வூதிய பணிக்கொடைகள் | 161,997 | 0.44% | 128,520 | 0.40% |
| **மொத்த பொறுப்புக்கள்** | **31,380,145** | **85.75%** | **26,973,591** | **84.43%** |
| **பங்குடைமை** | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 1,996,444 | 5.46% | 1,996,444 | 6.25% |
| ஒதுக்க நிதி | 335,411 | 0.92% | 254,564 | 0.80% |
| FVOCI இன் நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி ஒதுக்கம் | 2,144 | 0.01% | 2,079 | 0.01% |
| ஒழுங்குபடுத்தல் இழப்பு கொடுப்பனவு ஒதுக்கம் | 51,093 | 0.14% | - | 0.00% |
| ஒத்திவைத்த வருமானங்கள் | 2,829,207 | 7.73% | 2,722,160 | 8.52% |
| **மொத்த பங்குடைமை** | **5,214,299** | **14.25%** | **4,975,247** | **15.57%** |
| **மொத்தப் பொறுப்புகள் மற்றும் பங்குடைமை** | **36,594,444** | **100%** | **31,948,838** | **100%** |

**உரிமை மாற்றல் கூற்று**

நிறுவனத்தின் பங்குரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடியவை

| | பிரகடனப் படுத்தப்பட்ட மூலதனம் ரூபா '000 | நிதிச் சொத்துக்களின் நியாயமான மதிப்பு இருப்பு ரூபா '000 | FVOCI நிதி ஒழுங்கு முறை இழப்பு கொடுப்பனவு இருப்பு ரூபா '000 | ஒதுக்கப்பட்ட நிதி ரூபா '000 | நிறுத்தி வைத்த வருமானங்கள் ரூபா '000 | மொத்தம் ரூபா "000 |
|---|---|---|---|---|---|---|
| **2022 ஏப்ரல் 01இல் மீதி** | **1,996,444** | **234,112** | - | - | **2,491,075** | **4,721,631** |
| **வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | | | | | | |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | 409,044 | 409,044 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | | | |
| ஊழியர் நலன்புரித் திட்டம் மூலமான உண்மையான வருமானம் | - | - | | - | 5,932 | 5,932 |
| தொடர்பான வரிகள் | - | - | - | - | (1,780) | (1,780) |
| FVOCI யில் நிதியியல் சொத்துகளின் மீள் மதிப்பீட்டிலிருந்தான வருமானம் | - | - | 2,079 | - | - | 2,079 |
| **வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | - | - | **2,079** | - | **413,196** | **415,275** |
| **பங்குரிமையில் நேரடியாக பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்களுடனான பரிவர்த்தனை** | | | | | | |
| வருடத்திலிருந்து / வருடத்திற்கு மாற்றப்பட்டவை | - | 20,452 | - | - | (20,452) | - |
| பங்கிலாபம் | - | - | - | - | (161,659) | (161,659) |
| **பங்குடைமை உரிமையாளர்களுடனான மொத்தப் பரிவர்த்தனை** | - | **20,452** | **-** | **-** | **(182,111)** | **(161,659)** |
| **2023 மார்ச் 31இல் மீதி** | **1,996,444** | **254,564** | **2,079** | **-** | **2,722,160** | **4,975,247** |
| **மொத்த விரிவான வருமானம்** | | | | | | |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | 404,235 | 404,235 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | | | |
| ஊழியர் நலன்புரித் திட்டம் மூலமான உண்மையான நட்டம் | - | - | - | - | (5,127) | (5,127) |
| ஏனைய விரிவான வருமானம் மீதான வரி | - | - | - | - | 1,538 | 1,538 |
| FVOCI யில் நிதியியல் சொத்துகளின் மீள் மதிப்பீட்டிலிருந்தான வருமானம் | - | - | 65 | - | - | 65 |
| **வருடத்திற்கான ஏனைய மொத்த விரிவான வருமானம்** | **-** | **-** | **65** | **-** | **(3,589)** | **(3,524)** |
| **வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | **-** | **-** | **65** | **-** | **400,646** | **400,711** |
| **பங்குடைமையில் நேரடியாக பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்களுடனான பரிவர்த்தனை** | | | | | | |
| வருடத்திலிருந்து / வருடத்திற்கு மாற்றப்பட்டவை | - | 80,847 | - | 51,093 | (131,940) | - |
| பங்கிலாபம் | - | - | - | - | (161,659) | (161,659) |
| **பங்குடைமையில் உரிமையாளர்களுடனான மொத்தப் பரிவர்த்தனை** | - | **80,847** | - | **51,093** | **(293,599)** | **(161,659)** |
| **2024 மார்ச் 31இல் மீதி** | **1,996,444** | **335,411** | **2,144** | **51,093** | **2,829,207** | **5,214,299** |

**தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டுச் சுட்டிகள்**

| சுட்டிகள் | 2024 மார்ச் 31ஆம் திகதியன்று உள்ளவாறு | | 2023 மார்ச் 31ஆம் திகதியன்று உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| **ஒழுங்குபடுத்தல் மூலதனப் போதுமை** | **காணப்படுவது** | **தேவைப்படுவது** | **காணப்படுவது** | **தேவைப்படுவது** |
| இடர் அடிப்படை சொத்துக்களுக்கான மைய மூலதன விகிதம் | 15.62% | 8.50% | 20.01% | 8.50% |
| இடர் அடிப்படை சொத்துக்களுக்கான மொத்த மூலதன விகிதம் | 18.54% | 12.50% | 25.60% | 12.50% |
| மொத்த வைப்புப் பொறுப்புகளுக்கான மூலதன நிதிய விகிதம் | 23.51% | 10.00% | 25.92% | 10.00% |
| **சொத்துக்களின் தரம் (கடன் துறையின் தரம்)** | | | | |
| மொத்த நிலை 3 கடன் வீதம் % | | 11.22% | | 11.91% |
| தேறிய நிலை 3 கடன் வீதம் % | | 7.78% | | 7.78% |
| தேறிய நிலை 3 கடனிலிருந்து மைய மூலதன வீதம் | | 45.12% | | 41.70% |
| நிலை 3 பெறுமதிகுறைப்பை உள்ளடக்கிய வீதம் | | 30.68% | | 34.70% |
| மொத்த பெறுமதிகுறைப்பை உள்ளடக்கிய வீதம் | | 4.12% | | 5.54% |
| **இலாபமீட்டும் தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி கடை நிலை | | 9.58% | | 9.41% |
| சொத்துக்கள் மூல வருமானம் (வரிக்கு முன்) | | 1.90% | | 2.18% |
| பங்குகள் மூல வருமானம் (வரிக்குப் பின்) | | 7.93% | | 8.44% |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | | 74.55% | | 68.53% |
| **ஒழுங்கமைப்பு திரவத்தன்மை** | | | | |
| தேவைப்படும் ஆகக்குறைந்த திரவச் சொத்துக்கள் | | 288% | | 210% |
| வெளிப்புற நிதிகளுக்கான திரவச் சொத்துக்கள் | | 29.20% | | 21.20% |
| **நிறுவனக் குறிப்புத் தகவல்கள்** | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | | 942 | | 751 |
| கிளைகளின் எண்ணிக்கை | | 52 | | 50 |
| வெளிப்புற கடன் தரப்படுத்தல் | | Fitch BBB (lka) outlook stable | | Fitch BBB + (lka) outlook stable |

கீழே கையொப்பமிடப்பட்டுள்ள சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் இணக்க அதிகாரிகள் ஆகிய நாம்,

(அ) மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கியினால் தெரிவிக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் விவரணத்திற்குட்பட்ட வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இந்த அறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள் அனைத்தும் சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளிலிருந்து எடுக்கப்பட்டன என்றும் கூட்டாக உறுதிப்படுத்துகின்றோம்.

**(ஒப்பம்) டி.ஏ. அமரசூரிய,**
**பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி**
2024 ஜுன் 30

**(ஒப்பம்) பீ.எஸ்.ஈ.டி. பெர்னாண்டோ**
**பிரதம நிதி அதிகாரி,**
2024 ஜுன் 30

**(ஒப்பம்) எம்.என்.எஸ்.டி.சில்வா**
**இணக்க அதிகாரி**
2024 ஜுன் 30

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீஎல்சீ சிங்கர் (ஸ்ரீலங்கா) நிறுவனத்தின் உப நிறுவனமாகும். 2011இன் 42ஆம் இலக்க நிதி நிறுவனச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையில் பதிவு செய்யப்பட்டது. கூட்டிணைப்புத் திகதி: 2004 ஏப்ரல் 19. பிட்ச் தரப்படுத்தலில் BBB (lka) எனத் தரப்படுத்தப்பட்டுள்ளது. PB 813 PQ. இல. 408, ஆர் ஏ டி மெல் மாவத்தை, கொழும்பு-03. தொலைபேசி: 2100110, 2400400 தொலைநகல்: 2303715 மின்னஞ்சல்: financecompany@singersl.com இணையதளம்: www.singerfinance.com

# 'தமிழன்' ஆண்டு விழாவில் புரவலருக்கு சமூக சேவைக்கான உயர் விருது



தமிழன் பத்திரிகையின் நான்காவது ஆண்டு நிறைவு விழா கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ராமசாமி சிவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழுக்கு தொண்டாற்றிய பலரும் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் விசேடமாக சமூக மற்றும் இலக்கிய விடயங்களில் பலரையும் ஊக்குவித்து இலக்கிய உலகிற்கு மாபெரும் தமிழ்த் தொண்டாற்றி வரும் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர், சமூக சேவைக்கான விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவருக்கான விருதை தமிழன் பத்திரிகையை வெளியிடும் லிபர்ட்டி பப்ளிசர்ஸ் நிறுவனத்தின் தலைவர் திலித் ஜெயவீர வழங்கி கௌரவித்தார். அவருடன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட ஏனைய பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.



இலங்கையின் சுற்றாடலை பாதுகாக்கும் நோக்கில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட "ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுகள் 2024" விழா கடந்த வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றபோது, தங்க விருதை தினக்குரல் பத்திரிகையின் உதவி ஆசிரியர் எம்.எச்.எப் ஹுஸ்னா ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

# "வெய்துயிர்த்தல்" கவிதை நூல் வெளியீடு




கவிஞர் பெரியமடு நிஹ்ரி எழுதிய "வெய்துயிர்த்தல்" என்ற கவிதை நூல் எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு புத்தளம் I.B.M மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வுக்கு புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிப்பதுடன் நூலின் முதல் பிரதியும் பெற்றுக் கொள்கிறார்.

நிகழ்வுக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி சபா அதிரதன் தலைமை தாங்குவார். பிரதம அதிதியாக மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஜே.றலியுதின் கலந்துகொள்ள சிறப்பதிதியாக தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் கலந்து சிறப்பிக்கவுள்ளார். நூலின் நயவுரையை கவிஞர், எழுத்தாளர் பிரேம் ராஜும், நூலாசிரியரும் நூலும் பற்றிய உரையை கண்ணகி கலாலய தலைவரும் பல்துறை கலைஞருமான ஏ.கே.இளங்கோ நிகழ்த்தவுள்ளார்.

# சங்கானையில் பாரம்பரிய அம்மாச்சி உணவகம்

பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வருமானத்தை அதிகரிப்பதன் ஊடாக நிலைத்த அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக சங்கானை பஸ் நிலைய வளாகத்தில் அம்மாச்சி பாரம்பரிய உணவகம் ஒன்று வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் அமைக்கப்பட்டு கடந்த 25ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் பிஎஸ்.எம். சார்ள்ஸினால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இப் பாரம்பரிய உணவகத்தில் முற்று முழுதாக உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட பாரம்பரிய உணவுகள் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டு குறைந்த விலையில் மக்களுக்கு வழங்கப்படுகின்றது.

இதனால் சத்தான ஆரோக்கியமான பாரம்பரிய உணவுகள் மக்களை சென்றடைவதுடன் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பொருளாதாரமும் உயர்வடையும்



இந் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சுயதொழில் வருமான உருவாக்கத்திற்காக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டதுடன் உள்ளூர் எழுத்தாளர்கள் மற்றும் உள்ளூர் விவசாயிகளும் கௌரவிக்கப்பட்டனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை செயலாளர் ச.பாலரூபன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செ.பிரணவநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி யோ.யதுநந்தனன் ஆகியோர் கலந்து கொண்டனர்,

இப் பாரம்பரிய உணவகமானது உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உள்ளூர் அபிவிருத்தி உதவி திட்டத்தின் நிதி அனுசரணையில் செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கவிஞர் பொத்துவில் அஸ்மின் பாடல் எழுதவுள்ள "URNEXT" திரைப்படத்தின் ஆரம்ப பூஜை







IMAK INNOVTION PVT. LTD & SKY FRAME ENTERTAINMENT முகைதீன் அப்துல்காதர் மற்றும் மணி தயாரிப்பிலும் சுலைமான் அப்துல்காதர், முஹம்மது யூசுப், ஆதில் அமீன் இணைத் தயாரிப்பிலும் இயக்குனர் செரீப் இயக்கத்திலும் வெளிவரவுள்ள "URNEXT" திரில்லர் திரைப்படத்துக்கான ஆரம்ப பூஜை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை 9.00மணியளவில் சென்னை பிரசாத் ஸ்டூடியோவில் நடைபெற்றது.

இத்திரைப்படத்தில் தமிழ் சினிமா பாடலாசிரியர் இலங்கையின் புகழ்பூத்த கவிஞர் பொத்துவில் அஸ்மின் இரண்டு பாடல்களை எழுதுகின்றார். இயக்குனர் கேஸ்.எஸ்.ரவிக்குமார், ரக்சிதா, திவ்யா கிருஸ்ணன், தினேஷ் பிளக் பாண்டி, உதயராஜ் மற்றும் பலர் இத்திரைப்படத்தில் நடிக்கின்றனர்.

ஏனைய தொழில்நுட்ப கலைஞர்கள் விபரம். இசை: "இசைப் பெட்டை" வசந்த் பாடல்கள்: பொத்துவில் அஸ்மின் & கு.கார்த்திக், ஒளிப்பதிவு: கே.ஜி.ரதீஸ், நடனம்: கலைமாமணி ஸ்ரீதர் மாஸ்டர், சண்டைப்பயிற்சி ஓம் பிரகாஷ், எடிட்டர்: அஜீத், கலை இயக்குனர்: வேணு, ஆடை வடிவமைப்பு: ஈகா பிரவீன், தயாரிப்பு முகாமையாளர் நந்தகுமார், ஸ்டில் : சக்தி பிரியன் மக்கள் தொடர்பு: ரியாஸ் கே அஹமத்

# வெளிவருகிறது சஞ்சய் யோவின் 10ஆவது பாடல்




இயக்குனர், நடிகர் மற்றும் பாடகர் சஞ்சய் யோவின் 10ஆவது பாடலின் முதல் பார்வை விளம்பரம் வெளிவந்துள்ளது.

'தங்கச்சி' என்று ஆரம்பமாகும் இப் பாடலை பாடகர்கள் ஜெராமி, சஞ்சய் யோகேஸ்வரன் ஆகியோர் பாடியுள்ளனர்.


பாடல் வரிகளை எழுதி இசையமைத்துள்ளார் ஜெராமி. இதற்கான இசை ஏற்பாடுகளை ஷான் ஹெக்சிமும் சுவரொட்டி வடிவமைப்பை தக்ஷனும் நடிப்பை கிரேக்காவும் ஒளிப்பதிவை வினோதரனும் மேற்கொண்டுள்ளனர். இதனை இயக்கியுள்ளார் அபிஷயா. விரைவில் இது வலைத்தளங்களில் பகிரப்படவுள்ளது.





மட்டக்குளியில் இயங்கிவரும் ஆரோக்கிய யோகம் யோகா நிறுவனத்தின் ஏற்பாட்டில் 10 ஆவது சர்வதேச யோகா தினம் அண்மையில் காக்கை தீவு கடற்கரை பூங்காவில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

# 'ஏ தமா ஆரி' நூல் வெளியீடு



இந்த நாட்டின் ஊடகத்துறையில் சில காலங்களுக்கு முன் அனைவராலும் பேசப்பட்ட ஒரு பாத்திரம் ஆரிய ரூபசிங்க. அவரது வாழ்க்கைப் பாதையினதும் சேவைப் பணியினதும் சவாலான மற்றும் சர்ச்சைக்குரிய அம்சங்களை நூலின் மூலம் வெளிப்படுத்தும், 'ஏ தமா ஆரி' என்னும் வாழ்க்கைச் சரித நூல் வெளியீட்டு விழா ஜூலை 5, வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு, கொழும்பு 5, பொல்ஹேன்கொட, அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.


ஆரிய ரூபசிங்க, விடுதலைப் புலிகளின் பயங்கரவாத அச்சுறுத்தல் உச்சத்தில் இருந்த காலப்பகுதியில், அரசாங்க செய்திப் பணிப்பாளராகவும், போர்ச் செய்திகளை வெளியிடும் தகுதி வாய்ந்த அதிகாரியாகவும் இருந்தார்.

தகுதிவாய்ந்த அதிகாரத்தின் நிலைப்பாடு மற்றும் அதன் நடைமுறைகள் பத்திரிகையாளர்களால் அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டாலும், 'ஆரி' அவர்களின் அன்பான நண்பராக இருந்தார்.


கடந்த சில தசாப்தங்களில் இந்நாட்டில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரத் துறைகள் பற்றிய அறியப்படாத பல தகவல்கள் ''ஏ தமா ஆரி' நூலில் வெளியாகியுள்ளன.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் சிறப்புரையை சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர் ஓய்வுபெற்ற ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஆற்றவுள்ளார்.

திலீப் குலதுங்க எழுதிய ''ஏ தமா ஆரி புத்தகத்தில் டபிள்யூ.எம்.கே.விஜயபண்டார பங்களித்துள்ளார். இந்நூலின் சிறப்பு புகைப்படப்பதிவை சரத் பெரேரா செய்துள்ளார். 'ஏ தமா ஆரி' ஒரு சரசவி வெளியீடாகும்.



# படித்ததும் பகர்வதும் 197







சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### இறந்துவிட்டதா ஊடகப் பண்பு?!



உலக அறிவிப்பாளார் பி. எச். அப்துல் ஹமீத் காலமாகி விட்டதாக கடந்த வாரம் தீயாக பரவிய ஒரு வதந்தி முக்கிய பேசு பொருளாக அமைந்துவிட்டது. இந்த வதந்தியை முதலில் பதிவிட்டவர் என்ன நோக்கத்தில் அதனை செய்தார் என்பது தெரியவில்லையாயினும் அவரது செயல் ஒரு பெரும் குற்றமே என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்யாமல் பரப்பியவர்களும் அக்குற்றத்தின் பங்காளிகளேயாவர்.

இந்த விடயத்தின் உண்மையை அறிய என்னைக்கூட பலர் தொலைபேசியில் தொடர்பு கொண்டமை இவ்வதந்தியின் வேகத்தை காட்டி நின்றது. இந்த 'வதந்தி' அன்பு அறிவிப்பாளாரை எந்த அளவு பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது அன்பதை அவர் அடுத்த நாள் வெளியிட்ட வீடியோ மூலம் அறிந்து கொள்ளலாம். அவர் அதில் இவ்வாறு தெரிவித்துள்ளார்:

“நேற்று நள்ளிரவு முதல் இந்த நிமிடம் வரை நான் நித்திரை கொள்ளவில்லை. அந்த விஷமச் செய்தியை கேட்டு ஆயிரம், பல்லாயிரம் அன்புள்ளங்கள் தொலைபேசியில் என்னை அழைத்து என் குரலை கேட்ட பின்பு தான் நான் உயிரோடு இருப்பதை நிச்சயம் செய்து கொண்டார்கள். அதிலும் சிலர், என் குரலை கேட்டவுடன் கதறி அழுதார்கள் அதைக் கேட்டவுடன் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

‘இத்தனை ஆயிரம் அன்பு உள்ளங்களை நான் பெற என் தாய் என்ன தவம் செய்து என்னை ஈன்றாளோ!’ என்று நினைத்துக் கொண்டேன். நான் இலங்கை பத்திரிகையில் கட்டுரை ஒன்று எழுதி இருந்தேன். ‘மரணம் மனிதன் தரும் வரம். அதை பற்றிய செய்தி எதிர்மறை சிந்தனைகளை மறக்க செய்து நல்ல நினைவுகளை மட்டும் நினைத்துப் பேச வேண்டும்.’ அப்படி ஒரு அனுபவம் தான் எனக்கு கிடைத்திருக்கிறது.

பல்லாயிரம் பேர் என்னை நேசித்தாலும் என் துறை சார்ந்த, என் மீது பொறாமை கொண்ட சிலர் எதிர்மறையான விமர்சனங்களை பரப்பி இருக்கிறார்கள. இந்த செய்தியை கேட்ட நேரம் முதல் என்னைப் பற்றிய நல்ல நினைவுகளை மட்டுமே அவர்கள் நினைத்து இருப்பார்கள். இது வாழும் காலம் வரை தொடர வேண்டும் என பிரார்த்தனை செய்து கொள்கிறேன்.

உண்மையில், நான் இறக்கவில்லை. “ஒரு செய்தியை தீர விசாரித்து பதிவிடும் ஊடகப் பண்புதான் இறந்துவிட்டது”

பி. எச். அப்துல் ஹமீதின் இந்த பதிவு ஒவ்வொருவரதும் சிந்தனையையும் தூண்ட வேண்டும். வட்ஸ்அப் (Whatsapp), முகநூல் (Facebook), யூடுப் (Youtube), டிக்டொக் (Tiktok), இன்ஸ்டாகிராம் (Instagram), டுவிட்டர் (Twitter) என்று சமூக ஊடகங்களில் செய்திகளை பதிவிடுவோரும், அதனை மீள் பதிவு செய்வோரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டியது ஒவ்வொருவர் மீதுமுள்ள தார்மீக கடமையாகும். இதுபற்றி முன்னரும் கூட எமது “படித்ததும் பகர்வதும்” பகுதியில் தெளிவாக நாம் விளக்கி எழுதியிருந்தோம்.

“தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்” என்பது போல சமூக ஊடகங்களை பயன்படுத்தும் ஒவ்வொருவரும் தான் ஒரு ஊடகவியலாளன் அல்லது பத்திரிகையாளன் அல்லது செய்தி வழங்குனர் என்று எண்ணிக் கொண்டு தான்தோன்றித்தனமாக செயல்படுவது மனிதப் பண்பல்ல. அத்துடன் தவறான, பொய்யான, பிழையான, ஊர்ஜிதம் செய்யப்படாத, சுயமாக உருவாக்கப்பட்ட செய்திகளை பரப்புவது தண்டனைக்குரிய குற்றமாக கணிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு ஆளாக வேண்டிய விடயமாகும் என்பதையும் ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

ஒருவர் வெளியிடுகின்ற அல்லது மீள் பதிவிடுகின்ற அல்லது பரப்புகின்ற ஒரு விடயம் ஒரு தனி நபரையோ, ஒரு குடும்பத்தையோ, ஒரு சமூகத்தையோ, ஒரு இனத்தையோ அல்லது அரசாங்கத்தையோ பாதிக்குமாயின் அவற்றுக்கு பொறுப்பானவர்கள், ‘தமக்கு சட்ட நடவடிக்கைகளை சந்திக்க வேண்டிய நிலை வரும்’ என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

அன்பு அறிவிப்பாளரைப் பற்றி பொய்த் தகவல் வெளியிட்டவரை கண்டுபிடித்து உலகுக்கு இனங்காட்டுவது அவசியமாகும். அவருக்கு தண்டனை வழங்குவதை அன்பு அறிவிப்பாளர் விரும்பாவிட்டாலும் கூட இத்தகையவர்களை இனங்காட்டுவது இத்தகைய தவறான விடயங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுப்பதற்கும், பலர் அவற்றை தவிர்ந்து நடப்பதற்கும் ஏதுவாக அமையும் என்பது எமது கருத்தாகும்.

சமூக ஊடகங்களில் செய்திகளை பதிவிடுவோரும், அவற்றை மீள் பதிவிட்டு பரப்புவோரும் பொறுப்புணர்வுடன் நடந்து, உண்மைகளை ஊர்ஜிதம் செய்த பின்னரேயே அவற்றை செய்ய வேண்டும். இவ்விடயத்தில் உறுதியாக இருக்க வேண்டியது ஒவ்வொருவர் மீதுள்ள மிக முக்கிய கடமையாகும்.

## பிரிந்தார் பெருமை

### அல்ஹாஜ் மஹ்ரூப் மொஹிதீன்



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன சிரேஷ்ட அறிவிப்பாளரும். தயாரிப்பாளருமான அல்ஹாஜ் மஹ்ரூப் மொஹிதீன் கடந்த 23ம் திகதி (2024.06.23) தனது 56 வயதில் கொழும்பில் காலமானார்

1980களின் இறுதிப் பகுதியிலும் 1990 களின் ஆரம்பப் பகுதியிலும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நான் நடத்திய ‘இளைஞர் இதயம்’ நிகழ்ச்சியில் இளம் வாலிபராக கலந்து கொண்டு குரல் கொடுத்தமை என் நினைவில் இன்றும் பசுமையாக உள்ளது. அன்று முதல் அவர் இறக்கும் வரை எமது நட்பு சீராகவே தொடர்ந்தது.

அதே சமகாலத்தில் ஆசிரியர் பௌசுல் அமீர் நடாத்திய ‘மாணவர் மன்றம்’ நிகழ்ச்சியில் மஹ்ரூப் மொஹிதீன் பிரதான கலைஞராக தொடர்ந்தும் பங்களிப்பு செய்தார். அக்காலப் பிரிவில் பௌசுல் அமீர் ஆசிரியரோடு இணைந்தவராகவே இவரை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் காண முடிந்தது.

அன்று தொட்டு இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் பல நிகழ்ச்சிகளுக்கு குரல் கொடுத்து வந்த இவர், 1994ஆம் ஆண்டு பகுதி நேர அறிவிப்பாளராகி, 2000ஆம் ஆண்டில் இலங்கை வானொலியின் நிரந்தர அறிவிப்பாளராக இணைந்தார். 2014 ஆம் ஆண்டில் முதல்தர அறிவிப்பாளராக நியமிக்கப்பட்ட மஹ்ரூப் மொஹிதீன், அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக, நாடகக் கலைஞராக என பல துறைகளில் முஸ்லிம் சேவையில் முக்கிய பங்களிப்புகளைச் செய்தார்.

பல்வேறு தேசிய மட்டத்திலான நிகழ்ச்சிகளை பொறுப்பாக வழங்கியுள்ள இவர், சகல இன மக்களோடும் நல்லுறவை பேணி வந்தார். முஸ்லிம் சேவையின் பல முக்கிய நிகழ்ச்சிகளின் சேமிப்பு இவரிடம் இருப்பதாக முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளராக இருந்த சனூஸ் முஹம்மத் பெரோஸ் என்னிடம் ஒருமுறை தெரிவித்தார். அவ்வாறான முக்கிய பதிவுகள் இருக்குமாயின் அவற்றை அவரது பிள்ளைகள் மூலம் பெற்று பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது துறை சார்ந்தவர்கள் மீதுள்ள பொறுப்பாகும்.

கொழும்பு, மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் இடம்பெற்ற அன்னாரது நல்லடக்க நிகழ்வில் பெருந்திரளானோர் கலந்துகொண்டமை அவர் மீது மக்கள் கொண்டிருந்த அபிமானத்தை காட்டுவதாக இருந்தது. அன்னாரின் மறுமை வாழ்வு சிறப்பாக அமைய பிரார்த்திக்கிறோம்.

## பாராட்டுவோம் வாழ்த்துகிறோம்

### துணிச்ச லொன மருத்துவ நிபுணர்



கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற முக்கியமான, முன்மாதிரியான ஒரு சம்பவத்தை, வைத்தியரும், சட்டத்தரணியுமான டாக்டர் வை.எல்.எம்.யூசுப் பதிவிட்டுள்ளார். எல்லோருக்கும் பயனளிக்கும் இவ்விடயத்தை இங்கு பதிவிடுவது நல்லது என எண்ணுகிறேன். இத்தகைய செயல்களை பாராட்டுவதுடன், ஊக்குவிப்பதும் அவசியமாகும்.

மருதமுனை சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் சமீமினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட துணிச்சலான மற்றும் திறமையான சத்திர சிகிச்சையானது என்றும் எவராலும் மறக்க முடியாததாகும்.

விபத்தினால் பாதிப்புக்குள்ளான ஒரு சிறுவன் அவரிடம் சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்டுள்ளான். மரத்திலிருந்து கீழே விழுந்த அந்த சிறுவன், மரத்தின் அடியிலிருந்த கூரான குச்சியில் விழுந்து காயம் அடைந்துள்ளான். திடமான குச்சி சிறுநீர்ப்பை, குடலின் சுவர், கல்லீரல், வலது நுரையீரல் உட்பட அவனது பல உள் உறுப்புகளையும் சேதமாக்கியுள்ளது.

டாக்டர் சமீமின் மிக நுணுக்கமான, திறமையான மற்றும் தைரியமான அணுகுமுறை, மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் மட்டுமே சிறுவனின் உயிரைக் காப்பாற்ற வழி வகுத்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

உண்மையில், இந்த வகையான சிகிச்சைகளுக்கு ஜெனிட்டோ யூரோலாஜிக்கல், வாஸ்குலர், Genito Urological, Vascular, Gastrointestinal and Cardio thoracic subspecialtyபோன்ற நிபுணத்துவம் வாய்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்களின் சேவை தேவைப்படுகிறது. இவ்விடயத்தில் நுரையீரல், உதரவிதானம், கல்லீரல், குடற் சுவர்கள், மெசென்டரி, சிறுநீர்ப்பை மற்றும் சேதமடைந்த சிறிய இரத்த நாளங்களை சரி செய்யும் மிகச் சிக்கலான அறுவை சிகிச்சையை தனியொருவராக் இருந்து வெற்றிகரமாகச் செய்து, சிறுவனின் உயிரைக் காப்பாற்றிய டாக்டர் சமீம் ஒரு சாதனையையே செய்துள்ளார் என்றால் மிகையல்ல.

இந்த தைரியமான, துணிச்சலான, நேரத்துக்குப் பொருத்தமான, அரிய செயல் எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியதுடன், ஏனைய தொழில் வல்லுனர்களும் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டிய சிறந்த விடயமுமாகும். தனது ஆற்றலை உரிய நேரத்தில் தைரியத்தோடு சரியாக பயன்படுத்தி ஒரு சிறுவனின் உயிரைப் பாதுகாத்த சத்திரசிகிச்சை நிபுணர் மருதமுனை டாக்டர் சமீமை பாராட்டுகிறோம். அவரது எதிர்கால நன் முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகிறோம்!

## சிந்தனை செய் மனமே

### மனைவிக்கு நேர்மையானவனாக!



என் மனைவி என் பக்கத்தில் தூங்கி கொண்டிருந்தாள். திடீரென்று எனக்கு ஒரு முகநூல் (Facebook) செய்தி வந்தது, ஒரு பெண் தன்னை எனது நட்பு பட்டியலில் சேர்த்துக்கொள்ளச் சொன்னாள். அதனால் உடனே அவளை நண்பராகச் சேர்த்தேன்.

"நாம் ஒருவரையொருவர் ஏற்கனவே தெரிந்தவர்களா?" என்று மெசேஜ் அனுப்பினேன்.

அவள் உடன் பதிலளித்தாள்: " ஆம்! நீங்கள் திருமணம் செய்து கொண்டீர்கள் என்று நான் கேள்விப்பட்டேன், ஆனால் நான் இன்னும் உங்களையே நேசிக்கிறேன்."

அவள் முன்னர் எனது தோழியாக இருந்தவள். அத்துடன் படத்தில் மிகவும் அழகாக இருந்தாள். நான் அவளுடனான அரட்டையை முடித்துவிட்டு என் மனைவியைப் பார்த்தேன், அவள் கடுமையான வேலையின் களைப்புக்குப் பிறகு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்தேன். ‘என்னுடன் முற்றிலும் புதிய சூழலில், தனது குடும்பத்திலிருந்து வெகு தூரமாக, எனது வீட்டில் அவள் எவ்வளவு வசதியாக, நிம்மதியாக தூங்குகிறாள். அவள் என்னோடு இருப்பதை எவ்வளவு பாதுகாப்பாக உணர்கிறாள்’ என்று யோசித்துப பார்த்துக் கொண்டிருந்தேன்.

‘அவள் தனது பெற்றோரின் வீட்டிலிருந்து, தனது உறவுகளை விட்டு விட்டு, வெகு தொலைவில் என்னுடன் இருக்கிறாள், அங்கு அவர் தனது குடும்பத்தினரால் சூழப்பட்ட இருபத்தி நாலு மணி நேரத்தை மகிழ்வோடு கழித்தாள். அவள் வருத்தமாகவோ அல்லது சோகமாகவோ இருந்தால் மடியில் தலை வைத்துப் படுத்து அழுவதற்கு அவளுடைய அம்மா இருந்தாள். அவளுடைய சகோதரியோ அல்லது சகோதரனோ ஜோக்ஸ் சொல்லி அவளை சிரிக்க வைப்பார்கள். அவளுடைய அப்பா வீட்டிற்கு வந்து அவள் விரும்பிய அனைத்தையும் கொண்டு வருவார், இன்று அவள் அவை அனைத்தையும் விட்டுவிட்டு, என் மீது மட்டுமே மிகுந்த நம்பிக்கை வைத்து இங்கு வந்து என்னையே நம்பி வாழ்கிறாள்.’

இத்தகைய எண்ணங்கள் எல்லாம் என் மனதில் அலை பாய்ந்தன. நான் முகநூலை திறந்து அந்த புதியவளின் தொடர்பை துண்டித்தேன். பின் என் மனைவியின் பக்கம் திரும்பி அவளை மிகுந்த அன்போடு அணைத்துக் கொண்டு தூங்கினேன்.

‘நான் ஒரு வளர்ந்த மனிதன், ஒரு குழந்தையோ சிறுவனோ அல்ல. நான் அவளுக்கு உண்மையாக இருப்பேன் என்று சத்தியம் செய்தேன், அது அப்படியே என்றும் இருக்கும். மனைவியை ஏமாற்றி குடும்பத்தை துண்டாடாத மனிதனாக வாழ நான் என்றும் போராடுவேன். எந்தவித சூழல் தாக்கங்களினாலும் நான் தடுமாறி விட மாட்டேன்.’ என்று உறுதி பூண்டேன்.’

இத்தகைய உண்மையுள்ள நேர்மையான மனிதர்கள் அனைவருக்கும் இறைவன் அருள் புரிவான்! ஒவ்வொரு ஆண் மகனும் இவ்வாறே வாழ உறுதி பூண வேண்டும்.

## தகவல் களஞ்சியம்

### இலங்கையில் சிகரெட் பாவனை!

சிகரெட் பாவனையால் இந்நாட்டில் நாளாந்தம் 50 பேர் உயிரிழப்பதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20,000 பேர் புகைபிடிப்பதால் உயிரிழப்பதாக அந்த நிலையம் சுட்டிக்காட்டுகிறது.

தற்போது இலங்கையில் சிகரெட் பாவனை 9.1 வீதத்தால் குறைந்துள்ளதுடன் இளைஞர்கள் மத்தியில் சிகரெட் பாவனை வேகமாக குறைந்து வருவதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. புகையிலை நிறுவன அறிக்கைகளின்படி, கடந்த ஆண்டில் சிகரெட் உற்பத்தி 19 சதவீதம் குறைந்துள்ளது.

உலகில் சிகரெட் பாவனை குறைவடைந்து வரும் நாடுகளில் இலங்கையில் நல்ல போக்கு காணப்பட்டாலும் இன்னும் சுமார் 1.5 மில்லியன் மக்கள் சிகரெட் பாவனையில் ஈடுபடுவதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சிகரெட் பயன்படுத்துவதற்கு பன்னாட்டு புகையிலை நிறுவனங்கள் பல தந்திரங்களை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது. இதேவேளை, பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகைபிடிக்கும் பழக்கம் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொஞ்சம் சிரிங்க!




# தொடர்கிறதே கதையில் விறுவிறுப்பு இந்த வாரமும் படர்கிறதே பரபரப்பு!




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

சொலமன் சிரஞ்சீவியின் முகத்தில் ஏற்படும் மாற்றங்களையே கவனித்துக் கொண்டிருந்தார். “இந்த விஷயத்தில் இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன சொலமன். தோமஸ் எதற்காக இன்று இங்கே வந்தார் என்பது எனக்குத் தெரியும். அதேபோல் உங்களிடம் இருந்து என்ன எதிர்பார்த்தார் என்பதும் எனக்குத் தெரியும். மருதானையில் இருக்கும் பேபி நோனாவையும் எனக்குத் தெரியும். துர்காவிற்கு என்ன நடந்தது என்பதும் எனக்குத் தெரியும்.”

இப்படி சொல்லி விட்டு,

சிரஞ்சீவி சொலமனைப் பார்த்தார்.

அவர் எதுவும் பேசாமல்,

தலையை ஆட்டியபடியே சிரஞ்சீவியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

சிரஞ்சீவியே மீண்டும் தொடர்ந்தார்.

“நான் இப்போது உங்களுக்கு ஒரு அழகான கதை சொல்லப் போகிறேன். எங்கள் இருவருக்கும் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென்று நினைக்கிறேன். அதற்கு முன்பு செல்வராகவனின் கொலையைப் பற்றி தற்காலிகமாக நாம் கொஞ்சம் மறந்து விடுவோம்.

அப்போது மிஞ்சுவது என்ன தெரியுமா? ஐம்பத்தைந்த வயதுடைய ஒரு மனிதன் இருபத்தி இரண்டு வயதுடைய ஒரு கன்னிப்பெண்ணின் மீது கொண்ட பொருத்தமற்ற காதல் காட்சி. காட்சிமட்டும்தான்! இதனால் அந்த ஐம்பத்தைந்து வயது முது மகனுக்கு எதிராக இருபத்தி ஐந்து வயதுடைய ஓர் இளைஞன் முன் வந்ததனால் பொருந்தாத காதல் வெறித்தனமான காதலாக மாறியது!”

சிரஞ்சீவி இப்படிச் சொன்னதும்,

சொலமனின் முகம்,

பிணத்தின் முகத்தைப் போல் மாற்றம் கண்டது!

“செல்வராகவன் கொலை செய்யப்பட்ட தினத்திலிருந்து நான் கண்டுபிடித்த தகவல்களிலிருந்து இதை ஆரம்பிப்போம். கொலைகாரனின் சந்தேகப்பட்டியலில் இருந்து தற்காலிகமாக நான் உங்களை நீக்கி வைக்கிறேன்!”

“ஓ கொலைகாரன் பட்டியலில் இருந்த என்னை தற்காலிகமாக நீக்கி வைக்கிறேன் என்று சொன்னீர்கள் அல்லவா மகிழ்ச்சி. அதேபோல் இந்த வழக்கு முடிவதற்குள் மற்ற எல்லா விஷயங்களில் இருந்தும் நீங்கள் என்னை விடுவித்து விடுவீர்கள்!” உற்சாக பானம் அருந்தியவரைப்போல் உயிர் பெற்றார் சொலமன்.”

இப்போது,

புன்னகை அவர் முகத்தில் பூமழை பொழிந்தது!

அதைப் பற்றியெல்லாம் ஆராயாமல் சிரஞ்சீவி தனது பேச்சைச் தொடர்ந்தார்.

“நீங்கள் துர்காவை காதலித்த விஷயம் எனக்குத் தெரியும். அதேபோல் திருமணம் செய்து கொள்வதற்கு சம்மதம் கேட்டதும் எனக்குத் தெரியும்! ஆனால் செல்வராகவனோ துர்காவோ அதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை! ஆனாலும் நீங்கள் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை. இந்த நேரத்தில்தான், பிச்சை எடுத்தாராம் அனுமார் அதைப் பிடுங்கிச் சென்றாராம் பெருமாள் என்பதைப் போல் எனது மருமகன் இங்கே வந்து சேர்ந்த விஷயம் நடந்திருக்கிறது!”

“அதன்பிறகு இளம் ஜோடிகள் காதலில் விழுந்ததனால் அதைப் புரிந்து கொண்ட நீங்கள் துர்காவை அடைவதில் அதிக ஆர்வம் காட்டினீர்கள். அன்று அதாவது செல்வராகவனின் உடல்தகனத் தினத்தன்று துர்காவின் டைரியில் இருந்து வெளியான கருத்துகளைப்பற்றி உங்களுக்கும் ஞாபகம் இருக்குமென்று நினைக்கிறேன். துர்கா அந்த டைரியை தீப்பிடித்த வீட்டில் இருந்து எடுத்த விதம் அந்த டைரி எவ்வளவு முக்கியமானது என்பதை எல்லோருக்கும் எடுத்துக்காட்டியிருக்கும். அதனால் அதில் என்ன எழுதி இருக்கும் என்று அறியும் ஆவல் உங்களுக்கு ஏற்பட்டது. அன்று இரவு மாறுவேடத்தில் ரெஸ்ட்ஹவுசுக்குள் நுழைந்து அந்த டைரியை திருடிக்கொண்டு சென்றீர்கள். சிந்துஜனைப்பற்றி துர்கா எழுதியிருந்த காதல் வசனங்கள் உங்களைப் பைத்தியக்காரனாக்கியிருக்கும் என்பது நிச்சயம்.

“அந்தத் துரோகி இங்கே வராமல் இருந்திருந்தால்!”

பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டார் சொலமன்

“அன்புள்ள நண்பரே அவன் இங்கே வரவில்லையென்றால் வேறு ஒரு சங்கரோ சாரங்கனோ கூட வந்திருக்கலாம் துர்கா சொலமனுக்குத்தான் சொந்தமாக வேண்டும் என்பது கட்டாயமா என்ன! இதனால் இந்தக் காரணத்தினால்தான் துர்காவை மறைத்துவைப்பதற்கு நீங்கள் முடிவு செய்தீர்கள்!” என்று

சொல்லிவிட்டு,

கவலையுடன் சொலமனைப் பார்த்துக் கொண்டிருந்தார்!

சொலமன் எதுவுமே பேசாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

தொடர்ந்தார் சிரஞ்சீவி,

“மருதானையில் இருக்கும் பேபி நோனாவை எல்லா பொலிஸ்காரர்களுக்கும் தெரியும். உங்கள் பைத்தியக்காரத்தனமான யோசனையை நிறைவேற்றுவதற்காக வேலைக்காரன் முனியாண்டியின் உதவியுடன் நீங்கள் அவளைப் பயன்படுத்திக் கொண்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். துர்காவிற்கு ஏதோ ஆபத்து வரப்போகிறது எனக்கு கிடைத்த தகவலை வைத்து அவளைப் பாதுகாப்பதற்காக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை வேலைக்காரன் வேடத்தில் இங்கே அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தேன். ஆனால் இதை எப்படியோ உணர்ந்து கொண்ட நீங்கள் அவர் மீது ஒரு கண் வைத்தீர்கள். இரவுநேர காவல் மட்டும்தான் அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இதை அறிந்திருந்த நீங்கள் நேற்று பகல் துர்காவை ஏதாவது மருந்து கொடுத்து மயக்கியோ அல்லது மிரட்டியோ இந்த குளியல் அறைக்குள் மறைத்துவைத்துள்ளீர்கள்!”

இப்படிச் சொல்லிவிட்டு,

சொலமனை உற்றுப்பார்த்தார் சிரஞ்சீவி

“ம் எனக்கெதிராக கற்பனை வழக்கொன்றைத் தயார்படுத்துகிறீர்கள் போல் தெரிகிறதே!”

வாய்விட்டுச் சிரித்தார் சொலமன்.

“எதுவும் பொய்யும் இல்லை கற்பனையும் இல்லை குளியல் அறைக்குள் இருந்த நாற்காலியில் இருந்த துர்காவை அங்கே இருந்த கபட்டுக்குள் மறைத்து வைத்துள்ளீர்கள். அதற்கு ஆதாரமாக பகலில் இங்கே இருந்த துர்கா, அதன்பிறகு என்னவானாள் என்று எவருக்குமே தெரியாமல் இருப்பதுதான்!”

“அதேபோல் நேற்றுபகல் நீங்கள் காரில் போனதும் உண்மைதான். ஆனால் துர்காவையும் அழைத்துகொண்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு போனதாக நீங்கள் சொன்னது பச்சைப்பொய்! அதற்குப் பதிலாக கொழும்புக்குப் போய் துர்கா அனுப்பியதை போல் தந்தி ஒன்றை அனுப்பினீர்கள். ஆனால் அந்த நேரத்தில் அவள் எங்கே இருந்தாள் தெரியுமா? அந்த பழைய குளியல் அறைக்குள் இருந்த கபட்டுக்குள்! ஏதாவது மயக்க மருந்தைக் கொடுத்து அவளை மயக்கமாக்கி இருப்பீர்கள்! அதேநேரம் நாங்களும் முட்டாள் கூட்டத்தைப் போல் உங்கள் சதித்திட்டத்தில் சிக்கி கொழும்பில் சீரழிந்திருக்கிறோம். இந்த இடத்தில் இருந்து எங்களை அனுப்பிவிட்டு துர்காவை கடத்திக் கொண்டு செல்வதுதான் உங்கள் திட்டமாக இருந்தது! ஆமாம் அதில் நீங்கள் வெற்றியும் பெற்றுவிட்டீர்கள்! அநுராதபுரத்தில் இருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்ததாகக் கூறிவிட்டு நீங்கள் போன இடம் தியத்தலாவ!”

ஏதோ விழுங்குவதைப் போல் தடுமாறினார் சொலமன்.

அவரால் எதையும் பேச முடியவில்லை!

தொண்டைத் தண்ணி எல்லாம் வற்றிப்போயிருந்தது!

“இப்போது அந்த துர்கா எங்கே இருக்கிறாள் என்று சொல்லவா? பேபியின் கட்டுப்பாட்டில் துப்பாக்கி முனையில் இருக்கிறாள்!” என்று தான் சொன்ன கதையை முடித்தார் சிரஞ்சீவி.

“சரி நீங்கள் இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?” கலவரத்துடன் கேட்டார் சொலமன்.

“முதலில் துர்காவை விடுவிக்க வேண்டும். அடுத்ததாக உங்களைக் கைது செய்யும்படி பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டும்!”

“ஆ! உண்மையில் நான் தோற்றுவிட்டேன் சிரஞ்சீவி. நீங்கள் தெரிந்து கொள்வதற்காக நான் இப்போது உண்மையைச் சொல்லுகிறேன். இதில் உங்களுக்கு தெரியாத ஒரு பங்கும் இருக்கிறது!” என்று சொல்லிவிட்டு,

அந்த பழைய குளியல் அறையின் அருகில் சிரஞ்சீவியையும் அழைத்துக் கொண்டு சென்றார் சொலமன். அந்த அறையின் அருகில் வந்ததும்,

“ம் நான் இந்த இடத்திற்கு துர்காவை அழைத்து வந்தது உண்மைதான். அவளை அழைத்து வந்ததைப் போல் உங்களையும்



அழைத்து வந்துவிட்டேன் அழைத்து வந்து!” என்று சொல்லிவிட்டு,

கால்சட்டைப் பாக்கெட்டில் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றை எடுத்து,

சிரஞ்சிவியின் மார்பை குறிவைத்து நீட்டினார்.

“ம் உயிர்மீது ஆசையிருந்தால் அசையாதீர்கள்! கூச்சல்போட்டால் இந்த இடத்திலேயே சுட்டுத்தள்ளி விடுவேன்!” பயங்கரமாக கர்ஜித்தார் சொலமன்!

அவர் கையில் இருந்த துப்பாக்கியைப் பார்த்து,

தலையை ஆட்டினார் சிரஞ்சீவி.

“ம் இது இரண்டு மர்மம் அல்ல ஒரே மர்மம் என்பது இப்போது எனக்குப் புரிகிறது! செல்வராகவனைக் கொலை செய்தது நீங்கள்தான் சொலமன்!”

“ஆமாம் செல்வராகவனைக் கொலை செய்ததும் நான்தான் இப்போது உங்களையும் கொலை செய்யப் போகிறேன்!” என்று சொல்லியபடியே,

கபர்ட் கதவைத் திறந்தார்.

“ம் இப்போது வாயைப் பொத்திக் கொண்டு இதற்குள் போ! சீக்கிரம் சீக்கிரம் உள்ளே போ சிரஞ்சீவி!” துப்பாக்கி முனையால் அவரை இடித்து,

கபட்டுக்குள் தள்ளிவிட்டு,

கதவைச் சாத்தி தாழ்ப்பாள் போட்டார்.

சுமார் அரை மணித்தியாலத்துக்குப் பிறகு,

சொலமனின் கார் செல்லும் ஓசை சிரஞ்சீவிக்குக் கேட்டது!

(தொடரும்)

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 120

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | | 11 | 12 | | 13 |
| | 14 | | 15 | 16 | |
| 17 | 18 | 19 | | 20 | 21 |
| 22 | | 23 | 24 | 25 | 26 |

பெயர் ........................................

வகுப்பு ........................................

தொலைபேசி இல ........................................

பாடசாலை பெயர் ........................................

வதிவிட முகவரி ........................................

........................................

.................... ....................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) மூன்று நேரான பக்கங்கள், மூன்று அகக்கோணங்கள் கொண்ட தளவுரு இது.
(8) அரைப்பகுதியைக் குறிக்கும் சொல்.
(11) குளம், ஆறு, சுனை போன்று இதுவும் ஒரு நீர்நிலை. (தலைகீழான சொல்)
(15) நீர்நிலைகளின் கரைகளில் வளருகின்ற தாவரம் இது. மணல்தரையில் தாவரம் சரிந்து விடாமலிருக்க மிண்டி வேர்கள் கொண்ட தாவரம். இலைகளில் முட்கள் கொண்டது. (தலைகீழான சொல்)
(17) மூன்றுக்கு அடுத்ததாக வருவது. (தலைகீழான சொல்)
(20) சந்திரனுக்கு பல பெயர்கள் உள்ளன. நிலா, நிலவு, அம்புலி, திங்கள் போன்ற பெயர்களில் இதுவும் ஒன்று.
(23) கரைசல் ஒன்றை தயாரிக்க வேண்டுமானால் கரைப்பானுடன் இதுவும் வேண்டும். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) நீண்ட செவிகள், முன்னங்கால்களை விட பின்னங்கால்கள் நீளம் கொண்ட சிறிய உருவமுடைய காட்டு விலங்கு இது. தாவர உண்ணியான இம்மிருகம் பாய்ந்து பாய்ந்து வேகமாக ஓடக் கூடியது. இலங்கையில் காடுகள் வேகமாக அழிக்கப்படுவதாலும், வேட்டையாடப்படுவதாலும் இம்மிருகம் அருகிச் செல்கின்றது.
(3) விறகு வெட்டுவதற்கும், மரத்தைத் தறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்ற கூரிய உபகரணம் இது.
(5) மிகவும் வேகமாக ஓடக் கூடிய மிருகம். முதுகில் இருவரை சுமந்தபடி நீண்ட தூரம் ஓடக்கூடிய இம்மிருகம், அக்காலத்தில் மக்களின் நீண்ட தூரப் பயணத்துக்காகவும், யுத்தம் புரியவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.
(12) மிகவும் வறிய நிலையிலுள்ளவரைக் குறிக்கும் சொல்.
(14) தலைமுடியில் வாழ்ந்து, இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து உயிர்வாழும் சிறு பூச்சியினம். பெண்களுக்குத்தான் பெரும்பாலும் தொந்தரவு கொடுக்கும் உயிரினம் இது.
(16) குளம் போன்ற நன்னீர்நிலைகளில் காணப்படுகின்ற தாவரம். தரையில் இருந்து நீர்மட்டம் வரை நீண்ட தண்டுகள், அகன்ற இலை, அழகிய பூக்கள் கொண்ட தாவரம். செந்நிறமாகவும், வெண்ணிறமாகவும் பூக்கள் பூக்கும் இனங்கள் உள்ளன.
(17) எமக்கு மழைக்கும், வெயிலுக்கும் பாதுகாப்புத் தருவது. வீட்டில் இருந்து வெளியில் எங்காவது புறப்பட வேண்டுமானால் தவறாமல் எடுத்துச் செல்வது அவசியம்.
(19) தன்மை, பன்மை பெயர்ச்சொல்.
(21) பொருள் ஒன்றின் அசைவைக் கணிக்கும் போது இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது வேகத்தைக் குறிப்பிடும் போது இச்சொல் பாவனையில் உள்ளது. அதாவது ஓரலகு நேரத்தில் பயணம் செய்த தூரம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 119

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கண்ணாடி 08. மாலை 11. அரிசி
17. கன்று 20. பால் 23. ஆந்தை

**மேலிருந்து கீழ்**

01. கறுவா 03. அண்ணா 05. வலை 08. மாசி
12. மாரி 14. மான் 16. வால் 17. கடை
19. ஆறு 20. பாதை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 118

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.என்.எம். பாயிக்**
தரம் 04D, முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்,
இல. 51B, றவுளா மன்சில், சம்மாந்துறை 03.

**2. எம்.ஏ.எப். அலீனா**
க/பதியுதீன் பெண்கள் பாடசாலை,
இல. 98/A, சுஜாதா லேன், றம்புக்கன வீதி, கலகெதர.


**3. எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்**
தரம் 08, 'அலிப்' சர்வதேச பாடசாலை,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**4. எம். இர்பான் ஜெஹான்**
தரம் 05B, கைரியா பெண்கள் கல்லூரி,
இல. 155/32, மொஹிதீன் மஸ்ஜித் வீதி, மருதானை.
கொழும்பு 10.

**5. எம்.ஏ. முஹன்னித்**
தரம் 08, அறபா வித்தியாலயம்,
இல. 170A, ஆர்.டீ.எஸ். வீதி, அட்டாளைச்சேனை 08.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 120
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.


தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**புகழ்: உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்
கொன் றீவார்மேல் நிற்கும் புகழ்**

***தெளிவுரை :***
*புகழ்ந்து சொல்கின்றவர் சொல்பவை எல்லாம் வறுமையால் இரப்பவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவுகின்றவரின் மேல் நிற்கின்ற புகழேயாகும்.*

# ஆபத்தில் அறியப்படும் நட்பு



தந்தை ஒருவர் ஒரு பெரிய ஆட்டை வெட்டி நெருப்பினில் வாட்டி, தன் மகனிடம் சொன்னார்; "மகனே, நம்முடன் சாப்பிட என் நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் அழைக்கவும் எல்லோரும் ஒன்றாக சாப்பிடுவோம் என்றார்.

அவருடைய மகன் தெருவுக்கு வந்து கத்த ஆரம்பித்தான். "தயவுசெய்து எங்கள் வீட்டில் எரியும் தீயை அணைக்க எங்களுக்கு உதவுங்கள்!".

சில நிமிடங்களுக்குப் பிறகு, ஒரு சில மக்கள் வெளியே வந்தனர், மீதமுள்ளவர்கள் உதவிக்கான கூக்குரலைக் கேட்காதது போல் செயல்பட்டனர். வந்தவர்கள் நள்ளிரவு வரை நன்றாக சாப்பிட்டு கொண்டாட்டமாக கழித்தனர். திகைத்த தந்தை! தன் மகனிடம் திரும்பி, அவனிடம் கேட்டார். "வந்த மக்களை எனக்கு தெரியாது, இதுவரை அவர்களைப் பார்த்ததில்லை, எனவே என்னுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் எங்கே?".

மகன் சொன்னான், "தங்கள் வீடுகளில் இருந்து வெளியே வந்தவர்கள் நம் வீட்டில் எரிவதாக நினைத்த தீயை அணைப்பதற்கே அன்றி, விருந்து உண்ண அல்ல. இவர்களே நம்முடைய தாராள மனப்பான்மைக்கும் விருந்தோம்பலுக்கும் தகுதியானவர்கள். நீங்கள், வாழ்க்கையில் துன்பப்படுகிறீர்கள் என்று தெரிந்தும், உங்களுக்கு உதவாதவர்கள், ஒருநாள் நீங்கள் வெற்றி அடையும் போது அந்த மகிழ்ச்சியில் பங்கு கொள்ள எப்படி தகுதியானவர்களாக இருக்கக்கூடும்!?

உண்மையான நண்பர்கள் மற்றும் உறவினர்களே துன்பத்திலும் சந்தோஷத்திலும் எப்போதும் நம்முடன் இருக்கின்றனர். இதை மனதில் வைத்து நாம் எவரை நம்முடைய வாழ்வில் நம்ப வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

# இவ்வார மழலை



பாத்திமா றெயானா
ருஸ்னா - உவைஸ்






பி. ஹரிஹர சுதன்
தரம் 09, கேம்பிரிட்ஜ் பாடசாலை, கொழும்பு.

# கடலில் ஏற்படும் ஆபத்தான சதுர அலைகள்



கடலில் ஏற்படும் சதுர அலைகள் அல்லது குறுக்கு அலைகள் மிகவும் ஆபத்தானது.

ஒரு பக்கத்திலிருந்து வரும் காற்று தொடர்ந்து ஒரே திசையில் நகரும்போது எதிரெதிர் பக்கத்திலிருந்து நகரும் காற்றோடு மோதி சதுர அலைகள் உருவாக்கப்படுகின்றன.

இது புதிய காற்றினால் உருவாக்கப்பட்ட அலைகளை ஒரு கோணத்தில் இயக்கச் செய்து, கடலில் சதுரம் போன்ற வடிவத்தை உருவாக்குகிறது.

இந்த அலை மேற்பரப்பில் முற்றிலும் பாதிப்பில்லாததாக தோன்றுகிறது. இருப்பினும், சதுர அலைகள் நீருக்கடியில் மிகவும் ஆபத்தான நீரோட்டங்களை உருவாக்குகின்றன. கோட்பாட்டளவில், சதுர அலைகள் பாரிய கப்பல்களைக் கவரும் திறனைக் கொண்டுள்ளன. கப்பல்கள் அலைகளைத் தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் அலைகள் பல கோணங்களில் இருந்து கப்பலைத் தாக்கினால் மிதக்க முடியாது.

சதுர அலை நிகழ்வு பிரான்சின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள எல் டி ரே தீவில் அடிக்கடி நிகழ்கிறது. சதுர அலைகள் மிகவும் ஆபத்தான சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றன.

எனவே, இந்த இயற்கை நிகழ்வை நீங்கள் கண்டால், கடலில் நீந்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். அதிர்ஷ்டவசமாக சதுர அலைகள் அரிதாகவே நிகழ்கின்றன. ஆனால் அவை என்னவென்று தெரிந்துகொள்வது மிகவும் முக்கியம்.



# நீண்ட நாட்கள் நீரின்றி வாழும் ஒட்டகச்சிவிங்கி


ஒட்டகத்தைவிட அதிக நாட்கள் தண்ணீர் இல்லாமல் வாழக்கூடிய உயிரினம் ஒட்டகச்சிவிங்கி. ஓரிரு வாரங்களுக்கு ஒரு முறைதான் இவை நீர் அருந்துகின்றன. கால்களின் அதிக உயரம் மற்றும் குட்டையான கழுத்தின் காரணமாக, மற்ற விலங்குகளைப்போல் நின்றுகொண்டே நீரைப்பருக இவற்றால் முடியாது.

இதற்கு தண்ணீர் வேண்டுமென்றால் முன்னிரு கால்களை அகட்டி வைத்தோ, மண்டியிட்டோதான் பருக வேண்டும். இதனாலேயே இவை அடிக்கடி தண்ணீரைத் தேடுவதில்லை. மாறாக இவற்றின் உணவுகளிலிருந்தே தேவையான நீரை எடுத்துக்கொள்கின்றன. ஆனால், தண்ணீர் தேவை என்று வந்துவிட்டால், ஒரே நேரத்தில் அதிகபட்சமாக 45 லீற்றர் தண்ணீரைக் குடிக்கின்றன.

ஒட்டகச்சிவிங்கிகளைத் தூங்கும்போது பிடிப்பது மிகக்கடினம். ஏனென்றால், ஒரு நாளில் இவை தூங்கும் நேரம் மொத்தமாக 30 நிமிடங்கள் தான். இவற்றின் கால்கள் (கால்களின் உயரம் மட்டுமே) சராசரியாக ஆறடி உயரம் கொண்டவை. ஒரு மரத்திலிருந்து உணவு உட்கொள்ளும்போது ஆணும் பெண்ணும் சாப்பாட்டுக்கு போட்டி வந்துவிடக்கூடாது என்பதற்காக வெவ்வேறு பகுதிகளைத் தேர்வுசெய்கின்றன.

ஒட்டகச்சிவிங்கிக்கு 4 வயிறுகள் உள்ளன. கூட்டமாக வசித்தாலும், தலைவன்/தலைவி என்று யாரும் கிடையாது.

# செய்து பாருங்கள்





## வண்ணத்துப் பூச்சி

வண்ண வண்ணப் பூச்சியாம்
வண்ணத்துப் பூச்சியாம்
உண்ணும் கொஞ்சம் தேனையாம்
உயர உயரப் போகுமாம்!

இன்னும் கொஞ்சம் வேணுமாம்
இறங்கி வந்தே பாடுமாம்
சின்னப் பூவும் சிரிக்குமாம்
தேனும் உண்ணக் கொடுக்குமாம்!

இக்ராம்
தரம் 5
அல் மஹ்மூத்
மகா வித்தியாலயம்
மள்வானை

## தேனீக்களின் நடனம்



தேனீக்கள் ஒன்றுடன் ஒன்று பேச வித்தியாசமான முறையைப் பயன்படுத்துகின்றன. இது "வாக்ல் நடனம்" என அழைக்கப்படுகின்றது. ஒரு தேனீ நல்ல பூவை கண்டுபிடித்தால், அது மற்ற தேனீக்களுக்கு எங்கு செல்வது என்பதை காட்ட நடனம் ஆடுகின்றன.



# தொழில்நுட்பத்தின் அதிசய வளர்ச்சி

தொழில்நுட்ப வளர்ச்சி இன்று நம்முடைய வாழ்க்கையில் மிக முக்கியமானது. சில ஆண்டுகளுக்கு முன் தொலைபேசிகள் மிகப் பெரியவையாகவும் வெகு குறைவான வசதிகள் கொண்டவையாகவும் இருந்தன. ஆனால், தற்போது ஸ்மார்ட்போன்கள் நம்முடைய கைபேசியில் இணையம், கேம்கள், கல்வி மற்றும் சமூக ஊடகங்களை கொண்டுவருகின்றன. கையடக்கத் தொலைபேசிகள் மூலம் நாமெல்லாம் இன்றைய தகவல் யுகத்தில் இணைந்துள்ளோம்.

கணினிகள் மற்றும் இணையம் மூலம் உலகம் முழுவதும் தகவல்களை பெறுவதும் பகிர்வதும் எளிதாகியுள்ளது. இணையத்தின் உதவியால், உலகின் எந்த மூலையில் இருந்தும் நமக்கு தேவையான தகவல்களை நமக்குத் தேவையான நேரத்தில் பெற முடிகின்றது. இது நாம் வேலை செய்வது, விளையாடுவது மற்றும் கற்றுக்கொள்வது போன்ற அனைத்து விடயங்களையும் மாற்றி விடுகிறது.

ரோபோடிக்ஸ் மற்றும் ஒட்டோமேஷன் தொழில்நுட்பம் தொழில்களில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தி, மனித உழைப்பை குறைக்கின்றன. ரோபோக்கள் மற்றும் ஒட்டோமேஷன் மின்னணு சாதனங்கள் தொழில்களில் மிகுந்த பொருட்செலவை மிச்சம் செய்யும் வகையில் செயற்படுகின்றன. இந்த தொழில்நுட்பங்கள் தொழில்களில் அதிக செயற்றிறனை கொண்டு வருகின்றன.

மேலும், விரைவான போக்குவரத்து மற்றும் உயர் தொழில்நுட்ப மருத்துவ சாதனங்கள் நம்முடைய வாழ்வில் மிகப் பெரிய முன்னேற்றங்களை தருகின்றன. உயர் தொழில்நுட்ப மருத்துவ சாதனங்கள் நோய்களை மிக விரைவாகக் கண்டறியவும் முறையாக சிகிச்சை அளிக்கவும் உதவுகின்றன. இதனால் மருத்துவம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது.

கல்வியிலும் தொழில்நுட்பம் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒன்லைன் வகுப்புகள் மூலம் மாணவர்கள் உலகத்தின் எந்த மூலையிலும் இருந்து படிக்க முடிகின்றது. இது உலகின் எந்த மூலையிலும் உள்ள கல்வி வளங்களை நமக்குக் கிடைக்கச் செய்கின்றது.

மேலும், இச் செயற்பாடுகள் மூலம், தொழில்நுட்ப வளர்ச்சி நம் வாழ்க்கையை எளிதாக்கி, நம் உலகத்தை மாற்றி வருகிறது. கணினி கற்றல் *(Machine Learning)*, செயற்கை நுண்ணறிவு *(Artificial Intelligence)* போன்ற புதிய தொழில்நுட்பங்கள் உலகின் பல்வேறு துறைகளில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

ஸ்வேதா...

மஞ்சரி விளையாட்டு

# டி20 உலகக் கிண்ணம்: திருத்தங்கள் தேவை...




எதிர்பாராத முடிவுகள், எதிர்பார்த்த சிக்கல்கள் என்று டி20 உலகக் கிண்ணப் போட்டி நிறைவடைந்தது. அடுத்து 2026 ஆம் ஆண்டு பத்தாவது டி20 உலகக் கிண்ணத் தொடரை இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்தப்போகிறது.

இம்முறை முதல் சுற்றிலேயே வெளியேறிய இலங்கை போட்டியை நடத்தும் நாடு என்பதால் எந்தப் பிரச்சினையும் இன்றி அடுத்த உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றுவிட்டது. முதல் சுற்றில் வெளியேறிய மற்ற முன்னணி நாடுகளான பாகிஸ்தான், நியூசிலாந்து நாடுகளும் சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் (ஐ.சி.சி.) தரவரிசையில் முன்னிலை பெற்றிருப்பதால் அடுத்த தொடருக்கு இடத்தைப் பிடித்துவிட்டன.

இம்முறை போட்டியை நடத்தும் நாடு என்ற வகையில் உலகக் கிண்ணத்திற்கு முதல் முறை தகுதி பெற்ற அமெரிக்கா சுப்பர் 8 சுற்று வரை முன்னேறியதால் அடுத்த உலகக் கிண்ணத்தில் தமது இடத்தை உறுதி செய்திருக்கிறது.

அடுத்த உலகக் கிண்ணத்திலும் மொத்தம் 20 அணிகள் பங்கேற்கும் நிலையில் இம்முறை சுப்பர் 8 இற்கு முன்னேறிய அணிகளுடன் ஐ.சி.சி. தரவரிசையில் முன்னிலை பெற்றிருக்கும் அயர்லாந்து அடுத்த தொடருக்கு தகுதி பெற்றிருக்கிறது.

இதன்படி 2026 உலகக் கிண்ணத்திற்கு 12 அணிகள் நேரடி தகுதி பெற்றிருக்கும் நிலையில் மற்ற எட்டு அணிகளும் பிராந்திய மட்டத்தில் நடைபெறும் தகுதி காண் சுற்றில ஆடி தனது தகுதியை உறுதி செய்ய வேண்டி இருக்கும்.

மற்றபடி அடுத்த டி20 உலகக் கிண்ணமும் இம்முறை நடந்த வடிவத்திலேயே நடைபெறப்போகிறது. இருபது அணிகளும் ஐந்து அணிகளாக பிரித்து ஆரம்ப சுற்றில் ஆடி, தொடர்ந்து சுப்பர் 8, பின்னர் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி என்பது தான் திட்டம்.

டி20 உலகக் கிண்ணத்தில் 20 அணிகள் பங்கேற்றது இந்தத் தடவையே முதல் முறை, அமெரிக்காவில் உலகக் கிண்ணம் நடந்தது இம்முறை தான் முதலாவது. எனவே எத்தனையோ சாதக பாதகங்கள் இருக்கின்றன. குறிப்பாக ஏற்பட்ட குறைகளை அடுத்த உலகக் கிண்ணத்திலாவது சரி செய்வது முக்கியம்.

## ஆடுகளம்




இம்முறை உலகக் கிண்ணத்தில் பெரிதாக எழுந்த பிரச்சினைகளில் ஒன்று ஆடுகளங்கள். குறிப்பாக ஆரம்ப சுற்று நடந்த அமெரிக்காவின் ஆடுகளங்கள் சர்வதேச தரம் வாய்ந்ததாக இருக்கவில்லை என்பது பொதுவான குறை. அதிலும் நியூயோர்க் ஆடுகளம் பற்றி கூறவே தேவையில்லை.

உலகக் கிண்ணத்திற்காகவே அவசர அவசரமாக தயாரிக்கப்பட்ட அந்த ஆடுகளத்தில் பந்து தன்னிஷ்டத்திற்கு வருகிறது. அங்கே எடுக்க முடியுமான அதிகபட்ச ஓட்டங்களே 120க்கும் குறைவு. இது டி20 கிரிக்கெட்டுக்கு பொருத்தமானதாக இல்லை.

பந்து துடுப்பாட்ட வீரர்களை நோக்கி அபாயகரமாக வருவதால் வீரர்கள் காயமடைவதற்கான சாத்தியங்களும் அதிகமாக இருந்தன. ஆரம்பப் போட்டிகளில் இந்த நிலை மோசமாக இருந்தபோதும் பிந்திய போட்டிகளில் ஐ.சி.சி. நிலைமையை சற்று சரி செய்தது. இதனால், நல்லவேளை துடுப்பாட்ட வீரர்கள் எவரும் பந்து பட்டு காயத்திற்கு உள்ளாகவில்லை.

அமெரிக்காவின் மற்ற மைதானங்கள் இந்த அளவுக்கு மேசமாக இல்லாதபோதும், டி20 கிரிக்கெட்டுக்கான தரத்தை கொண்டதாக இருக்கவில்லை.

அமெரிக்காவில் உலகக் கிண்ணத்தை நடத்துவது கிரிக்கெட்டின் மற்றொரு பரிமாணமாக இருந்தாலும், போட்டி ஏற்பாடுகளில் இதனை விடவும் கரிசணை காட்ட வேண்டி இருந்தது. அதிலும் கிரிக்கெட்டுக்கு முக்கியமாக இருக்கும் ஆடுகளங்கள் பற்றி அவதானம் முக்கியம்.

அடுத்த உலகக் கிண்ண போட்டிகள் சம்பிரதாயமாக கிரிக்கெட் ஆடும் நாடுகளில் நடைபெறுவதால் இந்தக் குறைகள் பெரிதாக இருக்க வாய்ப்பு இல்லை. என்றாலும் இந்தியாவின் சில ஆடுகளங்கள் கூட கடந்த காலத்தில் மோசமான தரத்தில் இருந்ததை அவதானிக்க முடிந்ததால் போட்டியின் உற்சாகத்தை கெடுக்காமல் பார்த்துக் கொள்வது மிக முக்கியம்.

## போட்டி அட்டவணை

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் போட்டிகளை நடத்துவது என்பதே கிரிக்கெட் உலகுக்கு சற்று அசௌகரியமானது. ஏனென்றால் கால அட்டவணை கிரிக்கெட் ஆடும் பெரும்பாலான நாடுகளுக்கு பொருந்துவதில்லை.

அமெரிக்காவில் இரவு என்றால் இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு பகலாக இருக்கும், அங்கே பகலாகும்போது இங்கே இரவாக இருக்கும். அதிலும் ஆபிரிக்க, ஐரோப்பிய பிராந்தியங்களைப் பொறுத்தவரை இம்முறை உலகக் கிண்ணம் நள்ளிரவு வாக்கிலேயே நடைபெற்றதால், கண் முழித்து பார்ப்பது சற்று கடிமாக இருந்தது.

என்றாலும் கிரிக்கெட் பார்க்கும் தொலைக்காட்சி ரசிகர்களுக்கு ஏற்ப போட்டிக்கான கால அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. குறிப்பாக இந்திய ரசிகர்களை இலக்கு வைத்து போட்டிகள் நடத்தப்பட்டன. இதனாலேயே கிரிக்கெட் பார்ப்பதற்கு கச்சிதமான நேரமான இரவு 8 மணிக்கு முக்கிய போட்டிகளை நடத்துவதற்கு ஐ.சி.சி. வகை செய்தது. என்றாலும் பாதி அளவான போட்டிகள் அதிகாலையில் நடந்ததால் விடுபட்டுப்போனது அதிகம்.

மற்றது அமெரிக்காவில் புயல் காற்று வீசும் பருவத்தை பார்த்து போட்டிகள் நடத்தப்பட்டதால் சில முக்கியமான ஆட்டங்கள் மழையோடே வடிந்து போயின. குறிப்பாக புளோரிடாவில் ஒரு வாரத்துக்கு மேலாக புயல், மழை தாக்கி பேரும் பாதிப்புகள் ஏற்பட்ட பருவத்திலேயே அங்கு போட்டிகள் நடத்தப்பட்டன.

இதனால் அங்கு நடைபெற வேண்டிய இலங்கை–நேபாளத்திற்கு இடையிலான ஆட்டம், அமெரிக்கா–அயர்லாந்துக்கு இடையிலான ஆட்டம், கனடா–இந்தியாவுக்கு இடையிலான ஆட்டம் கைவிடப்பட்டன. குறிப்பாக இதனால் அமெரிக்காவுக்கு கிடைத்த மேலதிக ஒரு புள்ளி அந்த அணி பாகிஸ்தானை வெளியேற்றி சுப்பர் 8 இற்கு முன்னேற பெரிதும் உதவியது.

ஹரிகன் புயலால் இலங்கை அணி ஒரு நாள் வெளியேற முடியாமல் புளோரிடாவில் சிக்கிக் கொண்டது.

மற்ற முக்கியமான விடயம் போட்டி அட்டவணையில் சமநிலை போக்கு இருக்கவில்லை. ஆரம்ப சுற்றில் சில அணிகளுக்கு ஒவ்வொரு போட்டியும் வெவ்வேறு மைதானங்களிலும் வேறு சில அணிகளுக்கு பெரும்பாலான ஆட்டங்கள் ஒரே மைதானத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதனால் சில அணிகள் பயணச் சுமைக்கு மத்தியிலேயே போட்டியில் ஆட வேண்டி இருந்தது. இதனால் அதிகம் பாதிக்கப்பட்ட அணியாக இலங்கையை குறிப்பிடலாம். இலங்கைக்கு ஆரம்ப சுற்றின் நான்கு போட்டிகளும் தொலை தூரங்களில் வெள;வேறு மைதானங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

நியூ யோர்க்கில் நடந்த முதல் போட்டி முடிந்த கையோடு இலங்கை வீரர்களால் ஹொட்டல் அறைக்கு ஓட்டம் பிடிக்க வேண்டி இருந்தது. அந்த ஹோட்டல் புருக்லியில் இருந்தது. அது போட்டி நடந்த மைதானத்தில் இருந்து ஒன்றரை மணி நேர தூரம். உடனடியாக புறப்பட்டால் தான் டலாஸ் செல்வதற்கு விமானத்தை பிடிக்க முடியும். டலாஸிலேயே பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது போட்டி இருந்தது.

இதன் பின்னரும் ஓய்வெடுக்க நேரம் இருக்கவில்லை. புளொரிடாவில் நேபாளத்திற்கு எதிரான போட்டிக்கு புறப்பட வேண்டி இருந்தது. அங்கே புயல், மழை நெருக்கடியை தந்தது. கடைசி போட்டிக்கு இலங்கை அணி மேற்கிந்திய தீவுகளுக்குச் செல்ல வேண்டி இருந்து. இலங்கை போன்று நெதர்லாந்தின் போட்டிகளும் ஒவ்வொரு தொலைவில் இருந்தன.





## இந்தியா–பாகிஸ்தான்

அண்டை நாடுகளாக இருந்தாலும் அரசியல் பிரச்சினைகள் காரணமாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரு தரப்புக் கிரிக்கெட் போட்டிகள் நடப்பது என்பது இன்றைய சூழலில் சாத்தியம் இல்லாத ஒன்றாக மாறி விட்டது. 2013 ஆம் ஆண்டிலேயே இந்த இரு அணிகளும் கடைசியாக இரு தரப்பு கிரிக்கெட் போட்டி ஒன்றில் ஆடி இருக்கின்றன.

இதனால் இந்தியா மற்றும் பாகிஸ்தான் போட்டிகளுக்கு இருக்கும் கேள்வி அதிகம். சர்வதேச விளையாட்டில் மிக முக்கியமான போட்டியாக இன்றைய திகதியில் அது மாறி இருக்கிறது. வர்த்தக ரீதியில் இந்தியா–பாகிஸ்தான் போட்டி என்பது பெருத்த இலாபத்தைத் தரும் ஆட்டம்.

எனவே, ஐ.சி.சி. போட்டிகளில் இந்தியா மற்றும் பாகிஸ்தானை ஆட வைப்பது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறி வருகிறது. இம்முறை உலகக் கிண்ணத்திலும் இதனைப் பார்க்க முடிந்தது.




ஆரம்ப சுற்றில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் ஒரு குழுவில் சேர்க்கப்பட்டு இரு அணிகளும் மோதிக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அதற்கு ஏற்ப இந்தியா–பாகிஸ்தான் அணிகள் மோதிய ஆட்டம் உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டியை விடவும் பரபரப்புத் தந்தது. அரங்கு நிரம்பிய ரசிகர்கள், பலத்த பாதுகாப்பு என்று அமெரிக்காவே ஆட்டம் கண்டது.

இயல்புக்கு அப்பால் சில நேரங்களில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் போட்டிகள் திணிக்கப்படுவது ஒட்டுமொத்த தொடரின் சமநிலைக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். எனவே போட்டிகளுக்கான அணிகளை பிரிக்கும்போது சமநிலையான அளவுகோல் ஒன்றை கையாள்வது ஆரோக்கியமானது.

என்றாலும் பொருளாதார மற்றும் நிர்வாக நிர்ப்பந்தங்கள் இருக்கும்போது அடுத்த உலகக் கிண்ணத்திலேனும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் சந்திக்கும் போட்டியை தவிர்ப்பது என்பது சற்று அசாத்தியமானது தான். ஆனால் அது ஒட்டு மொத்த தொடரின் சமநிலையை பாதிக்காமல் இருப்பது நல்லது.

## முன் திட்டமிடல்கள்

போட்டிகளை நடத்தும்போது முன் திட்டமிடல்கள் அவசியம். ஆனால் அது ஏற்பட்டு ரீதியில் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். போட்டிகளின் முடிவை முன் கூட்டியே கணித்து அதற்கு ஏற்ப ஏற்பாடுகளை செய்வது நல்லதல்ல. ஆனால், இம்முறை உலகக் கிண்ணத்தில் போட்டிகளின் முடிவை முன்கூட்டியே கணித்து அட்டவணை வகுக்கப்பட்டது போன்ற தோற்றம் தெரிகிறது.

பலமான அணி, பலவீனமான அணி, பொருளாதார ரீதியில் வளமான அணி மற்றும் வளமில்லாத அணி என்று இருந்தாலும் அது போட்டி ஏற்பாட்டில் தாக்கம் செலுத்தக் கூடாது. ஆரம்பச் சுற்றில் பொதுவாக எதிர்ப்பு நிலை வலுத்த அணிகளான இந்தியா எதிர் பாகிஸ்தான், இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை எதிர் பங்களாதேஷ் அணிகள் ஒரே குழுவில் சேர்க்கப்பட்டது தற்செயலானது என நினைக்க முடிவதில்லை.

சுப்பர் 8 சுற்றிலும் இதே கதை தான். அதாவது சுப்பர் 8 சுற்றுக்கு பிரதான எட்டு அணிகளான இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை முன்னேறும் என்ற அனுமானத்துடனேயே போட்டி அட்டவணை வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த அணிகள் முன்னேறாத பட்சத்தில் அந்த இடத்தில் முன்னேறும் அணி குறித்த குழுவில் சேர்க்கப்பட்டது.

இதனால் சுப்பர் 8 சுற்றில் இரு குழுக்களிலும் சமநிலை போக்கு சற்று குறைவாகவே இருந்தது. என்றாலும் ஆப்கானிஸ்தான் அணி எதிர்பார்த்ததை விடவும் திறமையை வெளிப்படுத்தியதால் அந்தக் குழுவில் அவுஸ்திரேலிய அணி வெளியேறியது அந்த ஏற்றத் தாழ்வை சரி செய்வதாக இருந்தது.

ஆனால் ஆப்கான் அணி அரையிறுதியில் எந்த விறுவிறுப்பும் காட்டாமல் தென்னாபிரிக்காவிடம் தோற்றது, ஒப்பீட்டளவில் பலவீனமான அணி ஒன்று உயர்மட்டப் போட்டிகளில் காண்பிக்கும் சொதப்பலாகவே தெரிகிறது.

கிரிக்கெட்டை பொறுத்தவரை இந்தியா தான் வல்லரசு. அதன் ரசிகர்கள் அதனை ஒட்டி உருவாகி இருக்கும் பொருளாதார பலத்தால் இந்தியாவை மையப்படுத்தி அட்டவணை வகுக்கப்படுவது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இந்தியா சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறினால் அதன் போட்டி அட்டவணை எப்படி இருக்க வேண்டும், அரையிறுதியில் எப்படி இருக்க வேண்டும், இறுதிப் போட்டி எப்படி அமைய வேண்டும் என்பது எல்லாம் முன்னரே தீர்மானிக்கப்பட்டது.

இந்தியா அரையிறுதிக்கு முன்னேறினால் அது இந்திய நேரப்படி இரவு எட்டு மணிக்கு நடைபெறும் போட்டியில் ஆட வேண்டும் என்பது முன் திட்டமிடப்பட்டது. இந்தியா தொடரில் இறுதிக் கட்டம் வரை முன்னேறுவது என்பது இலாபத்தைத் தரும் ஒன்றாக மாறிவிட்டது. அதற்கு ஏற்ப போட்டி அட்டவணையும் முன் கூட்டியே திட்டமிடப்படுகிறது.

எனினும் போட்டியின் முடிவு, மற்ற அணிகளின் திறமை அடிப்படையில் அட்டவணை மாறுகிறது.

அடுத்த உலகக் கிண்ணம் இந்தியாவிலும் நடைபெறப் போவதால் முன்கூட்டிய திட்டமிடல்கள் போட்டிக்கு ஆரோக்கியமான வகையில் இருப்பது நல்லது.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# அருவிக்கரை ஓரத்திலே....



வெள்ளிப் பனிமலை மீதிருந்து தடைகள் பல தாண்டி தவழ்ந்து வரும் அருவியது. தங்க மணிச் சப்தமதாய் சலசலத்து தாளத்துடன் தன்பாட்டில் ஓடிக் கொண்டிருந்தது.

இமயத்துத் தென்றல் இதமாக வீசிடும் அந்தி மயங்கும் நேரமதில் அழகான பெண் ஒருத்தி அணி முத்துக் கழுத்தினிலே பொன்மணி மாலை மின்னலிட துள்ளிக் குதித்த வண்ணம் தாள லயத்துடன் நடந்து வந்திட்டாள். நடக்கையிலே அவள் அழகு அப்பப்பா! சொல்வதற்கோ கம்பனோ, கண்ணதாசனோ இங்கு இல்லை. பட்டுக் கோட்டையாரோ தன் இளவயதில் போய்விட்டார். இருந்திட்டால் அழகான கவிதை ஒன்று தந்திருப்பார். கண்ணதாசன் இருந்திருந்தால் கூட 'ஆகா மெல்ல நட மெல்ல நட மேனி என்னாகும்' என சினிமாவுக்கு எழுதிய பாட்டல்லாமல் வேறு நடைப்பாடல் ஒன்றை யாத்திருப்பார்.

ஆமாம், அவள் நடக்கும் அழகில் இடை அங்கே தாளமிட காலிரண்டும் பின்னலிட கார்குழல்தான் இதமான தென்றலின் அசைதலில் கார் முகிலாய் கோலமிட அடிமேலே அடி எடுத்தாள் அன்னமவள்.

அவள் இல்லம் அருவிக்கு வடகரையில் சீனத்துப் பாணியில் மூங்கில் மரம் கொண்டு செய்யப்பட்ட சிறு குடிசை. இல்லை இல்லை! அவளுக்கு அது மாளிகை; ஒப்பற்ற அரண்மனை. அருவிக்கு அருகில் அமையப்பெற்ற இல்லமதில் இருந்த வண்ணம் இயற்கை அழகை இரசித்திடுவாள்.

நினைத்தவுடன் அருவிக்கரை ஓரம் வந்து ஒய்யாரமாய் மணற்தரையில் அமர்ந்த படி பொழுததனைப் போக்கிடுவாள் வாடிக்கையாய்.

அன்றொரு நாள் வாடிக்கை மறந்திடாத கிள்ளை, அந்தி மயங்கும் நேரமதில் அருவிக்கரை வந்திட்டாள். குளிர் நீர், தளிர்மேனி தனில் சில்லென சலனத்தை ஏற்படுத்த, தனிமையிலே நீராடி மகிழ்ந்தாள். தற்செயலாய் அருவியை நோக்கியவாறு நின்றாள். அங்கே அவள் கண்ட காட்சி மெய்சிலிர்க்க வைத்தது. தன்னையறியாமல் அருவியின் கரையேறி கடிதினில் தன்மேனி ஒட்டியிருந்த நீராடைதனைச் சரிசெய்தபடி நாணம் மேலிட நாணிக் கோணி நின்றாள்.

அழகான இக் காட்சிதனை ஓரிளைஞன், கட்டிளம் காளையொருவன் கண் கொட்டாமல் தூரத்திலிருந்து ரசித்த வண்ணம் அவளைப் பார்த்து நின்றிருந்தான். பின் அவள் நின்றிருந்த திசை நோக்கி அவள் நீராடிய இடம் நோக்கி சைகையால் ஏதோ சேதி சொல்லி நின்றான்.

அறியாத பாவையவள் தண்ணீரை நோக்கி நின்றாள் ஆசையுடன் தன்னை நோக்கி வந்த மடலை அள்ளி எடுத்தாள். பக்குவம் தவறாது தண்ணீரில் மூழ்கிடாது. ஆர்வமாய் அவள் உள்ளம் அம்மடலைப் படிப்பதற்கு அவளை உந்தித்தள்ள விழி இரண்டும் வேகமாய் அதனைப் படிக்க,

"அன்னமே நான் உன்னை எண்ணத்தால் என் உள்ளத்தால் விரும்புகின்றேன். உன் விருப்பம் அறிந்திட்டால் நீ எந்தன் சொந்தமாய் ஆகிடுவாய் உன் விருப்பம் எதுவென்று நான் அறிந்திடலாமோ? நான் கள்வன் நீ அறியாது உன் அழகை நதிக்கரையின் பற்றைக்குள் இருந்தவாறு கொள்ளையடித்து உன் அங்க அசைவுகளை ஆசைதீர கண்களினால் பருகியவன். என்னை மன்னித்துவிடு. உன் விருப்பம் என் விருப்பம் ஒன்றானால் இணைந்திடலாம் வாழ்க்கையில் ஒருவருக்கு ஒருவராய் துணையாக உன் விருப்பம் அதுவானால் நாளை மாலை வேளையிலே நான் இங்கு வந்திடுவேன், இல்லையேல் கண் காணாத் தூரத்திற்கே சென்றிடுவேன்" என அந்த மடல்தான் பேசியது.

யார் இந்த இளைஞன்? என அறிந்திடவே அவளுக்குள் எழுந்தது ஆசை. மறுநாள் ஓசை ஏதுமின்றி குறித்த நேரத்திலே நதிக்கரையில் காத்திருந்தாள். இளைஞனின் வருகைக்காய்.

குறித்த நேரமதில் இளைஞனும் வந்திட்டான். அவனைக் கண்டதுதான் தாமதம் அவளுள்ளம் பட்டாம் பூச்சியாய் படபடக்க உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் நடு நடுங்க ஏதோ ஓர் நாணம் இளையோடி மறைந்தது. பேச்சுத்தான் வரவில்லை. இருவரும் ஓர் நிலையில் இருந்ததனால் அங்கு மௌனம்தான் நிலவியது.

மறுகணம் மௌனம்தான் கலைந்து "தண்ணீரில் மடல் எழுதி என் திசையில் ஏவிவிட்ட சொந்தம் கொள்ள வந்த நீவிர் யார் எனவே நான் அறியச் செய்வீரோ?" எனக் கேட்டு நாணத்தால் தலை கவிழ்ந்து தன் கால் பெருவிரலால் மணல் மீது கோலமிட்டாள்.

மணல் மீது கோலமிடும் மங்கையின் வதனத்தை தன் விழி வழியே உள்வாங்கி எச்சிலை விழுங்கியவளாய் கற்சிலையாய் நின்றவளிடம் "பெண்ணே! நான் ஒன்றும் மன்னவர் காலத்து இளவரசனுமில்லை, வணிகத்தில் புகழ் பூத்த வர்த்தகனும் இல்லை,

பக்கத்து ஊரினிலே குடியிருக்கும் உறவு கொண்ட குடும்பத்தில் ஓர் உறவு அவ்வளவே, என் பெயரோ எழில் வேந்தன். கடலோடி முத்தெடுக்கும் ஒருவனே!" எனச் சொன்னான்.

பின், "வானத்து தேவதையாய் நீ இருக்க நின் பெயரை நான் அறியலாமோ?" எனக் கேட்டு நின்றான். அவள் விபரம் அறியும் நோக்கில்,

"என் பெயரோ பொன்னழகி. உறைவிடமும் இங்கேதான். அங்கேபார் அது எனது மாளிகையாம்" எனச் சொல்லி தன் மூங்கில் மர மாளிகையைக் காட்டி நின்றாள். அவள் சொன்ன திசையினிலே நோக்கியவன் பிரமித்து நின்றுவிட்டான். பின் "நீ என்ன இங்கே செய்கின்றாய், தனிமையிலே வந்திடுதல் ஆபத்தில் முடிந்திடாதோ?" எனக் கேள்வியும் கேட்டு நின்றான்.

"எனை எவரும் ஒன்றும் செய்திட இயலாது. நான் ஒன்றும் கோழையல்ல. நினைத்தவுடன் வந்திடுவேன். சளைத்தவுடன் சென்றிடுவேன்" எனச் சொல்லிச் சிரித்திட்டாள்.

தான் கடலோடிப் பெறுகின்ற முத்தைவிட பளிச்சிடும் அவள் முத்துப் பற்கள் அவன் கண்களைக் கொள்ளை கொள்ள, புன்னகையால் அவள் எழில் முகம் நோக்கி, "பொன்னழகி! இனிமேல் நீ என்னழகி" எனச் சொல்லி உள்ளமது கவர்ந்திட்டான்.

இரு மனமும் ஒரு மனமாய் ஒன்றாக இணைந்த பின்னால் ஒவ்வொரு நாள் மாலையிலும், அந்தி மயங்கும் வேளையில் காதல் பயிரினை வளர்த்தெடுத்தனர் அவ்விருவரும்.

இரு குடும்பமும் ஒரு குடும்பமாய் எதிர்ப்பு ஏதும் இன்றி காதல்கனிந்து கனி தரும் காலமும் வந்தது.

விடைபெறும் காலம் வந்திடவே அவளிடம் விடைபெற்றான் அவன்.

"இருந்திடலாம் என்றாலும் நான் விடை பெறும் நேரம் வந்துவிட்டது."

"என்ன விடை பெறவா?"

"அப்படிச் சொல்லாதீர், விடைபெற்று நீர் சென்றால் நான் என்ன உயிரோடா இருந்திடுவேன்?" நானும் உன் உடலைச் சுற்றியவளாய் உயிரை விட்டிடுவேன்" எனச் சொன்னாள் அச்சம் மேலிடவே.

திடுக்கிட்டான்எழில்வேந்தன்,"ஐயகோ அப்படியா நான் சொன்னேன்? அர்த்தத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்து விடு.

நாளைக் காலையிலே உனை விட்டுப் பிரிந்து என் பிரயாணம் மேற்கொள்ள இருக்கின்றேன்.

அதற்குள் வீணான வேற்றுக் கருத்தில் கற்பனையில் என்னையே கொன்று விட்டாயே!"

"மன்னிக்க வேண்டும் மகாராசா உம்மீது கொண்ட காதல் உண்மையுள்ளத்தில் உறைந்ததனால் காதல் ஏக்கத்தில் அவ்வாறு தவறாக எண்ணிவிட்டேன். உண்மையாய்ச் சொல்லுகிறேன். உடன்கட்டை ஏறும் வழக்கு இந்நாளில் கடன் அட்டையாய் போனதால் உடன் கட்டை ஏறமாட்டேன்.

உன்னுடனே உன் வழியில் உயிரை விட்டிடுவேன்" எனத் தெளிவாகச் சொல்லி வைத்தாள்.

"பொன்னழகி! நான் ஒன்று சொல்லுகின்றேன் உன்னிப்பாய்க் கேட்டிடு" இன்று அதிகாலை விடிவெள்ளி முளைக்குமுன்னே கடிதினிலே வீட்டை விட்டுக் கிளம்பிடுவேன் தூரதேசம் செல்வதற்காய். கடலோடி முத்தெடுத்து என் தொழில் தீர்ந்து வருவதற்கு பத்துத் திங்கள் முடிந்தவுடன் உன் பக்கத்தில் நான் இருப்பேன்.

அதுவரையில் பத்திரமாய் இருந்திட வேண்டுமென வேண்டுகிறேன்."

"என்னை விட்டு விடுங்கள், எவ்வளவும் எனக்கேதும் பயமில்லை பத்திரமாய் சென்று திரும்பிடுங்கள். பத்துத் திங்களும் பத்து நாட்களாக மாறிடாதோ? என ஏக்கத்தில் காத்திருப்பேன்.

உங்கள் வரவு மட்டும் எனக்கொன்றும் தீங்கேதும் நடந்திடாது உறுதியாய் சென்று வாருங்கள். இறுதியாய் ஒன்று சொல்வேன் உங்கள் உடம்பினைப் பார்த்துக் கொள்ளுங்கள் மறதியாய் இருந்திடாது" எனச் சொன்னாள்.

மற்றொன்று, நீங்கள் செல்லும் தேசம் எங்கும் கட்டழகுக் கன்னியரும், கண்ணழகு மங்கையரும் கணக்கின்றி உலவிடுவர். ஒரு கணமேனும் அவர் மீது மயங்கிடாது இருந்திடவும் வேண்டுகின்றேன்.

"எத்தகைய பேரழகி வந்திடினும் ஏன் உலக அழகி வந்தாலும் நான் என்ன மயங்கிடவா போகின்றேன்? நீதான் எனக்கு உலக மகா அழகு ராணி. கிளியோபற்றா இருந்திருந்தால் கூட உன் அழகுக்கு தோற்றுப் போயிடுவாள்" என்றான் பெருமையுடன்.

"அத்தான் கடும் கோபம் கொண்டிராது கேட்டிடுவீர். நான் ஒன்றும் கோழையும் அல்ல கோழை அப்பனுக்குப் பிறந்தவளும் அல்ல. வேளை வரும்போது வேண்டியது செய்து வெற்றியும் கண்டிடுவேன். இதை நீங்கள் நம்பிட வேண்டும்."

"அஞ்சிடாதே அஞ்சுகமே! உன் நினைவாய் இருந்து நான் சென்ற வேலை முடிந்தவுடன் ஓடியும் வந்திடுவேன் இது உறுதி எனச் சொன்னான்.

பத்துத் திங்களும் பத்து யுகங்களாகக் கழிந்தது அவ்விருவருக்கும். எழில் வேந்தன் ஆழ்கடலில் மூழ்கி எடுத்த முத்துக்களால் செய்யப்பட்ட அழகியதொரு விலைமதிப்பற்ற முத்து மாலை ஒன்றை தன் காதலிக்காக எடுத்துக் கொண்டான். அத்தோடு திருமணத்துக்கு வேண்டிய பொருட்கள் பலவற்றையும், பரிசுப் பொருளையும் எடுத்துக் கொண்டு ஊருக்குப் புறப்படத் தயாரானான்.

அதேபோன்று தன் மாணாளன் எப்பொழுதுதான் வந்திடுவான் என்ற ஏக்கத்திலே காத்திருந்து காத்திருந்த கண்ணிரண்டும் பூத்திருந்தாள் பொன்னழகி.

ஒரு நாளிகைதான் ஆகியிருக்கும். கடற்காற்று கோரத் தாண்டவம் ஆட, அடை மழையும் பிடித்துக் கொண்டதில் கப்பலைச் செலுத்துவதில் மாலுமிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கினர்.

ஒரு நாளிகைதான் ஆகியிருக்கும் எழில்வேந்தன் புறப்பட்ட கப்பல் கடும் பாறை ஒன்றில் மோதி விபத்துக்குள்ளான செய்தி காட்டுத்தீயாய் ஊரெங்கும் பரவியது. பொன்னழகிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நாடி நரம்புகளை எல்லாம் கட்டிப் போட்டது போல உணர்ந்தாள்.

ஓடியும் சென்றாள், கடற்கரையை நோக்கி. கடற்கரையில் பெரும் கூட்டத்தின் மத்தியில் அழுகுரலைத் தவிர வேறு எதையும் கேட்க முடியவில்லை.

கடற்கரையில் கிடத்தப்பட்டிருந்த உடல்களை ஒவ்வொருவரும் இணம் காணும் முயற்சியில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் இனம் காணப்படாத உடலொன்று ஓர் ஓரமாக கிடத்தப்பட்டிருந்தது. எவரும் உரிமை கோராத அந்த உடலுக்கு உரியவர் இல்லை என்றாகிவிட்டது.

காரணம் அந்த உடலின் கழுத்துக்கு மேலே உருக்குழைவு ஏற்பட்டு இனங்காண முடியாதபடி சிதைந்து காணப்பட்டதுதான். எல்லோரும் அது எழில் வேந்தனின் உடல்தான் என முடிவு செய்தனர்.

பொன்னழகி அழுதாள், துடித்தாள், துவண்டாள், கடும் வெய்யிலில் போடப்பட்ட புழுவாய் வேதனையால் துவண்டாள்.

பின் ஒரு முடிவுக்கு வந்தவளாய் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டு அருவிக்கரை நோக்கி ஓடினாள். எவராலும் தடுத்த நிறுத்த முடியாதபடி புயலாய் புறப்பட்டாள்.

அருவி என்றும் போல் அமைதியாய் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. உயிரை மாய்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் அருவிக்கு ஓடியவள் ஒரு கணம் நின்றாள். 'எத்தனை வேதனைகள், சோதனைகள் வந்த போதும் உடன் கட்டை ஏற மாட்டேன்' என்று அன்று எழில் வேந்தன் முன்னிலையில் சொன்ன வார்த்தைகள் அவளைத் தடுத்து நிறுத்தியது. அப்படிச் செய்தால் கோழை என்ற அவப் பெயரைச் சுமக்க வேண்டி வரும் என்ற காரணத்தினால் அப்படியே கற்பாறையில் அமர்ந்து கொண்டாள்.

என்ன செய்வது என்று ஒன்றும் அறியாமல் மனக் குழப்பத்தில் மூழ்கியவளாய்.

"பொன்னழகி!" அன்புடன் தன்னை எவரோ அழைப்பது கேட்டு திரும்பிப் பார்த்தாள். அவளது கண்களை அவளாலே நம்ப முடியவில்லை.

ஆம் அங்கே சிரித்த முகத்துடன் எழில் வேந்தன் நின்றிருந்தான். "அத் அத் அத்தான் நீங்கள் நீங்கள் வந்துவிட்டீர்களா?" வார்த்தைகள் தடுமாற அவள் கேட்டாள்.


"ஆமாம், நான்தான் நானே தான் உன் அத்தான் எழில் வேந்தன்" எனச் சொன்ன வண்ணம் அவன் அவள் அருகில் வந்தான். "எங்கே நான் மாண்டு விட்டேன் என ஓடிவந்தாயா? கடற்கரையில் உள்ள பிணம் யார் என்று நீ அறியாய்.

கப்பலில் என்னுடன் பயணித்த வேற்று நாட்டவன். அவனும் என்னைப் போல் இருந்ததனால் நான்தான் உன் எழில் வேந்தன் என நினைத்திட்டாயா? பத்துத் திங்களில் பறந்து வந்திடுவேன் எனச் சொல்லிப் போந்தேனோ இதோ குறிப்பிட்ட திகதியில் வந்து விட்டேன்" என்றான்.

மகிழ்ச்சியில் இருவரும் தம்மை மறந்தனர்.

**கலாபூஷணம் மாவனல்லை எம்.எம்.மன்ஸூர் ...**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 127



திரு/திருமதி.செல்வி ....................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ....................
....................
....................
.................... ....................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 127
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 127

### இடமிருந்து வலம்

1. பக்கபலம் , பேருதவி
4. இதுவும் ஒரு மலர்
6. சமயம் அல்லது ஒழுக்கம் தொடர்பான போதனை (குழம்பியுள்ளது)
8. குதிரை
10. சிரசு (திரும்பியுள்ளது)
11. தோற்றம்
13. மன அமைதி
16. பழம் (திரும்பியுள்ளது)
17. தீய செயலுக்கான மறைமுகத் திட்டம்(திரும்பியுள்ளது)
18. தாயாரை இப்படியும் சொல்வர்(திரும்பியுள்ளது)
20. தொடர்ந்து செல்லாதவாறு செய்வது
22. ஆவல், விருப்பம்
24. அறுபது நிமிடம் கொண்ட கால அளவு
25. வாழ்க்கைத் துணைவி குழம்பிவிட்டாள்
26. பயத்தால் ஏற்படும் மனக்கலக்கம் (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. கறிக்கு சுவை சேர்ப்பது
2. குடும்பப் பற்றில்லாத ஆன்மிக ஈடுபாட்டாளர்
3. நீரோட்டத்தை தடுக்கும் அமைப்பு (தலைகீழ்)
4. முழுமையில் பாதி
5. கடிதம்
7. சாப்பாடு (தலைகீழ்)
9. தேர்
10 .இலங்கையின் மத்திய மாகாணப் பகுதியை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)
12. துணையாக யாரும் இல்லாத நிலை
13. பழிப்பு
14. சந்திரன்
15. களைப்பு, சோர்வு (தலைகீழ்)
19. மரங்களில் வேகமாக ஏறி இறங்கும் பிராணி
21. கேள்விக்கான பதில் (தலைகீழ்)
23. இவர் திரைப்படப் பாடலாசிரியர்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 126

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1, ஏற்றுமதி
5. நரி
6. ஆக்கியோன்
10. கல்கண்டு
12. நடுவர்
14. பழம்
16. கவின்
18. பாசம்
20. கடல்
21. வலை
23. கதை
24. கோமேதகம்

**மேலிருந்து கீழ்**

1. ஏற்பாடு
2. ஆறு
3. மக்கர்
4. திகில்
5. நண்பன்
7. யோகம்
9. வதை
11. கிழடு
13. நக்கல்'
15. சுபாவம்
16. கடன்
17. கவிதை
19. கோசலை
22. மேனி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 126

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
| --- | --- | --- |
| **கனகசிங்கம் வினோபா**<br>இல 69 சீ, வட்ட விதானை விதி,<br>கல்முனை 02 | **மு.ச. முகம்மது லியாவுத்தீன்**<br>இல 12/6 சென் பீற்றர்ஸ் வீதி,<br>குருநாகல் வீதி,<br>நித்தனி, | **எம்.எம். கலீல்,**<br>535 டீ,<br>மத்திய வீதி,<br>மருதமுனை 03 |

### பாராட்டு பெறுவோர்

1. **என்.கே. வேணி** – பலாங்கொடை
2. **கே. ஐ. மில்ஹானி** – ஏறாவூர்
3. **எம்.எம் சஷாத்** – மருதமுனை
4. **எஸ். விகாஷினி** – கொழும்பு 13
5. **சாஜித் சப்ராஸ்** – பண்டாரகம
6. **பி. பேரின்பராஜா** – மட்டக்களப்பு
7. **பி. குணசேகரன்** – களுதாவளை
8. **பதீஸ் சஹ்ரி** – பாலமுனை
9. **எஸ்.எம்.எம். பஹ்மி** – சம்மாந்துறை
10. **எம்.எச்.சீ.என். ஹஸ்னா** – வெலிகம



# வாரபலன்

30.06.2024 - 06.07.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**
தொழில் சிறப்பாக இருக்கும். போட்டித் தேர்வில் வெற்றி பெறுவீர்கள். சௌக்கியங்கள் உண்டு. பிரச்சினைகள் படிப்படியாக குறைய ஆரம்பிக்கும். உடல் நலனில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரம், தொழிலில் போட்டிகள் விலகும். வழக்குகள் சாதகமாகும். தொழில் விருத்தியாகும்.

புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றிபெறும். வேலை செய்யும் இடத்தில் சிறிய பிரச்சினைகள் நிம்மதியை இழக்கச் செய்யலாம் என்பதால் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். வீடு வாகனம் சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக மாறும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு.

பூர்வீக சொத்து விஷயங்களில் ஆதாயம் ஏற்படும். வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்ல முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான முயற்சிகள் கைகூடும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**
நல்ல யோக பலன்கள் உண்டு. தொழிலில் புதிய பாதை பிறக்கும். வீடு வாங்குவது, இடம் வாங்குவது மற்றும் வீட்டை பராமரிப்பது முதலிய பணிகளைச் செய்யக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும்.

பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு மதிப்பு உண்டு. வாடிக்கையாளர்கள் ஆதரவு அதிகரிக்கும்.

மூத்த சகோதரர்கள் உதவி கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். விலகிச் சென்றவர்கள் வந்து சேருவார்கள். புகழும் கௌரவமும் அதிகரிக்கும். சில தடைகளும் தாமதங்களும் உங்களை அலைக்கழிக்கலாம் ஆயினும் அதைச் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். மேலதிகாரிகளின் கெடுபிடிகள் உங்கள் மனதை தளரச் செய்யும் தேவையில்லாத செய்திகளை பரப்ப வேண்டாம் அவைகள். பிள்ளைகள் மூலம் மனக்கலக்கங்கள் உண்டு.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**
செல்வ சேர்க்கை உண்டாகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடும் போது கவனம் தேவை. உல்லாச பயணங்கள் செல்ல நேரலாம் எதிலும் அளவுக்கு மீறாமல் இருப்பது நல்லது. ஆடம்பர பொருட்கள் சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தனப் போக்கு நீங்கி வேகம் பிடிக்கும். தொழில் விஷயமாக வெளியூர் செல்ல நேரலாம். எதிர்பார்த்த ஆர்டர் கிடைப்பதில் இருந்த தாமதம் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்கப் பெறுவார்கள். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பெண்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். கலைத்துறையினருக்கு எல்லோரையும் எளிதில் வசீகரிக்கும் திறமை அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியை பற்றிய மனக்கவலை உண்டாகும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**
எத்தனை தடைகள், பிரச்சினைகள் வந்தாலும் எதிர்கொண்டு வெற்றி பெறுவீர்கள். இருப்பினும் உடல் நலத்தில் அதிக கவனம் தேவை. குடும்ப விஷயங்களில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வு இருக்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் உண்டாகும். வீடு வாகனம் தொடர்பான செலவினங்கள் ஏற்படும். குழந்தைகளின் செயற்பாடுகள் பெருமைப்படக் கூடியதாக இருக்கும். தெய்வ அனுகூலமும் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் தேடி வரும். கணவன் மனைவி ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம். தம்பதிகளிடையே மற்றவர்களின் தலையீட்டை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் கூட்டாளிகளிடம் கவனம் தேவை. யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். வாகன பயணங்களில் கவனம் தேவை. யாரிடமும் வம்புச்சண்டை வேண்டாம். தந்தையால் அனுகூலம் உண்டு. தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு உண்டு.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**
குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செவ்வாய் சொந்த வீட்டில் ஆட்சிப் பலத்தோடு இருக்கின்றார். அதனால் நினைத்த காரியங்களை வேகமாக செய்ய ஆரம்பிப்பீர்கள். வெற்றியும் கிடைக்கும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும் வாய்ப்பு உண்டு.

சொத்துக்கள் வாங்குவதும் விற்பதும் நல்ல பலனைத் தரும். வியாபாரம் வெற்றிநடைபோடும் உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும்.

பொது வாழ்வில் உள்ளவர்கள் நல்ல முன்னேற்றத்தைப் பெறுவார்கள், கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். அரசு வேலைகளுக்கு முயற்சி செய்பவர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு அதிகம். வண்டி வாகனங்களில் செல்லும் பொழுது எச்சரிக்கையோடு ஓட்ட வேண்டும். அவ்வப்பொழுது பராமரித்து நல்லபடியாக வைத்திருக்க வேண்டும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**
பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். புண்ணிய தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகச் செய்யும் முயற்சிகள் பலன் தரும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். வேலையில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் உண்டு.

தனவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். முன்னேற்ற பாதையில் பயணம் செய்வீர்கள். சில எதிர்பாராத மாற்றங்கள் நடைபெறும்.

குடும்பத்தில் உரசல்களை ஏற்படுத்துவார்கள். கணவன் மனைவி உறவில் விழிப்புடன் இருக்க வேண்டும். ஏதாவது ஒன்று சொல்லி அது பிரச்சினை ஆகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகள் விஷயத்தில் கவனம் தேவை.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**
நினைத்தது நிறைவேறும். நிதி நெருக்கடிகள் தீரும். வருமானம் உயர வழிகள் பிறக்கும். வியாபாரம் அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு உருவாகும். சுபகாரியங்கள் நிச்சயமாகும்.

பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு ஏற்றம் உண்டு. வியாபாரம், தொழில் அபிவிருத்தி மற்றும் கலைஞர்கள் செல்வாக்கு அதிகரிக்கும். மன மகிழ்ச்சி உண்டாகும். மருத்துவ செலவுகள் கட்டுக்குள் வரும். வேலை இழந்தவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். தேவையில்லாத வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் விஷயத்தில் கவனம் தேவை. சகோதரர்கள் விட்டுக் கொடுத்து இருப்பது நல்லது. தந்தையின் உடல் நிலையில் கவனம் தேவை.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**
உங்களுக்கு தொழில் முயற்சிகளில் நல்ல லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சம்பள உயர்வுகள் உண்டு. மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். வெளிநாடு செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு விசா முதலிய அனுமதிகள் கிடைக்கும் வாய்ப்பு அதிகம். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். சிரமப்படுத்திக் கொண்டிருந்த சனி உங்களை சற்று விட்டு வைப்பதன் மூலம் புதிய உற்சாகம் பெறுவீர்கள். உங்கள் வார்த்தையே உங்களுக்கு பகையாக மாறும். உங்களுக்கு வேறு பகைவர்கள் தேவையில்லை. நீங்கள் செய்த வேலையே சில நேரங்களில் உங்களுக்கு எதிராகத் திரும்பும். பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றிய கவலை மனதை அரிக்கும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**
எதிலும் தன்னம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். முக்கிய நபர்களின் அறிமுகமும் நட்பும் கிடைக்கப் பெறுவீர்கள். எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தாலும் மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ள நேரலாம். தொழில் வியாபாரத்தில் வேகம் அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி பொருட்களை அனுப்புவதில் இருந்த தாமதம் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திடீர் பயணத்தை சந்திக்க நேரலாம். எதிர்பார்த்த இடமாற்றம் ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து செல்வது நன்மை தரும். நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். பெண்களுக்கு மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் உண்டாகும். கலைத்துறையினருக்கு வீண் ஆசைகள் மனதில் தோன்றும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் திடீர் தடை, தாமதம் ஏற்படலாம்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**
வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். பத்திரிகை தொழிலில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். அரசியலில் உள்ளவர்களுக்கும் புதிய வாய்ப்புகள் உண்டு. எதிர்பாராத வரவுகள் உண்டு. முக்கியஸ்தர்கள் அறிமுகமாகி புதிய வெளிச்சத்தைத் தருவார்கள். சமூகத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். தந்தை வழி ஒத்துழைப்பும் ஆதரவும் உண்டு. பிள்ளைகள் விஷயத்தில் இருந்த கவலை நீங்கி அவர்களுக்கு உத்தியோகத்திலும் சுப காரிய முயற்சிகளிலும் முன்னேற்றம் கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. மருத்துவச் செலவுகள் அதிகரிக்கலாம். எதிலும் சோம்பேறித்தனமும் அதனால் ஏற்படும் தாமதமும் உங்களுக்கு பிரச்சினைகளைத் தரலாம். சில வாய்ப்புகள் உங்களுக்கு கிடைத்தும் பெரிய அளவில் எதிர்பார்த்த பலன் இல்லாமல் செய்யலாம் தயாராக எதிர்கொள்ளுங்கள்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**
குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. நீண்ட நாளாக வரவேண்டிய பணம் தற்போது உங்கள் கை வந்து சேரும். புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள். உங்கள் பேச்சுக்கு மதிப்பு மரியாதை உயரும். மனோபலம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் நன்மை உண்டு. தங்க நகை ஆபரணங்களை கவனமாக கையாளுங்கள். தாயால் அனுகூலம் உண்டு. உறவுகளால் ஆதாயம் உண்டு. வீடு, வாகனம், சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். புதிய வாகனம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் நன்மை தரும். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு. தந்தை உடல்நலனில் கவனம் தேவை. தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் மற்றும் சக ஊழியர்கள் சாதகமாக மாறுவார்கள். விழிப்புணர்வுடன் செயல்படுவது நல்லது.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**
சிறப்பான பலன்களைப் பெறுவர். அறிவுத்திறன் அதிகரிக்கும். சாதுரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கப் பெறுவீர்கள். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுக்காக உழைக்க வேண்டியிருக்கும். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை ஏற்படும். பெண்களுக்கு கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். திறமையுடன் செயல்பட்டு பாராட்டு பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு நீண்ட நாட்களாக இருந்த பழைய பகைகள் மாறும். எதிர்காலம் பற்றிய முக்கிய முடிவுகளை எடுக்க நினைப்பீர்கள். மாணவர்களின் சாதுரியமான பேச்சால் நன்மை கிடைக்கப் பெறுவர்.

---

**11 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்**

அருணாசலம் லெட்சுமணன் 42

# சமூகம் மீதான பிடிப்பை கவிதைகள் மூலம் வெளிப்படுத்துபவர் பாலபாரதி

பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, பல பெண் ஆளுமைகளையும் அடையாளப்படுத்துவதாக அமைந்தது. இந்திய அளவில் பிரசித்தமான இடதுசாரிய அரசியலை முன்னெடுத்த ஆளுமையாக விளங்கிய ஒருவரின் பங்கேற்பு அவதானத்திற்குரியதாக விளங்கியது. பத்து வருடங்களுக்கு மேலாக தமிழ்நாடு சட்டமன்றில் திண்டுக்கல் தொகுதியின் (மார்க்சியம்) உறுப்பினராக பதவியில் இருந்த கே.பாலபாரதி என்ற பெண் ஆளுமையின் பங்கேற்பாகவே அமைகிறது. பி.எஸ்.சி பட்டதாரியான அம்மையார் இந்திய பொதுவுடமைக் கட்சியின் நீண்டகால செயற்பாட்டாளராகும். இவர் சட்டமன்றில் பதவி வகித்த போது இவர் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சியின் குழுத் தலைவராக கடமையாற்றினார். தற்போது கட்சியின் மாநிலக் குழு உறுப்பினராகவும் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாநில செயலாளராகவும் பதவியில் இருக்கின்றமை கவனிக்கத்தக்கது. தமிழ் நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் துணைச் செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக் குழு உறுப்பினர் போன்ற பதவி நிலைகளில் இவரது செயற்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. பல போராட்டங்களில் முன்நின்று செயற்பட்டுள்ளதோடு சமூகம் மீதான பிடிப்பை கவிதைகள் மூலமாகவும் எழுத்துக்கள் ஊடாகவும் வெளிப்படுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது.

திண்டுக்கல் தொகுதி என்றதும் 2017ஆம் ஆண்டு காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்த மலையக பன்னாட்டு ஆய்வரங்கில் பங்கேற்றபோது இடம்பெற்ற நிகழ்வுகள் ஞாபகத்துக்கு வரலாயின. இப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் பா.ஆனந்தகுமாரின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தலைமையிலான குழுவில் நானும் அங்கம் வகித்திருந்தேன். இந் நிகழ்வு மாத்தளை சோமுவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ் ஆய்வரங்கு மலையக மக்கள் பற்றிய அவதானத்தில் அவர்களின் வரலாறு, வாழ்வியல் போன்ற சமூக அசைவியக்கியங்கள் மீதான அவதானத்தை தமிழகத்தில் ஏற்படுத்துவதற்கான தூண்டுதல் நிகழ்வாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழக பல்கலைக்கழகங்களில் மலையக மக்கள் பற்றிய இலக்கியங்கள் மீதான அவதானத்தின் மீது தீவிரத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாக இது அமைந்தமை கவனிக்கத்தக்கது. இந் நிகழ்வின் பின்னர் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் மலையக மக்கள் பற்றிய ஆய்வில் முக்கிய கவனத்தை செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தப் பின்னணியிலேயே மலையகம் 200 தொடர்பான கவனத்தை ஏற்படுத்திய முக்கிய நிறுவனமாக தஞ்சை பல்கலைக்கழகம் விளங்குகின்றது. இந் நிகழ்வை தொடர்ந்து மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் "மலையக தமிழ் இலக்கியம்" எனும் தொனிப்பொருளில் ஆய்வரங்கை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.



மேற்குறித்த நிகழ்வுகள் குறித்தும் அவற்றில் பங்கேற்ற அனுபவம் பற்றியதாகவும் அம்மையாருடன் கலந்துரையாடல் தொடர்ந்தது. மலையக மக்கள் என்றதும் மலைவாழ் மக்கள் என்ற பார்வை நிகழ்வது பற்றிய கடந்த கால அனுபவங்கள் தொடர்பிலும் கலந்துரையாடல் தொடர்ந்தது. மலைவாழ் மக்கள் பற்றிய அவதானத்துடன் செயற்படும் செயற்பாட்டாளர் என்ற வகையில் பாதிக்கப்படும் சமூகங்கள் பற்றிய கவனம் அவரில் நிறையவே பொதிந்திருந்தமையை உணரமுடிந்தது. வர்க்க ரீதியிலான உந்துதலோடு தொடர்ந்து இந்திய அரசியலில் ஓர் அங்கமாக திகழும் அம்மையார் பல தியாக செயற்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளார். மலையக மக்கள் பற்றிய விடயங்களை அறிந்து கொண்ட நிலையில் இம் மக்களின் துன்பியல் வரலாறு தொடர்பில் கவலை தெரிவித்தார். இம்மக்கள் தொடர்பிலான அவதானத்தில் கவனம் செலுத்தாத இந்திய கம்யூனிஸ்ட் சார்பு கட்சிகள் மீதான கண்டனத்தையும் அம்மையாருக்கு எடுத்துரைத்தேன். இலங்கையிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளில் தீவிர பங்கேற்பாளர்களாக மலையக மக்கள் இருந்த நிலையில் அவர்களின் நலனில் அக்கறை செலுத்தாத இடது சாரிய இயக்க தலைவர்களின் பாராமுக செயற்பாடுகள் தொடர்பிலும் அவர்களில் பொதிந்திருந்த பௌத்த அடிப்படைவாத சித்தனைகளையும் எடுத்துரைத்தேன். மலையக மக்களின் சிதைவுகள் தொடர்பில் காலங்காலமாக கம்யூனிசம் என்ற சித்தாந்தத்தை கையிலெடுத்த தலைவர்களின் சுயநல போக்குகள் எவ்வகையில் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பது பற்றிய அவதானத்தை ஏற்படுத்துவதாகவும் அம்மையாருடான தொலைபேசி மூலமான தொடர்பு தொடர்கிறது. அம்மையார் தொடர்புபட்ட கட்சி என்றதும் மூத்த எழுத்தாளர் கு.சின்னப்பபாரதி, பேராசிரியர் அ.மாக்ஸ் ஆகியோர் ஞாபகத்துக்கு வருகிறார்கள். அவர்கள் பற்றி விசாரணை செய்கின்ற போது கம்யூனிஸ்ட் கட்சி பின்னாளில் இப் பெயருடன் மாக்ஸ்சிஸ்ட் எனும் பெயரில் பிளவு பட்டமை தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

02. மே. 1935இல் குப்பண்ணன், பெருமாயி அம்மாள் தம்பதிகளின் புதல்வனாக பிறக்கிறார். சின்னப்பன் என்பதே பெற்றோர் இவருக்கு வைத்த பெயராகும். நாமக்கல் பரமத்தி அன்னாரின் சொந்த ஊராகும். கரும்பு விவசாயியாக, தொழிற்சங்கவாதியாக, படைப்பாளியாக கு.சின்னப்பபாரதியின் பரிமாணம் மிகுந்த படிப்பினைக்குரியதாகும். சிறுவர் இலக்கியத்துறைக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளார். செல்லம்மாவை துணையாக கொண்ட இவருக்கு பாரதி, கல்பனா ஆகிய பிள்ளைகள் உள்ளார்கள். இவரால் படைக்கப்பட்ட நாவல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, சிங்களம், இந்தி, வங்காளம், குஜராத்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி, பிரெஞ்சு ஆகிய மொழிகள் உட்பட்ட ஏனைய மொழிகளிலும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் மாநாடுகளில் பங்கேற்று தன்னையும் இவ் அமைப்புகளின் செயற்பாடுகளில் இணைத்துக்கொள்கிறார். மு.வரதராசனின் எழுத்துக்களால் கவரப்பட்ட சின்னப்பன் பாரதியின் கவிதைகள் எழுத்துக்களாலும் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் சின்னப்ப பாரதியாக தன்னை உருவகப்படுத்திக் கொள்கிறார். மாணவர் அமைப்புகள், பொதுவுடமை கட்சி ஆகியவற்றின் நீண்டகால செயற்பாட்டாளர் என்ற அடிப்படையில் பல போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளமையை அறிய முடிகிறது. இவர் பங்கேற்ற போராட்டங்களில் உச்சவரம்பு போராட்டம் மிக முக்கியத்திற்குரியதாகும். கல்லூரி நாட்களில் இப் போராட்டத்தில் இணைந்து 650 கிலோ மீற்றர் நடைப் பயணம் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது எழுத்துக்களில் வர்க்க குணாம்சம் பொதிந்திருக்கும். அவ்வாறு எழுதிய நாவல்களில் மேற்கு வங்காளம் அசன்சாவில் நிலக்கரிச் சுரங்க தொழிலாளர்கள் பற்றி அவர் எழுதிய நாவல் மிக முக்கிய கவனத்தைப் பெறுகிறது. இந்த நிலக்கரிச் சுரங்க பகுதியில் மிக நீண்டகாலம் தங்கியிருந்து பெற்ற அனுபவத்தின் ஊடாகவே இந் நாவலை படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அந் நாவலை உபாலி நாணயக்கார சிங்களத்தில் மொழிப்பெயர்த்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



கு.சின்னப்ப பாரதி அறக்கட்டளை எனும் அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டு அவ் அமைப்பின் ஊடாக வருடந்தோறும் இலக்கிய விருதுகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. 2011ஆம் ஆண்டு கொழும்பு இராமகிருஸ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற உலக சிற்றிதழ்கள் மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 நிகழ்வை முன்னிறுத்தி வெளியிட்ட என்னை ஆசிரியராகக் கொண்டு இயங்கும் "நிகர்" சிறப்பிதழும் கு.சின்னப்பபாரதியின் கரங்களால் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் மூத்த இதழாளர்கள் டொமினிக் ஜீவா, தி.ஞானசேகரன், அந்தனி ஜீவா, பத்மா சோமகாந்தன், ஜீவநதி பரணிதரன் உட்பட்ட பல இதழாளர்கள் கலந்து கொண்டமை கவனத்திற்குரியது. மகாகவி வதிலை பிரபா, சொர்ணபாரதி போன்றோர் உட்பட தமிழகத்தின் இதழாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அந் நிகழ்வை தொடர்ந்து கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற சர்வதேச தமிழ் மாநாட்டு நிகழ்வுகளில் பங்கேற்று கு.சின்னப்பபாரதி ஆற்றிய உரைகள் மிகுந்த பெறுமதி வாய்ந்ததாக அமைந்தன.

மாநாட்டை தொடர்ந்து நாவலப்பிட்டி தமிழ்ச் சங்கம் நடத்திய நிகழ்வொன்றில் கு.சின்னப்பபாரதி கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது. கு.சின்னப்பபாரதியுடன் அந்தனி ஜவா, கவிஞர் குறிஞ்சி நாடன், கே.பொன்னுத்துரை ஆகியோரும் கலந்துகொண்டார்கள். நிகழ்வை தொடர்ந்து எனது வீட்டிற்கு இக் குழுவினர் வருகைதந்தார்கள். இக் குழுவினரை உபசரிப்பதில் எனது குடும்ப உறுப்பினர்களும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார்கள். எனது அன்னையாரிடமும் சின்னப்பபாரதி கொழுந்தெடுக்கும் பெண்கள் படும் இடர் நிலையை கேட்டறிந்துக் கொண்டார். மலையக மக்கள் பற்றிய நாவல் ஒன்றை எழுதும் எண்ணத்தை அவரில் உணர முடிந்தது. அதன் தொடர்ச்சி நிலையில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம், புசல்லாவை இராமன்துரை தோட்டத்தில் மலையக மக்களின் அருங்காட்சியகத்தில் சிறிது காலம் தங்கியிருந்தார். 2011ஆம் ஆண்டு இந் நிறுவனம் இவ் அருங்காட்சியகத்தில் நடத்திய மேதின நிகழ்விலும் பங்கேற்று சிறப்புரையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்நிகழ்வில் எனது ஊர் மக்களுடன் இணைந்து நானும் கலந்துகொண்டேன். அவ்வாறே பேராசிரியர் அ.மாக்ஸின் இலங்கை விஜயத்தின் போது அமரர் லெனின் மதிவானத்தின் ஏற்பாட்டில் அட்டன் சமூகநல நிறுவனத்தில் சந்திப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந் நிகழ்வை பொலிசார் நடத்த வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கியதைத் தொடர்ந்து லெனின் மதிவானத்தின் வீட்டில் குறித்த எண்ணிக்கையினரைக் கொண்டு பேராசிரியர் அ.மாக்ஸ்சுடனான சந்திப்பு நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. மலையக மக்கள் தொடர்பில் கரிசனையை கு.சின்னப்பபாரதி, அ.மாக்ஸ் ஆகிய இடதுசாரிய செயற்பாட்டாளர்கள் கொண்டிருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது. இவர்கள் பற்றிய ஞாபகங்களை மீட்டெடுப்பதாக பாலபாரதியுடனான கலந்துரையாடல் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

மலேசிய மக்களின் வாழ்க்கை முறை பற்றிய மேலோட்டமான பார்வை வசதிவாய்ப்பாக தென்பட்டாலும் அங்கு உழைக்கும் வர்க்கத்தினரின் பாதிப்பு மிக அவதானத்துக்குரியதாகவே அமைகிறது. பிரித்தானிய ஆட்சியின் போது தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு புலம்பெயர்ந்த சம காலத்திலேயே மலேசியா போன்ற தென்கிழக்காசிய நாடுகளுக்கும் தமிழர்கள் புலம்பெயர்ந்தார்கள். மலேசிய நாட்டின் உற்பத்தி பொறிமுறையிலும் பங்கெடுத்து மலேசியாவின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதிலும் அதீத பங்களிப்பை செலுத்திய இந்திய வம்சாவளி மக்கள் பற்றிய ஆய்வுகள் முக்கிய அவதானத்தை பெறுகின்றன. மலேசியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான் தொடர்பு காலத்தால் முந்தியது என வரலாற்று ஆய்வாளர்கள் எடுத்துரைப்பார்கள். அத் தொடர்புகள் இனக்கலப்புகளுக்கான வாய்ப்புகளோடு தமிழர்களின் தொன்மையில் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளமை கவனிக்கத்தக்கது. மலேசிய தமிழர்கள் என்ற வகைப்பாட்டில் இருநூறு வருடத்திற்கு முன்னரான புலம்பெயர்வுக்குள்ளான தமிழர்களே கணிப்பிற்குரியவர்களாக உள்ளமை கவனிக்கத்தக்கது.

அமரர் லெனின் மதிவானம் உயர் கல்வி வாய்ப்பிற்காக மலேசிய சென்றபோது இம்மக்கள் பற்றி அவர் மேற்கோண்ட ஆய்வு முக்கியத்துவத்திற்குரியதாகும். அவ்ஆய்வின் பின்னணியில் இரா.சிவலிங்கம் ஞாபகார்த்த குழு வருடாந்தம் ஏற்பாடு செய்யும் நினைவுப் பேருரையின் வரிசையில் லெனின் மதிவானத்தின் "மலேசிய தமிழர்களின் சமகால வாழ்வியல் பரிமாணங்கள்" சில அவதானிப்புகள் எனும் தலைப்பிலான ஆய்வுரை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

பயணம் தொடரும்

# நடப்பு நிதியாண்டில் 15.59 பில். டொலர்களை முதலீடு செய்யும் அதானி குழுமம்

இந்தியாவில் முந்த்ராவில் உள்ள அதானி சோலார் பவர் பிளாண்ட் உற்பத்திகள் பெரும்பாலும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அதானி குழுமம் இந்த நிதியாண்டில் 15.59 பில்லியன் அமெரிக்க டாலர்களை முதலீடு செய்ய உள்ளது, இது அடுத்த 710 ஆண்டுகளில் அதன் லட்சியமான 100 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டுத் திட்டத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த நிதியின் பெரும்பகுதி, சுமார் 70%, உள்நாட்டில் உருவாக்கப்படும், மீதமுள்ளவை கடன் மூலம் நிதியளிக்கப்படும். மேலதிகமாக புதிய முதலீட்டாளர்களிடமிருந்து ஆண்டுக்கு 22.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈர்க்கும் அதேவேளையில், முதிர்வுக் கடனில் 34 பில்லியன் அமெரிக்க டொலர்களை மறுநிதியளித்து, 1 பில்லியன் அமெரிக்க டொலர் திட்ட நிதியைப் பாதுகாக்க குழுமம் திட்டமிட்டுள்ளது.

அதானி க்ரீன் எனர்ஜியின் 67 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் சோலார் வேஃபர் உற்பத்தியில் முன்னேற்றம் உள்ளிட்ட தற்போதைய திட்டங்களை பூரணப்படுத்துவது குறித்து இந்த ஆண்டிற்கான கவனம் செலுத்தப்படும் என்று குழுவின் பிரதம நிதி அதிகாரி, ஜுகேஷிந்தர் ராபிசிங் கூறினார். மும்பை விமான நிலையத் திட்டமும் கணிசமான முன்னேற்றம் அடையும்.

2024 25 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட மூலதனச் செலவு முந்தைய நிதியாண்டை விட 40% அதிகரிப்பைக் குறிக்கிறது.

இது அதானி குழுமத்தின் வலுவான வளர்ச்சிப் பாதை, பசுமை முயற்சிகள் மற்றும் உள்கட்டமைப்பில் மூலோபாய முதலீடுகளின் வளர்ச்சியைக் குறிக்கின்றது.



படம்: இந்தியாவிலிருந்து சிரஜீவ் சிறிமான

## தனது சர்வதேச வலையமைப்பை விஸ்தரித்துள்ள 99X நிறுவனம்



தனது மூலோபாய வளர்ச்சியைச் சுட்டிக்காட்டும் வகையில், கொழும்பில் உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட வட்டமேசை கலந்துரையாடலில் தனது சர்வதேச அடிச்சுவட்டை விஸ்தரித்துள்ளது 99X.

சர்வதேச மென்பொருள் வடிவமைப்பு பொறியியல் நிறுவனமான 99X, கொழும்பு 03 இல் அமைந்துள்ள தனது அலுவலக வளாகத்தில், உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட வட்டமேசை கலந்துரையாடல் நிகழ்வொன்றை நடாத்தியுள்ளதுடன், 'Poised for Growth in Europe and Americas' என்ற தலைப்பில் இந்த கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் நோர்வே, போர்த்துக்கல், பிரேசில் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து 99X இன் தொழிற்துறை தலைவர்களை இந்த மாநாடு ஒன்றுதிரட்டியதுடன், முன்னோக்கு சிந்தனை கொண்ட சர்வதேச தொழில்நுட்ப முன்னிலை நிறுவனம் என்ற வகையில் 99X இன் வளர்ச்சி தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

99X இன் சர்வதேச தலைமைத்துவ அணியின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்ட இந்த கலந்துரையாடல் நிகழ்வில், உள்நாட்டு ஊடக பிரதிநிதிகளும் பங்குபற்றினர். நோர்வே 99X குழுமத்தின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி ஓட்ஸ்வியர் ஒஸ்லி, நோர்வே 99X குழுமத்தின் குழும பிரதம நிதி அதிகாரி ட்ரைக்வே மோ, உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

சர்வதேச அளவில் விஸ்தரிப்பை மேற்கொள்ளும் இலக்குடன், வழங்குகின்ற சேவைகளை மேம்படுத்தி, புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர்களின் திருப்தி மட்டத்தை முன்னெடுப்பதற்காக சர்வதேச திறமைசாலிகளின் அனுகூலத்தைப் பயன்படுத்தி, 99X குழுமத்தினுள் ஒத்துழைப்பு முயற்சிகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான மேடையை இந்நிகழ்வு வழங்கியுள்ளது. மேலும், புத்தாக்க மூலோபாயங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கணிசமான முதலீடுகளைத் தொடர்ந்து 99X முகங்கொடுத்துள்ள விரைவான வளர்ச்சி தொடர்பிலும் இக்கலந்துரையாடல்களின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

## ஹேலீஸ் சோலார் நிறுவனத்தின் 'கடன் இல்லாத கடன்'

ஹேலிஸ் சோலார் நிறுவனம் அறிமுகப்படுத்தும் 'கடன் இல்லாத ஒரு கடன்' Hayleys Fentons இன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரிவான ஹேலிஸ் சோலார், இலங்கை குடும்பங்களுக்கு 'கடன் இல்லாத கடன்' மூலம் அவர்களின் மின்சார தேவைகளைக் கட்டுப்படுத்த அதிகாரம் அளிக்கிறது.




சூரிய சக்தியை அனைவருக்கும் மலிவு விலையில் வழங்குவதற்காக, பிரத்தியேக நிதித் திட்டங்களின் அடிப்படையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில், பல குடும்பங்களுக்கு மின் கட்டணம் ஒரு குறிப்பிடத்தக்க செலவாகிவிட்டது.


சூரிய சக்திக்கு மாறுவது இந்தச் செலவை எளிதில் அகற்றும் ஒரு வழியாகும்.

நிதியளித்தல் ஒரு சவாலாகவே இருப்பதோடு, இறுதியில் குடும்பத்தின் மாதாந்த பட்ஜெட்டில் மற்றொரு சுமையை இலகுவாக சேர்த்தும் விடுகிறது. எனவே, "கடன் இல்லாத ஒரு கடன்" திட்டத்தின் ஊடாக, சூரிய முதலீடுகளுக்காக, ஹேலிஸ் சோலாருடன் இணைந்து பிரத்தியேக கட்டணங்களை வழங்கும் இலங்கையில் உள்ள உயர்மட்ட நிதி பங்காளிகளிடமிருந்து நுகர்வோர் நிதி வசதிகளை அணுக முடியும்.

இந்த ஏற்பாட்டின் மூலம் நுகர்வோர் குறைந்த மாதாந்த வங்கி தவணையை செலுத்த முடியும், இது அவர்களின் தற்போதைய மாதாந்த மின் கட்டணத்தை விட குறைவாகவே உள்ளது.

இதன் விளைவாக, வங்கித் தவணையைச் செலுத்திய பிறகு சேமிப்பை அவர்களின் குடும்பத்தின் எதிர்காலத்தில் முதலீடு செய்யும் அதே வேளையில், 20 ஆண்டுகளுக்கு இலவச மின்சாரத்தை அனுபவிக்கும் வாய்ப்பும் கிடைக்கின்றது.

## 2023/24 நிதியாண்டில் சிறப்பான வளர்ச்சியை பதிவு செய்துள்ள நவலோக்க மருத்துவமனை



இலங்கையில் தனியார் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னணி சுகாதார சேவை வழங்குநரும், நாட்டின் முன்னணி சுகாதாரப் பாதுகாப்பு வர்த்தக நாமமும் கொண்ட நவலோக்க மருத்துவமனை குழுமம், 2023/24 ஆம் ஆண்டிற்கான சிறந்த நிதிச் செயல் திறனைப் பதிவு செய்துள்ளது. அதன் காரணமாக, நவலோக்க மருத்துவமனை குழுமத்தால் மீள்தன்மை மற்றும் செயற்பாட்டுச் சிறப்பிற்கான குழுவின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்த முடிந்தது.

அதன்படி, மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த நிதியாண்டில், நவலோக்க மருத்துவமனை குழுமம் 347.8 மில்லியன் ரூபா வரிக்குப் பின்னரான ஒருங்கிணைக்கப்பட்ட நிகர இலாபத்தைப் பதிவுசெய்ததன் மூலம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 114.26% வளர்ச்சியை எட்டியுள்ளது.


இந்த வளர்ச்சி திறமையான சேவை மற்றும் சிறந்த நோயாளர் பராமரிப்புக்கான அவர்களின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது.

சவாலான பொருளாதார சூழ்நிலைக்கு மத்தியில், தனது வணிக மாதிரியின் வலிமை மற்றும் சூழலுக்கு ஏற்றவிதத்தில் மாற்றிக்கொள்ளும் தன்மையை வெளிப்படுத்தி, கடந்த நிதியாண்டில் தனது வருமானத்தை 10,648 மில்லியன் ரூபாவாக அதிகரிக்க முடிந்தது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14.43% வளர்ச்சியை எட்டியுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் தலைவர் கலாநிதி ஜயந்த தர்மதாச, "இந்த குறிப்பிடத்தக்க இலாப அதிகரிப்புடன், நவலோக்க மருத்துவமனைகள் குழுமத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முழு குழுவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பின் விளைவுகளை நாம் காணலாம்." என தெரிவித்தார்.

## துவாரகாவின் Dawn & Dusk விருந்து மண்டபம் திறப்பு





கொழும்பின் முன்னணி வட மற்றும் தென்னிந்திய தூய சைவ உணவகங்களில் ஒன்றான துவாரகா, இல்லத் திருமணங்கள் முதல் பெரு நிறுவன விழாக்கள் வரை, ஒவ்வொரு தருணத்தையும் சிறப்புமிக்க நிகழ்வாக மாற்றியமைப்பதற்காக கொழும்பு 4, மரைன் டிரைவில் Dawn & Dusk என்ற விருந்து மண்டபத்தை திறந்து வைத்துள்ளது.

Dawn & Dusk என்பது இந்து சமுத்திரத்தை நோக்கியதாக அமைந்த ஒரு நேர்த்தியான, சூழவும் கண்ணாடியால் அமைக்கப்பட்ட விருந்து மண்டபமாகும். அதி நவீன, பல மாடி கட்டடத்தின் பிரதான மண்டபம் முதல் தளத்தில் அமைந்துள்ளது.

உயரமான கூரையுடன், தூண்கள் இல்லாமல் அமைக்கபட்டுள்ளதால், விருந்தினர்கள் உள்ளே சென்றவுடன் விசாலமான உணர்வைப் பெறுவார்கள். இந்த மண்டபம் மரைன் டிரைவில் பெரிய கண்ணாடி ஜன்னல்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளதால், விருந்தினர்கள் பரந்த இந்தியப் பெருங்கடலின் நீல நீர்ப்பரப்பையும்; மற்றும் அழகான சூரிய அஸ்தமனக் காட்சியையும் கண்டுகளிக்கலாம். பிரதான மண்டபத்தில் 220 நபர்கள் வரை வட்ட மேசை அமைப்பு இருக்கைகளுடன் அமரக்கூடியதாக இருக்கும் அதேநேரம், பொதுவாக தமிழ் திருமண விழாக்களில் காணப்படுவது போல 500 நபர்கள் வரை திரையரங்கு பாணி அமைப்பு இருக்கைகளில் அமரலாம். தரைத் தளத்தில் அமைந்துள்ள விசாலமான புஃபே பகுதியில், உணவு மற்றும் பானங்களை பரந்தளவில் வைக்கலாம். திருமண பரிவாரங்களுக்கு அதிக வசதியை வழங்க, மண்டபத்தில் இரண்டாவது மாடியில் இணைக்கப்பட்ட குளியலறைகள் கொண்ட இரண்டு விசாலமான அறைகள் உள்ளன, அவை மணமகனும், மணமகளும் தங்கள் திருமணநாளில் உடை மாற்றும் மற்றும் ஒப்பனை செய்து கொள்ளும் அறைகளாகப் பயன்படுத்தலாம்.

மேலதிகமாக Dawn & Dusk 80 நபர்கள் வரை அமரக்கூடிய ஒரு தனிப்பட்ட விழா அறையையும் கொண்டுள்ளது இது பிறந்த நாள், ஆண்டுவிழாக்கள் மற்றும் நிறுவன நிகழ்வுகள் போன்ற சிறிய விழாக்களுக்கு மிகவும் பொருத்தமானது.

## CAFE 2024இல் சமையற் கலைத் திறனை ஊக்குவித்த லிற்றோகாஸ் லங்கா



சமையல் கலை உணவுக் கண்காட்சி 2024 இன் 21ஆவது பதிப்பில் பிரதான அனுசரணையாளராக இலங்கை பிரதம சமையல்கலை நிபுணர்கள் சங்கத்துடன் தொடர்ந்தும் கூட்டாண்மை வகித்தது லிற்றோ காஸ் லங்கா. சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஜூன் 7ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடைபெற்ற இந்த நிகழ்வு சமையலின் கலைத்திறன் மற்றும் புதுமையின் உச்சத்தை வெளிப்படுத்தும் சர்வதேச ரீதியான ஆர்வத்தை ஏற்படுத்தியது. இலங்கைக்கு திரவப்பெற்றோலிய வாயுவை இறக்குமதி செய்யும் பாரிய இறக்குமதியாளரும், விநியோகஸ்தருமான லிற்றோ காஸ் லங்கா நிறுவனம், தொடர்ச்சியாக 21ஆவது வருடமாகவும் இந்த மாபெரும் சமையல் கண்காட்சி மற்றும் வர்த்தக நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் ஊடாக கௌரவம் பெறுகின்றது. இந்தக் கண்காட்சியில் உள்ள 75 சமையல் காட்சிக் கூடங்களுக்கும் எரிசக்தி விநியோகத்தை வழங்கி லிற்றோ காஸ் நிறுவனம் மீண்டும் ஒருமுறை உத்தியோகபூர்வ திரவப்பெற்றோலிய வாயுப் பங்காளராகியுள்ளது. உணவு பதப்படுத்துதல் முதல் நுகர்வு வரை சமையல் கலைகளின் ஒவ்வொரு அம்சத்தையும் சிறப்பித்துக் காட்டும் உணவுப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விரிவான காட்சிக் கூடங்களை CAFE 2024 கொண்டிருந்தது.

## புற்றுநோயாளர்களான உயர்தர மாணவர்களுக்கு உதவித் தொகை



கடந்த இருபது ஆண்டுகளாக பாரம்பரிய தேயிலை உற்பத்திப் பொருட்களை தயாரித்து விற்பனை செய்துவரும் பெட்னா நிறுவனம், புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு புலமைப் பரிசில் மூலம் கைகொடுக்க முன்வந்துள்ளது. இதை நடைமுறைப்படுத்துவதற்கான இரு தரப்பு ஒப்பந்தம் கடந்த ஜுன் மாதம் 25ஆம் திகதி கொழும்பு கங்காராமவில் நடைபெற்ற எளிய நிகழ்வில் பெட்னா நிறுவனத்துக்கும் மொரட்டுவை நியூஹொரைசன் அரிமா சங்கத்துக்கும் இடையில் கைச்சாத்தானது. சமகி செவன புற்றுநோய் நிலைய நிர்வாகி வண.பிதா ஜுட் நிக்கலாங்ஸ முன்னிலையில் பெட்னா சார்பாக அதன் நிர்வாக பணிப்பாளர் சமென்ந்த சோமதுங்கவும் அரிமா சங்கத்தின் நிர்வாகி வஜிர திலகுமாரவும் இப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

இத் திட்டத்தின் கீழ் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள உயர்தர மாணவர்களுக்கு இரண்டுவருட காலத்துக்கு மாதம் ஐயாயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்படும். தற்போது 25 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்தொகை படிப்படியாக அதிகரிக்கப்படவுள்ளது. இலங்கையில் புற்றுநோய் நோயாளர்கள் சமீபகாலமாக அதிகரித்து வருவதோடு குறைந்த வயதுடையோர் மத்தியிலும் இது அதிகரித்து வருகிறது. வருடாந்தம் முப்பதாயிரத்துக்கும் அதிகமானோர் இலங்கையில் புற்றுநோயாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். மாணவ பருவத்தில் இந்நோயால் பாதிக்கப்படும் போது அவர்கள் பலவிதமான சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். எனவே மாணவர்களுக்கு உதவுவது அவசியம் என்பதால் தாம் இத்தீர்மானத்துக்கு வந்ததாக இங்கு உரையாற்றிய பெட்னாவின் நிறுவனத் தலைவர் சோமதுங்க தெரிவித்தார்.

இந்நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து தயாரித்த புற்றுநோய்க்கான மருந்து தற்போது 'வேர்நோலக்' என்ற பெயரில் விற்பனையாகி வருகிறது. இம் மருந்து விற்பனையின் மூலம் கிடைக்கும் இலாபம் மாணவர் உதவித் தொகை திட்டத்துக்கு பயன்படுத்தப்படவுள்ளது.




# ஈழத்து உருவகக் கதையின் பிதாமகர் சு.வே.

சு.வே. என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட எழுத்தாளர் சு.வேலுப்பிள்ளை எழுதிய 'மணற்கோயில்' என்ற உருவகக் கதையை தமிழக மூதறிஞரான ராஜாஜி படித்துவிட்டு, தன்னுடன் இருந்த அறிஞர்களுக்கு அதனைக் காண்பித்து "ஆஹா! இதுவல்லவா சிறந்த உருவகக் கதை" என விதந்து பாராட்டினாராம். இக்கதை கலைச்செல்வி சஞ்சிகையில் வெளியானது. ராஜாஜியின் பாராட்டு, சு.வே.யை அக்காலத்தில் பிரபல்யப்படுத்தியது மட்டுமல்லாமல், தேடி வாசிக்கப்படவேண்டிய ஒருவராகவும் ஆக்கியது.

நாவற்குழியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தையல்நாயகி தம்பதிக்கு 24.05.1921இல் மகனாகப் பிறந்த சு.வேலுப்பிள்ளை, ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியர். ஒரு தமிழ்ப் பண்டிதர். திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்ற பின்னணி இவரைப் புத்திலக்கியப் படைப்பாளியாக உருவாக்கியது எனலாம். 1946 முதல் 1981வரை ஆசிரியப் பணிபுரிந்த சு.வே. ஹற்றன், டிக்கோயா, சுன்னாகம், மானிப்பாய் ஆகிய இடங்களில் பணிபுரிந்து, தான்பெற்ற அனுபவங்களையே கருப்பொருள்களாகக் கொண்டு படைப்புகளை ஆக்கித் தந்துள்ளார்.

சு.வே. ஈழகேசரி இலக்கியப் பண்ணையில் முகிழ்ந்தவர். அவரது முதற் சிறுகதை 'கிடைக்காத பலன்' 1943இல் ஈழகேசரியில் வெளியானது. அவர் 11 சிறுகதைகளை ஈழகேசரியில் எழுதியுள்ளார். சு.வே.யின் சிறுகதைகள் 'மண்வாசனை', 'பாற்காவடி' ஆகிய மகுடங்களில் தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

சு.வே., சிறுகதை, உருவகக்கதை, கட்டுரை, நாடகம் ஆகிய இலக்கியத்துறைகளில் தடம் பதித்தவர். ஈழத்து உருவகக் கதைத் துறையின் பிதாமகர் இவரே. சு.வே.யின் உருவகக் கதைகள் ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன. இவரது தேர்ந்தெடுக்கப்பட்ட உருவகக் கதைகள் தொகுப்பாக 'மணற்கோயில்' என்ற மகுடத்தில் மித்ர வெளியீடாக 1999இல் வெளிவந்தது.

1965இல் இலங்கைக் கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் இவரது 'வஞ்சி' என்ற ஓரங்கநாடகம் முதற்பரிசு பெற்றது. அடுத்த ஆண்டில் 'எழிலரசி' என்று முழுநீள நாடகம் முதற்பரிசு பெற்றது. 1960இல் இலங்கை வானொலி நாடகப் போட்டியில் இவரின் 'மண்வாசனை' முதற்பரிசு பெற்றது. 1968இல் 'ஒருமை நெறித்தெய்வம்' என்ற நாடகம் பரிசு பெற்றது.

சு.வே. பல வானொலித் தொடர் நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய, ஏட்டிலிருந்து (1964)16 வாரங்கள், கிராம ராஜ்யம் (1964) 32 வாரங்கள், பொன்னாச்சிக் குளம் (1967/1968) 97 வாரங்கள், நவயுகம் (1969)12 வாரங்கள்; தொடராக ஒலிபரப்பாகி வானொலி இரசிகர்களை கேட்டுச் சுவைக்க வைத்த நாடகங்களாகும்.

இலங்கை வானொலியில் சு.வே. தொடர் உரைகளையும் ஆற்றியுள்ளார். 'இலக்கிய இரசனை' (1965) 32 வாரங்கள், 'திருக்குறட் சித்திரம்' (1968) 36 வாரங்கள், 'நாட்டுக்கு நல்லது' (1969) 24 வாரங்கள் என்பன இவரது வானொலி உரைச் சித்திரங்களாகும்.

சு.வே. எழுதிய சந்திரமதி, குகன் ஆகிய சிறுவர் கதைகள் ஈழகேசரி நா. பொன்னையாவால் வெளியிடப்பட்டது. இவை சு.வே.யின் சிறுவர் இலக்கியத்துக்கான பங்களிப்புகளாகும். சு.வே. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் கடமை ஆற்றிய வேளை மாணவர்களுக்கான பல பாட நூல்களையும் எழுதியுள்ளார்.

பிரமச்சாரியாகத் தவவாழ்வு வாழ்ந்த சு.வே, 22.06.2007இல் அமரரானார். அவர் பதித்த இலக்கியத் தடம் ஈழத்து இலக்கியத்திற்கு அணி சேர்க்க வல்லது.



# உன்னத படைப்புகளால் உயர்ந்து நின்ற படைப்பாளி

## இலக்கியமாமணி அ.ஸ. அப்துஸ்ஸமது

**'இலக்கிய மாமணி' என்று புகழ்நாமம் பெற்றிருந்த எழுத்தாளர் அ.ஸ. அப்துஸ்ஸமது மறைந்து 23 வருடங்கள் நாளை ஜூலை 1ம் திகதி நிறைவு பெறுகிறது. அவரின் நினைவாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

குறிப்பாக இஸ்லாமிய தமிழ் இலக்கித்துறையின் முன்னோடியாக அறியப்பட்டிருந்தவர் 'ஆனாஸானா' என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட அ. ஸ.அப்துஸ்ஸமது. ஆய்வுகளின் மூலமாக ஈழத்தில் இஸ்லாமிய இலக்கியத்துறையின் முதல்வராகப் பேராசிரியர் ம.மு உவைஸ் புகழ் பூத்திருந்த போதிலும் சிறுகதை, கவிதை, ஆய்வுக்கட்டுரைகள், பாட நூல்கள் நாவல்கள், தொகுப்பு நூல்கள், என்பவற்றினூடாக இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துறையில் முன்னிலை அடையாளத்தைப் பெற்றிருந்தவர் 'அ.ஸ'.

பத்திரிகைகளில் இந்தியச் செல்வாக்கு மிகுந்திருந்த 1950களில் சிறுகதைகள் எழுதத் தொடங்கிய படைப்பாளி அவர். அவருடைய முதலாவது சிறுகதை 'நூர்ஜஹான்' தினகரனில் வெளிவந்தது.

"அப்பொழுது நான் செங்கல்பட்டியில் ஒரு ஆபீஸில் தலைமைக் குமாஸ்தாவாக இருந்தேன். நான் தினமும் காலையில் அந்த காலேஜ் வீதியால் தான் செல்வேன்" என்று நூர்ஜஹான் கதை தொடரும்.

'அ.ஸ' அக்கதையில் எழுதியிருந்த, கல்முனை, திருகோணமலை, கல்லோயாச் சந்தி என்ற இடங்கள் செங்கல்பட்டு, திருச்சி ஜங்சன், கோயம்புத்தூர் என்று மாற்றப்பட்டதாகவும் போடியார் ..,ஜமீன்தாராகவும் இலிகிதர் குமாஸ்தாவாகவும் மாற்றப்பட்டே கதை பிரசுரிக்கப்பட்டதாகவும் அவரின் முதல் சிறுகதை பற்றி அ.ஸ. குறிப்பிடுவார். அவ்வாறான,

அக்கால இந்தியச் செல்வாக்கை, நமது கலாசாரப் பின்னணியில் தொடர்ந்து சிறுகதைகள் எழுதியதன் மூலமாக மாற்றி அமைத்தவர் அ.ஸ. அப்துஸ்ஸமது. அவருடைய 'பின்னல் ஊசி' என்ற சிறுகதையை நமது கலாசாரப் பின்னணியில் எழுதி, 'எதையும் மாற்றக் கூடாது' என்ற குறிப்போடு அனுப்பி வைத்து வெற்றி கண்டவர் அவர்.

சிறுகதைத் துறைக்கு 1950களில் அ.ஸ பிரவேசித்தாலும் அவரின் எழுத்துலக வருகை அதற்கும் முந்தியது.

"நான் திடுதிப்பென்று எழுத்துலகுக்கு வந்தவன் அல்லன். 1947ஆம் ஆண்டு நான் 7ஆம் வகுப்பு படிக்கும் போது, பத்திரிகை படிக்கும் பழக்கம் உடையவனாக இருந்தேன். பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்து சாப்பிட்டதும் பத்திரிகைக் கடைக்குப் போய் ஐந்து சதம் கொடுத்து தினகரன் ஒன்றை வாங்கி வருவேன். அதனைப் படித்து முடித்து விட்டே மறு வேலைக்குத் திரும்புவேன். அப்பொழுது ஒவ்வொரு புதனும் தினகரனில் பாலர் பகுதி வெளிவரும். அதில் வெளிவரும் மாணவர் ஆக்கங்கள் என்னைப் பெரிதும் ஈர்த்தன. அம் மாணவர்களைப் போல நானும் எழுத வேண்டும் என்று தூண்டப்பட்டேன். என்ன விஷயத்தை பற்றி எழுதலாம் என்று யோசனையில் ஆழ்ந்தேன். அது ஒரு மீலாத் விழாக்காலம் அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர் ராஸீக் பரீத் தலைமையில் மீலாத் விழா சிறப்பாக நடைபெற்றது. அது என் மனதை பெரிதும் கவர்ந்தது. அதனை வைத்து "எங்கள் ஊரில் திருநபி ஜெயந்தி" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன். எனது முதல் ஆக்கம் தினகரனில் பிரசுரமாகிற்று." என்று தனது எழுத்துலகப் பிரவேசத்தை குறிப்பிடுவார் அவர்.

சிறு வயதிலேயே எழுத்துலகில் பிரகாசித்தவர் 'அ.ஸ.' அவர் எட்டாம் வகுப்புப் படிக்கின்ற போது எட்டாம் வகுப்புப் பாடநூலில் (பூம் பொழில்) அவர் பத்திரிகைக் கெழுதிய 'சீறாப்புராணம்' என்ற கட்டுரை இடம் பெற்றுப் பெருமை சேர்த்தது.

"கட்டுரை ஆசிரியர் அ.ஸ. அப்துஸ்ஸமது" என்று அதில் இடம் பெற்ற வரியே, எழுத்திலும் ஆசிரியர் சேவையிலும் தனக்கு ஆர்வம் மேலிடக் காரணமாக அமைந்ததாகக் குறிப்பிடுவார் 'அ.ஸ'.

அச்சு வசதிகள் குறைவாக இருந்த அக்காலத்தில் இலக்கிய உலகம் போற்றும் பெறுமதி மிக்க நூல்களைத் தந்தவராக கண்ணியம் பெற்றிருந்தவர் அ.ஸ. அப்துஸ்ஸமது.

'தங்கை' என்று அவர் எழுதிய சிறுகதை தனித்துவம் மிக்க முஸ்லிம் சிறுகதையாக திறனாய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

அ.ஸ வின் நாவல்களில் பனிமலர், மட்டக்களப்பு பிரதேசத்தின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், கலை, கலாசாரம் வாழ்வியல் பேச்சுமொழி என்பவற்றை சித்திரிக்கின்ற நாவலாக முக்கியத்துவம் பெற்றதாகும்.

கனவுப்பூக்கள் நாவலில் பெண்ணியச் சிந்தனைகள் பேசப்படுகின்றன.

"தன் வாழ்வு முழுமைக்கும் ஒரு ஆணையே தஞ்சமெனக் கிடந்து உழல வேண்டியதுதானா? முந்தானையை இடுப்பில் சொருகிக் கொண்டு சமையலறையில் வாழ் நாளில் ஒரு பெரும் பகுதியை கழிக்கும் ஒரு பெண் தன் வாழ் நாளில் காணும் நிறைவு தான் என்ன? அவனுக்கென்று பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்து எஞ்சிய பொழுதையும் கழிக்கும் இந்த வாழ்க்கை ஒப்பந்தம் ஒரு பெண்ணுக்கு வழங்கும் இன்பம் என்ன?

அவளுடைய ஆற்றல், அறிவு, ஆர்வம் அத்தனையையும் மழுங்கச் செய்து எரியும் மெழுகுவர்த்தி மற்றவர்களுக்கு ஒளியை கொடுத்து தன்னை அழித்துக் கொள்ளும் ஒரு நிலையில் பெண் வாழ வேண்டுமா? நான் என்னைக் கலைக்காக அர்ப்பணித்து விட்டேன்."என்று நாயகி ராணி சொல்வாள். பெண்ணியம் பேசும் பாத்திரங்களை தந்த நாவலாக இது சிறப்புப் பெற்றிருந்தது..

தர்மங்களாகும் தவறுகள் அன்றிருந்த இன விரிசலையும் மீறிய நட்புறவை எடுத்துரைக்கும். அதில் வரும் மனைவி மல்காந்தி, தான் தவறிழைக்க வில்லை என்று வாதிடும் வார்த்தைகள், தவறுகள் தர்மங்கள் பற்றிய மீள் சிந்தனையைத் தூண்டுவன.

அவரின் இலக்கியக் கட்டுரைகள் தமிழகத்திலும் வரவேற்புப் பெற்றவை. பிறை, மணிவிளக்கு போன்ற சஞ்சிகைகள் அவற்றை விரும்பிப் பிரசுரித்தன. அவருக்கு ஆ.ஸா. அப்துஸ்ஸமது போன்ற தமிழக அறிஞர்களின் நட்பைப் பெற்றுத் தந்தவையும் அவையே.

முற்றத்து மல்லிகை, பிறைப் பூக்கள் என்ற அவரின் தொகுப்பு நூல்கள் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வாளர்களால் போற்றப் படுவன. இலக்கிய ஆவணமாக அவை பார்க்கப்படுவதோடு, அ.ஸ. இலக்கிய உலகுக்குச் செய்த தொண்டாகவும் அவை மதிக்கப்படுகின்றன.

தமிழ் இலக்கிய 'ஆ' பாடத் திட்டத்தை கற்ற மாணவர்களும் இஸ்லாம் பாடத்திற்கு பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்களும் அ.ஸ.வை மறக்கமாட்டார்கள். அவரின் 'இலக்கிய பாட விளக்கத் துணை', 'இஸ்லாமிய வழிகாட்டி' என்னும் நூல்கள் க. பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகவே அமைந்திருந்தன.



அ.ஸ, அங்கதச் சுவையோடு உரை நிகழ்த்தும் இலக்கியப் பேச்சாளர். வானொலியில் 30 உரைகள், 25 நாடகங்கள் என்பவற்றை வழங்கியிருப்பதோடு, இலக்கிய மஞ்சரி என்ற சஞ்சிகை நிகழ்ச்சியையும் நடத்திப் புகழ் பெற்றவர் .

இலக்கியப் பணிக்காக பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுக் கொண்டார்.

தாஜுல் அதீப் 1989 (முஸ்லிம் சமய கலாசார அமைச்சு)

இலக்கியத் திலகம் 1990 (மலேசிய கவிதை மாலை இயக்கம் )

இலக்கிய மாமணி 1996 (கலைஞர் பேரவை அக்கரைப் பற்று)

1989ல் மல்லிகை அட்டைப்பட அதிதியாக அவரைக் கௌரவித்தது.

அக்கரைப்பற்றில் அப்துஸ்ஸலாம் ஆலீம் ஆஸியா உம்மா தம்பதியின் மகனாக 07.09.1929 ல் பிறந்த அவர், களனி வித்தியாலங்காரப் பல்கலைக் கழக பி.ஏ.சிறப்பு பட்டதாரி. ஆசிரியராகவும், ஆசியர் பயிற்சிக் கலாசாலை தமிழ் விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர்.

மு.மீ றசீனா உம்மாவை விவாகம் (1961) செய்திருந்த அ.ஸ, நான்கு பிள்ளைகளின் (சித்தி றிஜா எழுத்தாளர், அஹ்மத் கியாஸ் எழுத்தாளர், சித்தி மர்லியா, அஹ்மத் பறாபி) தந்தையாவார்.

தனது 72ஆவது அகவையில் 01 .07.2001இல் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்துகொண்ட இலக்கிய மாமணி அ. ஸ. அப்துஸ்ஸமது இலக்கிய உலகுக்கு அளித்திருக்கின்ற பொக்கிஷங்கள் அநேகம்.

75க்கும் மேற்பட்ட சிறுகதைகளை அவர் எழுதியிருக்கின்றார்.

ஆனால் மிகக் குறைந்த அளவான சிறுகதைகளே 'எனக்கு வயது பதின்மூன்றில்' இடம் பெற்றிருக்கின்றன்.

அவருடைய சிறுகதைகள் அனைத்தும் தொகுதியாக்கப்பட வேண்டும் ,

அதுபோன்றே அவரின் உருவகக் கதைகள், கவிதைகள், வானொலி நாடகங்கள், வானொலி உரைகள், கல்விப்பணி என்பனவும் நூலுருப் பெறவேண்டும்.

இவையே இலக்கியத் தேடல் உள்ளவர்களின் பேரவாவாக இருக்கின்றது.

இலக்கிய மாமணி என்று புகழ் பூத்திருந்த அ.ஸ. அப்துஸ்ஸமது மறுமை வாழ்விலும் சிறந்திருக்கப் பிரார்த்தனைகள் .

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

### சிறுகதை

எனக்கு வயது பதின்மூன்று1977 (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது)

### நாவல்

பனிமலர் 1982

( நாவல் போட்டியில் பரிசு பெற்றது)

கனவுப் பூக்கள் 1984 (கொழும்பு முஸ்லிம் எழுத்தாளர் பேரவைப் பரிசு பெற்றது )

தர்மங்களாகும் தவறுகள் 1987

### இலக்கியம்

சீறா இன்பம் 1957 (சென்னை)

சுலைமான் பல்கீஸ் 1959 (சென்னை )

இஸ்லாமிய இலக்கிய நோக்கு 1996

### தொகுப்பு

முற்றத்து மல்லிகை1964

(ஈழத்து முஸ்லிம் புலவர் 57பேரின் கவிதை தொகுப்பு நூல்)

பிறைப் பூக்கள் 1979 ஈழத்து (முஸ்லிம் எழுத்தாளர் 27 பேரின் சிறுகதைத் தொகுப்பு நாலாவது இஸ்லாமிய இலக்கிய மாநாட்டு வெளியீடு, கொழும்பு)

### பாட நூல்கள்

இலக்கியப் பொய்கை 1959,1961

தமிழ் இலக்கியம் விளக்கத் துணை1968

தமிழ் இலக்கிய வினா விடை 1983 (க.பொ.த. சாதாரணம்)

இஸ்லாம் வழிகாட்டி 1972 (க.பொ.த. சாதாரணம்`)

### உரை

தீன்மாலை1987

(கஹவத்தை முஹம்மது லெப்பை ஆலிம்.)

'அ.ஸ', உன்னதமான படைப்புகளால் உயர்ந்து நின்ற படைப்பாளி. அவரின் ஒவ்வொரு படைப்பும் எடுத்துக்காட்டாகச் சொல்லத் தக்கவை. துறை சார்ந்த கனதியுடையதாக மிளிர்பவை.




# இந்திய அரசியலில் சம பலத்துடன் மோதும் ஆளும், எதிர்க் கட்சிகள்

இந்தியாவின் 18ஆவது மக்களைவை தோதல் முடிந்து மீண்டும் தேசிய ஜனநாய கூட்டணி வெற்றி பெற்று பா.ஜ.க தலைமையில் ஆட்சியமைந்து நரேந்திர மோடி மீண்டும் மூன்றவது முறையாக பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணியும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்று முதன்மையான எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கிறது.

தனிப்பெரும்பான்மை யாருக்கும் இல்லாததால் பா.ஜ.க கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு ஆட்சியமைத்துள்ளது. ஆனால் எதையும் தனித்து முடிவெடுக்க முடியாததால் தடுமாற்றத்தில் இருப்பதையும் காண முடிகிறது. குறிப்பாக வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க சபாநாயகரை நியமிக்க முடியாமல் தற்காலிகமாக ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினர் பாத்ருஹரி மகதாப்பை சபாநாயகராக தேர்வு செய்து பிரதமர் உட்பட பல அமைச்சர்கள் பதவி ஏற்றுக் கொண்டனர்.

18ஆவது மக்களைவை முதல் நாள் கூட்டமே கூச்சல் குழப்பத்துடன் தொடங்கியிருக்கிறது, கடந்த 17 மக்களவையிலும் யார் ஆட்சியமைக்கிறார்களோ அவர்கள் தேர்வு செய்பவரே சபாநாயகராக இருப்பார். ஆனால், இந்த முறை ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் கிட்டதட்ட சம அளவில் மக்களைவை உறுப்பினர்கள் இருப்பதால் சபாநாயகரை தேர்ந்தெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆளும்கட்சி பா.ஜ.க தேர்ந்தெடுப்பவரை எதிர்க்கட்சி ஏற்றுக்கொள்ளாததால் சபாநாயகர் தேர்வில் குழப்பம் நீடித்தது.

இந்திய மக்களைவை வரலாற்றில், இதுவரை சபாநாயகர், தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட்டது இல்லை, அனைத்துக் கட்சிகளின் ஒப்புதலுடன் ஏகமனதாக சபாநாயகர் தேர்வாகி இருக்கிறார், ஆனால், இந்தமுறை இந்தியா கூட்டணிக்கு 232 மக்களவை உறுப்பினர்கள் இருப்பதால் அவர்களும் வேட்பாளரை நிறுத்த முடிவு செய்துள்ளனர். ஆனால், இப்படி நடந்து விடக் கூடாது என பா.ஜ.க தலைமை எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் தோல்வியில் முடிந்திருக்கிறது கேரளாவைச் சேர்ந்த காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் சுரேஷ் சபாநாயகர் போட்டிக்கு வேட்பு மனுதாக்கல் செய்தார்.

பா.ஜ.க சார்பில் முதலில் புதிய சபாநாயகராக ஆந்திராவை சேர்ந்த புரந்தேஸ்வரியை தேர்ந்தெடுக்கலாம் என்று செய்தி வெளியானது. அதேநேரத்தில் சபாநாயகர் தேர்வில் குழப்பம் ஏற்பட்டதால், கடந்த முறை சபாநாயகராக இருந்த ஓம்பிர்லாவையே தேர்வு செய்ய வாய்ப்பு இருப்பதாகவும் ,செய்திகள் வெளியாகின. இதன்மூலம் சபாநாயகர் பதவிக்கு பா.ஜ.க காங்கிரஸ் இடையே போட்டி ஏற்படுவது உறுதியாகியிருக்கிறது. மக்களைவை வரலாற்றில் 1946ஆம் ஆண்டு முதல் இதுவரை சபாநாயகர் பதவிக்கு போட்டி ஏற்பட்டதே கிடையாது.

இந்தமுறை போட்டி ஏற்பட்டிருப்பது ஆச்சரியமானதாக பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் 26.6.2024 அன்று காலை 11 மணிக்கு நடைபெற்ற சபாநாயகர் தேர்தலில் குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டதில் ஓம்பிர்லா வெற்றி பெற்றார், பிரதமர் நரேந்திர மோடியும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் சபாநாயகருக்கு வாழ்த்து தெரிவித்து அவருக்கான இருக்கையில் அமர வைத்தனர்.

மக்களவையில் ஆளும்கட்சி உறுப்பினர்களும், இந்தியா கூட்டணி உறுப்பினர்களும், ஓரளவு சமபலத்துடன் இருக்கிறார்கள். இதன் காரணமாக மக்களைவைக் கூட்டத் தொடர், தொடக்கத்தில் இருந்தே மிக கடுமையான அனல் பறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள 23 கட்சிகளும், தேர்தலின் போது. பல தொகுதிகளில் ஒருங்கிணைந்து செயற்பட்டதால் வெற்றிபெற முடிந்தது. அந்த அடிப்படையில் மக்களவைக்குள்ளும் ஒருங்கிணைந்து செயற்பட முடிவு செய்திருக்கிறார்கள். குறிப்பாக முக்கிய கொள்கைகளில் ஒருமித்த கருத்துடன் செயற்பட எதிக்கட்சித் தலைவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். அதை முதல்நாள் கூட்டத் தொடரிலேயே எதிர்க்கட்சித் தலைவர்கள் தொடங்கி விட்டனர்.

எதிர்க்கட்சியினரின் திட்டப்படி, 25.6.2024 அன்று காலை முதல்நாள் கூட்டத்தொடர் தொடங்கிய போது எதிர்க்கட்சியில் உள்ள 234 மக்களைவை உறுப்பினர்களும் காலை 10.30 க்கு மக்களைவை வளாகத்தில் ஒன்று திரண்டனர். வழக்கமாக மக்களவை கூட்டத்திற்கு உறுப்பினார்கள் ஒவ்வொருவராக வருவதுண்டு. அதைமாற்றி எதிர்க் கட்சிகள். தங்களுக்கு இருக்கும் வலிமையை முதல்நாளே ஆளும் கட்சிக்கும் நாட்டு மக்களுக்கும் காட்ட வேண்டும் என்பதற்காக வித்தியாசமான முறையை கையில் எடுத்தனர். அதன்படி அனைவரும் மக்களவைக்கு முன்பு காந்தி சிலை இருந்த பகுதியில் ஒன்று திரண்டு அணிவகுத்தனர்.

ஒன்றிய அரசை கண்டித்து கையில் சட்டப் புத்தகத்தை கையில் ஏந்திய படி குரல் எழுப்பினர்.

இதில் சோனியா காந்தியும், ராகுல் காந்தியும் பங்கேற்றனர். அனைவரும் அங்கிருந்து ஊர்வலமாக அணிவகுத்து மக்களவை மன்றத்திற்கு சென்றனர். கையில் இந்திய அரசியலமைப்பு சட்டப் புத்தகத்தையும் வைத்திருந்தனர். இதன் மூலம் அரசியலமைப்பு சட்டத்தை ஆளும்கட்சி, அவர்கள் விருப்பத்திற்கு மாற்றியமைக்க முடியாது என்பதை கவன ஈர்ப்பாக உணர்த்தும் வகையில் தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதுதான் ஆளுங்கட்சிக்கு எதிர்க் கட்சிகள் தெரிவித்துள்ள முதல் ஒருங்கிணைந்த எதிர்ப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இதேபோல செயற்படவும் எதிர்க் கட்சியினர் முடிவு செய்துள்ளனர். எனவே மக்களைவைக் கூட்டத் தொடர் முழுவதுமே கூச்சல் குழப்பம் நீடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், மக்களவையில் அனைத்து விவகாரங்களிலும், விரிவான விவாதம் நடத்த ஆளும் கட்சி தயாராக உள்ளது. எதிர்க் கட்சிகள் தங்களது பொறுப்பை உணர்ந்து முழுமையான ஒத்துழைப்பை கொடுக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்திருக்கிறார். எதிர்க்கட்சிகளின் வினாக்களுக்கு பதில் தர வேண்டிய கட்டாயத்துடன் இந்தியாவின் 18ஆவது மக்களவை தொடங்கியிருக்கிறது. இன்னும் என்னென்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## பல்கலைக்கழக அனுமதி — கல்வியாண்டு 2023/2024

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிகோரும் பொருட்டு 2023 கல்வியாண்டில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆகக்குறைந்த தேவைகளைத் திருப்தி செய்துள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும். பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தேவைகளை யார் திருப்திகரமாக பூர்த்தி செய்துள்ளார்கள் என்பது பற்றி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி ஊடாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பது மாணவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

### பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தகைமைகள்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானோர் என அறிவிக்கப்பட்டுள்ள, பரீட்சார்த்திகள் பெற்றிருக்க வேண்டியவை.

(அ) அங்கீகரிக்கப்பட்ட சகல மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளை ஆகக் கூடியது 3 அமர்வுகளுள் பெற்றிருத்தல்.

(ஆ) பொது சாதாரண வினாத்தாளில் ஆகக்குறைந்தது 30% புள்ளிகள் பெற்றிருத்தல்.

**குறிப்பு 1:** பொது சாதாரண வினாத்தாளில் ஆகக்குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் Z புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவாயினும் நடப்பு வருட கல்வியாண்டில் பல்கலைக்கழக கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்கு தகுதியற்றவர்களாவர்.
அவ்வாறான ஒரு விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட தேவையை முந்திய தடவையில் அதாவது க.பொ.த. (உ/த) பரீட்சையின் அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் ஆகக்குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்று பூர்த்தி செய்திருப்பின், அவ்விண்ணப்பதாரி தற்போது தெரிவாகியிருக்கும் கற்கைநெறியினை உரிய பல்கலைக்கழகத்தில் தொடர்வதற்காக பதிவு செய்வதற்குத் தகுதி பெறுவர்.

ஏற்கனவே அனுமதிக்குத் தெரிவாகி பொது சாதாரண வினாத்தாளில் ஆகக்குறைந்தது 30% புள்ளிகளையேனும் பெற்றுக்கொள்ளாத மாணவரொருவர் அடுத்துவரும் பல்கலைக்கழக அனுமதிக்காக அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் பொது சாதாரண வினாத்தாள் பரீட்சையில் தோற்றி குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்தால் மட்டுமே z புள்ளிகளின் அடிப்படையில் ஏற்கனவே தெரிவாகியிருக்கும் கற்கைநெறியினை எதிர்வரும் கல்வியாண்டொன்றில் குறித்த பல்கலைக்கழகத்தில் தொடர்வதன் பொருட்டு பதிவுசெய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

**2023/ 2024ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி கையேட்டினை பெற்றுக்கொள்ளும் முறை**

2023/2024ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலொன்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு இணையவழி ஊடாக 1000.00 ரூபாவைச் செலுத்தி, பல்கலைக்கழக அனுமதிக் கைநூலொன்றின் மென் பிரதியொன்றை **www.ugc.ac.lk** எனும் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

### இணையவழி மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் முறை

பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி மூலம் www.ugc.ac.lk எனும் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக விண்ணப்பித்தல் கட்டாயமாகும்.

**குறிப்பு 2 :** விண்ணப்ப நடைமுறை தொடர்பான வழிகாட்டல்களுக்கு 2023/2024ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 4ஆம் பகுதியை வாசிக்குமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**குறிப்பு 3 :** இணையவழியாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் 2023/2024ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 5ஆம் பகுதியில் தரப்பட்டுள்ளது.

**குறிப்பு 4 :** இணையதள வசதியற்ற விண்ணப்பதாரிகள், நாடெங்கிலுமுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்கள் (OUSL R&Sc), கல்வியமைச்சின் கீழுள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி நிலையங்களுக்கு (ITDLH) அவர்களது அலுவலக நேரங்களில் சென்று எதுவித கட்டணமுமின்றி (இலவசமாக) பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி மூலமாக விண்ணப்பிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான வசதிகள் செய்யப்பட்டுள்ள நிலையங்கள் பற்றிய விபரம் 2023/2024ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் 5ஆம் பகுதியின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

**குறிப்பு 5 :** பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க செல்லுபடியான தேசிய அடையாள அட்டையினை விண்ணப்பதாரிகள் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

**குறிப்பு 6 :** பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி விண்ணப்பத்தை நிரப்புவதில் சிரமங்கள் ஏதும் ஏற்படின் அரச தகவல் நிலையத்தினை (1919) அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தகவல் நிலையத்தின் 011-2695301, 011-2695302 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

### விண்ணப்பங்களை கோருவதற்கான ஆரம்பத் திகதி

2023/2024 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான இணையவழி விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு 2024-06-14ஆம் திகதி முதல் விண்ணப்பதாரிகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

### விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024-07-05ஆம் திகதி ஆகும்.

2024-07-05ஆம் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் அறிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து, இணையவழி மூலமாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததன் பின் பெறப்படும் இணையவழி விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியை பிரதிச் செயலாளர் (பல்கலைக்கழக அனுமதிகள்). பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வோர்ட் பிளேஸ், கொழும்பு-07. என்று முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இதற்காக நீங்கள் **A4** அளவான கடிதவுறையை மட்டும் பயன்படுத்துதல் வேண்டும்.

அச்சிடப்பட்ட இணையவழி விண்ணப்பம் பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்பப்படல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வருகைதந்து விண்ணப்பத்தை நேரில் கையளிக்க முடியாது.

### பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியின்மை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் உள்வாரி மாணவர்களாக அனுமதிக்கு 2023/2024ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் 1.7ஆம் பிரிவிற்கமைய பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் தகுதியற்றோராவர்.

1. க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு மூன்றுக்கு (3) மேற்பட்ட அமர்வுகளில் தோற்றிய மாணவர்கள்.
2. 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க (திருத்தப்பட்ட) பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில்/உயர் கல்வி நிறுவனத்தில் கற்கைநெறியொன்றிற்கு உள்வாரி மாணவர்களாகப் பதிவுசெய்த/ பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

   (இப் பந்திக்கு இயைபான பல்கலைக்கழகங்களினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் பெயர்கள் 2023/ 2024ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 1.6(8) மற்றும் 1.6(10) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன)
3. 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க (திருத்தப்பட்ட) பல்கலைக்கழகங்கள் சட்டம் அல்லாத ஏனைய பாராளுமன்ற சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது ஏனைய உயர் கல்வி நிறுவனமொன்றில் முதல் பட்டக்கல்வி நெறிகளுக்காக இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

   **அவையாவன:**

   i. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்
   ii. இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்
   iii. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (As Enlisted Officer Cadets)
   iv. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
   v. இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் (2017 ஆண்டிலும் அதன் பின்னரும் பதிவு செய்த மாணவர்கள்)
4. கல்வியியற் கல்லூரி (College of Education) ஒன்றில் கற்கைநெறியொன்றினை தொடர்வதற்காக உள்வாரி மாணவர்களாக பதிவு செய்த / பதிவு செய்திருக்கின்ற மாணவர்கள்.
5. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கீழ் வருகின்ற பல்கலைக்கழக கல்லூரிகளில் (University College) மூன்று (03) வருட டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த/ பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.
6. பின்வரும் "முக்கியம்" என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பின்வரும் நிறுவனங்களில் 03 வருடங்கள் அல்லது அதற்கதிகமான காலப்பகுதியின் கீழ் காட்டப்பட்டிருக்கும் கற்கைநெறியொன்றைப் பயில்வதற்கு முழுநேர மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

   (அ) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (HND)

   (ஆ) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வரும் இயந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் (IET), இயந்திரவியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES)

   **முக்கியம் :**

   எவ்வாறாயினும், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (HND) அல்லது / அத்துடன் தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES) ஆகிய மூன்று வருட காலம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தினைக் கொண்ட முழுநேர கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்த மாணவரொருவர் தமக்கு இந்நிறுவனங்களில் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட இறுதித்தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் தனது பதிவினை இரத்துச் செய்தால் மாத்திரம் அதற்குப் பிந்திய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978ஆம் ஆண்டின் 16ம் இலக்க (திருத்தப்பட்ட) பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனமொன்றில் கற்கைநெறி ஒன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகைமையைப் பெற்றுக்கொள்ளலாம்.

   மேற்கூறிய 6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிறுவனமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள கற்கைநெறியொன்றிற்குப் பதிவுசெய்த மாணவரொருவர், பதிவுசெய்வதற்கு கொடுக்கப்பட்ட இறுதித்திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் தனது பதிவை இரத்துச் செய்யாவிட்டால், அவர் மேற்கூறிய 6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரிவிற்குள் வருவதுடன் அதற்குப் பிந்திய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் கற்கைநெறியொன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவராவார்.

   ஆயினும், மேலே குறிப்பிட்ட இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (HND) அல்லது தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES) ஆகிய கற்கைநெறிகளுக்கு வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கூறிய 6ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 60 நாட்களுக்குள் பதிவினை இரத்துச் செய்து பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான சலுகை வழங்கப்பட மாட்டாது.

**குறிப்பு 7 :** மேற்கூறிய 6ஆம் பந்தியில் குறிப்பிட்ட ஓர் கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்காக கொடுக்கப்பட்ட இறுதித் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிறுவகமொன்றிலிருந்து பதிவை இரத்துச் செய்த மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பதுடன் குறித்த நிறுவனத்தில் பதிவை இரத்துச் செய்தமை தொடர்பான கடிதத்தின் பிரதியையும் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

7. ஆரம்ப பட்டக் கற்கைநெறியொன்றைக் கற்பதற்கு உயர் கல்வி அமைச்சினூடாக வழங்கப்பட்ட வெளிநாட்டுப் புலமைப் பரிசிலொன்றை ஏற்றுக்கொண்ட மாணவர்கள்.
8. மேலே 2,3,4,5,6 மற்றும் 7ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகளிலிருந்து ஆரம்பப் பட்டமொன்றை அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றைப் பெற்றுக்கொண்ட மாணவர்.
9. தற்போதைய கல்வியாண்டில் அல்லது முன்னைய கல்வியாண்டு ஒன்றில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது தவறான பிரகடனங்களைச் செய்த மாணவர்கள் / மற்றும் போலியான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் மாணவர்கள்.

**குறிப்பு 8 :** பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட முன்னர் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய் / தவறானவை எனக் கண்டறியப்பட்டால் அக்கல்வி ஆண்டிற்காக அவரின் தேர்வு மற்றும் அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படுவதுடன் எந்தவொரு எதிர்கால கல்வியாண்டிலும் மீண்டும் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

மேலும், பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டதன் பின் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய் / தவறானவை என எவ்விதத்திலாவது கண்டுபிடிக்கப்பட்டால் அம்மாணவரை பல்கலைக்கழகத்தில் / உயர்கல்வி நிறுவனத்திலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.

### இதர முக்கிய தகவல்கள்

(அ) விண்ணப்பத்தில் கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான விருப்பொழுங்கைக் குறிப்பிடுதல்

2023/2024ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற 16 தேசிய பல்கலைக்கழகங்களினாலும், 2 வளாகங்களினாலும் 2 உயர் கல்வி நிறுவனங்களினாலும் 125 பல்வேறு கற்கைநெறிகள் நடாத்தப்படும்.

குறித்தவொரு பல்கலைக்கழகத்தினால் / வளாகத்தினால் / நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்கைநெறி ஒவ்வொன்றிற்கும் தனியானதொரு குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீடுகள் "யுனி கோட்" (Uni-Code) என அழைக்கப்படும். மொத்தமாக 257 "யுனி கோட்" (Uni-Code) உள்ளன. "Uni-Codes"களின் பட்டியல் 2023/ 2024ஆம் கல்வியாண்டிற்கான கையேட்டின் 141 - 147ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

மாணவர்கள் தாம் தகுதி பெற்றுள்ள எவ்வளவு எண்ணிக்கையான யுனி-கோட்களுக்கும் (அதாவது பல்கலைக்கழகங்கள் மற்றும் கற்கைநெறிகள்) விண்ணப்பிக்கலாம். மாணவர்கள் சகல 257 "Uni-Codes" களுக்கும் விண்ணப்பிப்பதற்கு தகுதிபெறமாட்டார். விண்ணப்பதாரியினது யுனி-கோட் (Uni-Code) தெரிவுகள் அவர் க.பொ.த.(உ/த) பரீட்சையில் தோற்றிய பாடங்களின் அடிப்படையில் அமையும். ஆயினும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தில் ஆகக்கூடுதலாக 125 தெரிவுகள் வரை குறிப்பிடலாம்.

அவர்கள் தங்கள் "Uni-Code" களை அதிகூடிய விருப்பு யுனி-கோட்டிலிருந்து அதிகுறைந்த விருப்பு யுனி-கோட் வரை ஒழுங்குபடுத்தல் வேண்டும். ஒழுங்குபடுத்தலானது, மாணவனது மனதில், யுனி-கோட்களில் உள்ள ஆர்வம் குறைந்து செல்லும் வரிசையைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும். மாணவர்கள் தமது விருப்பொழுங்கில் ஒரே யுனி-கோட்டை (Uni-Code) ஒரு தடவைக்கு மேல் பதிய அனுமதிக்கப்பட மாட்டார்.

அனுமதிக்கான தெரிவின் போது கற்கும் கற்கைநெறியும் பல்கலைக்கழகமும் ஒன்றாகவே கருத்திற்கொள்ளப்படும்.

மாணவர்கள் தங்களது விண்ணப்பத்தைக் குறிப்பிடும் போது தாம் தகுதிபெறுகின்ற ஆகக்கூடிய எண்ணிக்கையான யுனி-கோட்களைக் குறிக்குமாறு திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்பதாரிகள் தாம் விருப்புரிமை வழங்கிய கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு மாத்திரமே கருத்திற் கொள்ளப்படுவர். எந்தவொரு விண்ணப்பதாரரும் அவர் வேண்டிக்கொள்ளாத (விண்ணப்பிக்காத) யுனி-கோடொன்றுக்கு (Uni-Code) அனுமதிக்கப்படமாட்டார். இதன்படி, குறித்தவொரு பல்கலைக்கழகத்தின் குறித்தவொரு கற்கைநெறிக்கு அனுமதி பெறப் போதுமான z-புள்ளியை விண்ணப்பதாரியொருவர் பெற்றிருப்பினும், அவ்விண்ணப்பதாரி அதற்குரிய யுனி-கோட்டைத் தனது விண்ணப்பத்தில் கோரியிராதவிடத்து, அந்த யுனி-கோட் (Uni-Code) (அதாவது அதற்குரிய பல்கலைக்கழகமும் கற்கைநெறியும்) அவ்விண்ணப்பதாரிக்கு வழங்கப்படமாட்டாது என்பதுடன் அதற்குப் பதிலாக அவர் தனது விருப்பொழுங்கில் அடுத்த தெரிவாகக் குறிப்பிட்டுள்ள கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் ("Uni-Code") அனுமதிக்கப்படுவது பற்றியே கவனத்திற் கொள்ளப்படுவார்.

**குறிப்பு 9 :** "யுனி-கோட்"களை பயன்படுத்தி விருப்பொழுங்கைக் குறிப்பிடுவது தொடர்பான வழிகாட்டல்களுக்கு 2023/2024ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 3ஆம் பகுதியை வாசிக்குமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**குறிப்பு 10 :** தெரிவு செய்யப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு (**Uni-Code**) மாணவர் ஒருவர் பதிவு செய்யாது விடின், எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் அதே கற்கைநெறியை வேறு பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கு மாணவரது விண்ணப்பப்படிவத்தில் அவற்றிற்கு உயர் தெரிவு வழங்கப்பட்டிருப்பினும் அனுமதிக்கு கருத்திற் கொள்ளப்பட மாட்டார். பதிலாக, அவர்களது விண்ணப்பத்தில் அடுத்த விருப்பொழுங்கிலுள்ள கற்கைநெறியிற்கு அவர்கள் கருத்திற் கொள்ளப்படுவர்.

2023/2024ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 115-116ஆம் பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள "முக்கியம்" எனும் பகுதியை வாசிப்பதன் மூலம் மாணவர்கள் இது தொடர்பிலான மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்பு - 11**

"யுனி-கோட்களின்" வரிசையை இணையவழி மூலம் மாற்றுவதற்கு, 2023/2024ஆம் கல்வியாண்டு அனுமதிக்கான கைநூலின் 3.3 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கொடுக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குப் பதிலாக விண்ணப்பதாரர்களுக்கு **பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து இரண்டு (02) வார காலம் மட்டுமே** வழங்கப்படும் என இத்தால் மாணவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து இரண்டு (02) வார காலத்தினுள் விண்ணப்பதாரர்களின் புதிய கற்கைநெறி ஒழுங்கை முறையாக கையொப்பமிடப்பட்ட மற்றும் திகதியிடப்பட்ட அச்சிடப்பட்ட நகலை பிரதிச் செயலாளர் / பல்கலைக்கழக அனுமதி, பல்கலைக்கழக மானியங்களை அடைய பதிவு செய்யப்பட்ட பதவி ஆணைக்குழு, இல. 20, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
இது தொடர்பில் தேவையான ஏனைய விவரங்களுக்கு விண்ணப்பதாரர்கள் 2023/2024ஆம் கல்வியாண்டு அனுமதிக்கான கைநூலின் 3.3 பிரிவை வாசிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆ) **செயன்முறை / உளச்சார்பு பரீட்சையில் சித்தி பெறுவதற்கான தேவைப்பாடு**

கீழே பட்டியலிடப்பட்டுள்ள கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறுதல் தொடர்பாக பரிசீலிக்கப்பட விரும்பும் பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தினால்/ உயர் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் செயன்முறை /உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைய வேண்டும். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவனம் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும் என்பதுடன் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை மாணவர்கள் நேரடியாகவே உரிய பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளருடன் அல்லது நிறுவனத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் / உயர் கல்வி நிறுவனங்களின் தொலைபேசித் தொடர்பு இலக்கங்கள் பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 196ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், குறித்த கற்கைநெறிக்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு செயன்முறை / உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவதற்கு மேலதிகமாக உரிய கற்கைநெறியின் வெட்டுப் புள்ளித் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்திருப்பதும் கட்டாயமாகும்.

| கற்கைநெறி | பல்கலைக்கழகம்/வளாகம்/ நிறுவகம் | Uni Code |
|---|---|---|
| கலை (SP) - வெகுசன ஊடகம் | கொழும்புப் பல்கலைக்கழகம் (ஸ்ரீ பாளி வளாகம்) | 020S |
| கலை (SP) - அரங்கேற்றல் கலை | கொழும்புப் பல்கலைக்கழகம் (ஸ்ரீ பாளி வளாகம்) | 041S |
| கட்டடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 023G |
| வடிவமைப்பு | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 024G |
| நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 034G |
| இசை | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 068C |
| இசை | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 068E |
| இசை | சுவாமி விபுலானந்தர் அழகியற் கல்வி நிறுவனம் | 068Y |
| இசை | கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 068Z |
| நடனம் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 069E |
| நடனம் | சுவாமி விபுலானந்தர் அழகியற் கல்வி நிறுவனம் | 069Y |
| நடனம் | கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 069Z |
| சித்திரமும் வடிவமைப்பும் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 070E |
| நாடகமும் அரங்கமும் | சுவாமி விபுலானந்தர் அழகியற் கல்வி நிறுவனம் | 071Y |
| நாடகமும் அரங்கமும் | கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 071Z |
| கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் | சுவாமி விபுலானந்தர் அழகியற் கல்வி நிறுவனம் | 072Y |
| உடற்றொழில் கல்வி | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 081E |
| உடற்றொழில் கல்வி | இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகம் | 081L |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 082C |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | களனிப் பல்கலைக்கழகம் | 082D |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகம் | 082L |
| நிலத்தோற்றக் கட்டிடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 097G |
| சினிமா தொலைக்காட்சி பற்றிய கற்கைகள் | களனிப் பல்கலைக்கழகம் | 100D |

(இ) **தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் கற்கைநெறிக்கான பதிவினை மேற்கொள்ளல்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2023/2024ஆம் கல்வி ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த z - பெறுபேறுகள் (வெட்டுப்புள்ளிகள்) வெளியிடப்பட்ட பின், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படும். பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் 1.6(5), 1.6(6), மற்றும் 4.1ஆம் பந்திகளுக்கமைய, மாணவர் தரப்பட்ட வாய்ப்பை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யின், வங்கியில் அல்லது இணையவழி ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்கிற்கு பதிவுக் கட்டணமாக 50/- ரூபாவை வரவு வைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் தாம் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு பதிவுசெய்தல் வேண்டும்.

மேலும் இணையத்தினூடாக பதிவு செய்யும் போது வங்கி மூலமாக கட்டணம் செலுத்தப்படின் ஸ்கேன் செய்யப்பட்ட கட்டணப் பற்றுச்சீட்டு பதிவேற்றப்பட்டு (Upload) உறுதி செய்துகொள்வதன் பொருட்டு இணையத்தினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இணையதளத்தில் பதிவு செய்த பின்னர், அச்சுப்பிரதி செய்யப்பட்டு சரியான முறையில் ஒப்பமிடப்பட்ட இணையதள பதிவுப் படிவத்துடன் (Online Payment Receipt) வங்கியில் செலுத்தியிருப்பின் தேவையான கொடுப்பனவை செலுத்தியமைக்கான அத்தாட்சி பத்திரத்தையும் [Paying-in-Voucher] இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**குறிப்பு 12 :** தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறி, பல்கலைக்கழகத்திற்கு இணையவழி ஊடாக பதிவுசெய்தலும் 2023/2024ஆம் கல்வியாண்டிற்குக் கட்டாய தேவையாகும் என்பதை கருத்திற் கொள்க.

**குறிப்பு 13 :** தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு இணையத்தினூடாக பதிவு செய்து முடிக்கும் போது மாணவர்கள் பகிடிவதையிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான பகிடிவதை எதிர்ப்பு பிரகடனம் ஒன்றினைத் தரவிறக்கி அதனை (இருபுறமும்) A4 அளவிலான தாளில் அச்சிட வேண்டும். பதிவு செய்யும் போது முறையாக கையொப்பமிடப்பட்ட பிரகடனத்தினை பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். தயவுசெய்து இந்தப் பிரகடனத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தபால் மூலம் அனுப்ப வேண்டாம்.

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,**
**இல. 20, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07.**
**2024-06-30.**

# பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை இராணுவம்

## விலைமனுக் கோரல் (IFB)

## இலங்கை இராணுவத்திற்கான புதிய / உலர் உணவுப் பொருட்களை வழங்கல் மற்றும் விநியோகிப்பதற்கான கொள்முதல் - 2025 வருடம்

### ஒப்பந்த அடையாள இலக்கம் - *S&T/03/DRY RATION/FRESH RATION/2025(25)*

**1.** 2025 ஆம் ஆண்டிற்கான முப்படைகளின் புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையான கொள்முதல் குழுவின் (SCAPC) தலைவரினால் இலங்கை இராணுவத்திற்கு **2025 ஜனவரி 01** தொடக்கம் **2025 டிசம்பர் 31** வரையான காலப்பகுதிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உணவு பிரிவுகளின் கீழ் காணும் தலைமையகங்கள் / முகாம்களுக்கு வழங்குவதற்கான முத்திரையிடப்பிட்ட விலைமனுக்கள் பொருத்தமான மற்றும் தகுதிவாய்ந்த வணிக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் மொத்த மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் இலங்கையின் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**1.1 பிரதான முகாம் பிரிவுகள்மற்றும் உப பிரிவுகள்**

**1.1.1 A பிரிவு - அனைத்து புதிய உணவுப்பொருள் முகாம்கள்**

| தலைமையங்கள் / முகாம்கள் | | | | | | உணவு வகை |
|---|---|---|---|---|---|---|
| 1.1.1.1 | அக்கரைப்பற்று | 1.1.1.33 | காவன்திஸ்ஸபுர | 1.1.1.65 | பல்லேகலை | அனைத்து பச்சை உணவு வகைகள் (காய்கறிகள், பழங்கள்,மீன், இறைச்சி / உறைந்த உணவு, முட்டை (கோழி), தோல் உரித்த தேங்காய், பால் பொருட்கள்) |
| 1.1.1.2 | அக்கராயன்குளம் | 1.1.1.34 | கேகாலை | 1.1.1.66 | பன்கொல்ல | |
| 1.1.1.3 | அக்குறேகொடை (பத்தரமுல்ல) | 1.1.1.35 | கொஹம்பகஸ்ஹந்திய | 1.1.1.67 | பெலவத்தை | |
| 1.1.1.4 | அல்லைகந்தலே | 1.1.1.36 | கொக்கெலிய | 1.1.1.68 | பேசாலை | |
| 1.1.1.5 | அம்பேபுஸ்ஸ | 1.1.1.37 | கோமாரி | 1.1.1.69 | பருத்தித்துறை | |
| 1.1.1.6 | அம்பாறை | 1.1.1.38 | கோப்பாய் | 1.1.1.70 | பூநகரி | |
| 1.1.1.7 | அங்குனவெல் பெலஸ்ஸ | 1.1.1.39 | கொஸ்கம | 1.1.1.71 | பூனானி | |
| 1.1.1.8 | பதுளை | 1.1.1.40 | கொத்மலை | 1.1.1.72 | புதுக்குடியிருப்பு | |
| 1.1.1.9 | பலல்ல | 1.1.1.41 | குடாஓயா | 1.1.1.73 | புத்தளம் | |
| 1.1.1.10 | பட்டலந்த | 1.1.1.42 | குருலேகங்க | 1.1.1.74 | இரன்தம்பே | |
| 1.1.1.11 | பூஸ்ஸ | 1.1.1.43 | குருநாகல் | 1.1.1.75 | சேனபுர | |
| 1.1.1.12 | புத்தள | 1.1.1.44 | குருவிட்ட | 1.1.1.76 | சிங்கபுர (பதவி சிரிபுர) | |
| 1.1.1.13 | தம்புள்ளை (இனாமலுவ) | 1.1.1.45 | லக்ஷபான | 1.1.1.77 | சிங்கபுர (வெலிகந்த) | |
| 1.1.1.14 | தெஹியத்தகண்டிய | 1.1.1.46 | மாபேரியதென்ன | 1.1.1.78 | தாராவிகுளம் | |
| 1.1.1.15 | தேவஹுவ | 1.1.1.47 | மாதம்பே | 1.1.1.79 | தந்திரிமலை | |
| 1.1.1.16 | தொம்பகொட | 1.1.1.48 | மாதுருஓயா | 1.1.1.80 | திரியாய | |
| 1.1.1.17 | எம்பிலிபிட்டிய | 1.1.1.49 | மாங்குளம் | 1.1.1.81 | துணுக்காய் | |
| 1.1.1.18 | கஜசிங்கபுர | 1.1.1.50 | மன்னார் | 1.1.1.82 | திருகோணமலை | |
| 1.1.1.19 | கனேமுல்ல | 1.1.1.51 | மாந்தோட்டம் | 1.1.1.83 | உடவலவை | |
| 1.1.1.20 | ஹொரவப்பொத்தானை | 1.1.1.52 | மாத்தறை | 1.1.1.84 | உக்குவலை | |
| 1.1.1.21 | இப்பொலோகம | 1.1.1.53 | மத்தேகொட | 1.1.1.85 | உன்னிச்சை | |
| 1.1.1.22 | இயக்கச்சி | 1.1.1.54 | மிரிகவில | 1.1.1.86 | வாகரை | |
| 1.1.1.23 | கலாஓயா | 1.1.1.55 | அனுமான் பாலம் | 1.1.1.87 | வாழைச்சேனை | |
| 1.1.1.24 | கல்லடி | 1.1.1.56 | மொரவெவ | 1.1.1.88 | வவுனியா | |
| 1.1.1.25 | கல்லாறு | 1.1.1.57 | முல்லைத்தீவு | 1.1.1.89 | வெலங்குளம் (வவுனியா) | |
| 1.1.1.26 | கல்லியடி | 1.1.1.58 | நாகரவெவ | 1.1.1.90 | வெலங்குளம் | |
| 1.1.1.27 | கம்புறுபிட்டிய | 1.1.1.59 | நாவுல | 1.1.1.91 | வேயங்கொடை | |
| 1.1.1.28 | கனகராயன்குளம் | 1.1.1.60 | நெடுங்கேணி | 1.1.1.92 | வெடித்தலதீவு | |
| 1.1.1.29 | காரைநகர் | 1.1.1.61 | நுவரெலியா | 1.1.1.93 | விசுவமடு | |
| 1.1.1.30 | கரன்தெனிய | 1.1.1.62 | ஒட்டுச்சுட்டான் | 1.1.1.94 | வீரவில | |
| 1.1.1.31 | கட்டுபெத்த | 1.1.1.63 | பதவி பராக்கிரமபுர | 1.1.1.95 | வெலிகந்த | |
| 1.1.1.32 | கட்டுநாயக்க | 1.1.1.64 | பலட்டுபான | 1.1.1.96 | வெற்றிலைக் கேணி | |

**1.1.2 B பிரிவு - வகைப்படுத்தப்பட்ட புதிய உணவு முகாம்கள்**

| தலைமையகங்கள் /முகாம்கள் | பச்சை உணவு வகைகள் |
|---|---|
| 1.1.2.1 பனாகொடை | (i) காய்கறிகள் |
| 1.1.2.2 அநுராதபுரம் | (ii) பழங்கள் |
| 1.1.2.3 ஹிங்குராங்கொடை | (iii) மீன் |
| 1.1.2.4 பலாலி | (iv) இறைச்சி வகைகள்/உறைந்த உணவு |
| 1.1.2.5 கிளிநொச்சி | (v) கோழி முட்டை |
| 1.1.2.6 தியத்தலாவை | (vi) மட்டை உரித்த தேங்காய் |
| 1.1.2.7 இரத்மலானை | (vii) பால் பொருட்கள் |
| | (viii) Co 3 புல் (தியத்தலாவ மற்றும் இரத்மலான முகாம்களுக்கு மட்டும்) |

**1.1.3 C பிரிவு -உலர் உணவு வகைகள்**

| பிரதான முகாம்கள் | உலர் உணவு வகைகள் |
|---|---|
| 1.1.3.1 பனாகொடை<br>1.1.3.2 அநுராதபுரம்<br>1.1.3.3 ஹிங்குரக்கொடை<br>1.1.3.4 பலாலி<br>1.1.3.5 கிளிநொச்சி<br>1.1.3.6 தியத்தலாவை<br>1.1.3.7 இரத்மலானை | உலர் உணவுப்பொருட்கள் |

**1.2** ஒவ்வொரு உணவு வகையிலும் உள்ள உணவுப் பொருட்கள் தொடர்பான விவரக்குறிப்புகள் மற்றும் பிற விபரங்கள் மனு ஆவணத்துடன் வழங்கப்படும். விநியோகிக்கப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் நல்ல தரம் வாய்ந்தவையாகவும் மனித நுகர்வுக்கு ஏற்றதாகவும் இருத்தல் வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட தரங்கள் மனு ஆவணத்திலும் அதன் இணைப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், உணவுப்பொருட்களை விநியோகித்தல் 1980 ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இடம்பெறவேண்டும்.

**1.3 விலைமனுவானது ஒவ்வொரு தலைமையகம் / முகாம் அடிப்படையிலும் உணவு வகைப்படுத்தல் அடிப்படையிலும் சமர்ப்பித்தல் வேண்டும்.**

1.3.1. ஒரு தலைமையகம் / முகாம் மற்றும் உணவு வகைப்படுத்தல் அடிப்படையில் வெவ்வேறாக விலைமனு வழங்குதல் வேண்டும். குறிப்பிட்ட விலையில் ஒரு நிலையத்தின், முகாமின் குறித்த வகைப்படுத்தல் விலை மனுவிற்காக விலைமனுதாரர் குறித்த வகைப்படுத்தலில் உள்ள அனைத்து உணவு பொருட்களுக்கும் விலைமனு வழங்க தவறும் பட்சத்தில் அத்தகை விலைமனுவானது நிராகரிக்க ஏதுவாக அமையும்.

1.3.2. ஒவ்வொரு மனுதாரரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உணவு வகைகளையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விநியோக இடங்களையும் கீழே காட்டப்பட்டுள்ளபடி தனித்தனியாக மனுக்களை முன்வைக்கலாம். அதன்படி, மனுதாரரின் திறன் மற்றும் தகுதிகளுக்கு ஏற்ப மனுக்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**1.3.2.1 "A" பிரிவு - புதிய உணவுப் பொருட்கள் விநியோகம் பிரிவு (தனி முகாம் அடிப்படையில்)**

இந்த பிரிவில் 96 மனுக்கள் இருப்பதுடன், அவை தனி கொள்முதல் எனக் கொள்ளப்படும். விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறை வேறு வேறாக மேற்கொள்ளப்படும்.

**1.3.2.2 "B" - பிரிவு வகைப்படுத்தப்பட்ட புதிய உணவு விநியோகம் (தனி முகாம் அடிப்படையில்)**

இந்த பிரிவில் 51 மனுக்கள் இருப்பதுடன், (07 முகாம்கள் X 07 உணவு வகைகள் = 49 மனுக்கள் + 02 மனுக்கள்) அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறை வேறு வேறாக மேற்கொள்ளப்படும்.

**1.3.2.3 "C" பிரிவு உலர் உணவுப் பொருட்களை விநியோகித்தல் (தனி முகாம் அடிப்படையில்)**

இந்த பிரிவில் 878 மனுக்கள் இருப்பதுடன், (07 முகாம்கள் x 116 உணவு வகைகள் = 812 66 மனுக்கள்) அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறை வேறு வேறாக மேற்கொள்ளப்படும்.

2. தேர்ந்தெடுக்கப்படும் விநியோகஸ்தர்களினால் ஒப்பந்தங்களின்படி ஒவ்வொரு விநியோக தலைமையகங்கள் / முகாம்கள் மற்றும் அலகுகளுக்கு உணவுகளை விநியோகிக்கும் பொறுப்பு அவர்களையே சாறும். ஒவ்வொரு விநியோக தலைமையகங்கள்/முகாம்கள் மற்றும் அலகுகள் பற்றிய விபரங்கள் மனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3. அரச கொள்முதல் வழிகாட்டல் 2006 இன் 3.2 இற்கு அமைவாக தேசிய மனுக்கோரல் போட்டி முறைமைக்கு அமைவாக செயற்படுத்தப்படும். உள்நாட்டு மனுதாரர்கள் மட்டுமே விலைமனுக்களை முன்வைக்க முடியும்.

4. மனுதாரரின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

5. மனுவுடன் தொடர்புடைய தகுதிகளை நிரூபிக்கும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். பிந்தைய தகுதி தேர்வில், குறைந்தபட்ச கேள்விகளைச் சமர்ப்பித்து மதிப்பீடு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கு வழங்கப்படும் அதிகபட்ச ஒப்பந்த அளவு, மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான வழிமுறையின் கீழ் அளவு மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்படும். ஆரம்ப மனு மதிப்பீட்டிற்கு பின்வரும் குறைந்தபட்ச தகுதிகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.1 உணவு வழங்கல் துறையில் குறைந்தபட்ச சராசரி ஆண்டு மொத்த விற்பனை 2 நிதியாண்டுகளுக்கு முந்தைய 3 ஆண்டுகளுக்குள் **ரூ.10 மில்லியனாக இருத்தல் வேண்டும்.** அந்தந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.2 திரவ சொத்துக்களின் குறைந்தபட்ச அளவு (நிதி அறிக்கைகள் 2023/2024 அடிப்படையில்) **ரூ.5 மில்லியன்.** (காசு மீதி, வங்கி மீதி, குறுகிய கால முதலீடுகள் மற்றும் கடன்பட்டோர்) நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2023/2024 நிதியாண்டிற்கான மனுதாரர் கணக்காய்வு செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தால், மனுதாரர் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை 2024.08.30 அன்று அல்லது **அதற்கு முன் தகுதி சரிபார்ப்பு கட்டத்தில்** சமர்ப்பித்தல் வேண்டும்.

5.3 இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வணிக வங்கி அல்லது நிதி நிறுவனத்தினால் இந்த மனுக்கோரலுக்காக மட்டும் வழங்கும் குறைந்தபட்ச கடன் வரம்பு **ரூ.05 மில்லியனாக** இருத்தல் வேண்டும்.

5.4 **பச்சை உணவுப் பொருட்களை** விநியோகிப்பதற்கான மனுதாரர் போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள், குளிர் அறைகள் / உறைவிப்பான் மற்றும் குளிர் டிரக் வசதிகள் (அந்த வசதிகளின் உரிமம் மனுதாரருக்கு அல்லது அவரால் குத்தகைக்கு / வாடகைக்கு பெற்றுக்கொண்டிருக்கலாம்). பெறுவதற்கான முறையான நடைமுறையைக் குறிப்பிட வேண்டும். கூடுதல் தகவல்கள் மனு ஆவணத்துடன் வழங்கப்படும்.

5.5 **உலர் உணவுப் பொருட்களை** விநியோகிப்பதற்கான, மனுதாரர் போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள், (அந்த வசதிகளின் உரிமம் மனுதாரருக்கு அல்லது அவரால் குத்தகைக்கு / வாடகைக்கு பெற்றுக்கொண்டிருக்கலாம்). பெறுவதற்கான முறையான நடைமுறையைக் குறிப்பிட வேண்டும். கூடுதல் தகவல்கள் மனு ஆவணத்துடன் வழங்கப்படும்.

5.6 கடந்த 05 ஆண்டுகளில் ஏதேனும் நிறுவனத்திற்கு 02 ஆண்டுகள் உணவு பொருடகள் (மொத்த / சில்லரை வியாபாரம்) விநியோகத்தில் முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். (அரச / தனியார்)

6. மனு ஆவணங்கள் வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல் மற்றும் மனுக்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்.

| | |
|---|---|
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் ஆரம்ப திகதி | - 2024.06.27 |
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | - **2024.07.28 பி.ப.03.00 மணி வரை** |
| மனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி மற்றும் நேரம் | - **2024.07.29 மு.ப.09.00 மணி வரை** |
| மனுக்கள் திறக்கும் இடம் திகதி மற்றும் நேரம் | - இராணுவ உள்ளரங்கம், இராணுவ வளாகம், பனாகொடை<br>**2024.07.29 மு.ப.10.00 மணிக்கு** |

7. மனுக்கள் தொடர்பான கூட்டம் **2024.07.09 ஆம் திகதி** மு.ப.10.00 மணிக்கு முதலாம் மாடி, நந்திமித்ர கேட்போர் கூடம், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே எனும் முகவரியில் இடம்பெறும்.

8. மீள வழங்கப்படாத கட்டணம் செலுத்தியதன் பின்னர் பந்தி 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பணிப்பாளர், இலங்கை இராணுவம், விநியோகம் மற்றும் போக்குவரத்து (இராணுவ வாகனத் தரிப்பிடம் அருகில்) அலுவலகங்களுக்கு எழுத்துமூல கோரிக்கையை முன்வைத்து ஆங்கில மொழியிலான முழுமையான மனு ஆவண தொகுதியினை கொள்வனவு செய்ய முடியும். நிதி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்ட 2016.06.17 **ஆம் திகதிய** இலக்கம் 06/2016 அரச நிதி சுற்றறிக்கையின் படி அறவிடப்படும். பொருத்தமான மீள வழங்கப்படாத கட்டணங்கள் தொடர்பான தகவல்கள் கீழே பந்தி 16 குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் (விநியோகம் மற்றும் போக்குவரத்து பணிப்பகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.)

9. மனுதாரர் மனு சமர்ப்பிப்பதற்காக மனு ஆவணத்தில் காணப்படும் மாதிரி படிவத்தை மட்டுமே பயன்படுத்தல் வேண்டும். அனைத்து முத்திரையிடப்பட்ட மனுக்களும் இரு பிரதிகளுடன் பதிவுத்தபாலின் மூலம் அனுப்பவேண்டும் அல்லது **இராணுவ நூலகம், பாதுகாப்பு படைத் தலைமையகம்** (மேற்கு), **இராணுவ வளாகம் பனாகொட, ஹோமாகம** எனும் விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியினுள் மேலே பந்தி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன் இட வேண்டும்.

10. மனுக்கள் திறக்க நியமிக்கப்பட்ட நேரத்தில் மனுக்கள் திறக்கப்படும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்களை திறப்பதற்காக மனுதாரர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு கலந்து கொள்ளமுடியும்.

11. முன்வைக்கப்படும் மனுக்களின் செல்லுபடிகாலம் **2025.03.31** ஆம் திகதி வரையாக இருத்தல் வேண்டும்.

12. மனுக்களுடன் **2025.04.30** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் மனுக்காப்புறுதி பிணையையும் **செயலாளர் பாதுகாப்பு அமைச்சு** எனும் பெயருக்கு முன்வைத்தல் வேண்டும். அந்த காப்புறுதிப்பிணைகள் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட வணிக வங்கி ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் அற்ற மீள்ளளிக்கப்படாத பணமாக மாற்றிக்கொள்ளக்கூடிய காப்புறுதிப்பிணையின் மூல பிரதியுடன் வழங்க வேண்டும். (குறித்த வங்கியின் உறுதிப்படுத்தப்பட்ட இலட்சினை பொறிக்கப்பட்ட) மனு காப்புறுதிப்பிணையின் பெறுமதி கொள்முதல் செய்யும் வழிகாட்டல்கள் 2006 ஆம் ஆண்டின் படி மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13. மனுதாரரினால் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்றே தேவைப்படின் உற்பத்தி அனுமதி சான்றிதழையும் முன்வைத்தல் வேண்டும்.

14. மனுதாரர் குறிப்பிட்ட பொருட்களுக்கான மாதிரிகளை மனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். **கொடுக்கப்பட்ட காலத்திற்குள் மாதிரியை சமர்ப்பிக்க மனுதாரர் தவறினால்,** தொடர்புடைய மனுக்கள் மேலதிக மதிப்பீட்டிற்காக கருத்தில்கொள்ளப்படாது, மேலும் **பதிலளிக்காத மனுக்களாக நிராகரிக்கப்படும்.**

15. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியுடைய மனுதாரர்கள் மேலதிக விபரங்களை **இலங்கை இராணுவ தலைமையக (இராணுவ வாகனத் தரிப்பிடம் அருகில்) வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பாளர்** காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை இலவசமாக 16ஆம் உருப்படியில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் **2024.06.27** ஆம் திகதியில் இருந்து **2024.07.28** ஆம் திகதி வரை கிழமை நாட்களில் **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரை பரீட்சித்துக்கொள்ளமுடியும்.

16. மேலே குறிப்பிடப்பட்ட விலாசம் ஆனது,


கவனத்திற்கு : பணிப்பாளர் (விநியோகம் மற்றும் போக்குவரத்து)

விலாசம் : இராணுவத் தளபதி
இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை.

தொலைபேசி : 011 2302569, 011 2302568

தொலைநகல் : 011 2302569

மின்னஞ்சல் : dtesofsuptender@gmail.com


தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழு
(முப்படைகளுக்கான புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல்)
பாதுகாப்பு அமைச்சு
2024.06.30

# பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை விமானப்படை

# விலைமனுக்கோரல் (IFB)

## இலங்கை விமானப்படைக்கான புதிய/ உலர் உணவுப் பொருட்களை வழங்கல் மற்றும் விநியோகிப்பதற்கான பெறுகை- 2025 வருடம்

## ஒப்பந்த அடையாள இலக்கம் SLAF/RA/TB/2025

1. 2025 ஆம் ஆண்டிற்கான முப்படைகளின் புதிய உலர் உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழுவின் தலைவரால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உணவு வகைகள் மற்றும் விநியோக இடங்களை பொருத்து மூல மற்றும் உலர்ந்த உணவுப் பொருட்களை கொள்முதல் செய்ய தகுதியான மற்றும் தகைமைகளை உடைய வியாபார நிலையங்கள், உற்பத்தியாளர்கள், மொத்த மற்றும் சில்லரை விற்பனை நிலையங்கள், நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து முத்திரையிடப்பிட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. ஒப்பந்த காலம் **2025 ஜனவரி 01** முதல் **2025 டிசம்பர் 31** ஆம் திகதி வரையாகும்.

1.1 **விநியோக இடம் மற்றும் தொடர்புடைய பிரிவுகள்**

1.1.1 **'அ' தொகுதி அனைத்து பச்சை உணவுப்பொருட்கள்**

| விமானப்படை பயிற்சி கூடங்கள் / தளங்கள் / நிலையங்கள் / துணை பிரிவுகள் | | உணவு வகைகள் |
|---|---|---|
| 1.1.1.1. அம்பாறை | 1.1.1.14. கொக்கல | 1. காய்கறிகள், பழங்கள், தேங்காய் மற்றும் கோழி முட்டை |
| 1.1.1.2. அனுராதபுரம் | 1.1.1.15. மத்தள (விடுப்பு) | 2. புதிய மீன்கள் |
| 1.1.1.3. மட்டக்களப்பு | 1.1.1.16. மொரவெவ | 3. இறைச்சி |
| 1.1.1.4. BIA- கட்டுநாயக்க | 1.1.1.17. மீரிகம | 4. கோழி இறைச்சி (சுத்தப்படுத்திய) |
| 1.1.1.5. சைனா பே | 1.1.1.18. பலாலி | 5. வெதுப்பக உணவு பொருட்கள் |
| 1.1.1.6. கொழும்பு | 1.1.1.19. பாலாவி - புத்தளம் | 6. தேசிய காலை உணவு வகைகள் |
| 1.1.1.7. CTS தியத்தலாவ | 1.1.1.20. பிதுருதாலகல | |
| 1.1.1.8. திகன துணை பிரிவு | 1.1.1.21. இரத்மலான | |
| 1.1.1.9. TTS ஏக்கல | 1.1.1.22. சீகிரியா | |
| 1.1.1.10. ஹிங்குராக்கொட | 1.1.1.23. வவுனியா | |
| 1.1.1.11. இரணமடு | 1.1.1.24. வீரவில | |
| 1.1.1.12. கட்டுகுருந்த | | |
| 1.1.1.13. கட்டுநாயக்க | | |

**1.1.2 B பிரிவு** உலர் உணவு வகைகள்

| விமானப்படை பயிற்சி கூடங்கள் / தளங்கள் / நிலையங்கள் / துணை பிரிவுகள் | | உணவு வகைகள் |
|---|---|---|
| 1.1.1.1. அம்பாறை | 1.1.1.14. கொக்கல | 1. அரிசி |
| 1.1.1.2. அனுராதபுரம் | 1.1.1.15. மத்தள (விடுப்பு) | 2. உலர்ந்த ரேஷன் பொருட்கள் |
| 1.1.1.3. மட்டக்களப்பு | 1.1.1.16. மொரவெவ | 3. யோர்கட் |
| 1.1.1.4. BIA- கட்டுநாயக்க | 1.1.1.17. மீரிகம | 4. பால்மா |
| 1.1.1.5. சைனா பே | 1.1.1.18. பலாலி | 5. மசாலா பொருட்கள் |
| 1.1.1.6. கொழும்பு | 1.1.1.19. பாலாவி - புத்தளம் | |
| 1.1.1.7. CTS தியத்தலாவ | 1.1.1.20. பிதுருதாலகல | |
| 1.1.1.8. திகன துணை பிரிவு | 1.1.1.21. இரத்மலான | |
| 1.1.1.9. TTS ஏக்கல | 1.1.1.22. சீகிரியா | |
| 1.1.1.10. ஹிங்குராக்கொட | 1.1.1.23. வவுனியா | |
| 1.1.1.11. இரணமடு | 1.1.1.24. வீரவில | |
| 1.1.1.12. கட்டுகுருந்த | | |
| 1.1.1.13. கட்டுநாயக்க | | |

1.2 ஒவ்வொரு உணவு வகையிலும் உள்ள உணவுப் பொருட்கள் தொடர்பான விவரக்குறிப்புகள் மற்றும் பிற விவரங்கள் ஏல ஆவணத்துடன் வழங்கப்படும். விநியோகிக்கப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் நல்ல தரம் வாய்ந்தவையாகவும் மனித நுகர்வுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட தரங்கள் மனு ஆவணத்திலும் அதன் இணைப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அனைத்து விநியோகமும் 1980 ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் படி இடம்பெறவேண்டும்.

1.3 **ஒரு நிலையம் / முகாம் அடிப்படையில் மற்றும் ஒரு குறிப்பிட்ட நிலையம் / முகாமுக்கு தனித்தனியாக ஒரு வகை அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

1.3.1 ஒரு நிலையம் / முகாமின் குறிப்பிட்ட வகைக்கு ஏலம் எடுக்க, ஏலதாரர் அந்த வகையில் உள்ள அனைத்து பொருட்களுக்கும் தனித் தனியான ஏலம் எடுக்க வேண்டும். குறிப்பிட்ட பிரிவில் உள்ள அனைத்து பொருட்களுக்கும் ஏலம் எடுக்கத் தவறினால், அத்தகைய ஏலம் பதிலளிக்காததாக கருதப்படும்.

1.3.2 ஒவ்வொரு மனுதாரரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உணவு வகைகளையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விநியோக இடங்களையும் கீழே காட்டப்பட்டுள்ளபடி தனித்தனியாக மனுக்களை இடலாம். அதன்படி, மனுதாரரின் திறன் மற்றும் தகுதிகளுக்கு ஏற்ப மனுக்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**1.3.2.1 "A" வகை - மூல உணவுப்பொருட்கள் வழங்கல்**

இந்த பிரிவில் 126 மனுக்கள் இருப்பதுடன், (வழங்கல் இடங்கள் 24 x 4) + (வழங்கல் இடங்கள் 23 x 1) + (வழங்கல் இடங்கள் 7 x 1) உணவு வகைகள் = 126 மனுக்கள்) அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

**1.3.2.2 "B" - உலர் உணவுப் பொருட்கள் வழங்கல்.**

இந்த பிரிவில் 101 மனுக்கள் இருப்பதுடன், (வழங்கல் இடங்கள் 24x4) (வழங்கல் இடங்கள் 5x 1) உணவு வகைகள் = 101 மனுக்கள்) அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகஸ்தர்களினால் ஒப்பந்தங்களின்படி ஒவ்வொரு விநியோக இடங்கள்/ முகாம்கள்/நிறுவனங்கள் மற்றும் துணை அலகுகளுக்கு உணவுகளை கொண்டு செல்வதற்கான பொறுப்பு அவர்களையே சாரும். தனிப்பட்ட விநியோக இடங்கள்/ முகாம்கள் / நிறுவனங்கள் மற்றும் துணை அலகுகளுக்கு மற்றும் சரக்குகள் பற்றிய விபரங்கள் மனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. மனுக் கோரல் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய செயற்படுத்தப்படும். 3.2 இற்கமைய 2006 ஆம் ஆண்டின் அரச கொள்முதல் வழிகாட்டலுக்கமைய செயற்படுத்தப்படும்.வெளிநாட்டு மனுதாரர்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

4. மனுதாரரின் பெயர் கரைநிறைப் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

5. கேள்வியுடன் தொடர்புடைய தகுதிகளை நிரூபிக்கும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். தகுதிக்கு பிந்தைய தேர்வில், குறைந்தபட்ச கேள்விகளைச் சமர்ப்பித்து மதிப்பீடு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கு வழங்கப்படும் அதிகபட்ச ஒப்பந்தத் தொகை, மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான வழிமுறையின் கீழ் அளவு மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்படும். ஆரம்ப மனு மதிப்பீட்டிற்கு பின்வரும் குறைந்தபட்ச தகுதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

5.1 உணவு வழங்கல் துறையில் குறைந்தபட்ச சராசரி ஆண்டு வருமாய் 02 நிதியாண்டுகளுக்கு முந்தைய 03 ஆண்டுகளுக்குள் **ரூ. 10 மில்லியன்.** அந்தந்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.2 திரவ சொத்துக்களின் குறைந்தபட்ச அளவு (நிதி அறிக்கைகள் 2023/2024 அடிப்படையில்) **ரூ.5 மில்லியனாகும்** (இருப்பு பணம், வங்கியில் பணம், குறுகிய கால முதலீடுகள் மற்றும் பெறத்தக்கவைகள்) அந்தந்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், மனுதாரர் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தால், மனுதாரர் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை **2024.08.30** அன்று அல்லது அதற்கு முன் தகுதி சரிபார்ப்பு கட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

5.3 இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வணிக வங்கி அல்லது நிதி நிறுவனத்தினால் இந்த மனுக்கோரலுக்காக மட்டும் வழங்கும் குறைந்தபட்ச கடன் வரம்பு **ரூ.05 மில்லியனாக** இருக்க வேண்டும்.

5.4 மூல உணவுப் பொருட்களை வழங்குவதற்காக, மனுதாரர் போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள், குளிர் அறைகள்/உறைவிப்பான் மற்றும் குளிர் டிரக் வசதிகள் (அந்த வசதிகளின் உரிமம் மனுதாரருக்கு அல்லது அவரால் குத்தகைக்கு/வாடகைக்கு பெற்றுக்கொண்டிருக்கலாம்). பெறுவதற்கான முறையான நடைமுறையைக் குறிப்பிட வேண்டும். மேலதிக தகவல்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

5.5 உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்காக, மனுதாரர் போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள் (அந்த வசதிகளின் உரிமம் மனுதாரருக்கு அல்லது அவரால் குத்தகைக்கு/வாடகைக்கு பெற்றுக்கொண்டிருக்கலாம்). பெறுவதற்கான முறையான நடைமுறையைக் குறிப்பிட வேண்டும். மேலதிக தகவல்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

5.6 அண்மைய 05 ஆண்டுகளில் ஏதேனும் நிறுவனத்திற்கு 02 ஆண்டுகள் உணவு மூலப்பொருள் (மொத்த / சில்லரை விற்பனை) விநியோகத்தில் முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். (அரச / தனியார்)

6. மனு ஆவணங்கள் வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல் மற்றும் மனுக்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்.

| | |
|---|---|
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் ஆரம்ப திகதி | - **2024.06.27** |
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | - **2024.07.28 பி.ப.3.00 மணி வரை** |
| மனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி மற்றும் நேரம் (SLAF விமானப்படை தொழில் பயிற்சி பாடசாலை, ஏக்கல) | - **2024.07.29 மு.ப.9.00 மணி வரை** |

மனுக்கள் திறக்கும் திகதி மற்றும் நேரம் : (SLAF விமானப்படை தொழில் பயிற்சி பாடசாலை, ஏக்கல)

| | |
|---|---|
| பச்சை உணவுப் பொருட்கள் | - **2024.07.29 மு.ப.9.30 மணிக்கு** |
| உலர் உணவுப் பொருட்கள் | - **2024.07.29 மு.ப.9.30 மணிக்கு** |

7. மனுக்கள் தொடர்பான கூட்டம் **2024.07.09 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு முதலாவது மாடி, நந்திமித்ர அரங்கம், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சின் தலைமையக வளாகம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே எனும் முகவரியில் இடம்பெறும்

8. கீழ் பந்தி 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் தலைமை கொள்முதல் அதிகாரியிடம் எழுத்துமூல கோரிக்கையினை சமர்ப்பிபதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு தனிப்பட்ட விநியோக இடங்கள்/ முகாம்கள்/நிறுவனங்கள் மற்றும் துணை அலகுகளுக்கு உரிய மனுவிற்கும் வெவ்வேறாக மீள வழங்கப்படாத கட்டணம் நிதி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்ட **2016.06.17 ஆம் திகதிய** சுற்றறிக்கை இலக்கம் 06/2016 இன் படி மேற்கொள்ளப்படும். (ஒவ்வொரு மனுக்களுக்கும் பொருத்தமான மீள வழங்கப்படாத கட்டணங்கள் தொடர்பான தகவல்கள் தலைமை கொள்முதல் அதிகாரியிடம் கீழே பந்தி 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.)

9. மனுதாரர் மனு சமர்ப்பிப்பதற்காக மனு ஆவண கோப்பினை மட்டுமே பயன்படுத்த வேண்டும். அனைத்து முத்திரையிடப்பட்ட மனுக்களும் பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பவேண்டும் அல்லது 16 ஆம் பந்தியில் இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் இடப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியினுள் மேலே பந்தி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன் இட வேண்டும்.

10. மனுக்கள் திறக்க நியமிக்கப்பட்ட நேரத்தில் மனுக்கள் திறக்கப்படும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்களை திறப்பதற்காக மனுதாரர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு கலந்து கொள்ளமுடியும்.

11. முன்வைக்கப்படும் மனுக்களின் செல்லுபடிகாலம் **2025.03.31** ஆம் திகதி வரையாகும்.

12. மனுக்களுடன் **2025.04.30** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் மனுக்காப்புறுதி பிணையையும் **செயலாளர் பாதுகாப்பு அமைச்சு** எனும் பெயருக்கு முன்வைக்கவேண்டும். அந்த காப்புறுதிப்பிணைகள் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட வணிக வங்கி ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் அற்ற மீள்ளளிக்கப்படாத பணமாக மாற்றிக்கொள்ளக்கூடிய காப்புறுதிப்பிணையின் ஆரம்ப பிரதியுடன் வழங்க வேண்டும். (குறித்த வங்கியின் உறுதிப்படுத்தப்பட்ட இலட்சினை பொறிக்கப்பட்ட) மனு காப்புறுதிப்பிணையின் பெறுமதி கொள்முதல் செய்யும் வழிகாட்டல்கள் 2006 ஆம் ஆண்டின் படி மனு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13. மனுதாரரினால் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்றே தேவைப்படின் உற்பத்தி சான்றிதழையும் முன்வைக்க வேண்டும்.

14. மனுதாரர் குறிப்பிட்ட பொருட்களுக்கான மாதிரிகளை ஏல ஆவணத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். கொடுக்கப்பட்ட காலத்திற்குள் மாதிரியை சமர்ப்பிக்க மனுதாரர் தவறினால், தொடர்புடைய மனுக்கள் மேலதிக மதிப்பீட்டிற்கு கருதப்படாது, மேலும் பதிலளிக்காத மனுக்களாக நிராகரிக்கப்படும்.

15. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியுடைய மனுதாரர்கள் மேலதிக விபரங்களை தலைமை கொள்முதல் அதிகாரியிடமிருந்து அல்லது கொள்முதல் அதிகாரி (டெண்டர்) கொள்முதல் பிரிவில் பெற்றுக்கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை 16ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் **2024.06.27** ஆம் திகதியில் இருந்து **2024.07.28** ஆம் திகதி வரை கிழமை நாட்களில் காரியாலய நேரங்களில் **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரை இலவசமாக பரீட்சித்துக்கொள்ளமுடியும்.

16. மேல் குறிப்பிடப்பட்ட விலாசம் :

| | | |
|---|---|---|
| **கவனத்திற்கு** | : | தலைமை கொள்முதல் அதிகாரி, |
| **விலாசம்** | : | இலங்கை விமானப்படை தளபதி,<br>பாதுகாப்பு அமைச்சின் தலைமையக வளாகம்,<br>கொழும்பு நிலையம்<br>த.பெ.இல. 594,<br>பாதுகாப்பு அமைச்சின் வாளகம்,<br>ஸ்ரீ ஜெயவர்தனபுர,<br>கோட்டை. |
| **தொலைபேசி** | : | 011 - 2347694 / 011- 2441044,<br>(நீட்டிப்பு : 11902), |
| **தொலைநகல்** | : | 011- 2441553 |
| **மின்னஞ்சல்** | : | cpd@slaf.gov.lk /<br>acpot@slaf.gov.lk |

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழு**
**(முப்படைகளுக்கான புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல் - 2025)**
**பாதுகாப்பு அமைச்சு**
**2024.06.26**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2024 ஜூன் 30 ஞாயிற்றுக்கிழமை
ரியாஸ் மொஹமதின்
'இரை தேடும் பறவைகள்'

# பிரமாண்ட பிரமிட்டை கட்டிய குட்டி மன்னர்



கிசாவின் பெரிய பிரமிடின் மான்மியத்தை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் அதனைக் கட்டிய கூபு மன்னர் பற்றி நவீன உலகுக்கு தெரிந்தது சொற்பமே. மன்னரின் கல்லறையாகவே பிரமிட் இருந்தாலும் உள்ளே மன்னரின் மம்மி உடல் கண்டுபிடிக்கப்படவில்லை.

கொள்ளையரால் அது களவாடப்பட்டிருக்கலாம், இல்லாவிட்டால் வேறு இடத்தில் புதைக்கப்பட்டிருக்காலம். அது இன்று வரை மர்மம் தான். எகிப்து பெரோக்களின் வானை முட்டும் சிலைகள் இருந்தபோதும் அம்மாம்பெரிய பிரமிட்டை கட்டிய கூபு மன்னரின் கையளவு சிலை ஒன்றே கண்டுபிடிக்கப்படிருக்கிறது. வெறுமனே மூன்று அங்குலம் கொண்ட அந்தச் சிலை யானைத் தந்தத்தால் செய்யப்பட்டது.

கி.மு. 2589 ஆம் ஆண்டு தனது 20 வயதுகளில் ஆட்சிக்கு வந்தது தொடக்கம் கூபு மன்னர் கிசாவின் பெரிய பிரமிட்டை கட்டும் பணியை ஆரம்பித்தார். இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்ய 23 ஆண்டுகள் எடுத்துக் கொண்டன. இந்தக் காலத்தில் ஒவ்வொன்றும் சராசரியாக 2.5 தொன் எடை கொண்ட 2,300,000 அளவு கட்டுமான கற்கள் பிரமிட்டை கட்டுவதற்காக நகர்த்தப்பட்டிருக்கின்றன.

மன்னரின் மைத்துனரான ஹிமியுனு பிரமிடு கட்டுமான பணிக்கு பொறுப்பாக இருந்திருக்கிறார்

எல்லாவற்றுக்கும் மேலே மன்னரைப் பற்றி அண்மைக் காலம் வரை வரலாற்றில் பயங்கரமான சித்தரிப்புகளே இருந்து வந்திருக்கின்றன. அவர் ஒரு கொடியவர், அடிமைகளை பயன்படுத்தி பிரமிட்டை கட்டினார் என்று குற்றச்சாட்டுகள் ஏராளம். பணம் இல்லாத போது மகளை விபச்சாரத்துக்கு அனுப்பினார் என்று கூட மன்னர் மீது வரலாற்றில் இல்லாதது பொல்லாததெல்லாம் கூறப்பட்டிருக்கிறது.

இந்த வரலாற்றுக் கதைகளுக்கு எல்லாம் காரணம் கிரேக்க வரலாற்றாசிரியர் ஹெரோடோடஸ். இவர்தான் கூபு மன்னர் பற்றிய பண்டைய வரலாற்றை எழுதி இருக்கிறார். என்றாலும் கூபு மன்னருக்கும் ஹெரோடோடஸுக்கும் நேரடித் தொடர்பு இல்லை.

ஹெரோடோடஸ் வாழ்ந்தது கி.மு. 400களின் நடுப்பகுதியில். அதாவது கூபு மன்னர் வாழ்ந்து கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்குப் பின்னரே அவர் பிறந்திருக்கிறார். எனவே அந்த வரலாற்றாசிரியர் கூபு மன்னர் பற்றிய கதைகளை பெரும்பாலும் வாய் வழி கதைகளாகவே பெற்றிருப்பார்.

ஆனால் கிசாவின் பெரிய பிரமிட்டை பற்றிய நவீன ஆய்வுகளின் முடிவுகள் ஹெரோடோடஸின் கூற்றுகளுக்கு முரணானவை. கூபு மன்னர் பற்றி பண்டைய எகிப்து ஏடான வெஸ்ட்கார் பாப்பிரஸ் குறிப்பிட்டிருக்கிறது. அதில் அவர் ஒரு பாரம்பரிய மன்னர் என்று கூறப்பட்டிருக்கிறது. நல்ல இயல்புடையவர், தாழ்ந்தவர்களுடன் இணங்கிப் பழகும் மனித இருப்பு மற்றும் மந்திரத்தில் ஆர்வமுள்ளவர் என்கிறது.

மன்னர் அடிமைகளை பயன்படுத்தி பிரமிடை கட்டினார் என்ற கூற்றும் நவீன ஆய்வுகள் பொய்ப்பிக்கின்றன. பிரமிடு கட்டியவர்களின் குடியேற்றங்கள் மற்றும் அவர்களின் கல்லறைகள் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளில் அவர்கள் அடிமையாக நடத்தப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.





## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# நூற்றாண்டுக்கு மேல் எரியும் விளக்கு

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள லவர்மோர் தீயணைப்பு நிலையத்தில் ஒரு மின் விளக்கிற்கு மாத்திரம் தனி மரியாதை வழங்கப்பட்டு வருகிறது. அதனை கண்காணிக்கவென்றே தனியாக சி.சி.டி.வி. கெமரா கூட பொருத்தி இருக்கிறார்கள். கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்ற மின் விளக்கு என்பதால் தான் அதற்கு இத்தனை கிராக்கி.

எட்டு சென்டி மீற்றர்கள் கொண்ட அந்த விளக்கு நூற்றாண்டுக்கு மேல் எரிந்து வருகிறது. அதாவது உலகில் நீண்ட காலம் ஒளிரும் மின் விளக்கு என்ற சாதனை இதற்கு உண்டு.

ஒஹியோவில் உள்ள செல்பி மின்சார நிறுவனம் 1899 –1900 காலப்பகுதியில் கைகளால் தயாரித்திருக்கும் இந்த மின் விளக்கு 1901 இல் தீயணைப்பு நிறுவனத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. அப்போது பொருத்தபட்டு போடப்பட்ட மின் விளக்கு இன்று வரை அணையாமல் எரிந்து கொண்டிருக்கிறது.

இந்த 123 ஆண்டு காலத்தில் இதுவரை இந்த மின் விளக்கு இரு முறை மாத்திரம் தான் அணைக்கப்பட்டிருக்கிறது. 1976 ஆம் ஆண்டு வரை இடைவிடாது எரிந்த இந்த மின் விளக்கு தீயணைப்பு நிலையம் இடம்மாற்றப்பட்டபோது 22 நிமிடங்கள் அணைக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த விளக்கு 2013 ஆம் ஆண்டில் தானாகவே அணைந்தது. விளக்கு பழுது காரணமாக அணைந்திருக்கலாம் என நினைத்து பரிசோதித்த போது, அலுவலகத்தின் மின்சார இணைப்பு காரணமாக அணைந்தது தெரியவந்தது. பின்னர் கம்பி சரிசெய்யப்பட்டு மீண்டும் இயக்கப்பட்டு வருகிறது.

இந்த விளக்கு நாள் முழுவதும் 24 மணி நேரம் எரிந்து கொண்டே இருக்கிறது.

2001ஆம் ஆண்டில், இந்த விளக்கின் 100ஆவது பிறந்த நாள் ஆடம்பரமாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் ஓர் இசை விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஓரிரண்டு ஆண்டுகள் உத்தரவாதத்துடன் அதற்குள் அணைந்து விடும் நவீன மின் விளக்குகளுக்கும் இந்த விளக்குக்கும் என்ன வித்தியாசம் என்று டெபோரா காட்ஸ் என்ற விஞ்ஞானி 2008 ஆம் ஆண்டு ஆய்வு ஒன்றை நடத்தினார். அதாவது, இந்த மின் விளக்கிற்குள் இருக்கும் இழை, கார்பனால் ஆனது. நவீன விளக்குகளில் உள்ளதை விட எட்டு மடங்கு தடிமனாக இருப்பதோடு செமி கண்டக்டர் அமைப்பை கொண்டிருக்கிறது என்பதே அவரின் முடிவு.



# வாங்க சிரிக்கலாம்....



என்ன டொக்டர்.... திடீர்னு ஒப்பரேஷன் செய்யம்னு சொல்றீங்க?
"மெடிக்கல் கொலெஜ் மாணவர்களுக்கு அவசரமா ஒரு டெட் பொடி வேணுமாம்!



மன்னர் பிறந்தநாளுக்கு என்ன பட்டிமன்றம்?
மன்னரை அதிகம் பாதுகாப்பது கவசமா, பதுங்கு குழியா என்பது தான்!

பில்கேட்ஸ் கிட்ட போய் உட்கார் என்று சொன்னா, அவர் உட்கார மாட்டாரு!
ஏன் தெரியுமா?
தெரியலையே!
ஏன்னா, அவருக்கு தமிழ் தெரியாதுல்ல!



என் மனைவி அதிகமா டிவி பாக்குறா டொக்டர்
அதனாலென்ன உங்களுக்கு நிம்மதி தானே?
பவர் கட் ஆன பிறகும் டோர்ச் லைட் அடிச்சி பாக்குறாளே டொக்டர்

மன்னா! நம் இளவரசருக்கு புலிகேசி என்று பெயர் வைத்தது பற்றி மக்கள் கிண்டல் பண்ணுகிறார்கள்!
உண்மையாகவா?
ஆம் மன்னா! எலிக்கு பிறந்தது புலியாகுமா என கேட்கிறார்கள் மன்னா!





புத்தி இல்லாமல் வியாபாரம் செஞ்சதால வியாபாரத்துல லாபம் கிடைக்கல
அப்படி என்ன வியாபாரம் செஞ்ச?
எனக்கு கை கொஞ்சம் நீளம்னு உனக்கே தெரியும். ஆனாலும் புத்தி இல்லாம "பூ வியாபாரம்" செஞ்சு தொலைச்சிட்டேன்.




சீக்கிரம் பை ஒன்னு தாங்க போயி ரயில புடிக்க வேணும்.
சொரி சார், ரயில புடிக்கிற அளவுக்கு என்கிட்ட பை இல்லை



ஏண்டா! கணக்குப் பாடத்துல சைபர் எடுத்து இருக்க?
மேடம் நீங்க தானே சொன்னீங்க! கணக்கில் "சைபருக்கு" தான் அதிக மதிப்புனு!. அதனால மேடம் நான் சைபர் மார்க் வாங்கியிருக்கேன்.



பெருநாள் வருதில்ல... ஒங்க வீட்டுக்கு ட்ரஸ் எடுக்க எங்க போவீங்க?
எங்க வீட்டுக்கெல்லாம் ட்ரஸ் எடுக்கில்ல, எங்களுக்கு மட்டும் தான் எடுப்பம்!.



அந்த டொக்டர் ரொம்ப சந்தேகப் பேர்வழி!
எப்படி?
ஒப்ரேஷன் செய்ய ஆரம்பிக்கும்போது மயக்கமா இருக்கிற பேஷண்ட்டை எழுப்பி, மயக்கமா இருக்கிறீங்களா என்று கேட்பாரு.





50 ரூபா கடன் கிடைக்குமா?
சுத்தமா பணம் இல்லைங்க!
"அழுக்கா" இருந்தாலும் பரவாயில்லைங்க!

கல்யாணம் ஆனவர ஏன் பெச்சுலர்னு சொல்லுறீங்க?
கல்யாணம் ஆனதோட பேச்சே இல்லாம போச்சே..



# ‘மலையகம் இங்கிருந்து எங்கே’ நூல் வெளியீட்டு விழா







அறுபதுகளில் எழுந்த சினம் கொண்ட பரம்பரையினர் என்று இரா.சிவலிங்கம் வரையறுத்த மலையகத்தின் முன்னோடி கல்விமானும் ஆய்வு எழுத்தாளருமான பீ.மரியதாஸ் எழுதி தினகரன் மற்றும் வீரகேசரி பத்திரிகைகளில் வெளிவந்த மலையகம் இங்கிருந்து எங்கே? என்ற தொகுதியின் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் புத்தகக் கண்காட்சியில் வெளியிடப்பட்டது. பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் நூலின் முதலாவது பிரதியை பெற்றுக் கொண்டார். சிறப்பறிஞர் பி.பி.தேவராஜ், முன்னிலை வகித்த இந்த நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், சு.முரளிதரன், வீரபாகு ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.







சிங்கள, தமிழ் மொழிகள் போதனாசிரியை வை.ஜி.எம்.றினோசா எழுதிய தமிழ் மொழியை சரளமாகக் கற்போம் எனும் தமிழைக் கற்பவருக்கு உகந்த நூல் ஒன்று ஸ்ரீ ஜெயவர்த்தன புர மாதிவலையில் வெளியீட்டு வைக்கப்பட்டது. இந் நூல் வெளியீட்டு வைபவத்திற்கு பிரதம அதிதியாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஜ்சீவ மதவத்த கலந்து கொண்டு நூலசிரியரிடமிருந்து நூலின் முதற் பிரதியை பெற்றுக் கொண்டார். இவ் பைவத்தில் பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் . மற்றும் ஊவா மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கலாநிதி தினேஸ் கருணாயக்க, பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ஹேமசிறி, கேகாலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொசன் ராஜபக்ஷ மற்றும் சட்டத்தரணி ஜாலிய சேனாரத்ன மொழித் திணைக்களத்தின் பயிற்சி அலுவலகர்கள் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

**அஷ்ரப் ஏ சமத்**



கலாசார திணைக்களத்தின் கீழ் இயங்கும் கொழும்பு கலாசார அதிகார சபை பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நடத்தும் பக்திகீத இசை நிகழ்ச்சி கொழும்பு பிரதேச சபையின் பிரதேச செயலாளர் சந்தருவன் அநுருத்தவின் தலைமையில் கொழும்பு பிரதேச செயலகத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் ஆகிய அனைத்து சமயங்களையும் சேர்ந்த கலைஞர்கள் இதில் ஒன்றாக இணைந்து நல்லிணக்க பக்திகீத இசை நிகழ்ச்சியை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு கலாசார அதிகார சபையின் தலைவர் கலைஞர்களான சந்த விஜேமான்ன, செயலாளர் திருமதி திமித்ரா இரத்னாயக்க, நிலு ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

# கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய ஒன்றியத்தின் கவியரங்கு



**(அஷ்ரப் ஏ சமத்)**

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய ஒன்றியம், ஹஜ்ஜுப் பெருநாளை சிறப்பிக்கும் முகமாக கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கூட்ட மண்டபத்தில் ஹஜ் பெருநாள் கவியரங்கொன்றை தம்பி மரைக்கார் அரங்கில் அதிபர் எஸ்.எம் அறூஸ் தலைமையில் நடத்தியது.

இக் கவியரங்கில் 8 கவிஞர்கள் கவி பாடினார்கள். எச்.எம். சுஜப் (கவிப்புயல்), எஸ்.எச்.எம் நவ்பர், ஜீ.குணசேகரன், எஸ்.சுப்ரமணியம், எம்.எம்.எம். நவ்ப், பாத்திமா பர்வின் எம்.ரீ.றிப்ஹான் மௌலவி, எம். கேஷினி மோகனதாஸ் ஆகியோர்கள் மேடையில் கவிதைகள் அழகாக பாடினார்கள். இதில் விசேஷ அம்சம் என்னவென்றால் மூன்று தமிழ் இனக் கவிஞர்கள் பெருநாள் கவிதையில் நபி இப்ராஹீம், இஸ்மாயில் ஆகியோரின் வரலாறுகளை கவிகளாக பாடினார்கள். இந்நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணை வழங்கியிருந்தது. தினகரன் பத்திரிகை சார்பாக சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம். நிலாம் மற்றும் அஷ்ரப் ஏ சமத் ஆகியோர்கள் கவிஞர்களுக்கு நினைவுச் சின்னங்களையும் நூல்களையும் அன்பளிப்புச் செய்தனர் அத்துடன் அல் அக்ஸா தேசிய பாடசாலையின் உப அதிபர், ஆசிரியர்கள், கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய ஒன்றியத்தின் அங்கத்தவர்களும் இலக்கியவாதிகளும் கலந்து சிறப்பித்தனர். அப்துல் மஜித் புலவரின் ஆசாரக்கோவை கற்பிட்டியில் வாழ்ந்த மரைக்கார் பரம்பரைகளை எடுத்து இயம்புவதுடன் இவரின் அடக்கஸ்தலம் கற்பிட்டி பிரதேசத்தின் திகழியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் முதல் சிவில் சேவகர் சைமன் காசிச்செட்டி, நீதிபதி அக்பர் ஆகியோர் பிறந்து வாழ்ந்த பிரதேசம் கற்பிட்டி பிரதேசம் ஆகும். இவை கற்பிட்டியில் கலை இலக்கியங்களின் வளர்ச்சி காணப்பட்டதற்கான ஆதாரங்களாகவும் உள்ளன. இவ்வாறான சிறப்புக்களை பெற்ற எமது கற்பிட்டியின் தமிழ் கலை இலக்கியம் இன்று வரண்ட நிலமாக வரட்சியடைந்துள்ளது. இதனை மாற்றியமைத்து கற்பிட்டியின் கலை இலக்கிய வரட்சியை போக்கி படைப்பாக்க திறன் உள்ள கலை இலக்கியத் துறையினரை உருவாக்கி அவற்றின் ஊடாக வரலாறு தடயங்களை தேடுதல் நிலைக்கு இளையோரை கொண்டு சென்று அவர்களின் ஆக்கத் திறன்களையும் வளப்படுத்த ஆர்வம் உள்ள சகலரும் கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தில் இணையுமாறும் மன்றம் சார்பாக உரையாற்றிய எம். எச்.எம் சியாஜ் அழைப்பு விடுத்தார். இவர், மன்றத்தின் நோக்கம் மற்றும் கற்பிட்டியில் காணப்பட்ட கலை இலக்கியம் பற்றியும் உரையாற்றினார். படங்களில் 8 கவிஞர்களும் கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் நிர்வாக உறுப்பினர்களும் காணப்படுகின்றனர்.

# வடமாகாணத்தில் ஜுனியர் சுப்பர் சிங்கர்

*C J Pramoters & Dhedjassam Event Solutions* அமைப்பு வடமாகாணத்தில் ஜுனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியொன்றை நடத்தவுள்ளது. இந்தப் போட்டி முதலில் மாவட்ட ரீதியில் நடத்தப்படும். வடமாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் இந்தப் போட்டி முதலில் நடத்தப்பட்டு இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்தப்படும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும் இந்த இறுதிப் போட்டியில், வடமாகாணத்தில் மாபெரும் ஜுனியர் சுப்பர் சிங்கர் புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக் காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

☞ முதலாம் பரிசு
**ரூ. 10 இலட்சம்**
☞ இரண்டாம் பரிசு
**ரூ. 3 இலட்சம்**
☞ மூன்றாம் பரிசு
**ரூ. 1 இலட்சம்**

இதில் வெற்றி பெறுபவர்களுக்கு முதலாம் பரிசாக பத்து லட்சம் ரூபாவும் இரண்டாம் பரிசாக மூன்று லட்சம் ரூபாவும் மூன்று பரிசாக ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படும்.

இந்தப் போட்டியின் முதலாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள திருமுறைக் கலாமன்றத்தில் எதிர்வரும் 2024 ஜுலை 06ஆம், 07ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் இரண்டாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், மருதனார்மடத்தில் உள்ள வடஇலங்கை சங்கீத சபை மண்டபத்திலும் சாவகச்சேரி நகராட்சி மண்டபத்திலும் எதிர்வரும் 2024 ஜுலை 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் மூன்றாவது குரல் தேர்வு மன்னார், நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஜுலை 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் அடுத்த குரல் தேர்வு பருத்தித்துறை, வல்லை, யாழ் பீச் ஹோட்டலில் எதிர்வரும் 2024 ஜுலை 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறும். இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று கிளிநொச்சி, பரந்தன் ஆர்ஜே மஹாலில் எதிர்வரும் 2024 ஓகஸ்ட் 03 ஆம், 04ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று முல்லைத்தீவு, நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஓகஸ்ட் 10 ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று வவுனியா, நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஓகஸ்ட் 17 ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறும். பிரிட்டிஷ் கவுன்சில், சங்கவி பிலிம்ஸ் நிறுவனம், ஆர்ஜே மஹால், யாழ் பீச் ஹோட்டல் மற்றும் ரெஸ்ட்டூரண்ட்டின் அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் அச்சு ஊடக அனுசரணை வழங்குவதுடன் "சமூகம்", சமூக ஊடக வலைத்தளம் அனுசரணை வழங்கவுள்ளது.



# கவிதைத் துறையில் முகவரி தந்தது தினகரன் கவிதைச்சோலை

**வத்தளை, ஹுனுப்பிட்டிய, எழுத்தாளர் எஸ்.யூ.கமர்ஜான்பீபீ,(J.P),**





**1 உங்களைப் பற்றி இலக்கிய உலகம் அறிந்திருந்தாலும், மேலும் சில தகவல்களை அறிய முடியுமா? அதாவது, எத்தனை வருடங்களாக எழுத்துலகில் பயணிக்கிறீர்கள் என்பதையும் கூறுங்கள்?**

பதில் ஆம், நான் சுமார் 40 வருட காலமாக எழுதி வருகிறேன். நான் படிக்கும் போதே எனது எழுத்துக்கு முகவரி கொடுத்து விட்டேன். பாடசாலையிலே தான் (ஹுணுப்பிட்டிய சாஹிரா). எனது எழுத்தையும் திறனையும் வளர்க்க ஏதுவாக அமைந்தது. தொடராக இல்லாவிட்டாலும் அவ்வப்போது வானொலி, தேசிய பத்திரிகைகள் சஞ்சிகைகள் கவிதைத் தொகுப்பு புத்தகங்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிவரும் புத்தகங்கள் முகநூல் வட்ஸ்அப் குழுமங்களிலும் எழுதிவருகிறேன். கவிமேடைகளிலும் வானொலியிலும் கவிபாடியுள்ளேன்.

**2–உங்களது எழுத்துத்துறை வாழ்க்கைக்கு ஊக்கம் தந்து வழிகாட்டியவர்களைப் பற்றி எடுத்துரையுங்கள்?**

பதில் நிச்சயமாக கூறவேண்டும். முதலில் எனது தந்தை. மர்ஹூம் அல்ஹாஜ் அஸ்ஸெய்யது உபைதுல்லாஹ்.

அவரே எனக்கு வாசிக்க புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வாங்கித் தந்து வாசிக்க தூண்டுவார்.

எனது படைப்புகளுக்கு அவரே முதல் இரசிகர் என்பது மகிழ்ச்சியாகவுள்ளது. அடுத்ததாக எனது பாடசாலை அதிபர் அல்ஹாஜ் என்.எம். றெஸீன் சேர். தமிழ் ஆசிரியைகள் மற்றும் என் வீட்டினர். முக்கியமாக எனது சகோதரி மெஹர்ஜான்பீபீ. அடுத்தது எனது கணவர். அவர் பிரபல

பன்நூல் ஆசிரியர் மர்ஹூம் எம்.எம் எம்.நூருல்ஹக். எனது வெளியுலக இலக்கிய பயணத்துக்கு வழிக்காட்டியவர் இவரே.

வானொலிக்குள் உதவிய அன்பு நெஞ்சம் கலாபூஷணம்

புர்கான் பீ இப்திகார். அண்மையில் நம்மை விட்டு பிரிந்த சுலைமா ஏ.சமி சகோதரியும் மற்றும் எனது இரு பிள்ளைகள், மருமகன் மற்றும் தமிழ் சேவை தயாரிப்பாளர்கள் ஆகியோர் உதவினர். என் படைப்புகளுக்கு இடம் தந்த முஸ்லிம் சேவைக்கும்.. வீரகேசரி ரேணுகா பிரபாகரன் மற்றும் தினகரன், விடிவெள்ளி, நவமணி, சிந்தாமணி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், விசேடமாக சித்தீக் காரியப்பரை இங்கு குறிப்பிட வேண்டும். தினகரனில் அவர் நடத்திய கவிதைச்சோலையே எனக்கு கவிதைத் துறையில் முகவரி தந்தது.

**3–மறைந்த உங்களது கணவர் பன்முக ஆளுமையாளர் நூருல் ஹக் அவர்களைப் பற்றி சில வரிகள் .... அவரின் புத்தகங்கள் ஆவணங்களை இன்னமும் பாதுகாத்து வருகிறீர்களா?**

பதில் எனது கணவருக்கு புத்தகங்கள் என்றால் உயிர். புத்தகங்களை மிகவும் நேசிப்பார். அவர் சுகமில்லாமல் இருக்கும் போதே கிட்டத்தட்ட 4,000 புத்தகங்களை என்னிடம் கொண்டு சேர்த்தார். முக்கிய செய்திகளை வொய்ஸாகத் தாக சொன்னார். இரு பிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுக்கச் சொன்னார். அவர் தனது பிள்ளைகளுக்கு சேர்த்து வைத்த சொத்து புத்தகங்கள் மாத்திரமே. அதையே அடிக்கடி சொல்லுவார். ஆகவே அவைகளை நானும் நேசத்துடன் பாதுகாத்து வருகிறேன். அவருடைய வாழ்நாள் முழுவதும் எழுத்துடனும் வாசிப்புடனுமே கழிந்தது. அவரொரு பொக்கிஷம்தான். அவருக்குள் நிறைந்திருந்தது தமிழ் எழுத்தாளுமை. அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

**4–நீங்கள் ஒரு சமூக சேவகியாக, உளவளவாளராக , சமாதான நீதிவானாக இருக்கிறீர்கள். இவைகளைப் பற்றிப் குறிப்பிடுவதோடு நீங்கள் கடந்து வந்த விமர்சனங்களையும் குறிப்பிடுங்கள்?**

பதில் ஆம், சமூக சேவை என்பது எனது தந்தையோடு குடும்ப வழியாக வந்தது. அதில் மனதிருப்தியும் சந்தோசமும் நிறையவே உள்ளது. உளவளவாளராகவும் இருக்கிறேன். அதுவும் சேவையாக பாதிக்கப்பட்ட மாணவ சமூகத்துக்கும் அவர்தம் குடும்பத்துக்கும் எனது பங்களிப்பு செலுத்தப்படுகிறது. பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு என்னால் என்ன செய்ய முடியுமோ.அதை இறைவன் பொருத்தத்தோடு செய்து திருப்தி அடைகிறேன். 1995 தில் நான் சமாதான

நீதிவானாக பதவி ஏற்றேன். இன்று வரை தொடர்ந்து செய்து வருகிறேன். என்னை சுற்றியுள்ள சமூகத்துக்கு ஏதோ என்னால் முடியுமானவற்றைச்





செய்து மகிழ்கிறேன். வெளியுலக விமர்சனத்தை எதிர்கொள்ளவில்லை.இருந்தும் அதன் பின்னால் சிந்தனையை திருப்ப விரும்பவில்லை.

**5–ஒரு பெண் படைப்பாளிக்கு சுதந்திரமாக அவரது படைப்புகளை எழுதி வெளியிட தடையாக இருப்பது எது ?**

பதில் முதலாவது பொருளாதாரம் .நிறைய வளர்ந்த பெண் எழுத்தாளர்கள் இன்னும் தமது படைப்புகளை புத்தகமாக வெளியிடாமல் இருக்கிறார்கள். இது கவலை தரும் விடயமாகும். அடுத்தது நம்பிக்கையான உதவிக்கு யாரும் இல்லாதது. இன்னும் காரணங்கள் இருந்தாலும் இதுவே

முக்கியமாக நான் கண்ட உண்மைகள்.

**6–இன்றைய இலக்கிய உலகில் “ஆளுமையாளர் “ என்ற அடையாளம் விருதுகள் மூலம் அடையாளப்படுத்தப் படுகிறதா...ஏனென்றால் இன்றைய இலக்கிய விருதுகளின் பெறுமானம் எந்தளவில் உள்ளது?**

பதில் நல்லதோர் கேள்வி. இன்றைய இலக்கிய விருதுகளை பணம் கொடுத்து பெற்றுக் கொள்ளலாம் என்ற

செய்தியும் வலிகளும் உள்ளன.

ஆற்றலுள்ளோருக்கு தேடிப்பிடித்து கொடுக்க வேண்டிய

பெறுமதி மிக்க விருதை சர்வ சாதாரணமாக விலை பேசி தகுதியில்லாதோருக்கு வழங்குவது ஜீரணிக்க முடியாத

விடயமாகும். இதனை கண்டிக்கப்பட வேண்டும்.

அடுத்தது மட்டக்களப்பு கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை எழுத்தாளுமை மற்றும் ஏனைய திறன்களைக் கொண்டோர்களை இணங்கண்டு, அவர்கள் வளர்ந்தோராக இருக்கட்டும் அல்லது இளம் எழுத்தாளர்களாக

இருக்கட்டும் அவர்களை ஊக்குவித்து விருதுகளை கொடுத்து வருவது பாராட்டப்பட வேண்டியதே. அதேநேரத்தில் கொழும்பை பொறுத்த வரை இப்படியான செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை. வாழும்போது வாழ்த்த வேண்டும். மறைந்த பின் வாழ்த்துவதில் ஏது பயன்?

மிக முக்கியமான ஒருவிடயம் என்னவெனில் இங்கு பெரும்பான்மை இனமக்களோடு இருப்பதனால் கலை



இலக்கிய விருதுகள் அவர்களுக்கூடாக வரும்போது முதலிடம் அவர்களுக்கே செல்கிறது. உதாரணம் நான் களனி பிரதேச செயலகத்தில் கலைஞர்கள் சபையில் அங்கத்தவராகவும் எமது பிரதேசத்தில் இணைப்பாளராகவும்

மூன்று வருடத்துக்கு மேலாக உள்ளேன். ஆனால் அடையாள அடைக்கூட இன்னும் எனக்கு தரப்படவில்லை. தமிழ் மொழிமூலம் எழுதுபவர்களுக்கு இந்த நிலைமை. இதனை எவ்வாறு சரிசெய்வது. ஆகவே கொழும்பு, கம்பஹா போன்ற ஏனைய மாவட்டங்களில் இக்குறைகளை கண்டறிந்து நிவர்த்திக்க ஆவன செய்ய வேண்டும்.

**7–தம்மை தாமே ஆளுவது புதுக்கவிதையின் சிறப்பு. இன்றைய புதுக்கவிதையின் பார்வை எப்படியுள்ளது... முகநூலில் பிரசுரமாகும் புதுக்கவிதையின் ஆரோக்கிய தன்மையை எந்தளவில் எடுத்துக் கொள்ளலாம்?**

பதில் ஆம் புதுக் கவிதையின் ஆரோக்கியம் குறைந்து வருவதை கண்கூடாக கண்டு படித்து வருகிறோம்.

அதுவும் முகநூலில் பதியப்பட்டுவரும் புதியவர்களின் ஒரு சிலரின் வசன நடைகள் கவிதைகளென காணக்கிடக்கிறது. இவர்கள் நிறைய வாசிப்பை தனதாக்க வேண்டும். அப்போது ஆரோக்கியமான படைப்பை நம் சமூகத்துக்கு தரலாம்.

**8–வாழ்வியல் அனுபவங்களை விட உன்னதமான கதைகள் வேறெங்கும் இல்லையல்லவா...**

அவ்வாறு உங்களை அடையாளபடுத்திய உங்களது சிறுகதைகளைப் பற்றி கூறுங்கள்? பதில் நான் ஆரம்ப காலத்தில் வானொலி சஞ்சிகைகள். கையெழுத்து சஞ்சிகைகளுக்கே கதை.கட்டுரை.

கவிதை போன்றவை எழுதி வந்தேன். அப்போது வானொலி முஸ்லிம் சேவைக்கு எழுதிய கதைகள் சமுகத்தில் நடக்கின்ற

பிரச்சினைகளை மையமாக வைத்தே எழுதுவேன். அப்போது

கதையை கேட்டவர்கள் அநேகமானவர்கள் எனது வீடுவந்தோ அல்லது வெளியில் சந்தித்தோ மகிழ்வாகக் கூறுவது கதையின் தாக்கம் பலரின் தவறுகளை சரிசெய்ய உதவியுள்ளது என்ற விடயம் என்னை அடையும் போது மகிழ்ச்சியாகவும் இருக்கும். மேலும், சிறுகதைகள் எழுதியிருக்கிறேன். ஆனால் வரவேற்பு பெற்ற சிறுகதைகளாக இருந்தாலும் இப்போது அதன் பிரதிகள் எழுத்துமூலம் இல்லை. ஒருகாலத்தில் வானொலியில் எனது படைப்புக்களால் நிறப்பப்பட்ட காலம் இருந்தது. ஆனால் இன்றில்லை அவ்வாறான சந்தர்ப்பம்

**9–உங்கள் எழுத்தின் மூலம் சமூகத்திற்கான சேவை அல்லது மாற்றம் என்று எதனை குறிப்பிட விரும்புகிறீர்கள்?**

பதில் உண்மையைச் சொல்லப் போனால் எழுத்தாளரின் ஒவ்வொரு படைப்பும் கருத்தோடு கனதியாக இருக்க வேண்டும்.ஏதோ ஒருவகையில் சமூக நலன் அதன் மாற்றம் காணக் கூடியதாக எமது எழுத்து இருக்க வேண்டும். எமது எழுத்தின் ஒவ்வொரு வரிக்கும் உயிர் இருந்தால் தான்

பாதிக்கப்பட்ட நெஞ்சங்களுக்கு மருந்தாக ஊட்டச் சத்தாக போய்ச் சேரும். மாறவேண்டும். ஏதோவொரு வகையில் இதுவும் தர்மம் தான்.

**10–பெண்களின் அடிப்படை வாழ்வியலின் சுதந்திரத்தைக் கூட சிலர் புதியவகை சன்மார்க்க அறிவியலை உண்டாக்கி தகர்க்க முனைகிறார்களே அதனைப்பற்றி?**

பதில் புனித இஸ்லாம் வாழ வழி காட்டும் ஒரு மார்க்கம். அது அழகிய நந்தவனம். நாம் தேடுவதை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம். கடுமையான மார்க்க மல்ல. ஆனால் பெண்களின் அடிப்படை வாழ்வியலுக்கு மத ரீதியான தேடல் இருக்க வேண்டும். உள்ள சுதந்திரம் அதனை சரிவர கடைபிடித்தாக வேண்டும். பிறர் விமர்சனத்துக்கு ஆளாகக் கூடாது. எமது புனித சன்மார்க்கம் புதிதல்ல பழமையானது. எக்காலத்துக்கும் பொருத்தமான மார்கம்.புதிதை புகுத்த வேண்டிய தேவையில்லை. கிடைத்திருக்கும் சுதந்திரம் மேலானது. அது போதும்.

**11– எமது சமூகத்தில் முஸ்லிம் பெண் படைப்பாளிகள் மிகக் குறைவு என்றொரு காலம் போய் இப்போது அதிவேகமாகவும் துணிச்சலுடனும் பெண் படைப்பாளிகள் சகல துறைகளிலும் களம் இறங்கியிருக்கிறார்கள் அல்லவா....இவர்களில் சிலரது எழுத்துக்கள் சமூக கட்டுக்கோப்பை மீறுவதாக சிலரின் ஆதங்கம்.**

இதுபற்றி உங்கள் பார்வையில் .....


பதில் ஆதங்கத்தை ஆதரிக்கிறேன். அதனை விலாசிக்க நான் விரும்பவில்லை. அப்படி பட்டவர்கள் தன்னை திருத்திக் கொள்வது நல்லது. அப்போது தான் அவர்களின் எழுத்தின் உயர்வை எதிர்காலம் பேசும்.

**12 – நீங்கள் புத்தகங்கள் ஏதாவது விருதுகள் ?**

பதில்மூச்சயர்ந்த போது.... என்ற கவிதைப் புத்தகம். 2017லில்

வெளியிட்டேன். எனது படைப்புக்கள்

நிறைய இந்தியா, இலங்கையில் வெளிவந்துள்ளன.விருதுகள்பெரிதாக இல்லை. தேடியும் போகவில்லை.தேடிவந்த விருது முகநூலினூடாக 'தமிழ்த்தொண்டர்_2020./11/25 ',தமிழ்ப்புரவி' விருது 2020/05/01கவிச்சோலை. முகநூலில் கவிதைகளுக்கான நிறைய சான்றிதழ்களை பெற்றுள்ளேன். சிறிலங்கா பென் கிளப் அமைப்பில் உபதலைவியாகவும் இருந்து வருகிறேன்.



✍ பாத்திமா நளீரா

# கல்விக்கு கரம் கொடுக்கும் கலை விருட்சம் ஹாறுடீன்



கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் அமைதியான கிராமத்தில் அபூபக்கர் செய்நம்பு தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாக ஹார்டீன் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியிலும் இடைநிலை கல்வி முதல் உயர்தரம் வரை அக்கரைப்பற்று தேசிய பாடசாலையிலும் கற்றார்.

எமது ஊரின் தேவை அறிந்து பல்வேறு சேவைகளை செய்தவர்கள் பட்டியலிலும் இவர் தடம் பதித்தார். இளைஞர் கழகத்தை உருவாக்கி அதில் தலைவராக செயற்பட்ட அன்று எமது ஊரின் தேவைகளை அறிந்து ஒரு குழுவாக செயற்பட்ட பெருமை இவரை சாரும்.

இறக்காமம் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலை மீட்டெடுத்து எமக்கான தனியான பிரதேச சபையை பெறுவதற்கான குழுவினை ஆரம்பித்து அதற்கு இளைஞர் முற்போக்கு முன்னணி எனப்பெயர் வைத்து அதற்குத் தலைவராக ஹார்டீன் அதிபரினை நியமித்தார்கள். எமக்கு பிரதேச சபை கிடைக்க முதல் குரல் கொடுத்துழைத்தவர்களில் அதிபர் ஹாறுடீனும் முக்கியமானவராவார்.

சமூக சேவை என தன்னை வளர்த்துக் கொண்ட ஹார்டீன் அதிபரின் கல்விப் பயணமும் கருத்தாழமுள்ளது. எழுதி முடிக்க முடியாதது வர்ணிக்க வார்த்தையும் தடுமாறுகிறது.

இறைவன் மனிதனுக்கு கொடுத்த மிகப் பெரும் செல்வம் கல்வியாகும். இந்த கல்வியினை கற்று பிறருக்கு கற்றுக் கொடுப்பதையே மார்க்கம் விரும்புகின்றது. அந்த வகையில் தன்னை பாடசாலைக்காகவும் மாணவர்களுக்காவும் அன்று 100% அர்ப்பணித்த ஆசானாக நான் கண்டது ஹாறுடீன் அதிபரையே.

மாணவர்கள் மத்தியில் புதைந்து இலை மறை காயாக இருக்கின்ற திறன்களை இனங்கண்டு அவர்களுக்கான களத்தினை அமைத்துக் கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தி உச்சக்கட்டம் வரை அழைத்துச் சென்ற இவரை போல் ஒருவரை நான் காணவே இல்லை இதுவே இவருக்கான தனியான சிறப்பாகும்.

பிள்ளைகளை பாராட்டுவது , சீரிய வழியைக் காட்டுவது, அவர்களுக்கு உதவி செய்வது என பல்வேறு விடயங்களில் தன்னை அர்ப்பணித்தவர்.

இவர் பாடசாலையை விட்டு தனது ஓய்வு காலத்திற்கு செல்வது மிகப் பெரும் கவலையை ஏற்படுத்தினாலும் அவரால் உருவாக்கப்பட்ட வழியே நாங்கள் அவரைப்போல் பயணித்து அவரின் கனவுகளை நிறைவேற்றுவோம். கல்வித்துறையை எடுத்து நோக்கினால் ஆரம்பகாலத்தில் தொண்டர் ஆசிரியராக வரிப்பத்தான்சேனை அல் அமீன் வித்தியாலயத்தில் கடமையாற்றினார். அன்று முதலே அவருடைய கல்விப் பயணம் உதயமாகின்றது.

ஆசிரியர் என்ற நியமனம் எமது தாய் பாடசாலையான அஷ்ரப் மத்திய கல்லூரியில் ஆரம்பப் பிரிவு ஆசிரியராய் நியமனம் பெற்றார்.

அன்று முதல் சமூகக் கல்வியும் வரலாறும், சித்திரம் போன்ற பாடங்களை தரம் ஆறு முதல் 11 வரையான வகுப்புகளுக்கு ஜனரஞ்சகமான முறையில் கற்பித்தார். எதனையும் "கடினம்" என்ற எண்ணக் கருவினை தன்னிடமிருந்தும் தனது மாணவர்களிடமிருந்தும் அகற்றினார்.

கஷ்டப்பட்டு கற்கின்ற மாணவர்களுக்கு அன்பாக முன்வந்து அயராது உதவி செய்தார். இறக்காமத்தில் தாய் பாடசாலையில் முதல் நியமனம் பெற்றபோது அங்கே பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்பட்டன அதனை முன்னின்று உழைத்து வெற்றி கண்டார் .

அஷ்ரப் மத்திய கல்லூரி ஒரு குறிப்பிட்ட அளவிற்குள் முடங்கிக் கிடந்தபோது அதனை விஸ்தரிக்க வேண்டும் என்று குரல் கொடுத்து அப்போதைய SDC உறுப்பினர்களோடு இணைந்து தற்போது உள்ள கேட்போர் கூடம், தரம் 6,7 பகுதி கட்டடம், மஹிந்தோதய கட்டடம் அமைந்துள்ள சகல வளவினையும் மக்களிடமிருந்து பெற்று பாடசாலையை விஸ்தரிக்க தற்போதைய கோட்ட கல்வி அதிகாரி UL. மஹ்மூது



லெப்பை அவரும் இணைந்து பாடுபட்டு வெற்றி கண்டார்.

அன்று அவர்கள் இந்த வளவினை கொள்வனவு செய்தது மட்டுமல்ல பாதுகாப்பு அரண் போல் கம்பி வேலிகளாலான பாடசாலையை அதிபர் ராசிக் அவருடைய தலைமையில் முன்நின்று உழைத்து சுற்று மதில் அமைத்து அழகு சேர்த்தார்.

தான் எடுக்கும் ஒவ்வொரு படியினையும் சிறப்பாக பூர்த்தி செய்து வெற்றி பெற்ற ஆளுமையை நான் இவரிடமே கண்டேன். நான் கற்கின்ற காலத்தில் ஒரு வைத்தியராக அல்லது பொறியியலாளராக வரவேண்டும் என்ற கனவு இருக்கவில்லை சாதாரண ஹாறுடீன் ஆசிரியரைப் போல் வரவேண்டும் என்று முயற்சி செய்தேன். எனக்கு ரோல் மாடல் அவர்தான் எப்போதும் அவர் பிள்ளைகளின் மனம் நோகும்படி நடந்ததில்லை. எழுத்துத்திறன், கவிதை, ஓவியம், நாடகம், எழுத்தாக்கத்தங்கள் எத்தனை காணப்படுகின்றதோ அதனை இனம் கண்டு அவருக்கான களத்தை கொடுத்தவர். இன்று அவருடைய எத்தனையோ மாணவர்கள் உயர் பதவிகளில் உள்ளார்கள் .

கடந்த காலங்களை எட்டிப் பார்க்கும்போது அவருடைய பெயரை உச்சரிக்கும் ஏராளமான நல்லுள்ளங்களையும் நான் கண்டுள்ளேன் .

இப்படியான அன்பான ஓர் அதிபர் தனது கல்வியில் உயர் கற்கைகளையும் பயிற்சிகளையும் தொடர்ந்து கொண்டே சென்றார்.

1993 ஆம் ஆண்டு அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் தனது பயிற்சியினை நிறைவு செய்தார். 1990இல் பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தார்.

டிப்ளோமா பட்டத்தினை 2000ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார். இறக்காமம் அஸ்ரப் மத்திய கல்லூரி அன்று எப்படி ஓவியங்களால் நிறைந்து பிரகாசித்தது என்பதற்கான சான்று அவரிடம் இன்றும் காணப்படுகின்றது .

வளர்ந்து வரும் ஓவியர்களைப் பிடித்து அவர்களைக் கொண்டு உலகப்படம், இலங்கைப் படம், சிறுவர் கதைகளுக்கான சுவரோவியம், விஞ்ஞான பாடம் தொடர்பான படங்கள், கோள் மண்டலம் தொடர்பான படங்கள், சிறுவர் பாடல் தொடர்பான படங்கள், தேசியக் கொடி, பாடசாலை கொடி என்பன இவருடைய தலைமையில் அங்கு வரையப்பட்டன.

ஒரு காலத்தில் எமது தாய்ப் பாடசாலையில் அதிபர் பிரச்சினை வந்தபோது திறமையான ஒருவரினை கொண்டு வந்து எமது பாடசாலைக்கு அதிபராக்க வேண்டும் என முயற்சி செய்து அக்கரைப்பற்றைச் சேர்ந்த தாஹா பாரூக் என்ற ஆசிரியரை அழைத்து வந்து அதிபராக்கி பாடசாலையை அழகுப்படுத்தினார்.

அஷ்ரப் மத்திய கல்லூரியில் நான் கற்பித்த காலத்தில் பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருந்தார் அது மட்டுமல்லாது அன்று பாடசாலையை விட்டு பிரியும்போது பாடவிதானத்தின் பிரதி அதிபராகவும் கடமை ஆற்றியிருந்தார். எமது பாடசாலையில் முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் எமது பாடசாலைக்கு அல்லாமா இக்பால் கட்டடத்தை திறப்பு விழா செய்ய வந்தபோது அந்த நிகழ்வின் ஏற்பாட்டு தலைவராக செயல்பட்டு விழாவினை மிகச் சிறப்பாக செய்து காட்டினார். எமது பாடசாலை வரலாறும் அன்று தினகரன் பத்திரிகையில் பிரசுரமானதும் குறிப்பிடத்தக்கது.

எமது ஊரின் வளர்ச்சிக்கு இவருடைய பங்களிப்புகள் எப்போதும் இருந்து கொண்டே இருக்கின்றது. அன்று எமது இறக்காமம் பெரிய ஜும்மா பள்ளிவாயல் பிரதம நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் இருந்து செயற்பட்டார். கல்வி தொடர்பாக எமது ஊரினால் உருவாக்கப்பட்டுள்ள கல்வி அபிவிருத்தி சபையின் பிரதித் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார் .

2006 ஆம் ஆண்டு கலாசார பேரவையினால் வெளியிடப்பட்ட முதுசம் சஞ்சிகையின் உறுப்பினராகவும் செயற்பட்டார். குரு, மீசான், விடியல் போன்ற கையெழுத்துச் சஞ்சிகைக்கும் பொறுப்பாசிரியராக இருந்து மாணவர்களை உற்சாகமூட்டி கௌரவப்படுத்தினார்.

பல சிற்பிகளையும் பல கலைஞர்களையும் பல கல்வியலாளர்களையும் உருவாக்கிய அதிபர் 2003 ஆம் ஆண்டு அதிபர் சேவையில் தடம் பதித்தார். 21 வருடம் தனது அதிபர் சேவையினை இலுக்குச்சேனை வாங்காமம் முஸ்லிம் வித்தியாலயத்தில் சேவையாற்றினார். ஆரம்பத்தில் கலையோடு இணைந்த கலை ஆசானுக்கு ஒரு கலைக்கூடம் கிடைத்தது போலவே அப்பாடசாலை அமைந்தது.

ஆயிரம் பேருக்கு நிழல் தந்து ஆயிரம் பேரை வாழ வைத்து ஆயிரம் பேருக்கு உதவி செய்து நிழல் கொடுத்த ஆலமரம் விடை பெறுகின்றது.

**இறக்காமம் SLM.குத்தூஸ்**





செந்தூரம்



# விஜய்யின் 'தி கோட்' 2வது சிங்கிள்: பவதாரிணியின் மனதை வருடும் குரல்!




நடிகர் விஜய்யின் பிறந்த நாளை முன்னிட்டு அவர் நடித்துள்ள 'தி கோட்' படத்தின் 2வது பாடலின் லிரிக்கல் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

2வது சிங்கிள் எப்படி? 'சின்ன சின்ன கண்கள் சிரிக்கிறதோ' என்ற வரிகளில் பவதராணியின் குரலில் பாடல் தொடங்குகிறது.

இப்பாடலை கபிலன் வைரமுத்து எழுதியுள்ளார். யுவன் இசையமைத்துள்ளார். மெலடியாக உருவாகியுள்ள இப்பாடலுக்கு பவதாரணியின் குரல் உயிரூட்டுகிறது.

தொடர்ந்து விஜய்யின் குரலில் வலு சேர்க்கிறது. பழைய பாடல்களின் சாயல் இருப்பதை உணர முடிகிறது. 'பறவைக் கூட்டில் வாழும் விண்மீன்' போன்ற வரிகள் கவனிக்க வைக்கின்றன. மெட்டுக்காக வரிகளை அடுக்கியதாக தெரிகிறது.

பாடலின் தொடக்கத்தில் இருக்கும் ஒருவித ஈர்ப்பு, அடுத்தடுத்த வரிகளிலும், இசையிலும் மிஸ்ஸிங். ஏஐ மூலம் பவதாரிணியின் குரல் ரீகிரியேட் செய்யபட்டதாக கூறப்படுகிறது.

தி கோட்: விஜய் நடிக்கும் 68வது படத்தை வெங்கட் பிரபு இயக்குகிறார். 'தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்' என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கிறது. படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ளார். இதில் விஜய் 2 வேடங்களில் நடிக்கிறார். இதன் படப்பிடிப்பு கடந்த அக்டோபர் மாதம் சென்னையில் பூஜையுடன் தொடங்கியது.

# "பெண்களை மையப்படுத்திய படம் என சொல்லத் தயங்குகிறார்கள்" பார்வதி ஆதங்கம்

"பெண் மைய சினிமா என்பதை சொல்லவே தயங்குகிறார்கள். இப்படியான முடிவை எடுக்க அவர்களை எது கட்டாயப்படுத்துகிறது என எனக்குத் தெரியவில்லை.

தயாரிப்பாளர்கள் அதை ஏற்றுக்கொள்ள முன்வராதது காரணமாக இருக்கலாம்" என நடிகை பார்வதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில், "நான் நிறைய புதுமுக இயக்குநர்களை சந்தித்துள்ளேன். அவர்கள் எல்லோரும், 'நீங்கள்தான் இந்தப் படத்தின் மைய கதாபாத்திரம்.

ஆனால் இதை நாங்கள் இதை பெண்களை மையப்படுத்திய சினிமா என்று சொல்லப்போவதில்லை' என்கிறார்கள்.

'பெண் மைய' சினிமா என்பதை சொல்லவே அவர்கள் தயங்குகிறார்கள். இப்படியான முடிவை எடுக்க அவர்களை எது கட்டாயப்படுத்துகிறது என எனக்குத் தெரியவில்லை. தயாரிப்பாளர்கள் அதை ஏற்றுக்கொள்ள முன்வராதது காரணமாக இருக்கலாம். ஆனால் என்னை பொறுத்தவரை நான் இப்படியான படங்களில் தான் நடித்து வருகிறேன்.

ஆம், அண்மையில் வந்த மலையாள சினிமாவில் பெண் கதாபாத்திரங்கள் இல்லை. இந்தப் படங்கள் ஆண்களுக்கானது.

அதில் நீங்கள் பெண் கதாபாத்திரங்களை நுழைக்க முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

இன்னொன்று, இங்கே ஆண்கள் தான் படங்களை தயாரிக்கிறார்கள். அவர்கள் தான் விநியோகிக்கிறார்கள்.

கதைகளை தேர்ந்தெடுக்கிறார்கள். அது தான் உண்மை. நம்மை பொறுத்தவரை நமக்கான படங்களை நாம் தான் உருவாக்க வேண்டும்" என்றார்.

பார்வதி ஊர்வசி நடிப்பில் அடுத்ததாக 'உள்ளொழுக்கு' (ullozhukku) மலையாள படம் திரைக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.



# ஒரே நேரத்தில் வெளியாகும் ராஷ்மிகாவின் 2 படங்கள்



அல்லு அர்ஜுன், ராஷ்மிகா மந்தனா, ஃபஹத் ஃபாசில், பிரகாஷ் ராஜ் உட்பட பலர் நடிப்பில் உருவாகும் படம், 'புஷ்பா 2'. சுகுமார் இயக்கும் இந்தப் படத்துக்கு தேவிஸ்ரீ பிரசாத் இசை அமைக்கிறார்.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் இந்தப் படம் ஆக.15ல் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால் படப்பிடிப்பு பணிகள் இன்னும் முடிவடையாததால் ரிலீஸ் தள்ளிப் போகும் என்று கூறப்பட்டது.

அதன்படி இந்தப் படத்தின் ரிலீஸை டிச.6ம் திகதிக்கு மைத்ரி மூவி மேக்கர்ஸ் தள்ளி வைத்துள்ளது.

அதே திகதியில் ராஷ்மிகா மந்தனா, விக்கி கவுசலுடன் நடித்துள்ள இந்திப் படமான 'சாவ்வா' வும் (Chhava) வெளியாகிறது. ஒரே நாளில் ராஷ்மிகா நடித்துள்ள 2 படங்கள் வெளியாவது அவர் ரசிகர்களை குஷிப்படுத்தி இருக்கிறது.

# அழகில் அம்மாவை மிஞ்சிய தேவயானியின் மகள்கள்

ஹீரோயின் போல் இருக்கும் நடிகை தேவயானியின் இரண்டு மகள்களுடைய தற்போதைய புகைப்படம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வைரலாக பார்க்கப்பட்டு வருகிறது.





மும்பையை சேர்ந்த நடிகை தேவயானி, முதல் முதலில் அறிமுகமானது பெங்காலி மொழி படங்கள் மூலம் தான். இதை தொடர்ந்து மலையாள மொழி படங்களில் ஹீரோயினாக நடிக்க வாய்ப்பு கிடைத்தது.

அப்படியே ஹிந்தியில் நடிக்க இவருக்கு வாய்ப்பு கிடைத்தாலும், இவர் நடித்த ஹிந்தி திரைப்படம் எதிர்பாத்த அளவுக்கு வெற்றிபெறவில்லை.

பின்னர் தமிழில் கடந்த 1995ம் ஆண்டு அதியமான் இயக்கத்தில் வெளிவந்த தொட்டாச்சினுங்கி படத்தில் நாகேந்தர பிரசாத்துக்கு ஜோடியாக நடித்தார். தன்னுடைய அறிமுக படத்திலேயே கவர்ச்சியை வாரி இறைத்த தேவயானி... பின்னர் சுதாரித்து கொண்டு தன்னுடைய முகவெட்டுக்கு ஏற்றாப் போல் குடும்ப பாங்கான கதாபாத்திரங்களை தேர்வு செய்து நடிக்க துவங்கினார்.

குறிப்பாக 1996ம் ஆண்டு, அஜித்துக்கு ஜோடியாக இவர் நடித்த 'காதல் கோட்டை' திரைப்படம் தேவையானிக்கு மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. தமிழக அரசின் ஸ்டேட் ஃபிலிம் விருதும் இவருக்கு கிடைத்தது. மேலும் இவரின் நடிப்புக்கு பல்வேறு தரப்பில் இருந்து பாராட்டுக்கள் குவிய தொடங்கியது. இப்படத்தின் வெற்றி தேவயானி வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தி தமிழ் சினிமா ரசிகர்களின் உள்ளங்களில் நிலை நிறுத்தியது.

பின்னர் தமிழ் சினிமாவில் படு பிஸியான ஹீரோயினாக மாறிய தேவயானி... அஜித், விஜய், கமல், மம்மூட்டி,சரத்குமார், போன்ற பல முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக நடித்துள்ளார்.

30 வயதை கடந்த பின்னரும், தொடர்ந்து நடிப்பில் கவனம் செலுத்தி வந்த தேவயானி, தன்னை வைத்து நீ வருவாய் என, விண்ணுக்கும் மண்ணுக்கும் போன்ற படங்களை இயக்கிய இயக்குனர் ராஜகுமாரனை காதலித்த நிலையில், இதற்க்கு தேவயானியின் ஒட்டு மொத்த குடும்பமும் எதிராக இருந்தது. எனவே காதலுக்காக வீட்டை விட்டு வெளியேறி ராஜகுமாரனையே திருமணம் செய்து கொண்டார். இவர்களின் காதலுக்கு அடையாளமாக, இனியா மற்றும் பிரியங்கா என இரண்டு மகள்கள் உள்ளனர். இனியாவுக்கு தற்போது 18 வயதாகும் நிலையில், பிரியங்காவுக்கு 16 வயதும் ஆகிறது.

ஆனால் தற்போது இனியாவை ஹீரோயின் ஆக்கும் நோக்கத்தில், தேவயானி ராஜகுமாரன் உள்ளதாக தெரிகிறது. ஏற்கனவே தன்னுடைய மகளை விஜய் மகனுக்கு ஜோடியாக நடிக்க வைப்பேன் என ராஜகுமாரன் கூறியுள்ள நிலையில், தேவயானி மூத்த மகளை வெளியிடங்களுக்கு அழைத்து வர துவங்கியுள்ளார். இதுகுறித்த போட்டோஸ் தற்போது வெளியாகியுள்ளது.அதே போல் தன்னுடைய அக்கா தேவயானி பிறந்தநாளை முன்னிட்டு அவரை வாழ்த்தி நகுல் வெளியிட்ட புகைப்படத்தில் பிரியங்கா இனியா என இருவருமே அம்மாவை மிஞ்சும் அழகில் உள்ளனர் என ரசிகர்கள் கூறி வருகிறார்கள்.

## நடிகை சப்தமி கவுடா அவதூறு வழக்கு



மறைந்த பழம்பெரும் கன்னட நடிகர் ராஜ்குமாரின் பேரன் யுவராஜ்குமார். 'யுவா' என்ற படம் மூலம் அறிமுகமான இவர், ஸ்ரீதேவி பைரப்பா என்பவரை காதலித்து 2019ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்து செய்ய முடிவு செய்து, குடும்ப நல நீதிமன்றத்தில் யுவராஜ்குமார் மனுதாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் 'நடிகை சப்தமி கவுடாவால் தான் எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது" என்று ஸ்ரீதேவி பைரப்பா கூறியிருந்தார். இது கன்னட திரையுலகில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் இந்த விவகாரத்தில் தனது பெயர் இழுக்கப்பட்டதை அடுத்து நடிகை சப்தமி கவுடா, அவதூறு வழக்குத் தொடர்ந்துள்ளார். ஸ்ரீதேவி என்னை களங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக என் பெயரை தவறாகப் பயன்படுத்தி உள்ளார் என்று கூறியுள்ள சப்தமி கவுடா, இதற்காக ரூ.10 கோடி நஷ்ட ஈடு கேட்டும், மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

# இயக்குநர் ஷங்கரிடம் அதிகம் கற்றுக்கொண்டேன்: ரகுல் ப்ரீத் சிங்

கமல்ஹாசன் நடிப்பில் ஷங்கர் இயக்கியுள்ள 'இந்தியன் 2', ஜூலை 12ம் தேதி வெளியாகிறது. இதில் காஜல் அகர்வால், சித்தார்த், பாபி சிம்ஹா, ரகுல் ப்ரீத் சிங் உட்பட பலர் நடித்துள்ளனர். இந்தப் படத்தில் நடித்தபோது, இயக்குநர் ஷங்கரிடம் இருந்து அதிகம் கற்றுக்கொண்டதாக நடிகை ரகுல் ப்ரீத் சிங் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது, "ஜாம்பவனாக இருக்கும் இயக்குநர் ஷங்கருடன் பணிபுரிய கிடைத்த வாய்ப்பை தனி சலுகையாக கருதுகிறேன். அவர் அற்புதமான இயக்குநர். கதாபாத்திரங்களை அவர் பார்க்கும் விதம், அவரது நோக்கம், படப்பிடிப்பு தளத்தில் நுணுக்கங்களை அவர் சேர்க்கும் விதம் என அவரிடம் நிறைய கற்றுக்கொண்டேன். 'இந்தியன் 2' படப்பிடிப்புத் தளம் உண்மையிலேயே சிறந்த அனுபவத்தை கொடுத்தது" என்று தெரிவித்துள்ளார்.

# குழந்தைகளை கையாள்வது எப்படி!



**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்.**

பொருள் பெற்றெடுக்கும் மக்கள் பழிபடராத பண்புடையவர்களாக இருப்பின், ஏழேழு தலைமுறை எனும் அளவுக்குக் காலமெல்லாம் எந்தத் தீமையும் தீண்டாது. குழந்தைகளைக் கண்டாலே பேரின்பமே. அவர்களின் கள்ளமற்றப் பேச்சு,சிரிப்பு, துரு துரு சேட்டைகள் என்பன பல நேரங்களில் எம் மனக்கவலைக்கு மருந்தாக அமைகின்றது. பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் நல்ல குழந்தைகள் தான். அவர்களை வளர்க்கும் விதம், வளரும் சூழல் என்பன அவர்களின் வளர்ச்சியில் எதிர்கால வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துகிறது . அவர்கள் வளர்ந்து நிற்கும் போது அவர்கள் வளர்ந்த சூழலும் அவர்கள் வளர்க்கப் பட்ட விதமுமே முழு மனிதனான பின் இருக்கும் முடிவாக இருக்கிறது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா!என்பது உண்மை. ஆகையால் குழந்தைகளை வளர்க்கும் போது நமது பேச்சு, செயற்பாடுகள் என்பனவற்றில் மிகவும் கவனமாக கண்ணாடியை கையாள்வதுப் போலவே இருக்க வேண்டும். அவர்களை எப்படி கையாள்வது என்று சில விடயங்கள் பார்ப்போம் குழந்தைகளுக்கும் தனிப்பட்ட எண்ணங்களும் அழகான மனமும் உண்டு என்பதை உங்கள் மனதில் ஆழமாக பதித்து அவர்களின் எண்ணங்களை கேட்க செவி சாயுங்கள். அதிகாரத்தால் எதையும் செய்யச் சொல்லி அதட்டுதல் வேண்டாம்.அவர்கள் வழியிலே குழந்தையோடு குழந்தையாக மாறி பேசுங்கள். அவர்கள் நீங்கள் சொல்வதற்கு எல்லாம் தலையாட்டும் பொம்மையாவார்கள். மிரட்டி அடிபணிய வைக்க முயலாதீர்கள். ஆரம்பத்தில் மிரட்டலுக்குப் பயப்படும் அவர்கள் பின் பழகி விட்டால் உங்களை மதிக்க தவறுவார்கள். குழந்தைகளிடம் பேச நினைக்கும் போது குழந்தைகளுக்குப் பிடித்த விடயங்களைப் பற்றி முதலில் பேச ஆரம்பியுங்கள்.அவர்கள் தானாகவே நாம் பேசும் விடயத்திற்குள் வந்து அமர்வார்கள் அவர்களுக்குத் தெரிந்த விடயங்களை பேசும் போது "அப்படியா!" என்று ஆச்சரியம் காட்டி "எப்படி உங்களுக்கு இதெல்லாம் தெரிகிறது!"என்று கேளுங்கள்.

சரியான விடயங்களை பேசும் போது பாராட்டுங்கள். பிழையாக பேசும் போது அதட்டி பயம் காட்டாமல் இப்படியெல்லாம் பேசக்கூடாது. மற்றவர்கள் உங்களை தவறான பிள்ளை என்பார்கள். நீங்கள் எப்போதும் நல்ல பிள்ளையாக இருக்க ஆசையா! இல்லை கெட்ட பிள்ளை என்று சொல்ல ஆசையா! தெரிவை அவர்கள் கையில் கொடுத்து விடுங்கள்.முடிவினை தேர்வு செய்து கற்றுக் கொள்வார்கள் குழந்தைகளின் தவறுகளை பெரிது படுத்தி அமர்களப் படுத்தாமல் அதை கையாள கொஞ்சம் தாமதம் செய்து கண்டியுங்கள். அக் கண்டிப்பு கடுமையாக இருக்க வேண்டாம். ஆனால் உறுதியாக இருக்கட்டும். குழந்தைகளிடம் சேர்ந்து விளையாடுங்கள். விளையாடும் நேரங்களில் எப்போதும் வெற்றி பெற்றுக்கொண்டு இருக்காமலும் சின்ன பிள்ளை தானே நாம் தோற்றுப் போவோம் என்று நினைக்காமலும் வெற்றியும் தோல்வியுமாக பழகுங்கள். வெற்றி தோல்வியை சமமாக எடுக்கப்பழகுவார்கள் குழந்தைகள் புதிய தகவல்களை பகிரும் போது அல்லது ஒரு விடயத்தை தெரிந்து பேசும் போது "அடடா! எனக்குத் தெரியலையே. சொல்லுங்க கேட்போம்" என்று உற்சாகப் படுத்துங்கள். மேலும் நீங்களும் அது தொடர்பான தகவல்களை சொல்லிக்கொடுங்கள். அவர்கள் படிக்கும் போதும் விளையாடும் போதும் முடிந்தளவு அருகில் இருந்து நீஙகளும் ஏதாவது படியுங்கள். "நானும் வரவா!" என்று சேர்ந்து விளையாடுங்கள்.

அறிவுரைகளை சொல்வது சுலபம். கேட்பது கடினம். அதனால் அறிவுரை சொல்லும் போது கொஞ்சம் அவதானம் தேவை.தொடர்ந்து அறிவுரையை மட்டுமே சொல்லாமல் சின்ன சின்ன பரிசு பொருட்களை கொடுத்து அறிவுரையை கொடுங்கள். சில குழந்தைகள் புதியவர்கள், விருந்தினர்கள் அருகில் செல்ல தயங்குவார்கள். வலுக்கட்டாயப்படுத்த வேண்டாம். நீங்களும் வேறு வீடுகளுக்கு செல்லும் போது உடனே குழந்தைகளை தூக்காதீர்கள். வராதக் குழந்தையை வற்புறுத்தாதீர்கள். நாம் சற்று தொலைவில் இருக்கும் போது குழந்தைகள் நம்மை கவனிக்காத மாதிரி கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

உங்கள் நடவடிக்கையில் அவதானம் தேவை. வீட்டுக்கு வரும் உறவினர் நண்பர்கள் முன்பாக சில குழந்தைகள் சேட்டைகள் செய்வார்கள். இது போன்ற நேரங்களில் வந்தவர்கள் முன்பாகவே தண்டிக்காமல் அவர்கள் போனப்பின் கூப்பிட்டு கண்டியுங்கள். ஒருவர் வந்திருக்கும் போது கடைபிடிக்க வேண்டிய விடயங்களை மட்டுமல்ல ஏனைய நல்ல பழக்க வழக்கங்களை அடிக்கடி நினைவூட்டுங்கள்.என்றோ ஒரு நாள் சொல்லி சொன்னதை அவர்கள் செய்யவில்லையென திட்டாதீர்கள். குழந்தைகள் என்பதால் மறந்து விடுவார்கள்.மீண்டும் மீண்டும் ஞாபகப் படுத்துங்கள். சில பிள்ளைகள் உறவினர்கள், நண்பர்கள் முன்பாக கூச்சமின்றி ஆடுவார்கள், பாடுவார்கள். சில நேரங்களில் நீங்கள் பாட சொல்லியோ ஆட சொல்லியோ கூறும் போது அவர்கள் மறுப்பார்கள். வற்புறுத்தி செய்ய வைக்காமல் விட்டு விடுங்கள். குழந்தைகளின் மனநிலை அதற்கு ஒத்துழைக்கா விட்டால் அவர்கள் சில வேளைகளில் அப்படித்தான். விட்டு விடுங்கள்.

குழந்தைகளிடம் சிரித்துக் கொண்டேப் பேச பழகுங்கள் நம்முடைய முகஅமைப்பை பார்த்தே எம்மை எடை போடுவார்கள். பிள்ளைகளை சங்கடப்படுத்தும் எந்தக் கேள்விகளையும் பொது இடங்களில் வைத்தோ அல்லது நிறைய நபர்கள் இருக்கும் சபையிலோ கேட்காதீர்கள்.

குழந்தைகள் இருக்கும் வீட்டுக்குப் போகும் போது அவர்கள் வயதுக்கேற்ற புத்தகங்களை வாங்கிக் கொண்டு போய் கொடுங்கள். அது கதை புத்தகமாகவோ, நிறம் தீட்டும் புத்தகமாக, தகவல் புத்தகமாகவோ அவர்கள் கண்ணை கவரும் விதமாக இருக்கட்டும். குழந்தைகளின் உடலைத் தொடுவது, தடவுவது, முத்தம் கொடுப்பது போன்ற செயல்களில் ஈடுபடாதீர்கள் குழந்தைகளுக்கு முற்றிலும் பிடிக்காது.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# குழந்தை வளர்ப்பில் அதிக கவனம் வேண்டும்

குழந்தை வளர்ப்பில் இரண்டு விதமான அணுகுமுறைகள் மிகவும் ஆபத்தானவை என்கிறார் மனநல மருத்துவர் வெங்கடேஸ்வரன்.

“முதலாவதாக குழந்தைகளை மிகவும் கண்டிப்புடன் அடித்து வளர்ப்பது, அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் நடந்துகொள்வது. இந்த அணுகுமுறை பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அதிகமாகக் காணப்பட்டது. இது எந்த அளவுக்கு குழந்தைகளுக்கு ஆபத்தானதோ, அதே அளவுக்கு அதீத செல்லமும் பாதுகாப்பும் கொண்ட இப்போதைய வளர்ப்பு முறையும் ஆபத்தானது,” என்கிறார் அவர்.

“இரண்டாவதாக, வீட்டிற்கு வெளியிலேயே அதிகமாக விடாமல், வெளியே சென்றால் வெயிலில் கறுத்துவிடுவார்கள் எனவும் கீழே விழுந்தால் அடிபட்டு விடும் எனவும் மிகத் தீவிரமாகப் பாதுகாத்து (overprotective), குழந்தைகளின் பொருந்தாத விருப்பங்களைக் கூட பெற்றோர் பூர்த்தி செய்வது, எப்போதும் நச்சரித்துக் கொண்டே இருப்பது ஆகியவையும் தவறான வளர்ப்பு முறைதான்.” என்கிறார் மருத்துவர் வெங்கடேஸ்வரன்.



“இதனால் குழந்தைகள் மிகவும் பலவீனமான மனதுடன், பிரச்சினைகளை எதிர்கொள்ளும் துணிவின்றி வளர்வார்கள்.

இது எதிர்காலத்தில் மன உறுதியில்லாத நபராக அவர்கள் வளர்வதற்கும், எளிதில் தற்கொலை போன்ற முடிவுகளை எடுக்கும் அளவுக்கு ஆபத்தான நிலைக்கும் தள்ளக்கூடும்,” என்று கடுமையாக எச்சரிக்கிறார் அவர். குழந்தைகள் சமூகத்தில் ஒரு தனிமனிதராக முழுமை பெற்று வளர்வதற்கு நிஜ உலகின் சவால்களை எதிர்கொள்ளப் பெற்றோர் அனுமதிக்க வேண்டியது மிக அவசியம் எனவும் அவர் வலியுறுத்துகிறார்.

அவரது கூற்றின்படி, இந்த இரண்டுமே குழந்தைகள் வளர்வதில் எதிர்மறையான தாக்கத்தையே செலுத்துகின்றன. “குழந்தைகளுடன் எப்போதும் ஈடுபாட்டுடன் இருக்க வேண்டும். அதேபோல் அவர்களுடன் அதிக நேரம் செலவிடுவது, பேசிக்கொண்டிருப்பது, வெளியே செல்வது, கண்டிப்பு தேவையான இடத்தில் நேர்மறையான கண்டிப்புடன் இருக்கும் அதேவேளையில் நட்புடனும் பழகுவதே நேர்மறையான தாக்கத்தை குழந்தைகளின் வளர்ப்பில் செலுத்தும்.” என்கிறார் அவர்.

# மருதாணி வைத்தால் சிவப்பது எப்படி?

**மருதாணி வைத்தால் சிவப்பது எப்படி? இதுகுறித்து விளக்கினார் மருத்துவர் வானதி.**

“மருதாணியின் தாவரவியல் பெயர் லாவ்சோனியா இனர்மிஸ் (*Lawsonia inermis*). இதில், லாவ்சோன் (Lawsone) என்ற நிறமிதான் தோலில் சில நாட்களுக்கு நிறமியாகப் படிந்து இருக்கும். இது உடலின் புரோட்டீன் வடிவ செல்களோடு நீண்ட நேரம் சேரும் போது வெளிப்படும் எதிர்வினைதான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி மருதாணி சிவக்க காரணமாகிறது” என்றார்.

செயற்கையாக ரசாயனம் சேர்த்து தயாரிக்கப்படும் மெஹந்தி கோன்களில் பிபிடி என்ற வேதிப்பொருள் சில சமயம் அதிகம் சிவக்க வேண்டும் என அதிகம் சேர்க்கப்படுகிறது.



பிபிடி என்பது ஒரு நறுமணம் தரும் இளம் ஊதா நிற ரசாயனம். இது ஆக்சிஜனேற்றம் ஆக ஆக சிவப்பாகவும், பின் கருப்பு நிறத்திலும் உடலில் நீண்ட நேரம் படப்பட நிறம் மாறும்.



வி. பிரியதர்ஷனி


நண்பர்கள் பட்டாளம்


சி.கு. சித்ராங்கனி



Batch of Glasklarianz 24


புஷ்பலதா, கௌஷிகா


பாபு ஆனந்தராஜா பதுளை


இயக்குனர் தினேஷ், கலைஞர் விஜே


யாழ் சுற்றுலாவில் விவசாய உத்தியோகத்தர்




வேவல்ஹின்ன தமிழ் வித்தியாலய விளையாட்டு விழா


காரைதீவில் டிவா குழுவினர்




சந்திரசேகரன், கலைஞர் ஷண்மு


கொழும்பு சுகததாச உள்ளரங்கில் அண்மையில் நடைபெற்ற கராட்டி போட்டியில் வெற்றிபெற்றதற்கு விருது வழங்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா



மண்டேலா நண்பர்களின் உதவியை நாடாமல் தானே அலுவலகத்தில் பணிபுரிந்துகொண்டு மிகுந்த பணக் கஷ்டத்தினூடாகவே பட்டப்படிப்பை தொடர்ந்தான். காலமெனும் செடியில் வருடங்கள் எனும் பல பூக்கள் மொட்டென மலர்ந்து சட்டென உதிர்ந்தன. 1942 இல் அவனது சட்டப்படிப்பு நிறைவுக்கு வந்து அவனொரு பி.ஏ. பட்டதாரியாகி தனது நீண்டநாள் கனவை நனவாக்கினான். ஆனாலும் பட்டம் கிடைத்ததை நினைத்து அப்போது மண்டேலாவால் குதூகலிக்க முடியவில்லை. உயர்ந்த இலட்சியத்துக்கு முன் பட்டம் ஒரு பொருட்டல்ல என்று நினைக்குமளவுக்கு கோர் அவனை நன்றாக மாற்றி வைத்திருந்தான்.


கோர் நாளுக்கு நாள் மண்டேலாவை தன் பக்கம் இழுக்க முயற்சி செய்துகொண்டே இருந்தான். மண்டேலாவும் கோரின் நட்பின் பிடியில் சிக்குண்டதால் கோர் இழுத்த இழுப்புக்கெல்லாம் மறுக்காமல் சென்றுகொண்டிருந்தான். ஒருமுறை மண்டேலாவும் கோரும் விவாதிக்கும்போது "நெல்சன், கல்வியால் மட்டும் முன்னேற்றம் கண்ட நாடு என்று ஏதாவதொரு நாட்டையாவது உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்க மண்டேலா வாயடைத்து போக கோர் தொடர்ந்தான் "கல்வி சிறந்ததுதான் நான் மறுக்கவில்லை. ஆனால் அந்த கல்வியையும் பி.ஏ. பட்டத்தையும் வைத்துக்கொண்டு நாம் சும்மா இருந்துவிட்டால் நம் இலட்சியம்தான் நிறைவேறுமா? கல்வியை மட்டுமே நாம் நம்பிக்கொண்டிருந்தால் இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் இலவு காத்த கிளிகள் போல காத்திருக்க வேண்டியதுதான்" என்று ஒரு குட்டி பிரசங்கமே செய்துவிட்டான். அது உண்மைதான் என்று தோன்றியது மண்டேலாவுக்கு. கல்லூரி புத்தகங்கள் வாயிலாகவும் நூலகத்தில் படித்த வேறு பல புத்தகங்கள் ஊடாகவும் மண்டேலா வரலாறு வாசித்திருந்தான்.

"பேராசிரியர்களும் ஆசிரியர்களும் பல நுணுக்கமாக விஷயங்களை விவாதித்திருக்கிறார்கள். ஆனால் கோர் ஒரே கையசைவில் நான் இதுவரை படித்த கல்வியையே புறக்கணிக்கின்றான். புத்தகங்களை கேள்விக்குள்ளாக்குகிறான். நான் அறிந்துவைத்திருக்கும் உண்மைகளை திரிபுகள் என்கிறான். எனக்குச் சற்றும் பரிச்சயம் இல்லாத ஒரு கோணத்திற்கு என் சிந்தனை பார்வையை மாற்றியமைக்க முயல்கிறான். பட்டம் பெற்ற நான் பட்டம் பெறாத அவனிடம் பல சந்தர்ப்பங்களில் தோற்றுப்போகிறேன்" என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டான்.

கோர் அழைத்து செல்லும் ஒவ்வொரு கூட்டமும் ஒரு புது விஷயத்தை மண்டேலாவுக்கு அறிமுகம் செய்துவைத்தது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நடத்தும் கூட்டங்கள் மிகவும் துடிப்பாக இருந்தபடியால் மண்டேலாவை கவர்ந்துவிட்டது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கூட்டங்களில் ஆபிரிக்க மக்களை நேரடியாகப் பாதிக்கும் விஷயங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு விவாதித்தார்கள். ஆபிரிக்கர்களுக்கு எதிரான சட்டங்கள், முட்டுக்கட்டைகள், உரிமைகள், வாடகைகள், பேரூந்துக் கட்டணங்கள் போன்ற அனைத்து விடயங்களும் தாமாகவே சரியாகிவிடும் என்று நாம் நம் வேலைகளை மட்டும் கவனித்துக்கொண்டிருந்தால் எதுவும் மாறப்போவதில்லை. நம் உரிமைகளை நாம் போராடியே பெற்றாக வேண்டும் என்ற கொள்கையை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நடத்தும் கூட்டங்கள் மண்டேலாவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டின.

சில மாதங்கள் பிறந்து மடிந்தன. ஜோங்கிந்தாபா ஜொஹன்னர்ஸ்பெர்க் வந்திருப்பதாகவும் மண்டேலாவை சந்திக்க விரும்புவதாகவும் மண்டேலாவுக்கு ஒரு செய்தி வந்தது. அந்த செய்தியை கொண்டு வந்து சேர்த்தது அவனது உற்ற நண்பன் சிசுலு. மண்டேலாவோ வளர்ப்புத் தந்தையான ஜோங்கிந்தாபாவை நீண்டகாலத்திற்கு பிறகு சந்திக்கப் போவதை நினைத்து உச்சி குளிர்ந்து அகமகிழ்ந்தான். ஆனாலும் அவன் மனதில் பழைய நினைவுகள் வந்து முட்டி மோதி சங்கடத்தையும் பயத்தையும் வரவழைத்தன. அநாதையாக எதிர்காலமே சூனியமாகிப் போய், வாழ்க்கையே வெட்ட வெளியாய் வெறுமையாகிய நிலையில் தன்னந்தனியாக தத்தளித்துக் கொண்டிருந்த தன்னை தத்தெடுத்து அரவணைத்து பஞ்சணையில் தூங்க வைத்து அழகு பார்த்து சொந்த மகனாகவே நினைத்து வளர்த்து ஆளாக்கிய அந்த அப்பாவி ஜீவனை விட்டு ஓடி வந்து விட்டேனே என்ற குற்ற உணர்வு அவனை மென்மேலும் தர்மசங்கடத்திற்கு உள்ளாக்கியது. இவன் மனதை அறிந்தவனான உற்ற நண்பன் சிசுலு "மண்டேலா நீ பழையதை எல்லாம் நினைத்து வருந்தாதே. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்ற தூய எண்ணத்துடன் நீ உன் தந்தையை சந்தித்து முதலில் மனம்விட்டு மன்னிப்பு கேள். இப்போது கலங்காதே. நானும் உன் தந்தையை சந்திக்க உன்னுடன் துணைக்கு வருகிறேன்" என்று ஆறுதல் கூறி தேற்றியதும் மண்டேலாவும் சமாதானமடைந்தவனாக தயக்கம், சங்கடம், குற்ற உணர்வு அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு தந்தையை சந்திக்கும் ஆவலுடன் அம்பிலிருந்து புறப்பட்ட வில்லாக சிசுலுவுடன் விரைந்தான்.


நீண்ட காலத்திற்கு பிறகு சந்தித்ததால் இருவருக்கும் பேச்சு வராமல் இருவரது கண்களிலிருந்தும் கண்ணீர் தான் வெளிவந்தது.



*(தொடரும்)*

கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

## பிரிந்து வாழும் யாழ் முஸ்லிம் சமூகம் வட்ஸப் குறூப்பில் ஒன்றாக பயணம்




யாழ்ப்பாண முஸ்லிம்கள் 1990 இல் வெளியேற்றப்பட்ட தையடுத்து புத்தளம், நீர்கொழும்பு, பாணந்துறை, தெஹிவளை, வெள்ளவத்தை, பலகத்துறை, யாழ்ப்பாணம் போன்ற பல ஊர்களில் பரந்து வாழ்கின்றனர். பிரிந்து வாழும் யாழ் முஸ்லிம்களை யாழ் முஸ்லிம் சமூக ஊடகம், வட்ஸப் குறூப் மூலமாக 1000 இற்கும் அதிகமான யாழ் முஸ்லிம்களை ஒன்றிணைத்து பயணிப்பது மிகவும் பிரயோசனமாகவிருக்கிறது. யாழ் முஸ்லிம் சமூக ஊடக வட்ஸப் குறூப்பில் யாழ் முஸ்லிம்களின் கல்வி, விளையாட்டு, மீள்குடியேற்றம் போன்ற விடயங்களும் மேலும் முக்கியமாக யாழ் முஸ்லிம்களின் ஜனாஸா அறிவித்தல்களை உடனடியாக அறிவிப்பதிலும் பெரும் பங்காற்றுகிறது. மேலும் ஒவ்வொரு வருடமும் யாழ் முஸ்லிம்களை தேர்ந்தெடுத்து யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது வழங்கி கௌரவிக்கிறது. யாழ் முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் ஒழுங்காக நெறிப்படுத்துவதில் முன்னின்று உழைக்கிறார். யாழ் முஸ்லிம் சமூகம் அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் நன்றியையும் தெரிவிக்கிறது. மேலும் அவருக்கு எம்.எஸ்.ஏ. எம். முஹ்தார், ஏ.சி. நஜுமுத்தீன் ஆகியோரை முறையே தலைவராகவும் உபதலைவராகவும் உள்ளடக்கிய முக்கியஸ்தர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவும் ஆலோசனைகள் தெரிவிப்பதில் முன்னின்று உழைக்கிறது.

## அதிக ஞாபகத் திறன் மூலம் சோழன் உலக சாதனை படைத்த 3 வயது குழந்தை





பீபில்ஸ் ஹெல்பிங் பீபில்ஸ் பவுண்டேஷன் உடன் இணைந்து சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் நடத்திய உலக சாதனை படைக்கும் முயற்சியில், கம்பஹா மாவட்டத்தின் ஹுனுபிட்டிய பகுதியில் வசித்துவரும் மொஹமட் ஷபான் மற்றும் பாத்திமா இபாஸா ஆகியோரின் மகன் 3 வயதான மொஹமட் ஷம்லான் சாதனைப் படைத்துள்ளார்.

இவர் எண்கள், பூக்கள், பழங்கள், பறவைகள், விலங்குகள், தானியங்கள், மரக்கறி வகைகள், மனித உடலின் உள் உறுப்புகள், ஊர்வன, பூச்சிகள் பூக்கள், மீன்கள், சிங்கள, ஆங்கில, அரேபிய மொழி எழுத்துகள், அரசியல் தலைவர்கள், பல்வேறு தொழில்கள், உலகப் புகழ் பெற்ற கோபுரங்கள், புகழ் பெற்ற கிரிக்கெட் வீரர்கள், தேசிய வீரர்கள், உணவு வகைகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் என 1098 உருவப் படங்களை அடையாளம் காட்டி அவற்றின் பெயர்களை மனப்பாடமாகக் கூறி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் தனது பெயரை பதிவு செய்தார்.

இதன் மூலம் 3 வயதில் உலகின் அதிக ஞாபகத் திறன் கொண்ட குழந்தை என்ற பெயரைப் பெற்றுள்ளார் குழந்தை ஷம்லாள். இதற்கான நிகழ்வு கம்பஹா மாவட்டத்தில் நடைபெற்றது.

இதன் போது நடுவர்களாக இருந்து குழந்தையை முறையாகப் பரிசீலனை செய்து உலக சாதனையாகப் பதிவு செய்தார்கள் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணி ராஜா மற்றும் கண்டி மாவட்டத்தின் துணைத் தலைவர் சந்திரமோகன் ஆகியோர் சோழன் உலக சாதனை படைத்த குழந்தை ஷம்லானுக்கு சான்றிதழ், தங்கப் பதக்கம், நினைவுக் கேடயம் ஆகியவற்றை வழங்கிப் பாராட்டினார்கள்.

இந்த சோழன் உலக சாதனை நிகழ்வில் களனி பகுதியின் கிராம நிர்வாக அலுவலர் சுனில் ஷாந்த மற்றும் கம்பஹா மாவட்ட ஜமியத்துல் உலமா அல்ஹாஜ் நுஹூமான் இனாமி ஆகியோர் பங்கு கொண்டு உலக சாதனை படைத்த குழந்தையின் பெற்றோரை வாழ்த்திப் பாராட்டினார்கள்.

*மஸ்கெலியா நிருபர்*

# வெளிநாட்டில் தொழில் புரியும் உறவுகளின் மன வேதனைகளை கண்முன் நிறுத்தும் ரியாஸ் மொஹமதின் 'இரை தேடும் பறவைகள்'





மொஹமட் ரியாஸ் என்ற பெயர் ஒரு காலத்தில் இலங்கை இளசுகள் மத்தியில் மிகவும் நேசிக்கப்பட்ட பெயர். பல வித்தியாசமான நிகழ்ச்சிகளை சக்தி தொலைக்காட்சியில் ஆரம்பித்து ரசிகர்களின் மனங்களில் இடம்பிடித்தவர். பல புதிய முயற்சிகளை ஆரம்பிப்பதில் அதிக ஆர்வம் காட்டியவர்.

சமூக வலைத்தளங்கள் பெரிதாக இல்லாத காலகட்டத்தில் இவர் செய்த முயற்சிகள் இன்றும் பேசப்படுகிறது எனலாம்.

அறிவிப்பாளராக நடிகராக, டிஜிட்டல் படைப்பாளியாக கவிஞராக என பல அவதாரங்களை எடுத்த ரியாஸ் தனக்கென தனியிடம் பிடித்து வைத்திருந்தார்.

வீரகேசரி மித்திரனிலும் இவர் கவிதைகள் எழுதிவந்திருக்கிறார். கவிதை மோதல் என இவர் ஜீவேந்திரனுடன் எழுதியதை பலரும் அறிந்திருக்கமாட்டார்கள். புனைப் பெயர்களில் எழுதியதால் இவரை பலரும் அடையாளங் கண்டிருக்கவில்லை. கவிதைகள் மாத்திரமன்றி பாடல்கள் எழுதுவதிலும் இவர் ஆர்வம் காட்டினார்.பாடசாலையில் கற்கும் போது நாடங்களில் கூட நடித்திருக்கிறார். மிமிக்கிரி செய்வதிலும் இவர் திறமைசாலி. பல குரல்களில் பேசி சாதனை படைத்திருக்கிறார் ரியாஸ்.



1983 இனக் கலவரம் தொடர்பான 'நீருபூத்த நெருப்பு ' எனும் திரைப்படத்திலும் இவர் பிரதான கதாபாத்திரம் ஏற்று நடித்திருக்கிறார்.

பின்னர் வெளிநாட்டிற்கு சென்ற அவர் அறிவிப்பாளராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராகவெல்லாம் பணியாற்றினார். எங்கு சென்றாலும் அவரின் தேடலும் புது முயற்சிகளில் கைவைக்கும் அவாவும் குறையவில்லை. அங்கும் குறுந்திரைப்படம், பாடல், நடிப்பு, டிஜிட்டல் தயாரிப்புகள் என தனது திறமைகளை வெளிப்படுத்தி வந்தார் இவர்.





வெளிநாட்டு வாழ்க்கையின் வலிகளை கண்முன் கொண்டுவரும் வகையில் புதிய பாடலொன்றை தயாரித்து வெளியிடும் முயற்சியில் ரியாஸ் இறங்கியுள்ளார்.

கெமரா,தொழில்நுட்பம் என பல திறமைகளை கொண்டுள்ள இவர் பாடல் காட்சிகளுக்கு பொருத்தமான ஒருவர் கிடைக்காத நிலையில் தனது வலிகளை யாதார்த்தமாக வெளிப்படுத்தி நடித்தும் இருக்கிறார்.

வெளிவர முன்னரே பல எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது இந்தப் பாடல். சமீல் இந்தப் பாடலை சிறப்பாக இசையமைத்துள்ளார். இதனை தயாரித்து 8 மாதங்களுக்கு மேலாகிறது. தென்னிந்திய பாடல்களுடன் நமது நாட்டுப் பாடல்களை ஒப்பிட்டு நம்மவர்களை ஓரங்கட்டும் போக்கு அன்றிருந்து இன்று வரை நீடிக்கிறது. ஆனால் இந்திய பாடல்களுக்கு நிகராக சிறப்பாக இதனை இசையமைத்துள்ளார்.

வெளிநாட்டில் உறவுகளை பிரிந்து படும் கஷ்டங்களை கண்முன் கொண்டு வரும் வகையில் பாடல் வரிகளும் காட்சிகளும் அமைக்கப்பட்டுள்ளது பாராட்டத் தக்கது. பாடல்வரிகளை ரியாஸ் சிறப்பாக வடித்துள்ளதோடு காட்சிகளையும் சிறப்பாக அமைத்துள்ளார். வெளிநாடுகளில் தொழில் புரியும் பல்லாயிரக் கணக்கான உறவுகளின் வேதனைகள் இந்த சில நிமிடமே ஓடும் பாடலுக்குள் புதைந்துள்ளது.

இந்த பாடல் பற்றி பிரபலங்கள் பலரும் பாராட்டி சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர்.

பாரிய எதிர்பார்ப்புகளுடன் எதிர்வரும் ஜுலை 6 ஆம் திகதி *Rtv Tamil youtube* தளத்தின் ஊடாக "இரை தேடும் பறவைகள் " பாடலை வெளியிட இருக்கிறது.

இலங்கை கலைஞர்களின் இந்த முயற்சியை பாராட்டாமல் இருக்க முடியாது. இதில் இணைந்துள்ள அனைத்து கலைஞர்களும் நம்நாட்டவர்கள் என்பது பெருமைக்குரியது. ரியாஸின் முயற்சிகள் தொடர வாழ்த்துவோம். ஆதரவுக் கரம் கொடுப்போம்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181



# மணலியின் நன்னூல்

தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர், கவிஞர், பதிப்பாளர், சமூக செயற்பாட்டாளர் மணலி அப்துல் காதர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இலக்கிய செயற்பாட்டாளரும், வெளியீட்டாளருமான எம்.பௌஸர் நெறிப்படுத்திய புத்தகங்கள், வாசிப்பு பரவலாக்கச் செயற்றிட்டம் கடந்தவாரம் மூன்று தினங்களாக நினைவரங்குகள், ஆய்வுரைகள், புத்தக வெளியீட்டு நிகழ்வுகள், கலை நிகழ்வுகளென நிகழ்வுற்றது. புத்தகக் கண்காட்சி கூடமும் வாசிப்புக் கலாசாரத்தை முன்னிறுத்தி ஏற்பாடாகியிருந்தது.

தமிழகத்தின் நன்னூல் பதிப்பகமும் புத்தகங்களை முன்வைத்தது.

நன்னூல் வெளியீடாக முல்லை முஸ்ரிபாவின் என்மனசின் வரைபடம் நிகழ்வரங்கில் வெளியிடப்பட்டது. மணலி அப்துல் காதர் வெளியீட்டுரை வழங்கினார். மேமன்கவி நூலுரையாற்றினார்.

என்மனசின் வரைபடம் அறிமுக நிகழ்வொன்றும் இல77 தெமட்டகொட வீதி, மருதானை தாருல் ஈமான் அவைக் கூடத்தில் நடைபெற்றது. கல்வியியலாளர் எம்.எச்.எம்.ஹஸன் தலைமைதாங்கினார், மணலி அப்துல்காதர் அறிமுகவுரை வழங்கினார். இலக்கிய ஆய்வாளரும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி பிரதி அதிபருமான அஷ்ஷெய்க் மிஹ்லார் திறனாய்வை முன்வைத்தார்.

ஏற்புரையை முல்லை முஸ்ரிபா வழங்கினார். சமூக சேவகர்களும் இலக்கிய ஆர்வலர்களுமான அல்ஹாஜ் பஹார்தீன் மற்றும் அல்ஹாஜ் அப்துல் றகுமான் உள்ளிட்டோர் பிரதிகள் பெற்றுச் சிறப்பித்தனர்.



மணலி அப்துல் காதர் இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் வெளியிடுவதில் கவனம் செலுத்தும் நோக்கில் இலக்கியப்பயணம் செய்கிறார்.




# பாஸ்வதி கோஷ்




பிறை ரீவி பாத்திரமான புதிய பரிமாணங்களை நோக்கி நகர்வது தெம்பளிப்பதாகவுள்ளது. ஹஜ் பெருநாள் தின' கவிதையும் கதையும்' அதன் இன்னொரு ஒளி படருமிடமாகும்.

'பிறைவெளி'எனும் காத்திரமான புதிய நிகழ்ச்சித்தொடரை பிறை வெளி நிகழ்ச்சிப் பொறுப்பாளர் றிஸ்வான் தயாரிக்கவுள்ளார்.

வாரந்தோறும் ஒளிபரப்பாகவுள்ள பிறைவெளியில் 'ஆளுமைகளின் அடையாளம்' கலை,இலக்கியம்,கல்வி,வரலாறு,ஆய்வு,கலாசாரம்,பண்பாடென துறை சார் ஆளுமைகளின் ஆற்றலையும் அனுபவங்களையும் வெளிக்கொணரும் நேர்காணல்களாக ஒளிர இருக்கிறது.'நூலின்றியமையாதுலகு' நூல்களினதும் வாசிப்பினதும் முக்கியத்தை முன்னிறுத்தி நூலாசிரியர் மற்றும் திறனாய்வாளர் கருத்துக்களை பிறை நேயர்களோடு பரிமாறுவதாக வடிவமைகிறது.

பிறைவெளியில் 'கவிதா சாகரம்' கவிதை வாசிப்பலையை உரவாக்கவுள்ளது. தேர்ந்தெடுத்த காலத்தின் கவிதை, மொழிபெயர்ப்பாக மாற்றுமொழிரு, புதுப்பிரதிக் கவிதை,என் கவிதைகளின் வாசிப்புக்களமாக விரியவிருக்கிறது.

அது மட்டுமன்றி எதிர் மற்றும் மாற்றுச்சிந்தனைகளையும், கருத்துக்களையும், குணாம்சங்களையும் வெளிக்கொணர்வதாக 'மாற்றுரையாடல் ' அமையவுள்ளது.

துறைசார் அனுபவசாலிகளின் கூட்டுத்திரட்டாக ஒளி படரவிருக்கிறது பிறைவெளி. விரைவில் பிறை ரீவியில் காத்திருங்கள்

தமிழில்:~ஸ்ரீ வத்ஸலா
'பிறைவெளி 'ஒளிபடருமிடம்

# முல்லை முஸ்ரிபாவின் என் மனசின் வரைப்படம்– மேமன்கவி



முல்லை முஸ்ரிபாவின் என் மனசின் வரைப்படம் எனும் பத்தி எழுத்துத் தொகுப்பை அறிமுகப்படுத்தும் வகையில் சில குறிப்புகளை முன் வைக்கலாமென எண்ணுகிறேன்.

90களில் பலாத்காரமாக வடபுலத்தை சார்ந்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டார்கள். சொந்த நாட்டிலே அகதிகளானார்.

அவர்களிலிருந்து முல்லை முஸ்ரிபா போன்ற படைப்பாளிகளின் தோற்றம் நிகழ்கிறது,

முல்லை முஸ்ரிபா வடபுலத்து முல்லைத்தீவு பிரதேசத்தைப் பிறப்பிடமாய் கொண்டு புத்தளத்தில் அகதியாய் தஞ்சம் புகுந்தவர். இவரைப் பொறுத்தவரை வடபுலத்து முஸ்லிம்கள் மத்தியில் புதிதாய் உருவாக்கம் பெற்ற கவிஞர்களில், 80களுக்கு பின்னான ஈழத்து தமிழ்க்கவிதைப் போக்குகோடு இணைத்துப் பேசும் வகையில் தன்னை வளர்த்து கொண்டவர்.

வடபுலத்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட துயரத்தைத் தனக்கான தனித்துவ மொழியில் நுண்ணியமான முறையில் தன் கவிதைகளில் வெளிப்படுத்தி வருபவர்.

முல்லை முஸ்ரிபா தன் நூல்களுக்கு தேசிய சாகித்திய மற்றும் பிரதேச சாகித்திய, கொடகே சாகித்திய போன்ற விருதுகளைப் பெற்றவர். முல்லை முஸ்ரிபாவின் கவிதைகள் பலவற்றில் வட புலத்து நிலம் இழந்தவர்களின் குரல் ஆழாமான அழூத்தமாக ஒலிக்கிறது.

புலம்பெயர்ந்த இடப்பெயர்த்த இலக்கியப் பிரதிகளை ஆய்வுகள் செய்ய வருபவர்கள் 90 களில் நிலமிழ்ந்தவர்களின் குரலைப் பதிவுசெய்த சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்ட வடபுலத்து முஸ்லிம்களின் இலக்கியப் பிரதிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஆய்வுகள் செய்யும் அளவுக்கு வடபுலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் இலக்கியப் பிரதிகள் இல்லை என்று செல்லப்பட்டது. அக்கூற்று 90களின் ஆரம்பத்தில் சரியெனப்பட்டது. ஆனாலும் பிற்காலத்தில் கணிசமான இலக்கியப் பிரதிகள் சிறுகதைகள் நாவல்ககள், குறும்படங்கள், குறிப்பாகக் கவிதைகள் வடபுலத்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்காளால் படைக்கப்பட்டன. அவற்றில் கவித்துவ கலைத்துவ குறைப்பாடுகள் எனச் சொல்லப்பட்டன.

ஆனால் அவற்றில் வடபுலத்து மண் இழந்த முஸ்லிம்களின் குரல் ஒலித்தது என்பதை யாரும் மறக்கமாட்டார்கள். புலம்பெயர்வு இடப்பெயர்வு இலக்கியங்கள்பற்றிய ஆய்வுகளில் அவ்வெழுத்து பிரதிகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை. கவனத்தில் எடுக்கப்பட்டு இருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு பிரதேச வாழ்வியல் பற்றி புனைவு வடிவமான பத்தி எழுத்துகள் நம் முன் முன்னே கணிசமான அளவுக்கு இருக்கிறன. ஆனால் வடபுலத்தில்லிருந்து விரட்டி அடைக்கப்பட்ட முஸ்லிம்களின் வாழ்வை பற்றிப் பேசுகின்ற புனைவு பிரதிகளின் பற்றாகுறை இருந்தது, அக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் முல்லை முஸ்ரிபாவின் பத்தி எழுத்துப் பிரதிகள் அமைந்தன.

அப்பிரதேசத்தில் வாழ்ந்த பொழூதான அனுபவங்களையும் நினைவுகளையும் மற்றும் அப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் பேசும், தமிழ் பேசாத பிற மதத்தினரானவர்களுடான மானசீகமான உறவு கொண்ட , தமிழ் பேசும் மக்களாக இருந்தும் முஸ்லிம்களாக இருந்த ஒரே ஒரு காரணத்திற்காக, விரட்டி அடிக்கப்பட்ட, ஈழத்து தமிழ் ஆய்வாளர்களால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாத, கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய தமிழ் இலக்கியப் படைப்பாளி ஒருவரின் புனைவுப் பிரதிகள் கொண்ட, தமிழகம் நன்னூல் பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ள முல்லை முஸ்ரிபாவின் என் மனசின் வரைப்படம் எனும் இத்தொகுப்பு கவனத்திற்குரிய ஒரு தொகுப்பாக அமைகிறது.


## தான்தோன்றித்தனமான நாட்கள்

காலைப் பொழுதுகள்
அந்த நாளை எப்போதும் இனங்காட்டுவதில்லை.
உடைந்த குழாய்கள் கண்ட இடங்களில்
தமது திரவத்தை ஒழுகிக் கொண்டிருப்பது போல,
ஒரு நடிகரின் முகத்திலிருந்து
கிளிசரீன் முதிரும் முன்னரே
சொட்டிக் கொண்டிருப்பது மாதிரி
சில துவங்குகின்றன.
ஒரு கேள்வி கேட்கும் குழந்தையைப் போல
கலக்கார நாட்கள்
தமது தான்தோன்றித்தனமான
பாதையைத் தீர்மானிக்கின்றன.
பிரயாசை மிகுந்த காயங்கள்
ஆறுதலை நோக்கிப் பயணிக்கின்றன,
ஒரு பிரியமான மரமற்ற மண்
புத்துயிரூட்டும் நிதானமான
முழுமை பெறத் தயாராகிறது.
ஐந்து நீதிபதிகளின் அமர்வுகள்
கனவு போன்ற தீர்ப்புகளை உச்சரிக்க,
சிறைக் கதவுகள் உடைந்து
இணக்கமற்ற கவிதைக்கும்
எல்லையற்ற ஆகாயத்துக்கும்
திறந்து கொள்கின்றன.
கலக்கார நாட்கள்
உடைந்த குழாய்களை
மீண்டும் வேலை செய்ய வைக்கின்றன.
கண்ணீர்த்துளிகள் எல்லாமே
தவறிப் போவதில்லை



# தலைநகரில் களைகட்டிய 101 ஆவது வகவ கவியரங்கம்





நூறாவது கவியரங்கை விழாவாக நடாத்திய வலம்புரி கவிதா வட்டம் தனது 101 ஆவது கவியரங்கை போயா தினமன்று நடாத்தியது. கொழும்பு பழைய நகர மண்டபத்தில் இடம்பெற்ற கவியரங்கிற்கு கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ் தலைமை வகித்தார்.

வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்திய நிகழ்வில் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும், பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரையும் வழங்கினர்.

வகவ சிரேஷ்ட ஸ்தாபகர் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி முன்னிலை வகித்தார். தேசிய அமைப்பாளர் எஸ். தனபாலனும் பிரசன்னமாகியிருந்தார்.

எம்மை விட்டும் மறைந்த வகவக் கவிஞர் மினுவங்கொட ஏ. சிவகுமாரினது சகோதரர் செல்லையா தங்கவேலுவுக்கும், பிரபல எழுத்தாளர் சுலைமா ஏ. சமியிக்காகவும் மௌனப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

கவிஞர் திலகம் பிரேம்ராஜ் மிகவும் கலகலப்பாக நடாத்திய கவியரங்கில் கவிஞர்கள் எம். ஏ. ரஹீமா, ஆர். தங்கமணி, அருந்தவம் அருணா, நியாஸ் ஏ. சமத், கே. லோகநாதன், கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், வெளிமடை ஜஹாங்கீர், பி. எம். எம். ரமீஸ், இ. கலைநிலா, எம். எஸ். அப்துல் லதீப், நேகம பௌஸுல் சிபானியா, பிறைக் கவி முஸம்மில், ரிஸ்மினா ரபீக், மினுவங்கொட ஏ. சிவகுமார், கிண்ணியா அமீர் அலி, இளநெஞ்சன் முர்ஷிதீன், ந. தாமரைச் செல்வி, தமிழ்த் தென்றல் அலி அக்பர் ஆகியோர் கவிதை பாடினர். நூறாவது கவியரங்கில் ஆப்பிள் என்று கவிதை பாடி அதன் குண நலன்களை விலாவாரியாக எடுத்துரைத்த கவிஞர் அப்துல் லதீப் இக் கவியரங்கில் அனைவருக்கும் ஆப்பிள் வழங்கி மகிழ்வித்தார்.

சபையை நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், வாசுகி வாசு, வாழைத்தோட்ட வஸிர், முஸ்னி முர்ஷித், ராஜா நித்திலன், எஸ். ஷருக்ஷன், ஏ. கே. இளங்கோ, சிந்தனைப் பிரியன் முஸம்மில், தி. ஸ்ரீதரன், எம்.பீ.எம். சித்தீக், மலாய்கவி டிவாங்ஸோ, வ. சாந்தகுமார், மஸீதா அன்சார், ஆர். எஸ். ரஸ்மியா போன்றோர் சபையை அலங்கரித்தனர்.

# திரும்பிய திசையெல்லாம் மீண்டும் ஒலிக்க வைக்கும் பாடல் "இசைத்தமிழ் நீ செய்த"

**(கடந்த வாரத் தொடர்)**

மகாலிங்கத்தின் குரலில் வெட்டிவிடமுடியாமல் ஒட்டியே இருந்தது. 1945ல் வெளியான 'ஸ்ரீ வள்ளி' அமோக வெற்றியடைந்து 55 வாரங்களுக்கு மேல் ஓடியது. இவரின் வசீகரக் குரலுக்காகவே "ஸ்ரீவள்ளி"இமாலய வெற்றி கண்டது. ஏவியெம் பட நிறுவனத்திற்கு பெரியதோர் லாபத்தை வழங்கியது ஸ்ரீவள்ளி.

'ஸ்ரீவள்ளி'யைத் தொடர்ந்து, டி.ஆர்.மகாலிங்கத்தின் கலைக் காட்டில் கனமழை. தமிழ்த் திரையுலகில் வெற்றிக் கதாநாயகன் ஆனார். 23 வயதில், ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் வாங்கும் நடிகரானார்.1948ல், டி.ஆர். மகாலிங்கம் நடித்த மற்றொரு வெற்றிப் படம் 'ஞான சௌந்தரி'. "அருள்தாரும் தேவமாதாவே" என்ற கம்பதாசனின் கற்பனையில் உருவாகி ஜிக்கியின் பக்தி ரசம் ததும்பும் அருமையான பாடல், இந்தப் படத்தில்தான் இடம் பெற்றிருந்தது. இந்தப் பாடலுக்கு எஸ்.வி.வெங்கட்ராமன் இசையமைத்தார். 1950ம் ஆண்டு சென்னை ராயப்பேட்டையில் தனக்கென புதிய நிறுவனத்தை நிர்மாணித்துக் கொண்ட டி.ஆர்.மகாலிங்கம், ஸ்ரீசுகுமார் புரொடக்ஷன்ஸ் என்று அதற்குப் பெயரிட்டார். அதே ஆண்டில் 'மச்சரேகை' என்ற படத்தைத் தயாரித்து நடித்தார் மகாலிங்கம்.சொந்தப் படங்களான 'சின்ன துரை', 'விளையாட்டு பொம்மை' போன்றவற்றில் சகானா ராகத்தில் இடம்பெற்ற நிலவே நீதான் மற்றும் தீர்த்தக்கரையினிலே போன்ற பாடல்கள் இன்றளவும் டி.ஆர்.மகாலிங்கத்தின் பெருமை பேசுகின்றன. 1950களில் 14 வெளிநாட்டு கார்களுடன் பங்களா, பவிசு, பெரிய நடிகர், படத் தயாரிப்பாளர் என பெருமைபொங்க வாழ்ந்த டி.ஆர். மகாலிங்கம், அடுத்த 5 ஆண்டுகளில் எல்லாவற்றையும் இழந்து மஞ்சள் கடதாசி கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். வறுமையால் வெல்லப்பட்டார். ஆழ்கடலில் முத்திருக்க, அலைகளால் கரையில் கொண்டு சேர்க்கப்படும் சாதாரண சிப்பியாக ஒதுங்கினார் மகாலிங்கம். எல்லாவற்றையும் இழந்தது மகாலிங்கம் என்ற தயாரிப்பாளர் தான். இசைக்கலைஞன் அல்லவே.



கீழே விழுந்த மகாலிங்கத்தைத் தூக்கி நிறுத்தினார் கவியரசு கண்ணதாசன். கண்ணதாசன் தான் சொந்தமாகத் தயாரித்த முதல் படமான 'மாலையிட்ட மங்கை'யில் துணிந்து மகாலிங்கத்தை நாயகனாக ஒப்பந்தம் செய்தார். 'செந்தமிழ் தேன் மொழியாள்' இன்று வரை செந்தமிழைப் போல ரசிகர்களின் நெஞ்சில் செழிப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறது. உச்சஸ்தாயிலே பாடி பழக்கப்பட்ட டி.ஆர். மகாலிங்கத்தை மென்மையான குரலில் பாடவைக்க முடியுமா? உயரமாய் பறக்கும் பருந்தை செல்லமாக குழையும் சிட்டுக்குருவியாக்க முடியுமா? ஆனால், மென்மையான பாடலைப் பாடவைத்து, தமிழ் ரசிகர்களுக்கு விருந்தாக்கிக் காட்டினார்கள் விஸ்வநாதன் ராமமூர்த்தி. மாலையிட்ட மங்கையில் வரும் 'நானன்றி யார் வருவார்?' பாடல் மென்மையின் மேன்மையைச் சொல்லும். சந்தத்திலிருந்து பிசகாமல் கவிமணம் வீசும் கண்ணதாசனின் பாடல் வரிகள், பழைமையின் பக்குவத்தை மீறாத விஸ்வநாதன் ராமமூர்த்தியின் மெட்டுகள், உச்சஸ்தாயில் ஊர்வலம் போகும் மகாலிங்கத்தின் மயக்கம் தரும் குரல். இவைதான், மாலையிட்ட மங்கையை மங்களகரமாக மாற்றியது. 'எங்கள் திராவிடப் பொன்னாடே' பாடலும் மிகப் பிரபலம். "மாலையிட்ட மங்கை' மகாலிங்கத்தின் கழுத்தில் மாலையிட்ட மங்கையானது. படம் அமோக வெற்றி. சரிவில் இருந்து மீண்டார் மகாலிங்கம். 1959ம் ஆண்டு வெளியான 'அமுதவல்லி', பாடல்களின் இன்பவல்லி. பட்டுக்கோட்டை என்ற மகா கவிஞனான பாட்டுக்கோட்டையோடு விஸ்வநாதன் ராமமூர்த்தியின் ஜனரஞ்சகமான மெட்டில் ஆடை கட்டிக் கொண்டது நிலவு. அமுதவல்லியின் 'ஆடை கட்டி வந்த நிலவோ' பாடலை ரசிக்காதவர்கள் யார்?.1960ம் ஆண்டு எழுத்தாளர் எல்லார்வி எழுதிய ''கலீர் கலீர்'' நாவல்தான் 'ஆடவந்த தெய்வம்' ஆனது. முக்கோணக் காதல் கதை. டி.ஆர்.மகாலிங்கத்தோடு ஈ.வி.சரோஜா, அஞ்சலி தேவி ஆகியோர் நடித்திருந்தனர். சாஸ்திரிய சங்கீத காதலர்களுக்கு விருந்து படைத்துக் கொண்டிருந்த மகாலிங்கம், இந்தப் படத்தில் சாதாரண மக்களுக்கும், சங்கீத சாதம் பரிமாறியிருப்பார். அவர்களது குரலில் தன்னை உருமாற்றியிருப்பார். 'மழை கொட்டு கொட்டு கொட்டுது பாரு இங்கே' பாடல் எளிய மனிதர்களின் வாழ்க்கையையும், எல்லோரையும் சமமாகப் பார்க்கும் சோசலிசத்தையும் சொல்லியது.'ரத்தினபுரி இளவரசி'யில், காதலுக்கு நாலு கண்கள், கவலையில்லாத மனிதனில், நான் தெய்வமா? இல்லை நீ தெய்வமா? என மகாலிங்கம் நடித்த படங்களில் ஓரிரு பாடல்கள் வெற்றி யடைந் தாலும்,சில படங்கள் தோல்வியைத் தழுவின. 1960ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து, அந்தி வானத்து ஆதவன் போல டி.ஆர்.மகாலிங்கத்தின் கலையுலக வாழ்வு அஸ்தமனத்திற்கு அடிகோலத் தொடங்கியது. ஆனால், 1965ல் A.P. நாகராஜனின் 'திருவிளையாடல்' படத்தில் டி.ஆர். மகாலிங்கம் பாடிய "இசைத்தமிழ் நீ செய்த", இல்லாததொன்றுமில்லை "பாடல்கள் திரும்பிய திசையெல்லாம் மீண்டும் ஒலிக்கச் செய்தது. இசைத்தமிழை அவர் இசைத்தது, இன்றுவரை அருஞ்சாதனையாக ரசிகர்கள் மனதில் அகலாமல் இருக்கிறது. ராஜ ராஜ சோழன் சிவாஜியுடன் இணைந்து இவர் பாடிய "தென்றலோடு உடன் பிறந்தாள் "பாடலை என்றும் மறக்க முடியாது. இந்த இரண்டு படங்களிலும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மகாலிங்கத்திற்கு வாய்ப்பளித்தார். உணர்ச்சிப் பெருக்குடன் ஓங்கி ஒலித்த இசைத்தமிழ், தெய்வ பக்திப் பாடலாய் இன்றளவும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

# வத்தளையில் கலைத்தென்றல் நாட்டிய கலா நிலைய செயலமர்வு







திருமதி கலைச்சுடர் இளங்கோ செல்வராணி யின் கலைத்தென்றல் நாட்டிய கலா நிலையம் வத்தளை, கெரவலபிட்டிய பிரதேச சபையில் இன்று பரதநாட்டியம் தொடர்பான செயலமர்வொன்றை நடத்தியது. இதில் சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் சங்கவி தியேட்டரின் உரிமையாளரு மான துரைராசா சுரேஷ் அதிதியாக கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்திய மாணவிக ளுக்கு சான்றிதழ்களை வழங்கியபோது

# புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களுக்கிடையிலான கால்பந்தாட்ட போட்டி
















*YM* டிராவல்ஸ் நிறுவனத்தின் பிரதான அனுசரணையில் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் *Zone* அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட *Clash of Zahirians Season 5* கால் பந்தாட்ட போட்டி அண்மையில் புத்தளம் சாஹிரா மைதானத்தில் வெற்றிகரமாக நடைப்பெற்று முடிந்தது. இக் கால்பந்தாட்டாப் போட்டியில் சுமார் 40க்கும் மேற்பட்ட பழைய மாணவர்களின் அணிகள் பங்கேற்றன. இப்போட்டியில் *Zygon Red* அணியினர் தொடர்ந்து 4 ஆவது முறையாக வும் சாம்பியன் பட்டத்தை தமதாக்கிக் கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுன் மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.